

20 வருடங்கள்
CPA
1996-2016

# சமாதான நோக்கு

# நிலைமாற்று நீதியின் சவால்

மலர் 13 இதழ் 01
மார்ச் – ஏப்ரல் 2016
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா / பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன / சட்டத்தரணி பவானி பொன்சேகா / சட்டத்தரணி ஹொவார்ட் வார்னி / விஜய் கே. நாகராஜா / விரிவுரையாளர் கல்கந்தே தம்மானந்த தேரர் / பேராசிரியர் குமார் டேவிட் / சட்டத்தரணி எ. சுமந்திரன் / அருட்தந்தை யோகேஸ்வரன் / அமைச்சர் மனோ கணேசன் / ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன / அமைச்சர் மங்கள சமரவீர / ஹில்மி அஹமட் / டியூ குணசேகர / ரிஸ்வின் சில்வா / வேலுப்பிள்ளை குகனேந்திரன் / பேராசிரியர் எஸ். பத்மநாதன் / ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ / ருவந்தி வக்வெல்ல

பதிப்பாசிரியர் : எஸ் சிவகுருநாதன்

# பிரஜைகளின் இணையதளம்

## பிரஜைகளின் வாழ்க்கைக்கு ஏற்புடைய,

- அரசியலமைப்பு உட்பட சகல சட்டங்களும், விதிகளும், ஒழுங்கு விதிகளும்
- பிரஜைக்கு ஏற்புடைய உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் ஏனைய முக்கிய வழக்குத் தீர்ப்புக்கள்
- அரச மற்றும் பொது நிறுவனங்களின் படிவங்கள்
- பிரஜைகள் செயற்பாட்டின் நவீன தகவல்கள்
- அடிப்படை உரிமைகளும் கடமைகளும் பொறுப்புக்களும்
- பிரஜைகள் செயற்பாட்டின்மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகள் பற்றிய விபரங்கள்
- பிரஜைகள் சபைகள் பற்றிய தகவல்கள்

---

அரசகரும மொழிக்கொள்கைகளுக்கு ஏற்ப மும்மொழிகளிலும்
பிரஜைகளுக்காகவே
**மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின்**
மூலம்
www.citizenslanka.org



சமாதான நோக்கு

பதிப்பாசிரியர் **எஸ். சிவகுருநாதன்**

ISSN 955-1800-0061

மலர் 13 இதழ் 01 / மார்ச் – ஏப்ரல் 2016

தொலைபேசி : 94-1-2370801/4 ∴பெக்ஸ் : 94-1-2370802
மின்னஞ்சல் : cpa@cpalanka.org
இணையதளம் : www.cpalanka.org

# தீர்மானகரமான கணப்பொழுது

நீதி, நியாயம், நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு என்ற விடயங்களை நாம் அடிக்கடிக் கேட்டும் வாசித்துமீ கண்டும் வருகின்றோம். இது தொடர்பாக பெருமையுடன் முன்வைக்கப்படும் சொற்பதங்களுக்கும், நடைமுறைக்குமிடையிலே பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது.. சமாதானத்தின் பெயரால் புறாக்களை விடுவிப்போர், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் பகைமை உணர்வுடன், பாரபட்சமாக செயற்பட்டு, பகைமையின் தீப்பொறிகளை பரப்புவதையும் காண்கின்றோம். போர் ஒய்ந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில், மீண்டுமொரு யுத்தத்தைத் தடுப்பதற்கு நீண்டகால, குறுங்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் விளைவுகள் எம்முன்னுள்ளன. கொடூரமான யுத்தம் ஓய்ந்தபின்னர், தற்போது நிலைமாற்ற யுகம் தோன்றியுள்ளது. பயங்கரமான சம்பவங்களை ஞாபகமூட்டி, மீளாய்வு செய்து, பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் உச்ச நன்மைகளையும், நியாயத்தையும் நிலைநாட்டுவதற்கு ஓர் நல்லிணக்க மனோ நிலையை உருவாக்குவது முதற் கட்டமாகும். இது சம்பந்தமாக கடந்த பல பத்தாண்டுகளாக பல்வேறு நாடுகள் பெற்ற அனுபவங்கள் எமக்கு உண்டு. மேற்படி அனுபவங்களின் பெறுமானங்களை எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாம் பயன்படுத்த வேண்டும்.

புதிய ஜனாதிபதியையும், புதிய அரசாங்கத்தையும் மக்கள் தெரிவு செய்தபின்னர் நல்லிணக்க வழிமுறை மூலம் நிலைமாற்ற நீதியை அமுல்படுத்தும் புதிய அபிலாஷைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், வழக்கம்போல சிலர் இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி, குட்டையைக் குழப்பி வருகின்றனர். இனத்தையும் மதத்தையும் மாத்திரம் அடையாளமாக முன்வைக்கும், சந்தர்ப்பவாத அரசியலும் ஒருபுறம் கோலோச்சுகிறது. புதிய அரசியலமைப்பின் உருவாக்கம் தொடர்பான கருத்து முரண்பாடுகளும் அத்தகையனவே.

நாம் ஏற்படுத்திக்கொண்ட மிக முக்கியமான திடசங்கற்பத்தைப் பின்னடையச் செய்யாது, மனிதநேயத்தின் பெயரால் நிலைமாற்ற நீதியை அமுலாக்கும் செயற்பாட்டை வலுப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாது சந்தர்ப்பவாத அரசியலின் தீச்சுவாலைகளுக்கு அஞ்சிப் பின்வாங்கினால், எதிர்காலத்தில் மீண்டும் எமது சமூகத்தை அழிவின் விளிம்பில் விட்டுச்செல்ல நேரிடும்.

ஆலோசகர்: **லயனல் குருகே**
நானாவித உதவிகள் : **மஹிந்த ரத்நாயக்க, லஹிரு கித்தலகம** பக்க வடிவமைப்பு: **கமலாதேவி சசிசந்திரன்**
அச்சாக்கம் : **க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ் 0777-315971**

"சமாதான நோக்கு" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இலங்கையின் மோதலைத் தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக "சமாதான நோக்கு" பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

தொடர்புகளுக்கு : **"சமாதான நோக்கு"**
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 6/5, லையார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011 2081384/6, தொலைநகல் : 011 4714460
மின் அஞ்சல் : cpa@cpalanka.org இணைய தளம் : www.cpalanka.org

# உள்ளடக்கம்

20 வருடங்கள் CPA 2016


நோக்கத்தை வெற்றியீட்டச் செய்விப்பதற்காக அரசாங்கம் துணிந்து நிற்க வேண்டும்
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து **3**

நிலைமாற்று நீதி
சட்டத்தரணி எஸ். ஜீ. புஞ்சிஹேவா **7**

பிளவுபட்ட இறந்த காலத்திலிருந்து பங்காண்மை எதிர்காலத்தை நோக்கி
பேராசிரியர் ஜயந்த செனெவிரத்ன **12**

இலங்கையின் நிலைமாற்று நீதி நிகழ்கால வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளல்
சட்டத்தரணி பவாணி ஃபொன்சேக்கா **18**

அரசாங்கத்தை பொறுப்புக்கூறும் வகையில் வைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு சிவில் சமூகத்திற்கு உரியதாகும்
சட்டத்தரணி ஹோவார்ட் வார்னி **23**

பொருளாதார நியாயம், நிலைமாற்று நீதிக்கு ஏற்புடையதாக அமைவதில்லையா?
விஜய் கே. நாகராஜா **27**

மோதலின் மூலம் பாதிப்படையாத ஒருவர் கூட இல்லை
விரிவுரையாளர் கல்கந்தே தம்மானந்த தேரர் **34**

மக்கள் ஞானத்தை மேம்படுத்த இயலாது போயின் வெற்றியளிக்காது
பேராசிரியர் குமார் டேவிட் **40**

தீர்க்கமான சில நகர்வுகளை முன்னெடுத்தாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மந்தகதியிலேயே உள்ளன
சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் **46**

நிலைமாற்று நீதியும் அரசியலமைப்பைத் தயாரித்தலும்
அருட்தந்தை யோகேஸ்வரன் **51**

நீதி வழங்குவதன் மூலம் சகவாழ்வை கட்டியெழுப்ப முடியும்
அமைச்சர் மனோ கணேசன் **55**

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரம் எனக்கு தேர்தல் மூலமாகவே வழங்கப்பட்டது
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன **63**

கட்டம் கட்டமாக நாங்கள் முன்நோக்கிச் செல்கிறோம்
அமைச்சர் மங்கள சமரவீர **69**

இனத்துவ அடிப்படையைப் பார்க்கிலும் முக்கியத்துவம் வகிப்பது இலங்கையர் என்ற அடிப்படையாகும்
ஹில்மி அஹமட் **73**

நீதியை ஈடேற்ற அவசியமான பரிந்துரைகள் எல்.எல். ஆர்.சி. அறிக்கையில் உள்ளன
ஜயு குணசேக்கர **75**


மலர் 13 இதழ் 01
மார்ச் – ஏப்ரல் 2016



விக்னேஸ்வரன் போன்றவர்களும் மஹிந்த கும்பலும் இனவாதத்தை அடையாளமாகக் கொண்டுள்ளார்கள்
நில்வின் சில்வா **79**

நிலைமாற்று நீதி செயற்பாட்டுக்கு சமூகத்திலிருந்து கிடைக்கின்ற அழுத்தம் போதாது
வேலுப்பிள்ளை குகேந்திரன் & பேராசிரியர்.எஸ். பத்மநாதன் **83**

மக்கள் பங்கேற்பு போதுமானதாக இல்லை
ஆளுனர் ஒஸ்ரின் பர்னாந்து **86**

நிலைமாற்று நீதியை ஈடேற்ற இன்னமும் தாமதம் இல்லை
லயனல் குருகே **91**

மௌனமாக பாதிக்கப்பட்டவர்கள்: பெண்களும் நிலைமாற்று நீதியும்
றுவெந்தி வக்வெல்ல **95**




இலங்கையில் 2016 வரை இடம்பெற்ற காணாமல்போதல்கள், கொலைகள், கற்பழிப்புக்கள், சிறுவர் துஷ்பிரயோகம், நிலத் தகராறுகளுக்கு சட்டம் செயற்பட்டதா? குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டதா என்பன தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. பிரதான அரசியல் கட்சிகளின் அதிகாரத்திற்கு மத்தியில் இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வை காண்பதில் அநீதிக்குட்பட்ட வாழ்க்கைகள் தொடர்பில் ஊடகங்களில் மாத்திரம் காணக்கிடைப்பது கவலைக்குரியதாகும்.

வருடா வருடம் கலண்டர் அச்சடிக்கப்படுவது சாதாரண நிகழ்வாகும். அதேபோல் அரசியல் கட்சிகள் தமது அதிகாரத்தை பயன்படுத்தி உண்மையை மறைப்பது சாதாரண செயலாகும். இது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பொது பிரச்சினையாகும். மார்ச் 24ம் திகதி உண்மையை அறிந்துகொள்ளும் சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், அதற்கான உண்மையை நாள் உருவாகும் வரை எதிர்பார்ப்புடன் காத்திருப்போம்."

ஓவியம் – **திமுத்து வன்னிஆராச்சி**

# நோக்கத்தை வெற்றியீட்டச் செய்விப்பதற்காக அரசாங்கம் துணிந்து நிற்கவேண்டும்.



**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

நிலைமாற்று நீதி நல்லிணக்கத்தின் அத்தியவசியமான ஓர் அங்கமாக அமைவதால் இலங்கை அரசாங்கம் நிலைமாற்று நீதிக்காக தன்னை அர்ப்பணிப்பதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சர் திரு. மங்கள சமரவீர 2015 செத்தெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் தெளிவாகவே கூறினார். எனவே வழக்குத்தாக்கல் செய்தல் தொடர்பில் செயலாற்றுவதற்கான விசேடமான சட்டத்தரணிகள் அலுவலகம், அத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பான நீதிமன்றம், உண்மையறிவதற்கான ஆணைக்குழு, இழப்பீடு மற்றும் நஷ்ட ஈடு செலுத்துவதற்கான அலுவலகம் மற்றும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் போன்ற அங்கங்களை உள்ளடக்கிய நீதிப்பொறியமைப்பினை நிறுவுதல் பற்றி இலங்கை அரசாங்கம் பரிசீலனை செய்துவருவதாகவும்



வடக்கு மக்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கிய சந்தர்ப்பம் ...... www.colombotelegraph.com

அவரால் வெளிப்படுத்தப்பட்டது. இந்தப் பொறியமைப்பு நீதி மற்றும் பொறுப்புக்கூறல், உண்மை, மீள் நிகழாமை மற்றும் இழப்பீடு போன்ற வகையிலான நல்லிணக்கத்தினை தாங்கிநிற்கின்ற ஆதாரங்களுடன் நேரொத்ததாகும். இவ்விதமாக வெளியுறவு அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தினதும் இணை அனுசரணையுடன் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான இணக்கப்பாட்டுப் பிரேரணை மூலமாக பிரதிபலிக்கப்பட்டது. இந்தப் பிரேரணையுடன் மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் ஆணையாளர் நாயக அலுவலகத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட இலங்கை பற்றிய அறிக்கையும் வெளியிடப்பட்டதோடு அதனூடாக இலங்கை அரசாங்கத்தின் இராணுவம் மற்றும் எல்ரீரீஈ ஆகிய இருதரப்பினராலும் புரியப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் சம்பந்தமான சான்றுகள் நிலவுவதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

இவையனைத்தையும் செயற்படுத்தி இலங்கை அரசாங்கம் பிரதம அமைச்சர் செயற்பாட்டுக் குழுவொன்றையும், அதன் கீழான அமைச்சர் செயற்பாட்டுக் குழுவொன்றையும் நிறுவியதோடு, நல்லிணக்கப் பொறியமைப்பு பற்றிய அபிப்பிராயங்களை விசாரித்தறிவதற்கான செயலகமொன்றும் நிறுவப்பட்டது. பிரதம அமைச்சரின் அலுவலகத்தினால் நல்லிணக்கப் பொறியமைப்பு பற்றி நாடுபூராவிலும் மக்கள் அபிப்பிராயங்களை விசாரித்தறிவதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. செயலணி பதினொரு உறுப்பினர்களை உள்ளடக்கிய சிவில் சமூகக் கட்டமைப்பாக அமைவதோடு, இக்கட்டுரையாளர் அதன் செயலாளர் ஆவார். இது இயலுமானவரை அனைவரையும் உள்ளடக்கக்கூடிய செயற்பாடாக மாறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு அது நிபுணர்களைப்போன்றே நாடு பூராவிலும் பரந்துள்ள பிரதிநிதிகளிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும். செயலணியால் அபிப்பிராயங்களை விசாரித்தறிவதை மேற்கொள்வதற்காக பிராந்திய செயலணிகள் இனங்காணப்பட்டுள்ளதோடு, நகரசபை பாணியிலான மக்கள் கூட்டங்கள் மற்றும் குவிமையக் குழுக்களின் (Focus Group) உரையாடல்களை உள்ளடக்கும்.

இவையனைத்தையும் செயற்படுத்தி இலங்கை அரசாங்கம் பிரதம அமைச்சர் செயற்பாட்டுக் குழுவொன்றையும், அதன் கீழான அமைச்சர் செயற்பாட்டுக் குழுவொன்றையும் நிறுவியதோடு நல்லிணக்கப் பொறியமைப்பு பற்றிய அபிப்பிராயங்களை விசாரித்தறிவதற்கான செயலகமொன்றும் நிறுவப்பட்டது.

**இவையனைத்தையும் செயற்படுத்தி இலங்கை அரசாங்கம் பிரதம அமைச்சர் செயற்பாட்டுக் குழுவொன்றையும், அதன் கீழான அமைச்சர் செயற்பாட்டுக் குழுவொன்றையும் நிறுவியதோடு, நல்லிணக்கப் பொறியமைப்பு பற்றிய அபிப்பிராயங்களை விசாரித்தறிவதற்கான செயலகமொன்றும் நிறுவப்பட்டது.**

பிரதான பங்கீடுபாட்டாளர்களின் அபிப்பிராயங்களை விசாரித்தறிதல் தேசியமட்டத்திலும் இடம்பெறும். வடக்கிலும் கிழக்கிலும் மாவட்ட மட்டத்தில் அபிப்பிராயங்களை விசாரித்தறிதல் நடத்தப்படும் என்பதோடு, நாட்டின் ஏனைய மாகாணங்களில் அவை மாகாண மட்டத்திலேயே இடம்பெறும். செயலணியின் அறிக்கை வெளியிடப்படுவதோடு செயலணியிடம் மேற்கொள்ளப்படுகின்ற விடயமுன்வைப்புகள் தபால் மூலமாக, அதன் வெப் தளத்திலும் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம்.

குறித்த செயலணி விசாரணை அல்லது புலனாய்வு செய்வதற்கான ஓர் ஆணைக்குழு அல்ல என்பது வலியுறுத்திக்கூறவேண்டிய விடயமாகும். நிலைமாற்று நீதிக்கான பொறியமைப்புகள் வகுக்கப்படவேண்டியவிதம் சம்பந்தமான மக்கள் அபிப்பிராயங்களை திட்டவட்டமாக அறிந்து கொள்வதும் அறிவிப்பதுமே அதன் ஒரேயொரு ஒப்படையாக அமைகின்றது. செயலணியிடம் மனக்குறைகளை கூறுதலும், தனிப்பட்ட அனுபவங்களை விபரிப்பதை தடுப்பதும் இடம்பெறமாட்டாதெனினும் செயலணியின் விசேட அக்கறையானது நல்லிணக்கத்திற்கான பொறியமைப்புகள் மற்றும் அவை வகுக்கப்படவேண்டியவிதம் பற்றிய பொதுமக்கள் அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசனைகளின் மீதே செலுத்தப்படும்.

நிலைமாற்று நீதிக்கான இலங்கை அரசாங்கத்தின் நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பில் சந்தேகம் கிடையாது. எனினும் நிலைமாற்று நீதி மற்றும் இலங்கைச் சூழமைவில் அதன் அவசியப்பாடு பற்றிய மக்கள் அபிப்பிராயத்தை விழிப்பூட்டுவதில் அவர்கள் தலைமை வகித்தல் வேண்டும். அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களின் வேகம், முன்னேற்றம் மற்றும் உள்ளடக்கத்தைப்போன்றே பொருளாதாரத்தில் “அனைத்தும் சாதகமான காரணி” அல்லது அது இல்லாமை ஊடாக இந்த நிலைமை மிகவும் சிக்கலானதாக ஆக்கப்படக்கூடும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பொதுமக்கள் அபிப்பிராய ஆய்வுகள் மூலமாக அறிவில் நிலவுகின்ற பாரிய இடைவெளிகளைக் காணக்கூடியதாக இருந்துள்ளன. நிலைமாற்று நீதி தொடர்பில் ஈடுபட்டுள்ள மற்றும் அறிவு படைத்தவர்களின் இது தொடர்பிலான அனுபவங்கள் அந்நிலைமையை உறுதிப்படுத்துவதைப் பார்க்கிலும் திருப்திகரமற்ற மட்டத்தில் உள்ளனவென்பதைக் கூறவேண்டும். இந்த நிலைமை பெரும்பான்மை இனப்பிரிவினரிடம் விசேடமாக காணக்கூடியதொன்றாகும். இலங்கை அரசாங்கம் இதனை மேற்கொள்ளாவிடின் இந்த ஒட்டுமொத்த முயற்சியும் விழிப்புணர்வு அற்றதொன்றாக அமைவதைப்போலவே உண்மையான முறைமைநிலை அற்றதாகவும் அமையக்கூடும். மேலும் அதன் மூலமாக இனத்துவப்பிளவின் பரப்பெல்லையும், ஆழமும் சிறப்பாக வெளிக்கொணரப்பட்டிருக்கும். இங்கு பாரியளவில் மாற்றமடைந்த அபிப்பிராயங்களை போன்றே நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கின் பங்கேற்பு போன்றவை தெளிவாகும். பெறுபேறு எதுவாகவிருப்பினும் நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திலும் பிரஜைகளின் அபிப்பிராயங்களை விசாரித்தறியும் செயற்பாட்டுடன் இணைந்து செயலாற்றவேண்டியது முக்கியானதாகும். அத்தொடர்பானது செயற்பாட்டின் எதிர்பார்ப்பு, நோக்கங்கள் மற்றும் திட்டங்கள் போன்றவை பற்றி விமர்சன ரீதியானதாக அமைந்தாலும் பரவாயில்லை. அது பாரியளவிலான பகிஷ்கரிப்பு நாட்டின் எப்பிரதேசத்தில் இடம் பெற்றாலும் நாட்டுடன் ஒன்றாக இணைந்த தன்மையைக் கட்டிவளர்ப்பதை நோக்கமாகக்கொண்ட முயற்சிகளுக்கு அது பேரடியாகவே அமையும். அத்துடன் இழந்த மற்றுமொரு வாய்ப்பாக அமையும்.

பிரதான நெருக்கடி நிறைந்த சிக்கல்கள் தொடர்ச்சியாக நிலவுவதோடு, அதன் மூலமாக உக்கிரமடைந்த உணர்வுகள் மற்றும் செயற்பாட்டின் மீதான எதிர்ப்பினை கவர்ந்திழுத்தல் கட்டாயமானதாக அமையும். இந்த முயற்சியின் நோக்கம் போர்வீரர்களை போர்க்குற்றவாளிகளாக மாற்றுவதேயொழிய வேறொன்றுமே இல்லை என ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஆதரவாளர்கள் திடமாக கூறியிருந்தனர். அவ்வாறு செய்வது தமிழ் டயஸ்போராக்களால்,

முக்கியமான விடயமாக அமைவது அது செய்யவேண்டியதைப் போன்றே செய்யக்கூடிதும் என்பதாகும். அது கணப்பொழுதில் செய்ய

**முக்கியமான விடயமாக அமைவது அது செய்யவேண்டியதைப்போன்றே செய்யக்கூடிதும் என்பதாகும். அது கணப்பொழுதில் செய்ய இயலாதென்பதைப்போன்றே சிக்கலாக முடிச்சுப்போடப்பட்ட முடக்குகள் நிறைந்த பாதையாகவும் நீடித்த செயற்பாடாக அமைவதும் இடம்பெறக்கூடாததொன்றாகும்.**




*தங்களது உரிமையைக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் வடக்கு மக்கள் ....* srilankabrief.org

இயலாதென்பதைப்போன்றே சிக்கலாக முடிச்சுப்போடப்பட்ட முடக்குகள் நிறைந்த பாதையாகவும் நீடித்த செயற்பாடாக அமைவதும் இடம்பெறக்கூடாததொன்றாகும்.

தேர்தல் பொறியமைப்பின் பிடியில் சிக்கவைக்கப்பட்டுள்ள மேற்குலக நாடுகளது அரசாங்கங்களின் தூண்டுதலின் பேரிலேயே என்பதையும் அவர்கள் கூறுகிறார்கள். அதற்கிணங்க விசேட நீதிமன்றமொன்றில் இடம்பெறுகின்ற ஏதேனுமொரு சர்வதேச பிரதிநிதித்துவம், பொதுமன்னிப்பு பற்றிய ஏதேனும் விசேட அக்கறை மற்றும் ஒரு சிலவேளைகளில் இடம்பெறக்கூடிய ஏதேனும் மட்டுப்படுத்தப்பட்ட வழக்குத்தாக்கல் எண்ணிக்கைகள் மீதான அவர்களின் எதிர்ப்பும் அணிதிரண்டு உள்ளது. இது ராஜபக்ஷ ஆதரவாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக அமையமாட்டாதென்பதோடு, பெரும்பான்மை இனப்பிரிவினரிடையே பரவலாக வியாபித்துக் காணப்படுகின்ற நிலைமையாகவும் அமைகின்றது.

எனவே நல்லிணக்கம் மற்றும் அர்த்தபுஷ்டிமிக்க தேசிய ஒருமைப்பாட்டுக்காக நிலைமாற்று நீதி கொண்டுள்ள குவிமைய வகிபாகத்தைக் கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கத்தினால் செய்யவேண்டியது அந்நோக்கத்தை வெற்றியீட்டச் செய்விக்கும் பொருட்டு துணிச்சலுடன் போராடுவதேயாகும். இவ்வேளையில் மேலே குறிப்பிட்ட எதிர்ப்புக்களுடன் நேருக்குநேர் மோதவேண்டியநிலை அரசாங்கத்திற்கு ஏற்படும். குறிப்பாக இச்செயற்பாட்டின் நோக்கம் ஒருசிலரால் மேற்கொள்ளப்படுகின்ற பகைமை சம்பந்தமான குற்றச்சாட்டுகளில் ஆயுதப் படையினரின் நன்மதிப்பினை மீட்டெடுத்து பாதுகாப்பதன்றி இராணுவப்பதவி வரிசைகளை போர்க்குற்ற நீதிமன்றத்தின்முன் இழுத்துவருவதே என்பதற்கான திரிபடைந்த குற்றச்சாட்டுடன் இவ்விதமாக முட்டிமோத வேண்டியநிலை அரசாங்கத்திற்கு ஏற்படும். அவ்வாறு புரிந்து நாட்டுக்கு அது அவசியமென்பதை தாம் தீவிரமாக நம்புவதாக தெளிவாகவும், குரலெழுப்பியும் கூற அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். இச்செயற்பாடு மனிதஉரிமைகள் பேரவையின் காலஅட்டவணையில் கட்டிவைத்தலும் புரியக்கூடாததொன்றாக அமையும். முக்கியமான விடயமாக அமைவது அது செய்யவேண்டியதைப்போன்றே செய்யக்கூடியதும் என்பதாகும். அது கணப்பொழுதில் செய்ய இயலாதென்பதைப்போன்றே சிக்கலாக முடிச்சுப் போடப்பட்ட முடக்குகள் நிறைந்த பாதையாகவும் நீடித்த செயற்பாடாக அமைவதும் இடம்பெறக்கூடாததொன்றாகும்.

மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் நாயகத்தினால் இலங்கை தொடர்பான பிரேரணை சம்பந்தமாக இவ்வாண்டின் யூன் மாதத்தின் பேரவையில் வாய்மூல அறிக்கையாக சமர்ப்பிக்கப்படவேண்டி உள்ளதோடு, 2017 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் இறுதி விபரமான அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டி உள்ளது.

நிலைமாற்று நீதி – உண்மைக்காகவுள்ள உரிமை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல், ஈடுசெய்தல் மற்றும் போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் உள்ளிட்ட நினைத்துப்பார்க்க இயலாத அளவுக்கு கெட்டுப்போன மனிதஉரிமை மீறல்களை பிறப்பிக்கின்ற முரண்பாடுகளின் தோற்றுவாய்கள் மீண்டும் பிறக்காமை – 2015 சனவரியில் களமிறங்கிய புதிய இலங்கை எதிர் நோக்கவேண்டிய வழியுரிமையை அல்லது வழியுரிமை இன்மையை தீர்மானிக்கின்ற பரிசோதனையாகும். அது நாம் எமக்கே நேரிடப்போக இடமளித்தலை ஏற்றுக்கொள்ளல் பற்றியதாக அமையும் அது முப்பது வருடகாலமாக நிலவிய அந்த மூர்க்கத்தனமான யுத்தத்தின்போது நாம் ஒருவருக்கொருவர் எதிராக பாவித்த மற்றும் கட்டிவளர்த்த வேதனைப்படுத்தல்கள், சேதம் விளைவித்தல் மற்றும் பகைமை பற்றியதாக அமையும். அது உண்மையை ஏற்றுக்கொள்ள, அவற்றுக்கு பரிகாரம் செய்தலை ஆரம்பிக்க மற்றும் அதற்கிணங்க முன்னேறிச்செல்லும் அளவுக்கு நாங்கள் துணிச்சல் மிக்க, நேர்மையான மற்றும் பக்குவம் அடைந்தவர்களா? என்பவை பல இதன்மீது தங்கியுள்ளன.



இலங்கை மக்கள் பெண்களுக்கு எதிரான வன் முறைகள் தொடர்பாக நீதி துறையின் பால் கொண்டுள்ள அதிருப்தியை விளக்கும் வகையில் இச்சிற்பம் அமைந்துள்ளது.

எமது நீதித் துறையில் உள்ள பக்கச் சார்பு, ஊழல், பெண்களுக்கு எதிரான அடக்கு முறை மற்றும் அவற்றிற்கு எதிரான அசமந்தப் போக்கு, சமவுரிமை மீறல் என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்பின் பிரதிபலிப்பே இந்த சிலை வடிவமைப்பதற்கான முக்கிய உந்து சக்தியாக அமைந்தது. பெண்களுக்கு உரிய நீதியை பெற்று கொடுக்க எந்த ஒரு அரசியல் தீர்வுகளும் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இலங்கையின் நீதித் துறையானது நடு நிலையானதாகவோ நம்பகமாகவோ இல்லை. அதை விளக்கும் முகமாக சிற்பத்தில் தராசின் தட்டை சமனற்ற நிலை மூலம் காட்டியுள்ளேன். பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகளில் இருந்து மீளமுடியாத சூழலையே உருகிய நிலையிலுள்ள நிர்வாணமான பெண் உடல்

மூலம் விளக்கியுள்ளேன். இரும்புக் கம்பி மூலம் இலங்கையை காட்டியுள்ளமைக்கான காரணம் இவ்வாறான ஈனச் செயல்களைச் செய்பவர்கள் இரும்புக் கரம் கொண்டு (சிறைச்சாலை) படுத்தப்படல் வேண்டும். இதை அடுத்த சந்ததியினரும் அறிய வேண்டும் என்பதற்காக உலோகத்தில் வடிவமைத்துள்ளேன்.

சிற்பம் – **ஷர்மலா சந்திரதாசன்**

# நிலைமாற்று நீதி


'நிலைமாற்று நீதி' எனப்படுகின்ற தமிழ்ச்சொற்கள் இரண்டும் "Transitional Justice" எனும் ஆங்கிலச்சொற்களின் நேரடியான மொழிபெயர்ப்பாகும். இங்கு இதற்கு பதம் சார்ந்த மொழிபெயர்ப்பொன்றின் அர்த்தம் உள்ளதேயன்றி ஏறக்குறைய 25 நாடுகளில் பாவனையில் அதில் பொதிந்துள்ள கலாசாரம் சார்ந்த அர்த்தமல்ல. நல்லிணக்கத்திற்கான முன்நோக்கிய பயணப்பாதை, முன்னேற்றமடைந்த மனிதத்துவம், மாறுபட்ட சமூக வழிமுறையில் பிரவேசித்தல் போன்ற அர்த்தங்கள் அதில் பொதிந்துள்ளன. இலங்கையில் எனில் 2009 இல் பிரபாகரன் இறந்த செய்தியைக்கேட்டு விழாக்கோலம் பூண்டு பாற்சோறு சாப்பிட்ட மனிதன் இன்று மாறிவிட்டான் என்ற செய்தியும் அதில் இருத்தல் வேண்டும்.



சட்டத்தரணி
**எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

எனினும் எமது நாட்டில் நல்லிணக்கத்திற்கான முன்நோக்கிய பயணப்பாதையை பாவித்தல் அல்லது ஏனைய இனத்தவர்களுக்கு துன்புறுத்தலாக அமைதல் பற்றி அல்லது துன்புறுத்தும் கருத்தினைக் கொண்டிருத்தல் பற்றிக் கவலைப்படுவதை காணக்கூடியதாக இல்லை. சுருக்கமாகக் கூறினால், அந்தச் சமயத்தைக் கடைப்பிடிப்பதாகப் பகிரங்கப்படுத்துகின்ற செயல்களில் ஈடுபடுகின்றபோதிலும் கருணை, பரிவு பற்றிய ஈரமுள்ள கதையோ அல்லது சிநேகபூர்வ பண்பினையோ ஒரு சிலரே காட்டுகிறார்கள். அந்தச் சிலர் அமைதி நிறைந்த இலங்கைக்கு நல்லாசியாக அமைவர். எனினும் அத்தகைய சமாதானச் சூழலுக்கு மனிதர்கள் அனைவரினதும் தயார்நிலை அவசியமாகும். அதற்கு அவசியமாவது பின்வருமாறு தேடிப்பார்க்கின்ற மனிதர்களாவர். அதாவது, "அம்மா உங்கள் மகன்மார்கள் காணாமல் போனார்களா?, அக்கா உங்கள் கணவர் இறந்துவிட்டாரா?, மகனே, மகளே உங்கள் அம்மா, அப்பா இரண்டு பேருமே இல்லையா? உண்மையிலேயே நேர்ந்த துக்ககரமான சம்பவம் பற்றி நாங்கள் கவலைப்படுகிறோம்" அதற்கு பின்வருமாறு பிரதிபலிப்பு செய்கின்ற மனிதர்களும் இருக்கவேண்டும். "சரி நடந்தது நடந்துவிட்டது, நாங்கள் இனிமேலும் பிளவுபட்டால் எஞ்சியுள்ள பிள்ளைகளுக்கும், எதிர்காலச் சிறார்களுக்கும் ஒரு நாடு இல்லாமல் போய்விடும். நாங்கள் கோபதாபங்களை மறந்துவிடுவோம். மேலும் அவ்வாறான துக்ககரமான

picssr.com



காணாமல் போன கணவரைத் தேடும் மனைவி .....

**நல்லிணக்கத்திற்கான முன்நோக்கிய பயணப்பாதை, முன்னேற்றமடைந்த மனிதத்துவம், மாறுபட்ட சமூக வழிமுறையில் பிரவேசித்தல் போன்ற அர்த்தங்கள் அதில் பொதிந்துள்ளன. இலங்கையில் எனில் 2009 இல் பிரபாகரன் இறந்த செய்தியைக் கேட்டு விழாக்கோலம் பூண்டு பாற்சோறு சாப்பிட்ட மனிதன் இன்றளவில் மாறிவிட்டான் என்ற செய்தியும் அதில் இருத்தல் வேண்டும்.**

சம்பவம் இடம்பெறாத நாடொன்றை உருவாக்குவோம்." இவை வார்த்தைகளால் சொல்லப்படா விட்டாலும், அனைத்து முயற்சியாலும் நிலவுமாயின் நாட்டுக்கு புதியதொரு வெளிச்சமாகவும் எதிர்பாராத அதிஷ்டமாகவும் அமையும்.

"நிலைமாற்று நீதி" எனும் மனித உரிமைகள் மொழியில் கூறப்படுவதும் இதுவே. அது பாவனைக்கு வரும்போது சட்டமுறையான மற்றும் கலாசார விதிமுறைகளுடன் வருகின்ற ஒழுக்கநெறிகளின் தொகுதியாக அமைகின்றது. அவை புத்தகங்களில் பிரசுரிக்கப்பட்டவிடத்து கல்விசார் வெளியீடாக உணரத்தக்கதாக உள்ளதேயன்றி மனிதநேயத்தின் விருப்பத்திற்குரிய, கோவையாக அல்ல. ஆயினும், எமக்கு அந்தப் புகுமுகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உலக அனுபவங்களை அறிந்திருக்க வேண்டும்.

### "நிலைமாற்று நீதி" என்றால் என்ன?

கிளர்ச்சிகள், கலவரங்கள், சிவில் யுத்தம் போன்றவை நிலவி அது எவ்விதத்திலேனும் நின்றுவிட்ட பின்னர் மீண்டும் அவ்வாறான நிலைமை உருவாகாதிருக்கச் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட பிரயோகிக்கின்ற ஐக்கிய நாடுகளின் வேலைத்திட்டமொன்றாகும். இங்கு, கடந்த காலத்தில் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளல்;

நல்லிணக்கத்திற்கான முன்நோக்கிய பயணப்பாதை, முன்னேற்றமடைந்த மனிதத்துவம், மாறுபட்ட சமூக வழிமுறையில் பிரவேசித்தல் போன்ற அர்த்தங்கள் அதில் பொதிந்துள்ளன. இலங்கையிலாயின் 2009 இல் பிரபாகரன் இறந்த செய்தியைக் கேட்டு விழாக்கோலம் பூண்டு பாற்சோறு சாப்பிட்ட மனிதன் இன்றளவில் மாறிவிட்டான் என்ற செய்தியும் அதில் இருத்தல் வேண்டும்.

பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல், அதற்கிணங்க நீதியை நிலைநாட்டுதல், மீளிணக்கம் அல்லது நல்லிணக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் இடம்பெறும்.

அதனைப் பெறுவதற்கு தேசிய முயற்சிகளுடன் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறல் வேண்டும். அதில் நீதித்துறை சாராத செயல்முறைகளும் அடங்கும். விரிவான தேசிய உரையாடல், உண்மையைக் கண்டறிதல், வழக்குத்தாக்கல் செய்தல், இழப்பீடு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அந்நடவடிக்கைகளை சோம்பலின்றிப் புரிகின்ற தாபனஞ்சார் மறுசீரமைப்பும் இடம்பெறல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட அனைத்துச் செயல்முறைகளினதும் அடிப்படை இலக்கு இழப்புகளுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகிய மக்களாவர். அது சிங்கள, தமிழ், இஸ்லாம் அல்லது வேறு ஆட்களாக அமையலாம். உண்மையான தகவல்களைக் கண்டறிகையில் பெண்களிடமிருந்தும், பிள்ளைகளிடமிருந்தும் அவை பெறப்படவேண்டியது கட்டாயமானதாக அமைதல் வேண்டுமென்பதோடு, அதற்கான முறையியலொன்று வகுக்கப்படலும் வேண்டும்.

இந்த செயற்பாடு அல்லது "நிலைமாற்று நீதியின்" அடிப்படையாக அமைவது ஐக்கிய நாடுகள் சாசனம் மற்றும் அதன் கீழுள்ள சில சர்வதேச மனிதஉரிமைகள் சட்டங்களுமாகும். அவை பின்வருமாறு:-

- சர்வதேச மனிதஉரிமைகள் சட்டம்
- சர்வதேச மனிதாபிமான சட்டங்கள்
- சர்வதேச குற்றவியல் சட்டங்கள்
- அகதிகள் பற்றிய சர்வதேசச் சட்டம்

இந்த சர்வதேசச் சட்டங்களை உரிய வகையில் கடைப்பிடிப்பதன் மூலமாக அந்நாட்டில் தவறு புரிகின்ற அல்லது அச்சட்டங்களை மீறுவதால் அவற்றை மீறுபவர்களுக்கே பாதிப்பு ஏற்படுகின்றது. பொதுமக்களுக்கு அல்ல. பொதுமக்களுக்கு அதனால் சில உரிமைகள் கிடைக்கும். அவ்வுரிமைகளை மீறுகின்ற உத்தியோகத்தர்களும், நிர்வாகிகளும் ஐ.நா உடன்படிக்கைகள் மூலமாக பொறுப்புக்கூறக் கடப்பாடு கொண்டுள்ளனர். மேற்படி உடன்படிக்கைகள் மூலமாக மக்களுக்கு கிடைத்துள்ள உரிமைகள் பின்வருமாறு:

- நீதிக்கான உரிமை
- உண்மைக்கான உரிமை
- இழப்பீட்டிற்கு நிவாரணம் கிடைப்பதற்கான உரிமை
- மீறல்கள் மீண்டும் இடம்பெறமாட்டாதென்பதற்கான உத்தரவாதம் கிடைப்பதற்கான உரிமை.

**நிலைமாற்று நீதி ஈடேறுகின்ற செயல்வழிகள் யாவை?**

விரிவான மக்கள் கருத்துக்கணிப்பு அத்தியவசியமாகும். மேலோட்டமான அபிப்பிராயங்களின்றி ஆழமான மனிதநேய அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதும் அதற்கான தகவல்களை வழங்குவதும் முக்கியமானதாகும். அதன்பொருட்டு செயலமர்வுகள், கருத்தரங்குகள், மக்கள் கூட்டங்கள், மகாநாடுககள், உரையாடல்கள், போதியளவிலான தேடல்கள், தரவுச்சேகரிப்பு போன்றவை ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக பரவலான புரிந்துணர்வினை ஏற்படுத்தலாம். எனினும் அது நோக்கத்திற்கு பங்கமேற்படுத்தாத ஒழுங்கமைந்த ஒன்றாக அமைதல் வேண்டுமென்பதோடு, நாடகச் சம்பவங்கள் போன்றவையும் உள்ளடக்கப்படலாம்.

எனினும் எமது நாட்டில் நல்லிணக்கத்திற்கான முன்நோக்கிய பயணப்பாதையைப் பாவித்தல் அல்லது ஏனைய இனத்தவர்களுக்கு துன்புறுத்தலாக அமைதல் பற்றி அல்லது துன்புறுத்தும் கருத்தினைக் கொண்டிருத்தல் பற்றிக் கவலைப்படுவதை காணக்கூடியதாக இல்லை. சுருக்கமாகக் கூறினால், அந்தச் சமயத்தைக் கடைப்பிடிப்பதாகப் பகிரங்கப்படுத்துகின்ற செயல்களில் ஈடுபடுகின்ற போதிலும் கருணை, பரிவு பற்றிய ஈரமான கதையோ அல்லது சிநேகபூர்வ பண்பினையோ ஒரு சிலரே காட்டுகிறார்கள். அந்தச் சிலர் அமைதி நிறைந்த இலங்கைக்கு நல்லாசியாக அமைவர்.

தகவல்களைப்பெறும்போது இறந்தகாலத்தில் சர்வதேச சட்டமீறல்களுக்கு இரையாகி எஞ்சியுள்ளவர்கள், சம்பவங்களை கேள்விப்பட்டவர்கள், கண்டவர்கள், பெண்கள், சிறுவர்கள், அகதிகள், வெளிநாடு சென்றவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், சிவில் மற்றும் சமயத்தலைவர்கள், ஊடகங்கள், தொழிற்சங்கங்கள், மனிதஉரிமைகள் அமைப்புகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், தொழில்வாண்மையாளர்கள், தொழில்முயற்சி அமைப்புகள்,



www.tamilnet.com

எல்.எல்.ஆர்.சீ. ஆணைக்குழு பொது மக்களின் சாட்சிகளைப் பதிவு செய்கிறது.

**எனினும் எமது நாட்டில் நல்லிணக்கத்திற்கான முன்நோக்கிய பயணப்பாதையைப் பாவித்தல் அல்லது ஏனைய இனத்தவர்களுக்கு துன்புறுத்தலாக அமைதல் பற்றி அல்லது துன்புறுத்தும் கருத்தினைக் கொண்டிருத்தல் பற்றிக் கவலைப்படுவதை காணக்கூடியதாக இல்லை. சுருக்கமாகக் கூறினால், அந்தச் சமயத்தைக் கடைப்பிடிப்பதாகப் பகிரங்கப்படுத்துகின்ற செயல்களில் ஈடுபடுகின்ற போதிலும் கருணை, பரிவு பற்றிய ஈரமான கதையோ அல்லது சிநேகபூர்வ பண்பினையோ ஒரு சிலரே காட்டுகிறார்கள். அந்தச் சிலர் அமைதி நிறைந்த இலங்கைக்கு நல்லாசியாக அமைவர்.**

கடந்தகால போராளிகள் போன்றவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்கு அநாவசியமான மற்றும் பாதகமான பிரச்சாரங்களை வழங்கக்கூடாது. அறிக்கையிடல் உண்மையானதாகவும், நியாயமானதாகவும் அமைதல் வேண்டும். எமது நாட்டின் ஊடக கலாசாரம் கீழ்த்தரமான நிலையிலேயே உள்ளது. உண்மையானதும், நியாயமானதுமான அறிக்கையிடலுக்குப் பதிலாக அரசியல் இலாபம் கருதிய உண்மையை அழித்தொழித்தலே நிலவுகின்றது. குறிப்பாக தனியார் ஊடகங்களால் எந்தவொரு தேசிய இயக்கத்திற்கும் பங்கமேற்படுத்த இயலும்.

உண்மையைக் கண்டறியும் பணிக்காக உண்மையறிவதற்கான ஆணைக்குழு, விசாரணை ஆணைக்குழு, தகவல் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படலாம். அதன் மூலமாக தேடுவது என்ன? இறந்தகாலத்தில் பல்வேறு மக்கட்பிரிவுகளுக்கு நேர்ந்த இழப்புகள், வன்முறைச் சம்பவங்களின் விளைவுகள், நாசகாரச் சம்பவங்கள், அச்சம்பவங்களின் பின்னணியிலுள்ள இனவாத அரசியல் வன்செயல்கள் போன்றவை மாத்திரமன்றி தனியான யுத்தம்சார் நடவடிக்கைகளை வேறுபடுத்திக் கொள்ளல்வேண்டும். போர்ச் சட்டங்களுக்கிணங்க புரியவேண்டிய செயல்கள் பற்றி எந்தவொரு தரப்பும் பொறுப்புக்கூற வேண்டியதில்லை. எனினும் அச்சட்டங்களை விஞ்சியதாக நாசகாரச் செயல்களைப் புரிதல் பற்றிய உண்மையைக் கண்டறிய வேண்டியது அவசியமாகக் காரணம் அதற்கு அனைத்து தரப்புக்களும் பொறுப்புக்கூற வேண்டுமென்பதாலேயே. அத்துடன் உண்மையை அறிவதற்கான உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதாலேயே ஆகும்.

**நிலைமாறும் தருணம்.**

யுத்தத்திலிருந்து அனைத்துத் தரப்பினரும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமாக அமைவது மீண்டும் அத்தகைய நிலைமை ஏற்படாமல் இருக்க ஆவனசெய்வதாகும். பாதிக்கப்பட்ட மக்கள் மீது பல்வேறு விதத்தில் இடையீடு செய்வதன் மூலமாகவே அப்பொறுப்புக்கூறல் தொடங்குகின்றது. பொருள்சார் உதவிகள், அடையாளம்சார் நன்மைகள், இயல்புநிலைக்கு கொண்டுவருதல், பணமாக இழப்பீடு செலுத்துதல், புனரமைப்பு, மருத்துவ மற்றும் உளவியல் சேவைகளை வழங்குதல், சுகாதாரக்கல்வி உதவிகள், ஆதனங்களை மீளக்கையளித்தல், ஈடுசெய்தல், உத்தியோகபூர்வ ரீதியாக மன்னிப்புக்கோருதல், அரும்பொருட்காட்சியகங்களை அமைத்தல், நினைவுறுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்றவை அதில் அடங்குகின்றன. ஏற்கனவே அரசாங்கம் இவற்றுள் சில செயற்பாடுகளை ஆரம்பித்துப்பேணி வருகின்றமை மீண்டும் யுத்தமொன்று ஏற்படாதிருக்க அவசியமான ஒரு செயலாகவும், எனினும் அது முழுமையாகவும், துரிதமாகவும் அமைதல் வேண்டும். இந்த அனைத்துச் செயற்பாடுகளிலும் பாதிக்கப்பட்ட மக்களின் பங்கேற்பு அடிப்படையானதாக அமையும். இங்கு பெண்களினதும், சிறுவர்களினதும் பங்கேற்பு அத்தியாவசியமானதாகும்.

கடுமையான மீறல்களை புரிந்தவர்களுக்கு எதிராக சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதஉரிமைகள் சட்டத்தின் பிரகாரம் நிரூபிக்கப்படுமாயின் இனம் அல்லது தராதரம் பாராமல் தண்டனை வழங்குவது நிலைமாற்று நீதியின் ஒரு பகுதியாகும். இங்கு நியாயமான வழக்கு நடவடிக்கைமுறைக்கு அவசியமான சர்வதேச தரநியமங்கள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் வழக்குத் தீர்ப்புகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

எமது நாட்டில் முன்பு இது பற்றிய அனுபவம் இல்லையென்பதாலேயே உள்ளூர் ரீதியாக அச்செயற்பாட்டினை முன்னேற்றகரமாக்க வேண்டியது அவசியமாகின்றது. தேசிய ரீதியிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆற்றல், வழக்குத்தாக்கல் செய்யும் வினைத்திறன் அதற்கு அவசியமாகும். சுயாதீனமான பக்கச்சார்பற்ற நீதிபதிகள் குழாத்தினைப்போன்றே போதிய அளவிலான சாட்சிகள் இருத்தல், வழக்குத்தாக்கல் செய்தல், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல் போன்றவை அவசியமாகின்றது. இத்தகைய விடயங்களின்போது சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகக்கூடும். கலப்புக்குற்றவியல் நீதிமன்றம் அத்தகைய தருணத்திலேயே அவசியமாகின்றது.

இச்செயற்பாட்டினை வெற்றிகரமானதாக்க வேண்டுமாயின் அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களும் மறுசீரமைக்கப்படல் வேண்டும். இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று இந்த நடவடிக்கைமுறைக்கு அவசியமான ஒத்துழைப்பினை வழங்க இற்றைவரை பழக்கமின்மையால் புதிய பழக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது. இரண்டாவது எதிர்கால சமாதானம், மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதோடு, மனித உரிமைகள் கலாசாரமொன்றைக்

கட்டியெழுப்ப பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். குறிப்பாக எதிர்காலத்தில் மனிதஉரிமைகளை மீறாத நிறுவனங்களாக மாறுதல் வேண்டும். தவறுகளிலிருந்து குற்றமற்றவரென விடுவிக்கின்ற கொள்கை எந்தவொரு நிறுவனத்திலும் இருத்தலாகாது. அது சம்பந்தமான சர்வதேச சட்டங்களை கடைப்பிடித்தல் பற்றி அரசாங்க நிறுவனங்கள் அனைத்தும் விழிப்புணர்வூட்டப்படல் வேண்டும். அரசாங்க அலுவலர், நீதித்துறை அலுவலர்கள், பாதுகாப்புப் பிரிவுகள் இந்த மாற்றத்தை வசதிப்படுத்தும் நிலைமைக்கு வரல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் தாபனம் இந்த நடவடிக்கைகளை ஏறக்குறைய 25 நாடுகளில் புரிந்ததன் மூலமாக ஆகப் பெரிய அனுபவத்தைப் பெற்றுள்ளது. இதன்போது ஏதேனும் நாடொன்றுக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்கான குற்றச்சாட்டு இன்னமும் முன்வைக்கப்படவில்லை. எனவே அது சம்பந்தமான சட்ட ஆலோசனைகள், ஆராய்ச்சி உதவிகள், பணித்திட்டங்கள் மற்றும் பல்வேறு நடவடிக்கை முறைகள் தொடர்பிலான பரந்த அனுபவம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கே உண்டு. இதன்போது எமக்கு எல்லாவற்றையும் செய்துகொள்ள இயலுமென இறுமாப்புக்கொள்வது முட்டாள்த்தனத்தை வெளிக்காட்டுவதாக அமையும். சமாதானச் செயற்பாட்டுக்காக அப்பணியை சரிவர செய்யவேண்டியது அவசியமாகும்.

உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு மூலமாக மறைந்துபோன பெருமளவிலான தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கோத்தமாலா, தென்னாபிரிக்கா, பேரு, கென்யா, லைபீரியா, மொரோக்கோ, சியராலியோன், தீமோர் ஆகிய நாடுகளில் உண்மையறிவதற்கான ஆணைக்குழுக்களினால் அவசியமான சரியான தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வாணைக்குழுக்களில் பெண் அங்கத்தவர்கள் இருந்தனர். பெண்கள் மீதான வல்லுறவுகள், சிறுவர் துன்புறுத்தல்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொண்டதன் மூலமாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நியாயமான தண்டனைகளை விதிக்க இயலுமாயிற்று. அத்தகையவை மீண்டும் இடம்பெறாதிருக்கவும், நீதியின் ஒரு பகுதியென்ற வகையிலும் தீவிரமான மீறல்களுக்குத் தண்டனை வழங்கவேண்டியது அத்தியாவசியமானதாகும்.


இதேவேளையில் மறந்துவிடும் எண்ணக்கருவுக்கும் இடமிருத்தல் வேண்டும். மறந்துவிடக்கூடிய ஒருசில தவறுகளைத் தீவிர குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதன் மூலமாகவே மறக்கமுடியும். எனினும் அவ்வாறு செய்வதாயின் சமூகம் கலாசார ரீதியாக ஏதேனும் முன்னேற்றத்தை அடைந்திருத்தல் வேண்டும். "எம்மவர்கள்" என்பதால் தவறுகளிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டுமென்ற மனோபாவம் இருக்கும் வரை நாங்கள் அந்த மனித நாகரீகத்திற்குத் தொலைவிலேயே இருக்கிறோம்.

மீளிணக்கம் நல்லிணக்கம் என்பது நீதிக்கு மேலாக இருக்கின்ற மானிடப்பண்பாகும். அனைத்து சமயங்களிலும் வெளிப்படுத்தப்பட்ட அடிப்படை அதுவாகும். எனினும் பாவனையில் உள்ள அடிப்படையில் சிக்கல்கள் நிலவுவதும் நீதிக்கு மனித நீதிக்கு அவசியமான நடத்தைப்போக்கு அரிதானதாக இருப்பதாலாகும். நீதியின்றி நல்லிணக்கம் ஏற்படவியலாது.

ஒரு சிலர் சிங்கள இனத்திற்கு, புத்த சமயத்திற்கு நியாயத்தை ஈடேற்றுவதற்காக தோற்றுவதாக கூறுகிறார்கள். எனினும் மனிதனுக்காக நியாயத்தை ஈடேற்றாதவனுக்கு தர்மமொன்று இருக்கமுடியாது சமயமொன்று இருக்கக்கூடும். அப்போது மேலோங்கச் செய்விப்பது இனவாதத்தை அல்லது மதவாதத்தை ஆகும். அதன் மூலமாக இடம்பெறுவது அந்த இனம் அல்லது மதம் எனக்கூறிக்கொண்டு அதில் பற்றிப்பிடித்துள்ளவர்களின் ஒத்துழைப்பினை பெறுவதற்கான அரசியலாகும். சிங்கள இனம் என்பது நீதியைப் புறக்கணிக்கவேண்டிய இனமெனில் அது சீக்கிரமாக அருகிப்போய்விடும். புத்தசமயம் என்பது பிறரை நசுக்கி, வருத்தி மேலோங்கி நிற்கின்ற தர்மமா? அவ்வாறு கருதுவதும் கூட தர்மத்திற்கு முரணானதாகும்.

**இதேவேளையில் மறந்துவிடும் எண்ணக்கருவுக்கும் இடம் இருத்தல் வேண்டும். மறந்துவிடக்கூடிய ஒருசில தவறுகளை தீவிர குற்றங்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலமாகவே மறக்கமுடியும். எனினும் அவ்வாறு செய்வதாயின் சமூகம் கலாசார ரீதியாகவும் ஏதேனும் முன்னேற்றத்தை அடைந்திருத்தல் வேண்டும். "எம்மவர்கள்" என்பதால் தவறுகளிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டுமென்ற மனோபாவம் இருக்கும் வரை நாங்கள் அந்த மனித நாகரீகத்திற்குத் தொலைவிலேயே இருக்கிறோம்.**

இத்தருணத்தில் உலகத்தவர் எம்மீது ஓரளவு விருப்பத்தை வெளிப்படுத்தி உள்ளார்கள். அது நாங்கள் ஏதேனும் நீதிசார்ந்த பாவனையை மேலெழுந்தவாரியாகக் காட்டியமையால் ஆகும். எனினும் எமது நாட்டில் அதாவது உள்ளகத்தில் அது எமக்கு உள்ளதா? மானிடக் கூட்டமைப்பு அந்த நிலைமைக்கு மாறத்தொடங்கி உள்ளதா? அதற்கான ஏதாவது அரசியல் சுற்றுச்சூழல் உருவாகியுள்ளபோதிலும் கலாசார ஆவேசம் உள்ளதா?



ஒளிந்திருத்தல் என எனது சித்திரத்தை பெயரிட்டுள்ளேன். சமயங்களால் நாம் வாழும் சமூகம் மூடப்பட்டுள்ளதை நான் அறிவேன். அனைத்து சமயங்களும் வெள்ளை நிறத்தினால் மூடப்பட்டுள்ளன.எனினும் அந்த வெள்ளை நிறத்தில் மறைந்திருக்கும் புனித தன்மை கொண்ட கூர்மையான கத்தி எமக்கு அச்சுறுத்தல் நிறைந்த எதிர்காலத்தை உணர்த்துகின்றது.

ஓவியம் : **களனி மேனகா வில்சன்**

# பிளவுபட்ட இறந்தகாலத்திலிருந்து பங்காண்மை எதிர்காலத்தை நோக்கி



பேராசிரியர்
**ஜயந்த செனெவிரத்ன**

மீளிணக்கம் என்பதன் எளிமையான அர்த்தத்தை எடுத்துக்கொண்டால் அது மீண்டும் ஒன்றிணைதல் இன்றேல் மீண்டும் நண்பராதல் எனும் பொருளைத் தருகின்றது. எனினும் அது அதைப்பார்க்கிலும் பாரதூரமான ஒரு விடயமாகும். ஏனெனில் நீண்டகாலமாக நிலவிய அழிவுமிக்க யுத்தத்தின் பின்னர் அனைவருக்கும் கௌரவம் (Dignity for all) என்பதன் கீழ் சமூகத்தை மீண்டும் ஒருங்கிணைப்பது எளிமையானதொன்றல்ல. புண்பட்ட இதயங்களைக் குணப்படுத்துவதும், பகைமை மற்றும் குரோதத்திலிருந்து மக்களை மீட்டெடுக்கவும் முறையான வேலைத்திட்டமொன்று அவசியமாகும். மீளிணக்கத்தின் ஆழமான பொருள் பரஸ்பர ரீதியில் ஒத்துணர்வுள்ள சமூகமொன்றை நோக்கிச்செல்லும் பயணத்திற்கு பிள்ளையார் சுழி போடுவதாகும். அதைப்போலவே அரசியல் ரீதியான பங்காண்மை எதிர்காலத்திற்கான அத்திவாரத்தை அமைப்பதாகும்.

முரண்பாட்டு நிலைமாற்றம் எனப்படுகின்ற சூழமைவில் மீளிணக்கமானது நிலைமாற்று நீதி என்ற கோட்பாட்டின் கீழேயே உரையாடப்படுகின்றது. அதன் அர்த்தம் யுத்த பீதிநிலை முற்றுப்பெற்றதும் சமூகத்தை நல்லநிலைக்கு மாற்றிக்கொண்டிருக்கின்ற வேளையில் ஈடேற்றவேண்டிய நீதியாகும். இறந்தகாலத்தில் இடம்பெற்ற மானிட விரோதச் செயற்பாடுகள் இன்றேல் மீறல்கள் இருப்பின் அவற்றை விசாரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத செயற்பாடுகள்



www.bbc.co.uk

ஜனாதிபதி மைத்ரீபால சிறிசேன தன்னை கொலை செய்ய முயற்சித்த விடுதலைப் புலிகளின் உறுப்பினருக்கு மன்னிப்பு வழங்கியபோது

ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது அதன் பிரதான பணியாகும். அதற்கிணங்க நிலைமாற்று நீதிப்பருவத்தில் பல செயற்பாடுகளைக் காணமுடியும். அவையாவன: நீதிமன்ற வழக்குவிசாரணை, உண்மையறிவதற்கான ஆணைக்குழுக்களின் செயற்பாடு, தவறுகளைத் திருத்திக்கொள்ளல், மன்னிப்புக்கோருதல், மன்னிப்பு வழங்குதல், நிறுவனம்சார் மற்றும் அரசியல் மறுசீரமைப்புகள், பகிரங்க நினைவுச் சின்னங்களை அமைத்தல் என்பவையாகும். அதற்கிணங்க எடுத்துக்கொண்டால் நிலைமாற்று நீதி 3 கட்டங்கள் மீது கவனஞ் செலுத்துகின்றது.

இறந்தகாலத்துடன் ஏற்புடையதாக எடுத்துக்கொண்டால் இறந்தகாலத்தில் என்ன நேர்ந்தது? மற்றும் அதன் உண்மையை வெளிப்படுத்திக் கொள்ளவேண்டியது அதன் முதலாவது கட்டமாகும். இரண்டாவது நிகழ்காலத்துடன் ஏற்புடையதாகின்ற நீதியை ஈடேற்றச் செய்விக்க தற்போது என்ன செய்யவேண்டும்? என்பதாக அமைவதோடு, மீண்டும் அத்தகைய வன்முறைசார்ந்த முரண்பாடு அல்லது யுத்தம் தோன்றாவண்ணம் ஆவன செய்வது எவ்வாறு? என்பதற்கு ஏற்புடையதாகின்ற சமூக நிலைமாற்றச் செயற்பாடு அதில் மூன்றாவதாகும்.

பொதுவாக நிலைமாற்று நீதியின் இரண்டு புகுமுகங்கள் உள்ளன. அதில் முதலாவது லிபரல் அரசியல் புகுமுறையாகும். இரண்டாவது சமயம்சார் புகுமுகமாகும். அரசியல் புகுமுகத்தை எடுத்துக்கொண்டால் அது லிபரல் மனிதஉரிமைகள் புகுமுகம் என அதற்கு பொருள் விளக்கம் கிடைக்கின்றது. அதிலும் இரண்டு பகுதிகளைக் காணலாம். அதாவது :

1. மனித உரிமைகளை மீறிய குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலமாக பாதிக்கப்பட்டவர்களின் பழிவாங்கும் மனதுக்கு ஆறுதல் வழங்குவதாகும். மனிதத்துவத்திற்கு எதிராக புரியப்பட்ட குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் பிற மனிதஉரிமை மீறல்களை விசாரிப்பதற்காக கீழே காட்டப்பட்ட நீதிமன்ற செயல் முறைகளை அந்த புகுமுகம் மூலமாக பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

**1.1 சர்வதேச நீதிமன்ற வழக்கு விசாரணைகள்**

**1.2 சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்**

யூகோஸ்லாவியா, றுவாண்டா, கொங்கோ, சியராலியோன், உகண்டா போன்ற நாடுகளின் சம்பவங்களை விசாரணை செய்தல் போன்ற செயற்பாடுகள் இதற்கான உதாரணங்களாகும்.

**1.3 பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் செயற்பாடு**

2. உண்மையறிவதற்கான ஆணைக்குழுக்களை தாபிப்பதன் மூலமாக உண்மையை வெளிக்கொணர்தல், ஒழுங்கமைந்தவகையில் அல்லது ஒழுங்கமையாத வகையில் புரியப்பட்ட குற்றச்செயல்களை விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பித்தல்.

இவ்விதமாக மனித உரிமைகள் மீறப்பட ஏதுவான விடயங்களை விளங்கிக்கொள்ள அதன் மூலமாக வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளல், நிறுவனம்சார் மற்றும் அரச மறுசீரமைப்பு அலுவல்களுக்கு அவசியமான பிரேரணைகளை சமர்ப்பித்தல் என்றவகையில் அதனை தெளிவுபடுத்தலாம்.

இறந்தகாலத்தில் இடம்பெற்ற மானிட விரோத செயற்பாடுகள் இன்றேல் மீறல்கள் இருப்பின் அவற்றை விசாரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத செயற்பாடுகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது அதன் பிரதான பணியாகும். அதற்கிணங்க நிலைமாற்று நீதிப்பருவத்தில் பல செயற்பாடுகளைக் காணமுடியும்.

இலங்கையை எடுத்துக்கொண்டால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினர்களும் சர்வதேச சமூகமும் முயற்சி செய்வது இந்த லிபரல் மனிதஉரிமைகள் புகுமுகத்தின் அடிப்படையில் உள்நாட்டு ரீதியாகவோ, சர்வதேச ரீதியாகவோ நம்பிக்கை வாய்ந்த விசாரணை மேற்கொள்ளலுக்கு இணங்கச் செய்விப்பதாகும். இத்தகைய செயற்பாட்டுக்காக எல்.எல்.ஆர்.சீ. அறிக்கையிலும் உள்ளூர் ரீதியிலும் அத்தகைய விசாரித்தறிதல் மேற்கொள்ளப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**இறந்தகாலத்தில் இடம்பெற்ற மானிட விரோத செயற்பாடுகள் இன்றேல் மீறல்கள் இருப்பின் அவற்றை விசாரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத செயற்பாடுகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது அதன் பிரதான பணியாகும். அதற்கிணங்க நிலைமாற்று நீதிப்பருவத்தில் பல செயற்பாடுகளைக் காணமுடியும்.**


### பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்

நிலைமாற்று நீதியின் இரண்டாவது புகுமுகமாக அமைவது சமயம்சார் புகுமுகமாகும். இது முழுமையாகவே மீளிணக்கத்தில் தங்கியுள்ளது. இங்கு குற்றஞ்சாட்டப்பட்டவர், தான் புரிந்த தவறு பற்றி குற்றஒப்புதல் வாக்குமூலம் அளித்து கவலைப்படுவதற்கு அவசியமான உளரீதியான பின்னணியை அமைத்துக்கொள்கிறார். நீதிமன்றச் செயற்பாடொன்று மூலமாக தண்டனை வழங்குகின்ற அல்லது பழிவாங்கும் செயற்பாடு இதில் அடங்கமாட்டாது. பாதிக்கப்பட்டவரால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மன்னிப்பு வழங்கப்படுதல் வரை இச்செயற்பாடு நீண்டு செல்கின்றது. பிறரது கவலையையும், வேதனையையும் ஒத்துணரக்கூடிய வகையில் இன்றேல் தனக்கு நேர்ந்த ஒன்றைப்போல் அறிவித்தல் அதன் மூலமாக இடம் பெறுகின்றது. இந்த புகுமுகங்கள் இரண்டையும் நன்றாக விளங்கிக்கொள்வதற்கான ஒப்புநோக்கல் தொடர்பில் நாங்கள் கவனஞ்செலுத்துவோம்.

அரசியல் புகுமுகம் இன்றேல் லிபரல் மனிதஉரிமைகள் புகுமுகம் மூலமாக மனித உரிமைகளைப் பாதுகாக்க அவற்றை மீறியவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென கூறிநிற்பதோடு, சமயம்சார் புகுமுகம் மனித உரிமைகள் என்பது இறுதி முடிவென உறுதிப்படுத்துகின்றபோதிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டுமென்பதை பிரதான முடிவாகக் கொள்வதில்லை. அரசியல் புகுமுகமானது சட்டவாதத்தின் மீது தங்கியிருப்பதோடு, சமயம்சார் புகுமுகம் மீளிணக்கம் பற்றிய சமயம்சார் கருத்தியல் மீது தங்கியுள்ளது. அரசியல் புகுமுகத்தின் பிரதான கருவியாக அமைவது குற்றவியல் நீதிமன்ற முறைமையாகும். சமயம்சார் புகுமுகத்தின் பிரதான கருவியாக அமைவது உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவாகும். பொதுவாக சமயம் அரசியலிலிருந்து விலகிநிற்கவேண்டுமென ஏற்றுக்கொள்கின்ற அரசியல் புகுமுகமானது குணப்படுத்துதலையும், மன்னிப்பு வழங்குவதையும் அரசியல் செயற்பாடெனக் கருதுகின்றது. மனிதஉரிமைகளை மீறியவர்களுக்கு மன்னிப்பு வழங்க மிகவும் ஆர்வம் காட்டுவதை நியாயப்படுத்துவதற்கான காரணியாக அமைவது சனநாயக மாற்றத்திற்கு அது அத்தியாவசியமென்பது அரசியல் புகுமுகம் மூலமாக நம்பப்படுகின்றது. சமயம்சார் புகுமுகத்திற்கிணங்க தண்டனையை இடைநிறுத்த அல்லது மன்னிப்பு வழங்க அவசியமானது உண்மையை வெளிக்கொணரவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் ஆகும். அரசியல் புகுமுகத்திற்கிணங்க நீதி அடையாளப்படுத்தப்படுவது குற்றச்சாட்டுகள் மற்றும் தவறுகளுக்கு தண்டனை வழங்குவதன் மூலமேயாகும். சமயம்சார் புகுமுகத்திற்கிணங்க நீதியை நிலை நாட்டுவதை மன்னிப்பு வழங்குவதன் மூலமாகச் செய்யலாம். தவறினை ஏற்றுக்கொள்ளலும், மன்னிப்பு வழங்குதலும் இயல்பான நீதியின் கீழ் மேற்கொள்ளப்படும். தமது இறந்தகால எதிரியுடன் தொடர்புகள் கட்டிவளர்க்கப்படும். இதற்கு மேலதிகமாக எதிரியை மனிதநேய மயப்படுத்தும் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதை இறுதியானதாக அரசியல் புகுமுகம் கருதமாட்டாதென்பதோடு, சமயம்சார் புகுமுகம் பிரத்தியேகத்தன்மையை வலியுறுத்துகின்றது உறவுகளை கட்டியெழுப்புகின்றது மனதை நிலைமாற்றுகின்றது உறவுகள் புலன்சார் உறுப்புகளாக காண்பது மாத்திரமன்றி உள்ளத்தில் ஈரத்தை உருவாக்குகின்றது.

இந்த இரண்டு விதமான புகுமுகங்களுக்கிணங்க நோக்குமிடத்து இலங்கையின் நிலைமாற்ற நீதியை ஈடேற்றுவதில் பாரிய பங்கினை ஆற்றவேண்டியுள்ளது. மனிதஉரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பின் அது பற்றி பக்கச்சார்பற்றதும் நம்பகத்தன்மை கொண்டதுமான விசாரணைகளை மேற்கொண்டு வெளிக்கொணருவதில் வெற்றியீட்ட இயலுமாயின் நிலைமாற்று நீதியை ஈடேற்றுவதற்கான பின்னணியை வகுத்துக்கொள்ள இயலும். மறுபுறத்தில் உண்மையைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட எல்.எல்.ஆர்.சீ. ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளும் நம்பிக்கை வைக்கக்கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது தாமதமாகியுள்ளது. எனினும்

தென்னாபிரிக்க நிலைமாற்று நீதிக் காலகட்டமானது மிகவும் சுறுசுறுப்பானதாக அமைந்தது. அந்தத் தருணத்தில் கவனிக்கப்படவேண்டிய அனைத்தையுமே அவர்கள் கவனித்தனர். அந்நாட்டின் மீளிணக்கச்செயற்பாடு லிபரல் மனிதஉரிமைகள் புகுமுகத்தினதும், சமயம்சார் புகுமுகத்தினதும் கலப்பாக அமைந்தது. எனினும் அவர்கள் தண்டனையைக் கைவிட்டனர். சமயம்சார் புகுமுகம் மீதே அதிக நாட்டம் செலுத்தினர். அவர்களின் உண்மையறிவதற்கான ஆணைக்குழுவின் தலைவராக அமைந்தவர் புகழ்பெற்ற சமயத்தலைவர் ஒருவராவார். அவர் ஆயர் டெஸ்மன்ட் டுட்டூ அருட்தந்தையாவார். கிறிஸ்தவ தர்மத்தின் நற்பண்புகளை ஆணைக்குழுவின் உயர்மூச்சாக மாற்றுவதில் அவர் வெற்றிகண்டார். அன்பு, பரிவு, இரக்கம், மன்னித்தல், நல்லிணக்கம் ஆகிய நற்பண்புகளை மிகவும் கவனமாக, எனினும் ஆர்வத்துடன் இச்செயற்பாட்டின்போது மக்கள் மனங்களில் பதியவைக்க இன்றேல் சமூகத்துடன் சேர்க்க அவர்களுக்கு ஆற்றல் கிடைத்தது. அதனால் அவர்களின் மீளிணக்கச்செயற்பாடு வெற்றியடைந்தது.


ஜனாதிபதி அள்வாரோ.....

www.theguardian.com

### கோத்தமாலா மற்றும் தென்னாபிரிக்கா

மீளிணக்கம் பற்றி பேசப்படுகின்ற வேளையில் எமக்கு இரண்டு சர்வதேச அனுபவங்களை கவனத்திற்கொள்ளவியலும். கோத்தமாலா ஒரு லத்தீன் அமெரிக்க இராச்சியமாகும். அந்நாடு 36 வருடகால சிவில் யுத்தத்திற்கு உரிமை பாராட்டியது. அந்த யுத்தமானது அந்நாட்டில் நிலவிய இராணுவ ஆட்சிக்கு எதிராக புரட்சிகர இடதுசாரி கிளர்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கெரில்லா யுத்தமாகும். அந்நாட்டின் பூர்வீகக்குடிகளான மாயன்மார்கள் காட்டிய ஒத்துழைப்புக் காரணமாக கெரில்லாக்களை தோல்வியடையச் செய்விக்கப் படையினருக்கு இயலாமல் போயிற்று. 1960 தொடக்கம் 1996 வரை நிலவிய அந்தப் போராட்டங்களில் 200,000 மேற்பட்ட எண்ணிக்கையுடையோர் இறந்து ஏறக்குறைய ஒரு இலட்சம் பெண்கள் விதவைகளாக மாறினர். அத்துடன் 50,000 பிள்ளைகள் அநாதைகளாகினர். எவ்வாறாயினும் பல இராணுவ சதி முயற்சிகளின் பின்னர் மக்களின் வாக்குகளால் ஆட்சிபீடமேறிய சனாதிபதி அல்வாறோ அரசு கெரில்லாக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த பின்னர் கோத்தமாலாவுக்கு சமாதானத்தைக்கொண்டு வருவதில் வெற்றி கண்டார்.

மீளிணக்கச் செயற்பாடொன்றாக அமைந்த அங்கு முதலில் இடம் பெற்றது உண்மையறிவதற்கான ஆணைக்குழுவினை நியமித்தமையாகும். 1997 பெப்ரவரி மாதம் இது இரண்டு வருடங்களுக்காகவே நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு மூவரை உள்ளடக்கியிருந்தது. ஜேர்மனியின் ஹூம்போல்ட் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் அதில் ஒருவராவார். ஜேர்மன் இனத்தைச் சேர்ந்தவர். மற்றுமொருவர் மாயன் பூர்வீகக்குடிகளைச் சேர்ந்த ஒரு பெண்ணாவார். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அப்போதைய செயலாளர் நாயகத்தாலேயே இவ்வாணைக்குழு நியமிக்கப்பட்டது. ஏறக்குறைய 7,200 மனக்குறைகளையும், வேதனைகளையும் செவிமடுக்க நேரிட்டது. எனினும் அவை பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டவையல்ல. இவை மத்தியில் பாரதூரமான குற்றச்செயல்கள் அல்லது 100 மக்கள் படுகொலைகள் விசாரிக்கப்பட்டன. படுகொலை செய்யப்பட்டவர்களில் 83% மாயன்மார்களாகவும், 17% வெட்டினோமார்கள் எனவும் கண்டறியப்பட்டது. குற்றச் செயல்களுக்கு தவறாளியானவர்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை. எனினும் மேற்படி குற்றச்செயல்களில் 39% இராணுவத்தினராலும் அவர்களின் துணைப்படையினராலும் மேற்கொள்ளப்பட்டவை என்பதைக் கண்டுபிடிக்க இயலுமாயிற்று. அதைப்போன்றே தவறாளிகளுக்கு தண்டனை வழங்கவும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமே இருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே ஊடகங்களுக்கு ஆணைக்குழுவின் அலுவல்கள் திறந்துவிடப்பட்டன. உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு சமாதான உடன்படிக்கையின் ஒரு பகுதியாக அமைந்தது.

### நினைவுச் சின்னங்களை அமைத்தல்

ஆணைக்குழுவினால் வைக்கப்பட்ட முன்மொழிவுகள் அப்போது நிலவிய அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்டன. சனாதிபதி அவ்வாறே நடைபெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார். அவர் பகிரங்கமாகக்கூறிய ஒரு விடயம் உலகப் பிரசித்திபெற்றது. அதாவது எமக்கு இறந்தகாலத்தை மறந்துவிடவியலாது. மறந்துவிட வேண்டியதும் இல்லை. எனினும் நாங்கள் மன்னிப்பு வழங்குவதை மேற்கொள்வோம் என அவர் கூறினார். இழப்பீடு செய்யும் செயற்பாடு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அதன்கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், மனிதப்படுகொலை நிகழ்ந்த இடங்களில் தோண்டுதல் மற்றும் மரணமடைந்தவர்களின்

அடையாளத்தை உறுதிசெய்தல் இடம் பெற்றது. பகிரங்க இடங்களில் நினைவுச் சின்னங்களை நிர்மாணித்தலும் இராணுவம் மற்றும் நீதித்துறையின் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களும் இடம் பெற்றன. பரஸ்பர கௌரவம் கட்டியெழுப்பத்தக்க கலாச்சாரமொன்றை நாடுபூராவிலும் பிரபல்யப்படுத்துகின்ற வேலைத்திட்டமொன்றை அமுலாக்குதலும், கல்வித்துறையில் அது சம்பந்தமான பாரிய வேலைத்திட்டமொன்றும் இருந்தது. கோத்தமாலாவின் உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவின் அறிக்கை “மௌனத்தின் நினைவுகூறல்” என்றே அழைத்தது.

தென்னாபிரிக்காவின் மீளிணக்க செயற்பாடும் மனதைக் கவரத்தக்கது. உலகில் இதுவரை நிலவிய பல்வேறு பெயர்கொண்டு அழைக்கப்பட்ட உண்மையறிவதற்கான 32 ஆணைக்குழுக்கள் மத்தியிலும், அரசுகளால் முன்நின்று அமுலாக்கப்பட்ட மீளிணக்கச் செயற்பாடுகள் மத்தியிலும் மிகவும் பலம் பொருந்தியதும் வெற்றிரமானதுமான மீளிணக்க செயற்பாடாக கருதப்படுவது தென்னாபிரிக்கச் செயற்பாடாகும்.

தென்னாபிரிக்காவின் முரண்பாட்டுக்கான பின்னனி பின்வருமாறு:
தென்னாபிரிக்காவின் மொத்த சனத்தொகை 51 மில்லியன் ஆகும். அதில் 75% கறுப்பு இனத்தவர்களாக அமைவதோடு, 13% வெள்ளையர்களாவர். 3% இந்தியர்களாகவும், 9% கலப்பு நிறமுடையவர்களாகவும் உள்ளனர். எனினும் 13% வெள்ளையர்களே நாட்டை ஆட்சி செய்தனர். 1948 இல் வெள்ளையர்களின் ஆபிரிக்க தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர் அவர்களால் தொகுதி ரீதியாக மாகாணங்களைப் பிரிக்கும் ஒரு சட்டத்தின் மூலமாக வெள்ளை – கறுப்பு பிரதேசங்கள் பிரித்து வகைப்படுத்தப்பட்டமையாலேயே தென்னாபிரிக்க நிறவேறுபாட்டுக் கொள்கை ஆரம்பித்தது. அதன் பின்னர் அக்காலகட்டத்தில் கறுப்பர் மத்தியில் பலம் பொருந்தியதாக விளங்கிய கம்யூனிஸ்ட் கட்சியும் தடைசெய்யப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக ஆரம்பத்தில் நெல்சன் மண்டெலாவின் தலைமையில் குடியியல் சட்டங்களை மீறுகின்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கடுமையான ஒருசில சட்டங்களைக் கொண்டுவந்து கலப்புத்திருமணத்தை தடைசெய்தல், பிற இனத்தவருடன் பாலியலுறவு கொள்ளலை குற்றச்செயலாகக் கருதுதல், கறுப்பினப் பெண்களுக்கு ஆதனங்களின் மரபுரிமையை இழக்கச்செய்வித்தல், அவர்களுக்கு கல்வியைத் தடைசெய்தல், பன்ட்டு கறுப்பினத்தவர்களின் குடியுரிமையை தடைசெய்தல், நகர அலங்கரிப்பு எனும் முறையியல் ஊடாக கறுப்பினத்தவர்களை நகர மையங்களிலிருந்து விரட்டியடித்தல், டவுன்சிப் எனும் பெயரில் தெரிவு செய்யப்பட்ட சில சிறிய பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கில் கறுப்பர்களை முடக்கிவைத்தல், தொழிற்சங்கங்களை தடைசெய்தல் போன்ற பலவிதமான சட்டதிட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலமாக கடுமையான அடக்குமுறை வெள்ளைக்கார ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு எதிர்ப்புத்தெரிவித்த 20,000 இற்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதோடு, நெல்சன் மண்டெலா தலைமை வகித்த ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் ஆயுதப்பிரிவினால் அரசுக்கெதிரான ஆயுதக்கிளர்ச்சி தொடங்கப்பட்டது. அதன் காரணமாக இறுதியில் அவருக்கு ஆயுள்தண்டனை அனுபவிக்க வேண்டி நேரிட்டது.

**இறந்தகாலத்தில் இடம்பெற்ற மானிட விரோத செயற்பாடுகள் இன்றேல் மீறல்கள் இருப்பின் அவற்றை விசாரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத செயற்பாடுகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது அதன் பிரதான பணியாகும். அதற்கிணங்க நிலைமாற்று நீதிப்பருவத்தில் பல செயற்பாடுகளைக் காணமுடியும்.**

## தென்னாபிரிக்க எடுத்துக்காட்டு

வெள்ளைக்காரர்களின் ஆட்சிக்கு எதிராகத்தோன்றி உலகளாவிய மக்கள் அபிப்பிராயம் மற்றும் அந்நாட்டு மக்களால் 300 ஆண்டுகளாக காலனித்துவ ஆட்சிக்கெதிராக முன்னெடுத்துச்சென்ற இடையறாத போராட்டத்தின் விளைவாக 1990 இல் நெல்சன் மண்டெலா விடுதலை செய்யப்பட்டார். நெல்சன் மண்டெலாவை விடுவித்துக்கொள்ளும் போராட்டத்தில் மிக்குசேல் ஜெக் எனப்படுகின்ற 27 வயதுடைய இளைஞனால் கொள்வனவு அதிகாரம் எனப்படுகின்ற அகிம்சை வழியிலான நேரடியான போராட்டச்செயற்பாடு மூலமாக அனைத்து நகரங்களிலும் கறுப்பின மக்களை உயிர்ப்பூட்டி அந்நாட்டின் பொருளாதாரத்தை ஸ்தம்பித நிலையுறச்செய்விக்கும் செயற்பாடு வெற்றிகரமானதாக அமைந்தது. இங்கு வெள்ளைக்காரர்களின் விற்பனை நிலையங்கள் அனைத்தும் பகிஷ்கரிக்கப்பட்டன. இவ்விதமாகவே மண்டெலாவை விடுதலை செய்வதற்கான உடன்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் துரிதமடைந்தன. மண்டெலா விடுதலை செய்யப்பட்ட பின்னர் சனநாயக தென்னாபிரிக்காவை உருவாக்குவதற்கான மகா சம்மேளனம் என்ற பெயரிலான பேரவையொன்றினால் 2 வருடகால உரையாடல்கள், பேச்சுவார்த்தைகள், கருத்தரங்குகள் நாடுபூராவிலும் நடத்தப்பட்டு புதிய அரசியலமைப்புக்கான கருத்துக்கள் விசாரித்தறியப்பட்டன. இவ்விதமாகவே 1994 இல் அவர்கள் அரசியலமைப்பினை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

தென்னாபிரிக்கா அரசியலமைப்பின் முன்னுரை பின்வருமாறு தொடங்குகின்றது. “நாங்கள் தென்னாபிரிக்கர் ஆவோம். இறந்தகாலத்தில் இடம்பெற்ற அநீதிகளை இனங்கண்டவர்கள் ஆவோம். எமது மண்ணில் நீதிக்காகவும். சுதந்திரத்திற்காகவும் துன்பப்பட்ட மக்களுக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். அதைப்போலவே எமது நாட்டை அபிவிருத்தி செய்யவும், கட்டியெழுப்பவும் தோள்கொடுத்த அனைவருக்கும் மரியாதை செலுத்துகிறோம். நம்புங்கள் தென்னாபிரிக்கா பல்வகைமையில் ஒற்றுமையாக வசிக்கின்ற

எம்மனைவரினதுமாகும்."

இறந்தகாலத்தில் இடம்பெற்ற மானிட விரோத செயற்பாடுகள் இன்றேல் மீறல்கள் இருப்பின் அவற்றை விசாரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத செயற்பாடுகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது அதன் பிரதான பணியாகும். அதற்கிணங்க நிலைமாற்று நீதிப்பருவத்தில் பல செயற்பாடுகளைக் காணமுடியும்.

மேற்படி அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 1995 இல் பாராளுமன்றத்தினால் தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீளிணக்கம் பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதனூடாக உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு நிறுவப்பட்டது. ரீ.ஆர்.சீ. பேரவையின் தவிசாளராக விளங்கியவர் பேராயர் டெஸ்மன்ட் டுட்டூ ஆவார். ஆணைக்குழுவில் 17 உறுப்பினர்கள் இருந்தனர். 9 ஆண்களும் (தவிசாளரை உள்ளிட்டதாக), 8 பெண்களும் அதில் அடங்கினர். அவர்கள் அனைவரும் தென்னாபிரிக்கராக விளங்கினர். உலகில் அத்தகைய உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவொன்றில் இருந்த அதிக எண்ணிக்கை கொண்ட ஆணையாளர்கள் தென்னாபிரிக்க ஆணைக்குழுவிலேயே இருந்தனர். பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வரப்பட்டமையால் அது நீதிமன்றத்தை ஒத்த நிறைவான தத்துவங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. கைதுசெய்தல், சோதனையிடல், விசாரித்தல், ஒப்புதல் வாக்குமூலம்பெறல், மன்னிப்புக்கோருதல், மன்னிப்பு வழங்குதல், பரிந்துரை வழங்குதல் போன்ற அனைத்தையும் ஆணைக்குழுவினால் புரிய இயலுமாயிற்று. அதில் 319 பணியாளர் இருந்தனர். இந்த ஆணைக்குழு 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது.

மனிதஉரிமை மீறல்களை விசாரனைசெய்தல், மன்னிப்பு வழங்குதல், பிழைகளை திருத்துதல், ஈடுசெய்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் என்பன அந்த 3 பகுதிகளாகும். ஆணைக்குழு 21,000 சாட்சிகளை விசாரணைசெய்தது. ஆணைக்குழுவுக்கு 7500 மன்னிப்புக்கோரல் விண்ணப்பங்கள் கிடைத்திருந்தபோதிலும் இதில் 849 பேருக்கு மாத்திரமே மன்னிப்பு வழங்கப்பட்டது. அருட்தந்தை டெஸ்மன்ட் டுட்டூ அவர்களால் வெள்ளையர்களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு கறுப்பின மக்கள் கட்டுப்பட்டனர். அந்தளவுக்கு பலம் வாய்ந்த உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்று அவரால் நெறிப்படுத்தப்பட்டது. அவர் எழுதிய "மன்னிப்பு வழங்குதல் இன்றி எதிர்காலம் கிடையாது" எனும் நூல் அச்செயற்பாட்டுக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது. அந்நூலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"எதிர்காலத்தை வெற்றியீட்டச் செய்வதற்கு அவசியமான உண்மையான மன்னிப்பு இறந்தகாலத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. இனிமேலும் மனங்களில் கோபதாபங்களை வைத்துக்கொணடு செயலாற்ற இயலாது. இன்று நாங்கள் சொல்கின்ற, செய்கின்றவை இறந்தகால, நிகழ்கால மற்றும் இன்னமும் பிறவாத தலைமுறையினருக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையெனக் கருதப்பழகவேண்டும்."

– டெஸ்மன் டுட்டூ –

ஓர் உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவற்றை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்.

1. பாதிக்கப்பட்டவர்களின் வேதனைமிக்க குரலுக்கு திறந்த மனதுடன் செவிசாய்த்ததாலேயே தென்னாபிரிக்காவில் நிறவேறுபாட்டுக் கொள்கையைப் பேணிவந்த விரிவான கட்டமைப்பினை இனங்காண இடவசதி கிடைத்தது.
2. இறந்தகாலத்தில் புரிந்த மனிதஉரிமை மீறல்களை உண்மையாகவே வெளிக்கொணர்வதன் ஊடாகவே சமூக நிலைமாற்றத்திற்கு பிரயோகிக்கக்கூடிய பலம்பொருந்திய சக்தியாக அமையும்.
3. அரசியல் மற்றும் நிறுவனரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமாக முரண்பாட்டுக்கான மூலகாரணங்கள் பற்றிக் கவனஞ்செலுத்துதல் இடம்பெறுகின்ற அதேவேளையில் மீண்டும் அத்தகைய நிலைமை உருவாவதை தடுக்க இயலுமென்பதும் அதன் மூலமாக நிரூபிக்கப்பட்டுவிட்டதெனக் கூறமுடியும்.
4. ரீ.ஆர்.சீ மூலமாக பரிந்துரைக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு செலுத்துதல் அரசாங்கம் மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

**"நாங்கள் தென்னாபிரிக்கர் ஆவோம். இறந்தகாலத்தில் இடம்பெற்ற அநீதிகளை இனங்கண்டவர்கள் ஆவோம். எமது மண்ணில் நீதிக்காகவும். சுதந்திரத்திற்காகவும் துன்பப்பட்ட மக்களுக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். அதைப்போலவே எமது நாட்டை அபிவிருத்தி செய்யவும், கட்டியெழுப்பவும் தோள்கொடுத்த அனைவருக்கும் மரியாதை செலுத்துகிறோம். நம்புங்கள் தென்னாபிரிக்கா பல்வகைமையில் ஒற்றுமையாக வசிக்கின்ற எம்மனைவரினதுமாகும்."**

5. மன்னிப்புக் கிடைத்த குற்றஞ்சாட்டப்பட்டவர்களை மீண்டும் சட்டத்தின்முன் கொண்டுவருதல் மேற்கொள்ளப்படவில்லை.
6. பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு முதலாம் ஆண்டிலிருந்து மூன்றாம் நிலைக்கல்வி நிறைவடையும்வரை நிதிசார் உதவிகளை வழங்குவது பரிந்துரைக்கப்பட்டது. அதற்காக நீதித்துறை மற்றும் சட்டவாக்கத்துறை திணைக்களத்தினால் வர்த்தமானிப் பத்திரிகையொன்று வெளியிடப்பட்டது. மேற்படி பணமனைத்தும் சனாதிபதி நிதியிலிருந்து வழங்கப்பட்டது. குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் மீளிணக்கம் செய்யக்கூடிய வகையிலான செயற்பாடொன்று உளவியல் ரீதியாக தயாரிக்கப்பட்டிருந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தாம் புரிந்த தவறினை ஏற்றுக்கொள்ளல், தவறுக்காக வருந்துதல், தவறினை திருத்திக்கொள்ளல் மற்றும் மன்னிப்புக்கோருதல் வரை அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.



இந் நிகழ்வில் புலி உறுப்பினரால் பஸ் வண்டியில் குண்டை வைத்துவிட்டு அவர் பின் ஆசனத்தில் தாய் ஒருவர் பிள்ளைகக்கு பால் கொடுப்பதை கண்ணுற்றுள்ளார். குண்டு வெடித்த பின்னர் அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை அறியும் பொருட்டு அவ்விடத்திற்கு வந்தவருக்கு, மழலையின் உடல் தாயின் அருகில் இருப்பதைக் கண்டுள்ளார்.

**கே.ஏ. மல்லிகா சஞ்ஜீவனி**



# இலங்கையின் நிலைமாற்று நீதி நிகழ்கால வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளல்

சட்டத்தரணி
**பவாணி ஃபொன்சேக்கா**

நிலைமாற்று நீதி பற்றிய வாதப்பிரதிவாதங்கள் இலங்கைக்கு புதியதொன்றல்ல. 2015 இல் அனுபவவாயிலாகக் கண்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் 30வது கூட்டத்தொடரின் இணக்கப் பிரேரணைகளை ஏற்றுக்கொண்டதும் அவை அண்மைக்காலமாக மீண்டும் பற்றவைக்கப்பட்டுள்ளன. பிரேரணை உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழு, விசேட நீதிமன்றம், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், ஈடுசெலுத்துதல் பற்றிய அலுவலகம், பாதுகாப்புப் பிரிவுகளின் மறுசீரமைப்பு மற்றும் இடம்பெற்றுவருகின்ற மனிதஉரிமை மீறல்கள் பற்றிக் கவனஞ்செலுத்துவதற்கான படிமுறைகள் உள்ளிட்ட இலங்கையின் நிலைமாற்று நீதிமீது கவனஞ்செலுத்துகின்ற செயற்பாடுகள் மற்றும் பொறியமைப்புகள் பலவற்றுக்கான இடவசதி அளிக்கின்றன. பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதன் மூலமாக இலங்கை அரசாங்கம் பிரேரணையில் அடங்கியுள்ள வாக்குறுதிகளை அமுலாக்க இணங்கியுள்ளது. முந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடுகளில் இருந்து விலகிச் செல்வதாக அமைகின்ற இறந்தகால துஷ்பிரயோகங்களைப்பற்றிப் பேசுகின்ற எந்தவொரு நம்பிக்கையானதும், சுயாதீனமானதுமான பொறியமைப்புக்கு எதிரான மற்றும் இடம்பெறுகின்ற மீறல்களை நிராகரித்த இலங்கை அரசாங்கத்தின் கொள்கையில் ஏற்பட்டுள்ள இந்த முன்மாதிரியான திருப்புமுனை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

## நிலைமாற்று நீதியின் முக்கியத்துவம்

இலங்கை மனிதஉரிமைகள் சட்டத்தையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தையும் மீறியதாகக்காட்டுகின்ற சுயாதீன அறிக்கைகளைக்கொண்ட மூன்று தசாப்தங்களுக்குக் கிட்டிய யுத்தமொன்றின் அனுபவத்தைப் பெற்றுள்ளது. உள்நாட்டுக்குழுக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகிய இருதரப்பினராலும் செய்யப்பட்ட சுயாதீனமான அறிக்கையிடல் பல்வேறு பக்கங்களில் – பாதுகாப்புப்படையினர், எல்ரீரீஈ மற்றும் துணைப்படைக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளன. ஏனையவற்றுக்கிடையில் இவற்றில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பலவந்தமான


**அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட கடந்தகால ஆணைக்குழுக்கள் பலவும், நிகழ்கால ஆணைக்குழுக்களும் உள்ளன. 2013 இல் நியமிக்கப்பட்ட பரணகம விசாரணை ஆணைக்குழுவுக்கு இலங்கை பூராவிலும் இருந்து 24,000 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததோடு, விசாரணைகள் சொற்பமானவை பற்றியே ஆரம்பிக்கப்பட்டதென பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது.**

மற்றும் அறியாமையினால் காணாமல்போகச் செய்வித்தமை, சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ளல், பாலியல் துன்புறுத்தல், இடம்பெயர்தல் என்பவை அடங்குகின்றன. இலங்கை மனிதஉரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புலனாய்வுகள் (OISL), மனித உரிமைகள் பற்றிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் (IHCHR) மூலமாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பாகும். அது யுத்தத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினராலும் புரியப்பட்ட முறைசார்ந்த மீறல்களை ஆவணப்படுத்தி கடந்தகாலத்தில் புரியப்பட்ட பிரம்மாண்டமான மீறல்கள் சம்பந்தமாக உள்நாட்டுக் குழுக்களாலும், ஏனையோராலும் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை உறுதிசெய்து 2002 – 2009 காலப்பகுதி சம்பந்தமான விசாரணையொன்றை மேற்கொண்டது. இந்தக் காலப்பகுதி தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணம் அது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவினால் உள்ளடக்கப்பட்ட காலப்பகுதியுடன் இணையானதாக அமைந்ததாலாகும். இலங்கை தொடர்பான மனித உரிமைகள் பற்றிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புலனாய்வு அறிக்கை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மீறல்கள் மற்றும் தண்டனை விடுபாட்டுக் கலாசாரத்தை முடிவுறுத்த துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மீண்டும் தோற்றுவிக்கின்ற இலங்கையின் மீறல்களை ஆவணப்படுத்துகின்ற அறிக்கைத் தொகுதியில் புத்தம்புதிய ஒன்றாக அமைந்தது.

அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட கடந்தகால ஆணைக்குழுக்கள் பலவும், நிகழ்கால ஆணைக்குழுக்களும் உள்ளன. 2013 இல் நியமிக்கப்பட்ட பரணகம விசாரணை ஆணைக்குழுவுக்கு இலங்கை பூராவிலும் இருந்து 24,000 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததோடு, விசாரணைகள் சொற்பமானவை பற்றியே ஆரம்பிக்கப்பட்டதென பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது.

யுத்தம் 2009 இல் முடிவடைந்தபோதிலும் முரண்பாடு முற்றுப்பெறாமல் நிலவுகின்றது. அடுத்தடுத்துவந்த அரசாங்கங்கள் பல்வேறு சமுதாயங்களின் மனக்குறைகளையும், பாவனைகளையும் மற்றும் மீறல்களையும் பற்றிப் பேசுகின்றது என்பதற்காக கொடுக்கப்பட்ட வாக்குறுதி இருக்கும்போதும் நாட்டில் யதார்த்தத்தில் உண்மையான மாற்றம் ஏற்படவில்லை. 2006 இல் அறிமுகஞ்செய்யப்பட்ட தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத்திட்டம் போன்ற அறிமுகஞ்செய்யப்பட்ட ஒருசில மாற்றங்களுடன் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தபோதிலும் முரண்பாட்டுக்கான மூலகாரணங்கள் பற்றிப்பேசுகின்ற மற்றும் உண்மையான மறுசீரமைப்புகளை அறிமுகஞ்செய்வதற்கான அரசியல் திடசங்கற்பத்திலான குறைபாடும், ஆர்வமின்மையும் நிலவியது. யுத்தம் முடிவடைந்தமையைப் பொருட்படுத்தாமல் இலங்கை பூராவிலும் புரியப்பட்ட மீறல்கள் குறைவின்றி தொடர்ச்சியாக இடம்பெற்றன. சுயாதீனமானதென கருதப்பட்ட நீதித்துறை மற்றும் மனிதஉரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு தலையீடுகளுக்கு இலக்காக்கப்பட்டிருந்தது. 2013 சனவரியில் முதலாவது பெண் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை கீழ்த்தரமான இடத்தை அடையாளமிட்ட சரியான நடைமுறையற்ற ஒரு செயற்பாடாக அமைந்தது. சாட்சியாளர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் வாக்குறுதி அளித்த பாதுகாப்பினை கேலிக்கூத்தாக மாற்றி மீறல்கள் சம்பந்தமாக சாட்சியளிக்க முன்னர் வந்திருந்த சாட்சியாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் துன்புறுத்தப்பட்டனர் படுகொலை செய்யப்பட்டனர். இவையனைத்தும் தண்டனை விடுபாட்டுக் கலாசாரத்திற்கும், அக்காலத்தில் நிலவிய பலவீனமான சனநாயகத்தை அச்சுறுத்தலுக்கு இலக்காக்கவும் பங்களிப்புச்செய்தன.

2015 சனவரி 08 ஆந் திகதி இலங்கையில் மாற்றமொன்று நிகழ்ந்தது. 80% வாக்களிப்பினைக் கொண்ட இலட்சக்கணக்கான இலங்கையர் தமது அடுத்த சனாதிபதியாக அவர்களுக்கு தேவையானவர் யாரென்பதை வெளிப்படுத்துவதற்காக சர்வஜன வாக்குரிமை பற்றிய அடிப்படை உரிமையைப்பாவிக்க



www.ft.lk

*பரணகம ஆணைக்குழு காணாமற் போனோர் பற்றிய சாட்சிகளை விசாரிக்கும் ஓர் சந்தர்ப்பம்*

வாக்களிப்பு நிலையங்களை நோக்கிச்சென்றனர். சனவரி 09 ஆந் திகதி முதல் ஒருசில மணித்தியாலங்களில் இலங்கையின் 6வது நிறைவேற்று சனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டதும் அமைதிவழி மாற்றமொன்று ஏற்பட்டுள்ளதை அறிந்துகொண்டார்கள். உறுதிப்பிரமாணம் தொடக்கம் சனாதிபதி சிறிசேனவும் அவரது அரசாங்கமும் பல்வேறு துறைகளுக்கிடையில் அரசியலமைப்பு, தேர்தல், பொருளாதார, மனிதஉரிமைகள், மீளிணக்கம் என்பவற்றின் ஊடாக மறுசீரமைப்புகளை வாக்குறுதியளித்தது. நிலைமாற்று நீதி வாக்குறுதி அளித்த பல்வேறு துறைகளில் ஒன்றாக அமைவதோடு, பிரேரணைக்காக தற்போது சட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் நிலைமாற்று நீதிக்கான பிரதான அம்சங்கள்

ஐக்கிய நாடுகளின் பிரேரணை இலங்கையில் பெரிதும் அவசியமாக விளங்கிய மறுசீரமைப்புகளுக்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. இந்தப் பிரச்சினை சம்பந்தமான தகவல் குறிப்புகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதான அர்ப்பணிப்புகளை விளிப்பதோடு, நிலைமாற்று நீதியின் நான்கு தூண்களான, அறிந்து கொள்வதற்கான உரிமை, நீதிக்கான உரிமை, இழப்பீடு செய்தலுக்கான உரிமை மற்றும் மீண்டும் இடம்பெறாமையை உறுதிப்படுத்துதல் என்பவற்றை உறுதிப்படுத்துகின்றது.

அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட இறந்தகால ஆணைக்குழுக்கள் பலவும், நிகழ்கால ஆணைக்குழுக்களும் உள்ளன. 2013 இல் நியமிக்கப்பட்ட பரணகம விசாரணை ஆணைக்குழுவுக்கு இலங்கை பூராவிலும் இருந்து 24,000 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததோடு, சொற்பமானவை பற்றியே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதென பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட கடந்தகால ஆணைக்குழுக்கள் பலவும், நிகழ்கால ஆணைக்குழுக்களும் உள்ளன. 2013 இல் நியமிக்கப்பட்ட பரணகம விசாரணை ஆணைக்குழுவுக்கு இலங்கை பூராவிலும் இருந்து 24,000 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததோடு, சொற்பமானவை பற்றியே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதென பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது.**

**அரசாங்கம் அது அளித்துள்ள வாக்குறுதிகள் பற்றிய தெளிவான நிலைப்பாட்டினை மேற்கொள்ளவேண்டும். இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்காகவும், அத்துடன் நிலைபேறான மீளமைப்புக்காகவும் அது ஏன் முக்கியமானதாக அமைகின்றதென்பதை தெளிவுபடுத்திக் கொள்ளல்வேண்டும். அத்துடன் இதனோடு தொடர்புடைய அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு தலைமைத்துவம் வகிப்பது யார் என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ளல்வேண்டும். மீளிணக்கமும் ஏற்புடைய பிரச்சினை சம்பந்தமாகவும் பன்வகை அமைச்சர்கள் மற்றும் அலுவலகங்களைத் தாபித்திருப்பதும் ஏன் என்பதை தெளிவுபடுத்துதல் வேண்டும்.**

இந்த வாக்குறுதியளித்த செயற்பாடுகளும், பொறியமைப்புகளும் அவை சர்வதேச தரநியமங்களைப் பூர்த்தி செய்வதாக பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பற்றிப் பேசுவதாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் அனைத்தையும் உள்ளடக்கத்தக்க விதத்திலும் திட்டமிடப்படுகின்ற மற்றும் அமுலாக்கப்படுவதாக உத்தரவாதமளித்து திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் சம்பந்தமாக எதிர்வரும் சில மாதங்கள் தீர்வுக்கட்டமானவையாக அமையும்.

அரசாங்கம் அண்மையில் வாக்குறுதியளித்த பல்வேறு பொறியமைப்புகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி இலங்கை பூராவிலுமுள்ள பங்காளித்தரப்பினர்களிடமிருந்து கருத்துக்களை சேகரிப்பதற்காக 11 சிவில் சமூக ஆட்களை உள்ளடக்கிய மீளிணக்கம் பற்றிய ஆலோசனைகளைப் பெறுதல் தொடர்பான செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இது திட்டம் பற்றிய அவர்களின் கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் விபரிப்புகளை பரிமாற்றிக்கொள்ளவும் மீளிணக்கத்திற்கு முக்கியமானதாக அமைகின்ற பிரச்சினைகள் பற்றிய ஆக்கமுறையான உரையாடலில் ஈடுபட வாய்ப்பினை பங்காளித்தரப்பினர்களுக்கு அளிப்பதை உறுதிப்படுத்துகின்ற முக்கியமான முன்னெடுப்பாகும்.

கருத்து பரிமாற்றிக் கொள்ளலானது இலங்கைக்கு மிகவும் ஒத்துவரக்கூடிய செயற்பாடுகள் மற்றும் பொறியமைப்புகள் சம்பந்தமாக தெளிவுபடுத்திக்கொள்ள வழிசமைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் கருத்து பரிமாற்றிக்கொள்ளல் மாத்திரம் சர்வநிவாரணியாக அமைந்துவிடவியலாது. அரசாங்கம் பிரதான பொறியமைப்பினை தாபித்தல் பற்றிப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தை உள்ளிட்ட பங்காளித்தரப்பினர்களுடன் சிறந்த முறையில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது எவ்வாறென தேடிக்கண்டுபிடித்தல் வேண்டும். உதாரணமாக, காணாமல்போதல் பற்றிய பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே சேகரித்துள்ள தகவல்களை மறுசீரமைப்புக்காகவும், ஒத்துழைப்பிற்காகவும் எவ்வாறு பயன்படுத்தலாமென்பதைக் கண்டுபிடிக்க இறந்தகால மற்றும் நிகழ்கால செயற்பாடுகளைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டியது முக்கியமானதாகும். அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட இறந்தகால ஆணைக்குழுக்கள் பலவும், நிகழ்கால ஆணைக்குழுக்களும் உள்ளன. 2013 இல் நியமிக்கப்பட்ட பரணகம விசாரணை ஆணைக்குழுவுக்கு இலங்கை பூராவிலும் இருந்து 24,000 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததோடு, சொற்பமானவை பற்றியே விவாரணை மேற்கொள்ளப்பட்டதெனப் பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது.

எதிர்கால காணாமல் போனவர்ள் பற்றிய அலுவலகத்திற்கு (OMP) விசாரணை ஆணைக்குழுக்களை உள்ளிட்ட அரச முன்னெடுப்புகள் பற்றிய அனைத்து தகவல்களும் முழுமையாக கிடைக்க வேண்டுமென்பதோடு, உண்மையறிவதற்காக சுயாதீனமாக மெய்ப்புத்திருத்தம் செய்யவும், புலனாய்வு செய்யவும் இயலுமானதாக அமைதல்வேண்டும். வாக்குறுதியளித்த பொறிமுறைகளுடன் தொடர்புடைய இரண்டு பிரதான பிரச்சினைகளாக அமைவன பாதுகாப்பு மற்றும் உளச்சமூகப் பிரச்சினையாகும். முன்பு நிலவிய முன்னெடுப்புகள் இத்துறைகளின் அவசியத்தை நிருபித்துள்ளதோடு அவை பற்றி சீக்கிரமாக பேசப்படும் என்பதற்கு உத்தரவாதமளித்தலும் மிக முக்கியமானதாகும்.

அதைப்போலவே அரசாங்கம் இந்த வாக்குறுதியளித்த செயற்பாடுகள் மற்றும் பொறியமைப்புகளுடன் சட்டமுறையான மற்றும் கொள்கைசார் மறுசீரமைப்புகளின் வரைபு தயாரித்தலும், முன்னெடுப்புகளை மேற்கொள்ளலும் அவசியமாகும். செயற்பாட்டினை வெளிப்படைத்தன்மை கொண்டதாக மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் மறுசீரமைப்பின் அம்சங்கள் பற்றிப் பங்காளித்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகின்ற



வேளையில் இவற்றைக் கவனமாக மேற்கொண்டு வரல்வேண்டும். அத்துடன் சர்வதேச குற்றவியல் விதத்திலான சட்ட மறுசீரமைப்புகளை அறிமுகஞ்செய்தல் உள்ளிட்ட சர்வதேச தரநியமங்களுடன் கடப்பாடு கொண்டிருத்தலும் மிக முக்கியமானதாகும். சட்டவரைவுகளைத் தயாரிக்கையில் விசேட நீதிமன்றம், உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழு (TRC), காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் (OMP) மற்றும் ஈடுசெய்தல் அலுவலகம் போன்ற புதிய நிறுவனங்களைத் தாபிப்பதைப்போன்றே பலவந்தமாக காணாமல்போகச் செய்வித்தலை உள்ளிட்ட விசேட குற்றங்களை அறிமுகஞ்செய்தல் சம்பந்தமாகவும் பேசுதல் அவசியமாகின்றது.

நிலைமாற்று நீதியுடன் முன்நோக்கி நகருகின்ற அடிப்படைப் பிரச்சினையொன்றாக அமைவது கூட்டு மற்றும் தெளிவான தகவல் உபாயமுறையொன்றை உறுதிப்படுத்துவதாகும். ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் பேரவைப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதிலிருந்து பல மாதங்கள் கழிந்திருந்தபோதிலும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு யாது ? மற்றும் பிரஜைகள் மீதான அவற்றின் தாக்கங்கள் யாவை ? என்பது பற்றி இலங்கை பூராவிலும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட உரையாடலே இடம்பெறுகின்றது. பிரஜைகளுடன் செயலாற்றுவதைப்போன்றே ஏதேனும் மூடநம்பிக்கை அல்லது தவறான எண்ணக்கருவைப்போக்கவும் இது மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் அது அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை தெளிவாக வெளிப்படுத்தவும், நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் விடுகின்ற மேலைத்தேய சதித்திட்டம் பற்றிய ஏதேனும் தாக்குதலுக்கு பதிலளிக்கவும் முக்கியமனதாகும்.

அரசாங்கம் அது அளித்துள்ள வாக்குறுதிகள் பற்றிய தெளிவான நிலைப்பாட்டினை மேற்கொள்ளவேண்டும். இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்காகவும், அத்துடன் நிலைபேறான மீளமைப்புக்காகவும் அது ஏன் முக்கியமானதாக அமைகின்றதென்பதை தெளிவுபடுத்திக் கொள்ளல்வேண்டும். அத்துடன் இதனோடு தொடர்புடைய அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு தலைமைத்துவம் வகிப்பது யார் என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ளல்வேண்டும். மீளிணக்கமும் ஏற்புடைய பிரச்சினை சம்பந்தமாகவும் பல்வகை அமைச்சர்கள் மற்றும் அலுவலகங்களைத் தாபித்திருப்பதும் ஏன் என்பதை தெளிவுபடுத்துதல் வேண்டும்.

## செயற்பட இதுவே தருணம்.

இலங்கையின் வன்முறைசார் இறந்தகாலம் மற்றும் மீளிணக்கத்திலான தோல்வி கண்ட முயற்சிகள் இறந்தகால சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமையை உறுதிப்படுத்துவதற்காகவும், இறந்தகால அநீதிகள் பற்றிப் பேசுவதற்காகவும், தண்டனை விடுபாட்டுக் கலாசாரத்தை முடிவுறுத்துவதற்காகவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதென்பதை உறுதிப்படுத்துகின்றது. இதற்கு குறுக்கு வழிகள் கிடையாது. ஒரே இரவில் எவராலும் இதனைச் சாதித்துவிடவும் முடியாது. இந்தத் தீர்வுக்கட்டமான திருப்புமுனையில் நாங்கள் புதியதோர் இலங்கையைத் திட்டமிடுகையில் இலங்கையர்கள் ஒன்று சேர்ந்து அதில் இடையீடு செய்தல் வேண்டும். நிலைமாற்று நீதி அனைத்து இலங்கையராலும் முன்னெடுத்துச் செல்லவேண்டிய மிகவும் அவசியமானதாகவுள்ள மறுசீரமைப்புகளில் ஒரு துறையாகும். முன்னெடுத்துச் செல்கின்ற வேளையில் விஷமிகளையும், தடைகளையும் எதிர்கொள்ள நேரிடும். இவை பயங்களையும், மனஅழுத்தங்களையும் உக்கிரமடையச்செய்தலைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டும். பல்வேறு சமுதாயங்களின் மனக்குறைகளை கவனத்திலெடுத்து கவனமாகப் பேசப்பட வேண்டியவையாகும். இச்செயற்பாட்டின்போது நீண்டகால சமாதானம் மற்றும் மீளிணக்கம் பற்றிய இந்த உன்னதமான தருணத்தை நாங்கள் வீணாக்கிக் கொள்ளாமையை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களின் பங்காண்மையுடன் வேலைசெய்தல், சிவில் சமூகம், ஊடகம், சமயக்குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனையோரை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலிருந்து தலைமைத்துவம் கிடைப்பது அவசியமாகும்.


arhiva.portalnovosti.com

# அரசாங்கத்தை பொறுப்புக்கூறும் வகையில் வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு சிவில் சமூகத்திற்கு உரியதாகும்

நிலைமாற்று நீதி பற்றிய தென்னாபிரிக்காவை உள்ளிட்ட பல நாடுகளில் நிபுணத்துவத்தைக் காட்டுகின்ற அறிஞரான **சட்டத்தரணி ஹோவார்ட் வார்னி** சர்வதேச ரீதியாக அங்கீகரிப்புக்கு இலக்காகியுள்ளார். அவருடன் மேற்கொண்ட உரையாடலே இது.

**நிலைமாற்று நீதியின் முக்கியத்துவம் என்ன, யுத்தத்திற்கு பிற்பட்ட நிலைமையொன்றில் நிலைமாற்று நீதியை அமுலாக்காமையின் / பொருட்படுத்தாமல் விடுவதால் ஏற்படக்கூடிய பிரதிவிளைவுகள் யாவை?**

நிலைமாற்று நீதியானது முரண்பாட்டுக்குப் பிற்பட்ட நீதிப் புகுமுகம் என்ற வகையில் மனித உரிமை மீறல்கள் மீண்டும் ஏற்படுவதை தடுக்கும் நோக்கத்துடனேயே தோன்றியது. இறந்தகாலம் சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடாத மற்றும் முரண்பாட்டில் அடங்கிய காரணங்களுக்கு தீவிரமாக கவனஞ்செலுத்தாத நாடுகள் அதே தவறினைப் புரிகின்ற மற்றும் வரலாற்றினை மீண்டும் புரிகின்ற அபாயநேர்வுக்கு இலக்காகும்.

**நிலைமாற்று நீதி நிகழ்ச்சித்திட்டங்களும், கொள்கைகளும் இறந்தகால துஷ்பிரயோகங்கள் பற்றிய பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக செயலாற்றுகையில் காலம் எனும் காரணி பாதக விளைவுகளை ஏற்படுத்துமா?**

பொதுவாக நடைமுறையில் ஈடேற்றக்கூடிய அளவுக்கு நிலைமாற்று நீதி நிகழ்ச்சித் திட்டங்களை துரிதமாக ஆரம்பிப்பது மிகவும் நல்லது. இது அத்தகைய




www.britannica.com

முன்னெடுப்புகளுக்கான உயர்மட்ட ஆர்வமும், ஒத்துழைப்பும் இருக்கின்ற வேளையிலும், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியாளர்களினது நினைவுகள் இன்னமும் பசுமையாக இருக்கின்ற வேளையில் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க இடமளிக்கின்றது.

எவ்வாறாயினும் நிலைமாற்று நீதி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க முன்னர் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை பேணி வருவதில் பொறுப்புக்கூறக்கூடிய தயாராகவுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்தல் முக்கியமானதாகும். அவை போதியளவு சுயாதீனமானவையா? அவற்றுக்கு அவசியமான கொள்திறன் உள்ளதா? அவற்றுக்கு அவ்வாறு இல்லாவிட்டால் அத்தகைய நிறுவனங்கள் போதுமன அளவுக்கு மறுசீரமைப்பு செய்யப்படும்வரை தாமதிப்பது மிகவும் நல்லதாக அமையக்கூடும். மாற்றீடாக குறுங்கால ரீதியில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களைப் பேணிவர அப்போதைக்கான அல்லது தற்காலிக நிறுவனங்களை உருவாக்க இயலும்.

**ஏனைய நாடுகளின் அனுபவங்களின் பிரகாரம் இலங்கைக்கு அதன் இறந்தகாலத்துடன் பயனுறுதிமிக்கதாக செயலாற்றும் பொருட்டு நம்பகத்தன்மை கொண்ட நிலைமாற்று நீதிச் செயற்பாட்டில் இருக்கவேண்டிய அடிப்படை அம்சங்கள் யாவை?**

ஏனைய நாடுகளின் பாவனைகளை மற்றுமொரு நாட்டுக்கு பதியம் செய்தல் விவேகமான செயலன்று. இருந்தபோதிலும் இந்த அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடியது பெரும்பாலானவை உள்ளன. ஏனைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய பாடமாக அமைவது நிலைமாற்று நீதியின் நோக்கங்களை பலப்படுத்த பிரயோகித்த பொறியமைப்புக்களும், நடைமுறைகளும் நியாயமானதும், பக்கச்சார்பற்றதுமானதைப் போன்றே சுயாதீன, தன்னாட்சி மற்றும் ஆண் – பெண் சமூகநிலை தொடர்பில் கூருணர்வுமிக்கதாக அமையவேண்டுமென்பதாகும். அவற்றுக்கு அவற்றின் வேலைகளை பயனுறுதிமிக்கவகையில் மேற்கொள்ள அவசியமான ஒத்துழைப்பும், தத்துவங்களும் இருத்தல் வேண்டும்.

**நிலைமாற்று நீதிக்கு நான்கு தூண்கள் உள்ளன. அதாவது உண்மை, நீதி, இழப்பீடு செய்தல் மற்றும் மீள் நிகழாமை உத்தரவாதம் என்பனவாகும். இந்த நான்கு துறைகளையும் பற்றிப் பேசுவது எந்தளவுக்கு முக்கியமானது?**

நிலைமாற்று நீதியின் தூண்கள் எனக்கூறப்படுகின்ற அனைத்தையும் பற்றிப் பேசுதல் முக்கியமானதாகும். உண்மையிலேயே பெரும்பாலான நாடுகள் அவற்றின் சர்வதேச கடப்பாடுகளின் பிரகாரம் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கடப்பாடு கொண்டுள்ளது. நிலைமாற்று நீதியானது பொதுவாக நான்கு துறைகளையும் இணைத்துக் கொள்கின்ற ஒருங்கிணைந்த புகுமுகமொன்றை அமுலாக்கும்போது மிகவும் வெற்றிகரமானதாகும். இதனைச் சாதிக்க இயலுமானபோதிலும் கட்டாயமாக அவையனைத்தையும் ஒரே தடவையில் கையாள்வது அவசியமானதன்று. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் சில எதிர்காலத் தலைமுறையினரால் மாத்திரம் அனுபவிக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுத்தருகின்ற நீண்டகால கருத்திட்டங்களாக அமையக்கூடும்.

**யுத்தத்திற்கு பிற்பட்ட நிலைமையொன்றில் உண்மை மற்றும் தகவலறிவதற்கான உரிமையிலுள்ள முக்கியத்துவம் யாது?**

உண்மையை அறிந்து கொள்வதற்கான உரிமை சர்வதேச சட்டத்தின் பிரகாரம் உருவாகி வளர்ச்சியடைந்து வருகின்ற மற்றும் பெரும்பாலான நாடுகளில் அரசியலமைப்புகளில் பல்வேறு அடிப்படை உரிமைகளுக்குச் சொந்தமானதென பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கியமான

**பாதிக்கப்பட்டவர்களுக்கும், பரவலாக மக்களுக்கும் இறந்தகால முரண்பாடுகளின் பின்னணியிலான உண்மை மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான விசேட மீறல்களை அறிந்து கொள்வதற்கான உரிமையுண்டு. இந்த உரிமையை திருப்தியுறச் செய்தாலன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு பயனுறுதிமிக்க பரிகாரம் வழங்கப்படுதல் இடம்பெறவியலாது.**

உரிமையாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கும், பரவலாக மக்களுக்கும் இறந்தகால முரண்பாடுகளின் பின்னணியிலான உண்மை மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான விசேட மீறல்களை அறிந்து கொள்வதற்கான உரிமையுண்டு. இந்த உரிமையை திருப்தியுறச் செய்தாலன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு பயனுறுதிமிக்க பரிகாரம் வழங்கப்படுதல் இடம்பெறவியலாது.

**உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழுபோன்ற உண்மையைக்கூறும் பொறியமைப்பொன்றின் அவசியப்பாடு / முக்கியத்துவம் யாது? உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழுக்கள் நிலவியுள்ள ஏனைய சூழமைவுகளிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள் யாவை? உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவொன்றில் அடங்க வேண்டிய பிரதான அடிப்படை அம்சங்கள் யாவை?**

உண்மையறியும் ஆணைக்குழு நேர்மையாகவும், கௌரவமாகவும், உயிர்த்துடிப்பு மிக்கதாகவும் இறந்தகாலத்திற்கு முகங்கொடுக்க வேண்டும். புலப்படக்கூடிய உண்மை எந்தளவு வேதனை மிக்கதாகவும், கடப்பாடு கொண்டதாகவும் அமைந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் அதனை அவ்வாறு செய்தல் வேண்டும். அது நடைமுறைச்சாத்தியத்திற்கு இலக்காகுமாயின் கடினமான விடயங்களை கருத்திற்கொள்ள மாட்டாதெனில் அல்லது குறுங்கால குறிக்கோள்களுக்காக உண்மை பற்றிச் சிறப்பாக தயாரிக்கப்பட்ட வகுத்துத் தொகுத்தமைத்தலை நிர்மாணிக்குமாயின் உண்மையறியும் ஆணைக்குழுவொன்றின் உயர்வான நோக்கங்களை அடைய இயலாமல் போய்விடும். அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பின் அல்லது அவர்களுக்கு முழுமையான கதை கூறப்பட்டிராவிடின் நாட்டுமக்கள் சீக்கிரமாக அதனை அறிந்து கொள்வார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும், பரவலாக மக்களுக்கும் இறந்தகால முரண்பாடுகளின் பின்னணியிலான உண்மை மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான விசேட மீறல்களை அறிந்து கொள்வதற்கான உரிமையுண்டு. இந்த உரிமையை திருப்தியுறச் செய்தாலன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு பயனுறுதிமிக்க பரிகாரம் வழங்கப்படுதல் இடம்பெறவியலாது.

**நீதிக்கான உரிமை ஏன் முக்கியத்துவம் வகிக்கின்றது?**

மிகவும் பாரதூரமான மனிதஉரிமை மீறல்களின் தவறாளிளை சட்டத்தின்முன் கொண்டுவராவிட்டால் அப்போது சட்டத்தின் ஆட்சியை மதித்தல் அழித்துவிடப்படும். சட்டத்தின் ஆட்சியை அந்தளவுக்கு பாரதூரமான வகையில் பணயம் வைத்தால் தண்டனை விடுபாட்டுக் கலாச்சாரமொன்று நிலவுவதாக அமையும். தண்டனை விடுபாடு பற்றிய அத்தகைய கலாச்சாரமானது எதிர்காலத்ததில் பாரியளவில் மேற்கொள்ளப்படுகின்ற மீறல்களுக்கு வித்திடுவதாக அமையும்.

**இலங்கை அரசாங்கம் "சர்வதேச மனித உரிமைகள் சட்டம் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறியமைக்கான குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்ய விசேட சட்ட ஆலோசகரொருவரைக்கொண்ட நீதிமன்றப் பொறியமைப்பினைத் தாபிக்க" 2015 இல் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் இணக்கப்பாட்டுப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளது. இதனோடு தொடர்புடையதாக விசேட நீதிமன்றமொன்றை தாபிக்கையில் கருத்திற் கொள்ளவேண்டிய அடிப்படை அம்சங்கள் யாவை?**

இங்கு ஆவணமயப்படுத்த பல்வேறு அடிப்படை அம்சங்கள் உள்ளன. எனினும் கருத்திற்கொள்ளவேண்டிய முக்கியமான ஒருசில அடிப்படை அம்சங்களாவன விடயப்பொருள், தற்காலிக நிலப்பரப்பின் நீதிமன்ற தத்துவத்தை உள்ளிட்ட நீதித்துறை அதிகாரம் பற்றிய பிரச்சினையாகும். ஏனைய முக்கியமான அடிப்படை அம்சங்களில் நடவடிக்கைமுறை பற்றிய விதிகள், குற்றஞ்சாட்டப்பட்டவர்களினதும், பாதிக்கப்பட்டவர்களினதும் உரிமைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சியாளர்களையும் பாதுகாப்பதாகும். நம்பகத்தன்மை கொண்டதாகவும், சுயாதீனமாகவும் புலனாய்வுகளை மேற்கொள்ள வேண்டியதன் தேவையைப் பற்றிக்கூறவேண்டியதில்லை. நியாயசபைகளின் உள்ளடக்கமும், நீதிபதிகளும், குற்றப்பகர்வாளர்களையும், பிரதான பணியாளர்களையும் நியமித்தல் (மற்றும் நீக்குதல்) பிரதானமானதாக அமையும். தவறாளிகளாக்கப்பட்ட ஆட்களுக்கு அளிக்கின்ற தண்டனை வகைகள் மற்றும்

**அரசாங்கத்தை பொறுப்புக்கூறலில் கட்டிவைக்கும் பொறுப்பினை சிவில் சமூகம் ஏற்க வேண்டும். அவற்றுக்காக மேற்கொண்டு வருகின்ற ஒழுங்குறுத்தல், பொதுக்கல்வி, சமூகத்தை வலுப்படுத்துதல் மற்றும் மதியுரையையும் அவசியமான இடங்களில் மக்களின் நன்மைக்காக வழக்குத்தாக்கல் செய்வதையும் உள்ளிட்ட பல்வேறு உபாயமுறைகளை கடைப்பிடிக்க இயலும்.**

ஏனைய நிலைமாற்று நீதிச்சபைகளின் தொடர்புகளைக் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

அரசாங்கத்தை பொறுப்புக்கூறலில் கட்டிவைக்கும் பொறுப்பினை சிவில் சமூகம் ஏற்க வேண்டும். அவற்றுக்காக மேற்கொண்டு வருகின்ற ஒழுங்குறுத்தல், பொதுக்கல்வி, சமூகத்தை வலுப்படுத்துதல் மற்றும் மதியுரையையும் அவசியமான இடங்களில் மக்களின் நன்மைக்காக வழக்குத்தாக்கல் செய்வதையும் உள்ளிட்ட பல்வேறு உபாயமுறைகளை கடைப்பிடிக்க இயலும்.

**இலங்கையின் இச்செயற்பாட்டுடன் தொடர்புடையதாக கலப்பு நீதிமன்றமொன்றின் அல்லது நியாயசபையொன்றின் சர்வதேச நிபுணர்களின் நன்மைகள் / முக்கியத்துவம் யாது?**

முந்திய பாவனைகள், இயலாமை அல்லது பற்றிய பீதிகள், புனையப்பட்ட தன்மைகள் நிலவியமை காரணமாக குற்றவியல் சட்டமுறைமைமீது நம்பிக்கை குறைவாக நிலவுகின்ற நாடுகளில் களவு நீதிமன்றச் சபையொன்று அறிவுக்குகந்ததாக அமைதல் வேண்டும். நிபுணத்துவமும், கௌரவமும் கொண்ட வெளிநாட்டு சட்ட ஆய்வாளர்கள், குற்றப்பகர்வாளர்கள் மற்றும் விமர்சகர்கள் அவற்றின் உள்நாட்டு பிம்பங்களுடன் கைகோர்த்து செயற்படுகையில் நம்பிக்கையையும், நம்பகத்தன்மையையும் குறுங்காலத்தில் கட்டியெழுப்ப இயலும்.

**ஈடுசெய்தல் பற்றிப் பேசும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய பிரச்சினை யாது?**


பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாகாமல் உயிர்வாழ்பவர்களுக்கும் புரியப்பட்ட சேதங்களை நிவர்த்தி செய்வதற்காக ஈடுசெய்தல்களின் ஆரம்பக் குறிக்கோள்களாக அமையவேண்டியது பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை மனிதஉரிமை மீறல்கள் காரணமாக அனுபவித்துவருகின்ற துன்பங்களை ஏற்றுக்கொள்ளலும், அரசு மற்றும் சமூகத்தை மீளக்கட்டியெழுப்புதலில் பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிக்கொள்ளலுமாகும். ஈடுசெய்தல் வேலைத்திட்டத்தின் விடயப்பரப்பு, அரசின் கொள்திறன் மற்றும் நலன்பெறுனர்கள் யாவர் என்ற விடயங்கள் கவனமாக கருத்திற் கொள்ளப்படல்வேண்டும். அத்துடன் நிகழ்ச்சித்திட்டங்களின் மாதிரிகளையும் கவனத்திற் கொள்ளல்வேண்டும். அது மீள்நிறுவுதலின், இழப்பீடு செலுத்துதலின், புனர்வாழ்வின் மற்றும் / அல்லது வேறு விதமானதாக அமைதல் வேண்டும்? அதில் ஈடுசெலுத்துதலின் குறியீட்டு ரீதியான விதங்கள் அடக்கப்படல் வேண்டுமா? அது ஆட்கள் மற்றும் சமுதாயங்கள் ஆகிய இருபிரிவினருக்கும் புரியப்படல் வேண்டுமா? என்பவை கவனத்திற் கொள்ளப்படல்வேண்டும்.


**அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயற்பாட்டுக்காக நிலைமாற்று நீதி செயற்பாடுகளால் விழிப்புணர்வூட்டப்படவேண்டிய தேவை நிலவுகின்றதா? ஏனைய சூழமைவுகளிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் யாவை? ஏனைய சூழமைவுகளில் அவற்றின் நிலைமாற்று நீதி சம்பந்தப்பட்ட அரசியலமைப்புசார்ந்த பாதுகாப்புகள் பயனுறுதிமிக்கதாக அமைந்துள்ளது எவ்வாறு?**


அரசியலமைப்பியல் மற்றும் நிலைமாற்று நீதியுடன் தொடர்புடையதாக சுட்டிக்காட்ட விபரமான எடுத்துக்காட்டுகள் கிடையாது. எவ்வாறாயினும் முரண்பாட்டுக்குப் பின்னர் மேலெழுந்து வருகின்ற நாடொன்றில் இடம்பெறுகின்ற அரசியலமைப்பு மறுசீரமைப்பு பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளையும், அவசியப்பாடுகளையும் பொருட்படுத்தாமல் விடலாகாது. உரிமைகள் சட்டமொன்றினால் அல்லது நிலைமாற்று நீதி சம்பந்தமாக தனியாக செயலாற்றக்கூடிய வாசகமொன்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் விரிவாக பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல்வேண்டும். அத்துடன் அரசியலமைப்பு தேசிய சட்டமயமாக்கல் அத்தகைய உரிமைகள் அமுலாக்கப்படவேண்டுமென விதிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அது ஒருசில குறைந்தபட்ச நிபந்தனைகள் மற்றும் தரநியமங்களுக்கு அமைவாக நிலைமாற்று நீதியைப் பலப்படுத்துகின்ற நிறுவனங்கள் உருவாக்கப்படல் வேண்டுமெனப் பணித்தல்வேண்டும்.

**2015 இல் அளித்த வாக்குறுதிகளை ஈடேற்றிக் கொள்வதற்காக அரசாங்கத்தை பொறுப்புக் கூறலில் கட்டிவைக்க சிவில் சமூகம் என்ன செய்யவேண்டியுள்ளது?**

அரசாங்கத்தை பொறுப்புக்கூறலில் கட்டிவைக்கும் பொறுப்பினை சிவில் சமூகம் ஏற்க வேண்டும். அவற்றுக்காக மேற்கொண்டு வருகின்ற ஒழுங்குறுத்தல், பொதுக்கல்வி, சமூகத்தை வலுப்படுத்துதல் மற்றும் மதியுரையையும் அவசியமான இடங்களில் மக்களின் நன்மைக்காக வழக்குத்தாக்கல் செய்வதையும் உள்ளிட்ட பல்வேறு உபாயமுறைகளை கடைப்பிடிக்க இயலும்.









உழைக்கும் வர்க்கத்தினரான எமது தேயிலைத் தோட்டத்தின் பெண்கள் நாட்டிற்கு வருமானத்தை ஈட்டித்தருவோர் வரிசையில் முன்னிலைப் பெறுகின்றனர். இதில் கர்ப்பிணிப் பெண்களும் அடங்குகின்றனர்.

எனவே தேயிலைப் பைகளால் கீறப்பட்ட இந்த ஓவியங்கள் மூலம் இப் பெண்களின் உணர்வுகளையும் வேதனைகளையும் புரிந்துகொள்ள முடியும். வீட்டிற்கும் நாட்டிற்கும் ஓர் வளமான இப் பெண்கள் தமது முதுகில் மாத்திரம் அல்லாது தமது வயிற்றிலும் எமது தேசத்தின் வளங்களை தாங்கி நிற்கின்றனர்.

ஓவியம் : **ஹனூஷா சோமசுந்தரம்**

# பொருளாதார நியாயம், நிலைமாற்று நீதிக்கு ஏற்புடையதாக அமைவதில்லையா ?

**விஜய் கே. நாகராஜா**

உண்மைக்காகவுள்ள உரிமைக்கான கௌரவத்தை ஏற்றுக்கொள்ளல் யுத்தத்திற்குப் பிற்பட்ட நியாயத்தை ஈடேற்றுவதில் மையப்பொருளாக அமைவதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான கவலைக்கிடமான சேதங்கள் மற்றும் மனிதஉரிமைகள் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட வழித்தோன்றல்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கான நீதி மற்றும் உண்மை பற்றிய நியாயமான கோரிக்கைகள் இலங்கையில் தோன்றி வருகின்ற நிலைமாற்று நீதிச்செயற்பாட்டின் இதயத்தில் நிலவுகின்றவையாகும்.

எனினும் பொருளாதார சேதங்கள் மற்றும் அநீதிகள் பற்றிய விடயம் எப்படிப்பட்டவை? அவற்றில் பெரும்பாலானவை காணாமல்போதல், கொலைகள், துன்புறுத்தல்கள், இடம்பெயர்தல், யுத்தமயமாக்கத்துடன் தொடர்புடைய சேதங்களுடன் மல்லுக்கட்டி வந்தபோதிலும் அதைப்போலவே வறுமை, குறைந்த வருமானம், கடன்படுநிலை அல்லது வாழ்க்கைத் தொழில்களினதும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் பாதுகாப்பற்ற தன்மையுடனும் மல்லுக்கட்டி வருகின்றது. நிகழ்காலத்தில் அவை அமுலாகின்ற வகையில் நிலைமாற்று நீதிச் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிநிரலில் பொருளாதார மீள்பரம்பல் மற்றும் நீதி பற்றிய கோரிக்கைகளுக்கு உள்ள இடம் யாது?

அரச உட்கட்டமைப்பு வசதிகளும், சேவைகளும் விரிவடைந்தமை காரணமாக வருமானமல்லாத ஏற்றத்தாழ்வுகளிலான வீழ்ச்சியடைதலை பொருட்படுத்தாமல் தென்னாபிரிக்க கறுப்பர்களின் பெருந்தொகையானோர் வறுமைநிலை அல்லது நிலையற்ற சமூக – பொருளாதார நிலைமைகளில் தங்கி இருந்தனர்.

தென்னாபிரிக்க செயற்பாட்டினைப்பற்றி திரும்பிப்பார்க்கும்போது அது மிகையான எதிர்பார்ப்பினைக்கொண்ட உண்மை மற்றும்



வடக்கில் மீனவர்கள் பலர்



மீளிணக்க செயற்பாட்டுடன் கைகோர்த்து நிறவேறுபாட்டுக்கொள்கையின் பொருளாதார கட்டமைப்புக்களிலிருந்து மாற்றமடைவதில் தோல்விகண்ட தாராளவாத அரசியல் பொருளாதார பிரயாண ஓடுதளத்தையும் தழுவியுள்ளது என்பதை சுட்டிக்காட்டவேண்டும். உதாரணமாக 2000 இன் நடுப்பகுதியளவில் தென்னாபிரிக்காவின் வருமான ஏற்றத்தாழ்வு ஒட்டுமொத்தமாகவும் இனங்களுக்கிடையிலும் சம்பள ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியவாறே கணிசமான அளவில் அதிகரித்துள்ளமையை மதிப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

அரச உட்கட்டமைப்பு வசதிகளும், சேவைகளும் விரிவடைந்தமை காரணமாக வருமானமல்லாத ஏற்றத்தாழ்வுகளிலான வீழ்ச்சியடைதலை பொருட்படுத்தாமல் தென்னாபிரிக்க கறுப்பர்களின் பெருந்தொகையானோர் வறுமைநிலை அல்லது நிலையற்ற சமூக - பொருளாதார நிலைமைகளில் தங்கி இருந்தனர். சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் பற்றிய உலகின் மிகவும் முற்போக்கான அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம்கூட வலியுறுத்தக்கூடிய அளவுக்கு பயணஞ்செய்கின்ற அரசியல் பொருளாதார மாற்றங்களை உறுதிப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளதோடு உண்மையிலேயே தென்னாபிரிக்காவில் சிறிய அளவிலான நிலைமாற்று நீதி மாற்றம் மாத்திரமே உருவாக்கப்பட்டுள்ளதென்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

**அரசியல் பொருளாதார சேதங்களை ஏற்றுக்கொள்ளாமை.**

இலங்கையில் யுத்தத்திற்கு பிற்பட்ட நீதி பற்றிய நிகழ்ச்சிநிரலில் உண்மையிலேயே அரசியல் பொருளாதாரசேதங்கள் அடங்காமையே பிரதான பிரச்சினையாக அமைகின்றது. உதாரணமாக பெறக்கூடிய தகவல்கள் யுத்தத்திற்கு பிற்பட்ட வடக்கிலும் கிழக்கிலும் வருமானம் தாழ்ந்த மட்டத்தில் நிலவுகின்றதென்பதையும், வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பாலான பகுதிகளில் தீவின் ஏனைய அனைத்துப் பிரதேசங்களையும்விட வறுமை விகிதம் உயர்வாக நிலவுகின்றது என்பதையுமே சுட்டிக்காட்டுகின்றன. மேலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கிலும் கிழக்கிலும் முறைசாரா சேவையில் ஈடுபடுகின்ற பிரிவில் குறைந்த ஊழியர்படை பங்கேற்புமாத்திரமன்றி அதற்கு மேலதிகமாக ஆரம்பநிலையற்ற தொழில்களுக்கான சம்பளமும் மிகக்குறைவானதாகும். அத்துடன் அதற்கு மேலதிகமாக இரண்டு மாகாணங்களிலும் ஊழியர்படையின் பங்கேற்பு மற்றும் சம்பளங்களில் பாரதூரமான ஆண் - பெண்

**யுத்தத்திற்கு பிற்பட்டகால நீதிசார்ந்ததாக மேற்கொள்ளப்படுகின்ற உரையாடலின் போது ஓரளவுக்கேனும் கவனம் செலுத்தப்பட்டுள்ள ஒரு துறையாக அமைவது காணிகள் பற்றிய துறையாகும். அது நீண்டகாலமாக விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்ற ஒன்று என்றவகையில் அரசியலில் ஏதேனும் நிலப்பிரதேசமயமாக்கலை வெளிப்படுத்துவதாலாகும். எனினும் ஒட்டுமொத்த கவனமானது வடக்கு மற்றும் கிழக்கின் காணிகளுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மாற்றத்தின்பால் ஆற்றுப்படுத்தப்படவில்லை.**

சமத்துவமின்மையும் நிலவுகின்றது.

யுத்தத்திற்கு பிற்பட்டகால நீதிசார்ந்ததாக மேற்கொள்ளப்படுகின்ற உரையாடலின் போது ஓரளவுக்கேனும் கவனம் செலுத்தப்பட்டுள்ள ஒரு துறையாக அமைவது காணிகள் பற்றிய துறையாகும். அது நீண்டகாலமாக விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்ற ஒன்று என்றவகையில் அரசியலில் ஏதேனும் நிலப்பிரதேசமயமாக்கலை வெளிப்படுத்துவதாலாகும். எனினும் ஒட்டுமொத்த கவனமானது வடக்கு மற்றும் கிழக்கின் காணிகளுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மாற்றத்தின்பால் ஆற்றுப்படுத்தப்படவில்லை.

இவ்விதமாக வளர்ந்துவருகின்ற கடன்படுநிலையைப்போன்றே உண்மையிலேயே யுத்தத்திற்கு பிற்பட்ட அபிவிருத்தி இடையீடுகள் மூலமாக ஏற்படுத்தப்பட்ட போதுமானதாக அமையாத வகையில் பணம் பிரயோகிக்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களும் காளான் பூப்பதைப்போல் அதிகரித்த பேரண்ட நிதிசார் மற்றும் கடன்வழங்கல் முன்னெடுப்புகள் போன்றவையும் வியப்படையச் செய்பவையல்ல. உண்மையிலேயே யுத்தத்திற்கு பிற்பட்ட மற்றும் நிலைமாற்று நீதி பற்றி பேசப்படுகின்ற கதைகளுடன் கைகோர்த்து பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் மூலமாக பல்வகையான வீடமைப்புக் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பல்வேறு சமுதாயங்களை வலுவூட்டுவதும் அவர்களுக்கான சமத்துவமும் அவர்களின் குறிக்கோள்கள் மத்தியில் கிடையாது. அவை சமுதாயங்களை வலுவூட்டுவதைப் பார்க்கினும் துரிதமாக கட்டடக் கட்டமைப்புகளை நிர்மாணித்தலுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தத்திற்கு பிற்பட்டகால நீதிசார்ந்ததாக மேற்கொள்ளப்படுகின்ற உரையாடலின் போது ஓரளவுக்கேனும் கவனம் செலுத்தப்பட்டுள்ள ஒரு துறையாக அமைவது காணிகள் பற்றிய துறையாகும். அது நீண்டகாலமாக விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்ற ஒன்று என்றவகையில் அரசியலில் ஏதேனும் நிலப்பிரதேசமயமாக்கலை வெளிப்படுத்துவதாலாகும். எனினும் ஒட்டுமொத்த கவனமானது வடக்கு மற்றும் கிழக்கின் காணிகளுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மாற்றத்தின்பால் ஆற்றுப்படுத்தப்படவில்லை.

காணி உரிமைகள் மற்றும் அவற்றை மீள்நிறுவுதல், பிரத்தியேக ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் அடிப்படையின் மீதான நிபந்தனைகளுக்கிணங்க மிகவும் குறுகியவகையில் பொருள்விளக்கம் தரப்படுகின்றது. காணிகளை விரிவான விவசாய – சுற்றாடல் சார்ந்த அபிவிருத்தியிலிருந்து தனிமைப்படுத்துதல் மேற்கொள்ளப்படுவதோடு, அதில் முக்கியமான உற்பத்திசார் வளமாகவும், பொதுவான நிலப்பரப்பாக காட்டப்படுவதும் அவற்றை புறந்தள்ளி வைக்கும். அத்துடன் காணிகள் சமூக கட்டமைப்புக்குள்ள தொடர்புக்கு விசேடமாக சாதி மற்றும் ஆண் – பெண் தொடர்புகளுக்கிணங்க அரிதாகவே பார்க்கப்படுகின்றது. இவையனைத்தும் வர்த்தகப் பண்டமயமாக்கலுக்கு, பொருத்தமற்ற பாவனைக்கு மற்றும் இறுதியில் இழக்கச் செய்வித்தலுக்கு வழிசமைக்கும்.

### ஈடுசெய்தலுக்காக எவ்வளவு தூரம் செல்லமுடியும்?

ஈடுசெய்தலை வழங்குவதற்கான கலந்துரையாடலுக்கு சொத்துக்கள் அல்லது வளங்களின் அழிவு மற்றும் வாழ்க்கைத்தொழில் சீரழிந்தமையை உள்ளிட்ட பொருளாதார இழப்புகள்

**அரச உட்கட்டமைப்பு வசதிகளும், சேவைகளும் விரிவடைந்தமை காரணமாக வருமானமல்லாத ஏற்றத்தாழ்வுகளிலான வீழ்ச்சியடைதலை பொருட்படுத்தாமல் தென்னாபிரிக்க கறுப்பர்களின் பெருந்தொகையானோர் வறுமைநிலை அல்லது நிலையற்ற சமூக – பொருளாதார நிலைமைகளில் தங்கி இருந்தனர்.**

பற்றிய பிரச்சினையை முன்னெடுத்துச் செல்லவியலும். இழந்த சொத்துக்கள் மற்றும் வளங்கள், நெல், உபகரணங்கள், வாகனங்கள் போன்ற எதுவாக இருப்பினும் அவற்றுக்குப் பதிலாக ஈடுசெய்தலை வழங்க அல்லது விருத்திசெய்ய மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் சிறிதுசிறிதாக செய்கின்ற மற்றும் நிலைமைக்கேற்றவாறு செய்கின்றனவாக மாறியுள்ளன. எனினும் உதவி வழங்குகின்ற மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் முந்துரிமைகளும் பலவீனமான அரசகொள்கை மூலமாக வடிவமைக்கப்படுகின்ற பல்வேறு துண்டங்களாக உடைக்கப்பட்ட கருத்திட்டங்கள் மூலமாக வெறுமனே அத்தகைய சொத்துக்களை வழங்குதல் அல்லது தொழிற்பயிற்சியை வழங்குதல் அவ்வாறின்றேல் கடன் வழங்குதல் கூட பயனுறுதி கொண்டதாக அமையாதிருக்கும்.

சவாலாக அமைவது மூலோபாய ரீதியான அரச முதலீடுகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்ற தனியார் முன்னெடுப்புகள் மூலமாக நடைமுறைசார்ந்த பொருளாதார வலையமைப்புகளை நிறுவனக் கட்டியெழுப்புதல்களுடன் பலப்படுத்துவதாகும். இது சொத்துக்களுடன் ஒருங்கிணைகின்ற வாழ்க்கைத்தொழில் உபாயமுறைகளை அர்த்தபுஷ்டியுள்ளதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் நிலைபேறானதாக்க மிகமுக்கியமானதாகும். உதாரணமாக பிரதேச ரீதியாக உழைப்பு, நிபுணத்துவம் மற்றும் பொருட்களை வழங்குகின்ற பாரியளவிலான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு வாழ்க்கைத்தொழிலை பிறப்பிக்கமுடியும். பிரதேச கொள்திறன்கள் மற்றும் கைத்தொழில்களை விரிவாக்க இயலும். எனினும் நிகழ்காலத்தில் நடைமுறைப்படுத்துகின்ற கொள்கையில் இதனைக் காணக்கூடியதாக இல்லை.

ஈடுசெய்தல் பற்றிய உரையாடலே பொருளாதாரம், பொருளாதார நீதி மற்றும் மீள்விரிவாக்கம் பற்றிய விரிவான பிரச்சினைகளில் மறைந்து உள்ளன. ஈடுசெய்தல் பற்றி இவ்விதமாக சிந்தித்தல் பிரதேச, பிராந்திய மற்றும் தேசிய அரசியல், பொருளாதார யதார்த்தங்கள் மூலமாக விழிப்புணர்வூட்டப்படுகின்ற மற்றும் அவற்றைப்பற்றிப் பேசுகின்ற முறையியலொன்றைக் கோரிநிற்கின்றது. அவ்வாறு செய்யாமை மூலமாக அபாயநேர்வினை மீண்டும் மீண்டும் தோற்றுவிக்கின்ற இடையீடுகள் தோல்வியடைதல் மாத்திரமன்றி உண்மையிலேயே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் உறுதியற்ற தன்மையை மோசமான நிலைமைக்கு ஏற்படுத்துவதும் இடம்பெறுகின்றது.

### பொருளாதார நீதி பற்றிய பிரச்சினை ஏன் காணமல் போயுள்ளது?

காணாமல்போகின்றமை அல்லது ஏனைய பாரதூரமான துஷ்பிரயோகங்கள் அல்லது சேதங்கள் மூலமாக ஏற்படுத்தப்படுவதைப்போன்றே பொருளாதார அநீதிகளும் மக்களினதும், சமுதாயங்களினதும் மனிதஉரிமைகள் மீது முனைப்பாகத் தெரிகின்ற பாதகவிளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. அப்படியெனில் அவை பற்றிய யுத்தத்திற்கு பிற்பட்டகால மற்றும் நிலைமாற்று நீதி பற்றிய விவாதத்திற்குள் மிகக்குறைவான கவனத்தைச் செலுத்தியிருப்பது அல்லது எவ்விதத்திலும் செலுத்தாமல் இருப்பது ஏன்? உண்மையிலேயே அதனோடு இணையான பொருளாதார நீதி, மீள்விரிவாக்கம் மற்றும் சமூக நீதி பற்றிய பிரச்சினைகளை அரசியலமைப்பு ரீதியான உரையாடல்களில் கூட காணக்கிடைப்பதில்லை.

ஒரு காரணமாக அமைவது அரசோ அல்லது சர்வதேச உதவி வழங்குனர்களோ அவை பற்றி ஆர்வம் செலுத்தாமையாகும்.

**ஈடுசெய்தல் பற்றிய உரையாடலே பொருளாதாரம், பொருளாதார நீதி மற்றும் மீள்விரிவாக்கம் பற்றிய விரிவான பிரச்சினைகளில் மறைந்து உள்ளன. ஈடுசெய்தல் பற்றி இவ்விதமாக சிந்தித்தல் பிரதேச, பிராந்திய மற்றும் தேசிய அரசியல், பொருளாதார யதார்த்தங்கள் மூலமாக விழிப்புணர்வூட்டப்படுகின்ற மற்றும் அவற்றைப்பற்றிப் பேசுகின்ற முறையியலொன்றைக் கோரிநிற்கின்றது.**

மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்களைப் போன்றே யுத்தத்திற்கு பிற்பட்டகால நீதிச் செயற்பாடுகளின் துறைகளிலான நிபுணர்களுக்கும், பிறருக்கும் பொருளாதாரக்கொள்கை பற்றிக் கூறவிருந்தது மிகவும் சொற்பமே என்பதும், அல்லது ஒன்றுமே இல்லையென்பதும் அதனைப்போன்றே முக்கியமானதாகும். உதாரணமாக பொருளாதாரக்கொள்கை வெளிப்பாடு பற்றி அல்லது வரவு – செலவுத்திட்டம் பற்றிய அவர்களின் மௌனத்தைக் கருத்திற்கொள்ளவும். அதேவேளையில் அபிவிருத்தி மற்றும் வறுமை பற்றிய தொழில்வாண்மையாளர்கள் நீதி பற்றிப் பேசும்போது வடக்கிலும் கிழக்கிலும் அல்லது உண்மையிலேயே நாட்டின் ஏனைய இடங்களிலான பொருளாதார நெருக்கடிகள் பற்றிப் பேசமாட்டார்கள்.

ஈடுசெய்தல் பற்றிய உரையாடலே பொருளாதாரம், பொருளாதார நீதி மற்றும் மீள்விரிவாக்கம் பற்றிய விரிவான பிரச்சினைகளில் மறைந்து உள்ளன. ஈடுசெய்தல் பற்றி இவ்விதமாக சிந்தித்தல் பிரதேச, பிராந்திய மற்றும் தேசிய அரசியல், பொருளாதார யதார்த்தங்கள் மூலமாக விழிப்புணர்வூட்டப்படுகின்ற மற்றும் அவற்றைப்பற்றிப் பேசுகின்ற முறையியலொன்றைக் கோரிநிற்கின்றது.

மற்றுமொரு காரணமாக அமைவது பாதிக்கப்பட்டதன்மை, பொறுப்புக்கூறல், மீளிணக்கம் மற்றும் குணப்படுத்துதல் பெரும்பாலும் பெரியளவில் கருத்திற்கொள்ளப்படுவது இனரீதியான அல்லது தேசரீதியான நிபந்தனைகளுக்கு அமைவாகவேயாகும். உண்மையில் இனப்பிரிவு முக்கியமானதாக இருந்தபோதிலும் அதனை எவ்வாறு இடஅமைவு செய்வித்தல் வேண்டும்? மோதலுக்கு உறுதுணை அளித்த வகுப்பு, சாதி, ஆண் – பெண் நிலை மற்றும் அரசியல் பொருளாதார தொடர்புகள் மற்றும் கட்டமைப்புகள் சம்பந்தமாக இனப்பிரிவு – தேசிய அடையாளங்களின் நடவடிக்கைமுறை மற்றும் கேள்விக்குட்படுத்தாத சிறப்புரிமைகளே என்பதை விளங்கிக்கொள்வது எவ்வாறு? இவையனைத்தும் யுத்தத்திற்கு பிற்பட்டகால மீளிணக்கம் மற்றும் நிலைமாற்று நீதியைச்சுற்றி இடம்பெறுகின்ற ஆதிக்க உரையாடல்களின் மூலைமுடுக்குகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

### பொருளாதார நீதியை ஒருபுறம் ஒதுக்கிவைப்பதிலான ஆபத்துகள்.

பொருளாதார நீதி மற்றும் மீள்விரிவாக்கத்தை பாரதூரமானதாகக்கொள்ளல் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை தரிசித்தல் பற்றியவிடயமன்று, சட்டத்தின் ஆட்சி, காணாமல் போகச்செய்வித்தல் அல்லது சித்திரவதை போன்ற குற்றச்செயல்கள் பற்றி பொறுப்புக்கூறல், பன்வகைமை மற்றும் பொறுமை என்பவை உண்மையிலேயே பயன்பாட்டு ரீதியான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு எம்மைப் பொறுத்தமட்டில் தாராளவாத பொருளாதார முறையுடன் பரிபூரணமாகப் பொருந்துகின்றது. இந்த மாற்றங்களை நிறுவனமயப்படுத்துவதில் மாத்திரம் தங்கியிருக்கின்ற எவ்விதமான செயற்பாட்டிலும் நீதியை தாங்கி நிற்பது கடினமாகும்.

பொருளாதார நீதி நிகழ்ச்சிநிரலொன்று இல்லாமை உண்மையிலேயே நிலவுகின்ற அரசியல் பொருளாதாரநிலைமை மீதான பக்கச்சார்பினை பிரதிபலிக்கின்றது. அது நிதிமயமாக்கல், உழைப்பினால் தாராளமாக கிடைக்கும் தன்மை மற்றும் மூலதனத்திற்கு கட்டுப்படுகின்றது என்பது சமூக நலனோம்பல் மற்றும் மக்கள் ஏற்பாடு பலவீனமடைதல் மற்றும் எவ்வளவுக்கேனும் உலகளாவிய வழங்கல்

செயற்பாட்டில் ஒருங்கிணைதல் மூலமாக அடையாளப்படுத்தப்பட்டதாகும்.

பொருளாதார நீதி மற்றும் மீள்விரிவாக்கம் கருத்திற்கொள்ளப்படாமல் விடப்பட்ட மாற்றமொன்றின் அபாயங்களைக் காண ஒருவர் செய்யவேண்டியது இன்று தென்னாபிரிக்காவைப் பார்ப்பது மாத்திரமே. அண்டை நாடு இந்தியா சட்டவாக்க ரீதியிலான குடியரசாக ஒழுங்கமைந்த வகையில் மாற்றப்படுகின்றவேளையில் அதன் பிரதம படைப்பாளியான கலாநிதி பிம்ராவோ அம்பேத்கார் அரசியலமைப்பினை இனங்காணவேண்டி இருந்த அரசியல் சமத்துவம் மற்றும் சமூக, பொருளாதார சமத்துவமின்மைக்கிடையிலான முரண்பாடுகளை சுட்டிக்காட்டினார். "நாங்கள் இந்த முரண்பாடுகளை இயலுமான முதற்கட்டத்திலேயே நீக்க வேண்டியவர்களாக உள்ளோம்." இல்லாவிட்டால் "சமத்துவமின்மையால் அல்லற்படுவோர் அரசியல் சனநாயகத்தின் கட்டமைப்பினை தகர்த்து விடுவார்கள்." என எச்சரிக்கை செய்தார்.

எச்சரிக்கை செய்தலைப் பொருட்படுத்தாமல் இந்தியா எடுத்துக்கொண்ட பாதையைக் கடைப்பிடியாமை தொடர்பில் இலங்கை சிறப்பாக செயலாற்ற வேண்டியுள்ளது. இந்தியா அல்லது தென்னாபிரிக்காவைப்போல் இலங்கையில் பாரியளவில் இடம்பெறுகின்ற அற்றுப்போகச் செய்தல்கள் இல்லை என்ற அடிப்படையில் இதனை நிராகரிப்பது தவறாக அமையக்கூடும். அத்தகைய அரசியல் மற்றும் விழுமியம் சார்ந்த தொலைநோக்கின்மை இலங்கை சனத்தொகையின் கணிசமான பிரிவினரது பொருளாதார யதார்த்தங்கள் மற்றும் எளிதில் இரையாகக்கூடிய நிலைமைகளை பொருட்படுத்தாமல் விடுவதாகஅமையும். அத்துடன் அது ஜேவீபீ கிளர்ச்சிக்கும் மூன்று தசாப்தங்களாக நீடித்த இனமுரண்பாட்டுக்கும் தூண்டுதலாக அமைந்த பொருளாதார துருவமயமாக்கல் மற்றும் வன்முறைசார் ரெடிக்கல் மயமாக்கலுக்கும் இடையிலான தொடர்பினை மறந்துவிடுகின்றது.

**முடிவுரை**

பொருளாதார நீதி மற்றும் மீள்விரிவாக்கம் பற்றிய நிகழ்ச்சிநிரலை அபிவிருத்தி செய்தலும், அத்தகைய ஒன்றுக்கு அர்ப்பணிப்பு செய்தலும் கட்டாயமானதாகும். அத்துடன் இது சொல்லின் பொருளுக்கிணங்க எடுத்துக்கொண்டால் வடக்கு மற்றும் கிழக்கிற்கு அப்பால் சிந்திப்பதையும் கருதுகின்றது என்பதைக் கூறவேண்டியதில்லை. இந்த அர்த்தத்தில் எடுத்துக்கொண்டால் மிகவும் உள்வாங்கிய மற்றும் நியாயமான யுத்தத்திற்கு பிற்பட்ட அரசியல் சமூகத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடொன்று அதன் சமூக, பொருளாதார மற்றும் சட்டமுறையான தன்மை மாத்திரமன்றி அதைப்போலவே அதன் பொருளாதார மற்றும் மீள்விரிவாக்கத் தன்மையைப்பற்றி மீண்டும் சிந்திப்பதற்கான வாய்ப்புகளை வழங்கிவருகின்றது. அத்தகைய புகுமுகம் உண்மையிலேயே நிலைமாற்ற ரீதியான யுத்தத்திற்கு பிற்பட்ட நீதி நிகழ்ச்சிநிரலுக்கான மிகவும் விரிவான ஒத்துழைப்பினையும், சட்டமுறையான தன்மையையும் கட்டியெழுப்ப உதவக்கூடியதாக அமையும்.


பொருளாதார மீள்விரிவாக்கம் மற்றும் நீதியை அடைதலானது செய்வதைப் பார்க்கிலும் சொல்வது மிகவும் எளிதானதாக அமைந்தபோதிலும் அதனை இணையானவகையில் உண்மை மற்றும் மீளிணக்கம் சம்பந்தமாக அல்லது படுகொலைகள், காணாமல்போதல்கள் அல்லது சித்திரவதைகள்போன்ற குற்றச்செயல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் சம்பந்தமாகவும் பிரயோகிக்க இயலும். இலங்கையில் நிலைமாற்று நீதிச் செயற்பாடு பொருளாதார நீதியை பொருட்படுத்தாமல்விட்டு உண்மையின் மீள்விரிவாக்கம் மீதேயன்றி வேறு எதன்மீதும் எதிர்பார்ப்பு வைக்கவேண்டாமெனக் கூறுகின்றது. இது எந்த அளவுக்கு நியாயமானது?

(எழுத்தாளர் பொருளாதார சனநாயக மயமாக்கலுக்கான கூட்டமைப்பின் அங்கத்தவராக இருப்பதோடு வறுமைப்பகுப்பாய்வு கேந்திர நிலையத்துடன் தொழிற்பட்டு வருகிறார். vijaiknagaraj@gmail.com ஊடாக அவருடன் தொடர்புகொள்ள இயலும்.)



ஆயிரக்கணக்கானோரின் உயிர்களை காவு கொண்ட யுத்தம். வடக்கில் ஆயிரக் கணக்கானோர் பலியாக, தெற்கிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் ஆயிரக் கணக்கில் பலியாகினர். எந்த இனம், என்ன மொழி, என்ன மதம் என குண்டு வெடிக்க முன்னர் கேள்வி கேட்கவில்லையே. வடக்கிலும் தெற்கிலும் பலியானவர்கள் மனிதர்களே. ஜாதி, நிறம், குலம் அதற்கு தேவைப்படவில்லை. தற்போது காலம் கடந்துவிட்டது. யுத்தம் நிறைவடைந்துவிட்டது. மீண்டும் நமக்கு யுத்தம் தேவையில்லை. எனினும் அங்குமிங்கும் வெடித்த குண்டுகள் காரணமாக உயிரிழந்த, ஊனமான ஆயிரக்கணக்கான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட அவர்களது குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு இருக்கின்றார்கள் என்பதை யாராவது பார்த்தார்களா? அவர்கள் இன்னும் மனிதாபிமானத்தை தேடுகின்றார்களா?

ஓவியம் : **அசங்க மஞ்சுள**



www.youtube.com

# மோதலின் மூலம் பாதிப்படையாத ஒருவர் கூட இல்லை

விரிவுரையாளர்
**கல்கந்தே தம்மானந்த தேரர்**

சுமார் முப்பது வருடங்களாக ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது. இந்த யுத்தத்தினால் பெரும்பாலானோர் பாதிப்படைந்தனர். இம் மோதலினால் தமது தரப்பினர்மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் சமூகத்தில் உள்ளனர். யுத்தத்தின் விளைவாக சிங்கள சமூகத்தினரின் எல்லைக் கிராமங்களில் குண்டுத் தாக்குதல்களுக்கு ஆளானவர்களும் உள்ளனர். இராணுவத்தினர் என்ற வகையில் அவர்கள் மத்தியிலும் பாதிக்கப்பட்டோர் உள்ளனர். தகப்பன்மார்களை இழந்த சிறுவர்கள் இவ் அனைத்து தரப்பிலும் உள்ளனர். பாரியளவில் சொத்துக்கள் சேதமடைந்தன. இப் பிரதேசத்தில் அல்லது குறித்த எல்லைப் பிரதேசத்திற்குள் பாதிப்புக்குள்ளான வர்க்கமான இவர்களை இனங்காணலாம்.

இதற்கும் மேலாக மேலும் பலர் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டனர். தொலைக்காட்சி போன்ற பல்வேறு ஊடகங்களில் இவ்யுத்தத்தைப் பார்த்தவர்கள் உள்ளனர். விசேடமாக சிறுவர்கள். சிறுவர்களுக்கு இதனை ஓர் விளையாட்டாக, கார்ட்டூன் ஆகக் காட்டுகின்றபோது அது பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. முழுநாட்டிலும் இனமத வேறுபாடுகள் இன்றி செய்திகளைப் பார்வையிடுவதன்மூலம் யுத்தத்தைக் கண்கூடாகப் பார்த்த ஒரு சந்ததியினர் உள்ளனர். இவர்களும் மனோ ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாவர். இவ்வாறு நோக்கும்போது பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை என்றே கூறலாம். இவ் அனைவரையும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களெனக் கருத வேண்டும்.

இங்கு பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். ஒருவரது பிள்ளை காணாமற் போயுள்ளதாக எடுத்துக்கொள்வோம். என்ன நடந்ததென்று தெரியாது. அவ்வாறான ஒரு நபர் சமூகத்தில் இருப்பதென்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும். இது குணப்படுத்தப்படல் வேண்டும். யுத்தத்தை அனுபவித்த ஒரு தலைமுறை இருப்பது இதனைவிட பயங்கரமானதாகும். சிலவேளை யுத்தம் இல்லாதது அவர்களுக்கு ஒரு

**அவர்களுக்குச் சொந்தமான காணிகளை அவர்களுக்கு மீள வழங்கப்படல் வேண்டும். யுத்தம் முடிவடைந்த பின்னர் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி அவர்களது காணிகள் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும். மனிதர்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க அவற்றை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். இவை அடிப்படைத் தேவைகள் ஆகும்.**

குறையாக விளங்கலாம். உதாரணமாக யுத்தம் இல்லாததன் காரணமாகத் தாக்குவதற்கு எவருமில்லை என்பதைக் குறிப்பிடலாம். இதன்மூலம் ஓர் இடைவெளி உருவாக்கப்படுவதனால், இது ஒரு பயங்கர நிலைமையாக மாறுகிறது. இவ் இடைவெளியை நிரப்புவதற்கு எவராவது தலையிட முடியும். இதில் உள்ள பிரச்சினை ஒரு புறமிருக்க வேறு ஒரு பாரிய பிரச்சினை உருவாகக்கூடும். இவ்வாறே யுத்தத்தின் பாதிப்பை நான் நோக்குகின்றேன்.

இவ் இடத்திலிருந்து எவ்வாறு நகர்வது என்பதுபற்றி மிகவும் கவனமாகத் தலையிடல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் யாரென நோக்கும்போது மனிதர்களே தென்படுவதால் கவனமாகச் செயற்பட வேண்டிய ஒரு தலையீடாக உள்ளது. இவ்வாறின்றி ஓர் இனப்பிரிவினருக்கு ஏற்பட்ட ஒரு பாதிப்பாக நோக்குவோமாயின் அது கடினமானதாக அமையும். ஆகவே, முதலாவது விடயமாக இவ்விரு பக்கங்களிலுமுள்ள மக்களின் வாழ்வுபற்றி படம் பிடித்துக் காட்டுவதற்கான ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி நம்மிடம் இல்லை. அவ்வாறே தெற்கு மக்களின் வாழ்வு உதாரணமாக ஹம்பாந்தோட்டை, அம்பாறை, தனமல்வில ஆகிய பிரதேச மக்களின் வாழ்க்கை முறை பற்றி எவருக்கும் தெரியாது. யுத்தம் முடிவடைந்த பின்பு வடக்கிலிருந்து தெற்கே வரும் மனிதர்கள் கொழும்பிலுள்ளவர்களை மாத்திரமே காண்கின்றனர். கொழும்பைப் பார்த்தவுடன் சிங்களவர்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லையென எண்ணுகின்றனர். உண்மையான மக்கள் வாழ்வினை இரண்டு பக்கத்திற்கும் சித்தரித்துக் காட்டும் வேலைத்திட்டங்கள் அவசியமாகும். பாதிக்கப்பட்டவர்களுக்காக முதலாவதாக செய்யவேண்டியது என்னவென்பது பற்றியது அல்ல என நான் நினைக்கின்றேன். இரண்டு பக்கத்திற்கும் இரண்டு பக்கமும் திறக்கப்படல் வேண்டும். இது அத்தியாவசியமானதாகும். பிரதானமான ஒரு பணியை ஊடகங்கள் மேற்கொள்ள வேண்டுமென நான் யோசனை தெரிவிக்கின்றேன். நாம் அறிந்த வகையில் தொலைக்காட்சி போன்ற ஊடக நிறுவனங்கள் தமது கலையகங்களுக்கே நபர்களை வரவழைக்கின்றனர். நான் கூட அவற்றுக்குச் செல்கின்றேன். போய் அதுபற்றிக் கதைக்கின்றேன். வீடுகளில் இருந்தவாறு மனிதர்கள் அதற்குச் செவிசாய்க்கின்றனர். கலையகங்களுக்கு வரையறுக்கப்பட்ட கலந்துரையாடல்களிலிருந்து விடுபடல் வேண்டும். இத் தொலைக்காட்சிக் கலையகங்களிலிருந்து மீண்டு மனிதர்கள் மத்தியில் சென்று அவர்களது உண்மையான வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்ட வேண்டும்.

**பிள்ளைகள் அற்ற தாய்மார்கள்**

இவ்வாறு துன்பப்படும் இனப் பிரிவினரை இருபக்கத்திலும் காட்சிப்படுத்துகின்றபோது வாழ்க்கை எவ்வளவு கடினமானது என இரு சாராருக்கும் தென்படுகிறது. இதன்மூலம் நாம் இரு சாராரும் ஒரே விதமாக துன்பப்படுபவர்கள் என்பது தென்படுகிறது. அடுத்த இடத்திற்குச் செல்ல இது அடிப்படையாக அமையும். இதற்காக ஊடகக் குழுக்கள் அவர்களிடம் செல்லல் வேண்டும். அவ்வாறு காட்டப்படும்போது வெவ்வேறான விடயங்களை அவர்களால் பார்க்க முடியும். முதலாவது விடயமாக அது அத்தியாவசியமாகின்றது. நாம் எவ்வாறு குணப்படுத்தப்படும் இடத்திற்கு செல்கிறோம் என்பதை அதன் பின்னர நம்மால் கண்டுகொள்ள முடியும். அதன் பின்னர் பரஸ்பர உறவினைக் கட்டியெழுப்ப முடியும். அது ஒரு பரிமாற்ற நிகழ்ச்சியாக அமையலாம். பாடசாலைகளுக்கிடையிலான நிகழ்ச்சியாக இருக்கலாம். இதன்போது யுத்தத்தினால் தனது ஒரு பிள்ளையை இழந்த ஒரு தாயைச் சந்திக்க முடியுமாயின், ஒருவேளை எல்.ரீ.ரீ.ஈ கறும்புலி அல்லது வேறு வகையில் கூறப்படும் ஒரு பிள்ளையை இழந்த ஒரு தாயாக இருக்கலாம். அவ்வாறானவர்களைச் சந்திப்பது அவசியமாகும். அவ்வாறானவர்களைச் சந்திப்பதை இரண்டாவது விடயமாகக் கருதலாம். இவ்வாறான உறவுகளைக்

**உதாரணமாக யுத்தம் இல்லாததன் காரணமாகத் தாக்குவதற்கு எவறுமில்லை என்பதைக் குறிப்பிடலாம். இதன்மூலம் ஓர் இடைவெளி உருவாக்கப்படுவதனால், இது ஒரு பயங்கர நிலைமையாக மாறுகிறது. இவ் இடைவெளியை நிரப்புவதற்கு எவராவது தலையிட முடியும். இதில் உள்ள பிரச்சினை ஒரு புறமிருக்க வேறு ஒரு பாரிய பிரச்சினை உருவாகக்கூடும். இவ்வாறே யுத்தத்தின் பாதிப்பை நான் நோக்குகின்றேன்.**

கட்டியெழுப்புவதற்குச் செல்லாமல் நேரடியாகக் காயங்களுக்கு மருந்துபோடும் வேலையைச் செய்ய முடியாது. அவ்வாறு செய்வது சாத்தியப்பட மாட்டாது. அவ்வாறு இடம்பெறாதபோது பரிகாரம் தேடுவதை நிறுத்தும் நிலைக்கு தள்ளுதல் இலகுவாகலாம். இது கடினமான செயற்பாடுகளாக இருந்தாலும் இது நடைபெறுதல் வேண்டும். அதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களை இனங்காண முடியும். அதற்கான பிடிமுறைகளைத் திட்டமிட முடியும்.

பௌத்த சிந்தனையின் அடிப்படையில் நான் இதில் தலையிடுவதால் மன்னிப்பு வழங்குதல் பற்றிச் சிந்திக்கின்றேன். ஒருவர் குணமடைய வேண்டுமாயின், எனக்குக் குற்றமிழைத்தவர் என்மீது குற்றமிழைத்துவிட்டார் என நான் சிந்தித்தவண்ணம் உள்ளேன். குற்றம் புரிந்தவர் எந்தவிதப் பிரச்சினையுமின்றி சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருப்பாராயின் பாதிக்கப்பட்டவர் என்ற வகையில் நான் குணமடைய மாட்டேன். குணமடையச் செய்வதற்குரிய ஒரு செயன்முறை அவசியமாகும். செயன்முறை மூலமே குணமடையலாம். குறிப்பிட்டளவு எண்ணிக்கையான எல்.ரீ.ரீ.ஈ. சந்தேக நபர்கள் சிறைகளில் உள்ளதாக நான் எண்ணுகின்றேன். அவர்கள் தொடர்பில் வழக்கு விசாரணைகள் இல்லை. அல்லது வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவதற்கான சரியான தருணம் இதுவென்று நான் நினைக்கின்றேன். வேறுபட்ட ஒரு சூழலில் இவர்கள் குற்றம் புரிந்திருக்கக்கூடும். சமூகமான ஒரு சூழ்நிலையில் அவர்கள் குற்றம் புரியவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் அப்போதிருந்த சூழ்நிலையில் இவ்வாறானவற்றில் ஈடுபடாமலிருக்க எவராலும் முடிந்திருக்காது என நான் நினைக்கின்றேன். அவ்வாறான ஒரு சூழலில் அவர்கள் அவ்வாறு செய்திருந்தாலும் தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளது. நிலைமை மாறியிருப்பின் துணிச்சலான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு பொதுமன்னிப்பு வழங்க முடியுமாயின் அது வடக்கு மக்களிடம் முக்கியமானதொரு செய்தியைக் கொண்டு செல்லக்கூடியதாயிருக்கும். இது பாரியதொரு பணியாகும். பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதன் பின் அது பொதுவான ஒரு செய்தியாகக் கொண்டு செல்லப்படும். இதற்கு முன்னுரிமையளிப்பதில் தவறில்லை.

இரண்டாவது விடயம் காணி. அவர்களுக்குச் சொந்தமான காணிகளை அவர்களுக்கு மீள வழங்கப்படல் வேண்டும். யுத்தம் முடிவடைந்த பின்னர் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி அவர்களது காணிகள் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும். மனிதர்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க அவற்றை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். இவை அடிப்படைத் தேவைகள் ஆகும். அதற்கடுத்த மிகக் கஷ்டமான விடயம்தான் தமது பிள்ளைகள் காணாமலாக்கப்பட்ட பெற்றோர்கள் சிங்கள மக்களிடையே உள்ளனர். இராணுவத்தில் இருந்தபோது காணாமலாக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாதவர்களும் உள்ளனர். தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என அறியாத ஒரு பிரிவினரும் வடக்கில் உள்ளனர். சிலபோது யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்ததன் பின்னர் காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளும் உள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என அறியும் தேவை காணப்படுகிறது. எதுவுமே நடக்காததைப் போன்று இருக்க முடியுமா? அல்லது என்ன நடந்தது என அறிய வேண்டுமா? குணமடைந்ததற்காக என்ன நடந்தது என்பதைப்பற்றி அறிவதற்கு ஏதேனுமொரு முறைமை தேவைப்படுகிறது. ஏதேனும் ஒரு சிந்தனையுடனான வேலைத்திட்டம் தேவைப்படுகிறது. இவ்வாறு செய்யும்போது இது அவ்வளவு கடினமானதாக அமையாது என நான் நம்புகிறேன்.




**வாழ்வின் எதிர்பார்ப்பு**

இதன் பின்புதான் கடினமான பகுதி உள்ளது. இக் கடினமான பகுதிக்குச் செல்ல முன்னர் மனிதர்களுக்கிடையே பாரியதொரு கட்டியெழுப்புதல் தேவைப்படுகின்றது. அதாவது எவரும் எவரையும் பழிவாங்கவோ, தண்டனை வழங்கவோ, சிறையில் அடைப்பதோ அல்ல. நாம் இந்த இடத்திலிருந்து வாழ்க்கையைத் தொடங்குவோம். அழிவடைந்தது போதும் எனும் இடத்திற்கு கொண்டு வருதல் அவசியம். அங்கு என்ன நடந்தது என்பதுபற்றி நேர்மையான முறையில் பார்க்கும் நிலைமைக்கு மனிதர்களைக் கொண்டுவர முடியும். ஆகவே நான் முன்னர் குறிப்பிட்டது போன்று எல்.ரீ.ரீ.ஈ. எனப்படுபவர்கள் விசேடமான ஒரு நிலைமையின்கீழ் அவ்வாறு செய்தார்கள். விசேட ஒரு நிலைமையின்கீழ் இராணுவம் அவ்வாறு நடந்துகொண்டது. மனிதர்களின் வாழ்வுபற்றி எதிர்பார்ப்புக்கள் அற்ற, திரும்பி வரமுடியும் என்ற எதிர்பார்ப்பற்ற மனிதர்கள் அவர்கள். அம் மனிதர்கள் இவ் விசேட நிலைமைகளின்கீழ் குற்றம் புரிந்திருப்பின் அதுவும் ஒரு விசேட நிலைமைதான். இவ்வாறான ஓர் அடிப்படையில் இருந்துகொண்டுதான் பயணிக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன். அவ்வாறு நடைபெறுமாயின், எல்லோரும் குற்றம் புரிந்துள்ளார்கள், எவருக்காகவோ யார்யாரையோ காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்திட்டம் அல்ல என நம்மால் கூறமுடியும். பொதுவாக நாம் எங்கு உள்ளோமோ அங்கிருந்துதான் ஆரம்பிக்கப்படல் வேண்டும். பொது இணக்கப்பாடு எங்கு உள்ளது? பொதுவாக நாம் எதில் தங்கியுள்ளோம்? இவ்வாறானவைகள்தான் இடம்பெற வேண்டுமென நான் நம்புகிறேன்.

இதன்போது ஊடகங்களுக்கு மேலதிகமாக கல்வி, கலை, இலக்கியம் ஆகிய துறைகளிடமும் பாரியதொரு கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. இறுதியாக மனிதர்கள் சிந்திப்பதற்கு அமையவே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். சிந்திக்கின்ற விதத்தினை மாற்றுவதில் கல்வி முக்கிய இடத்தை வகிக்கிறது. அதன் பின்னர் கலை, இலக்கியம், கல்வி இதில் பிரதான பங்கு வகிக்கின்றது. யுத்தத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு மாதிரி அமைப்பு தற்போது எம்மிடம் காணப்படுகிறது. இம் மாதிரியினுள் யுத்தம் முடிவடைந்த பின்னர் உருவாகக் கூடாத உரையாடல்கள் உருவாகி இருப்பின் இதில் பாரதூரமான மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். மீண்டும் ஒருமுறை கல்விப் பாடத்திட்டம் தொடர்பாக கவனஞ்செலுத்துதல் வேண்டுமென நான் நினைக்கிறேன். யுத்தத்தினால் கட்டியெழுப்பப்பட்ட பல விடயங்கள் மாற்றமடைய வேண்டும். அவ்வாறுதான் இலங்கையர் என்ற எண்ணம் உருவாகும். அவ்வாறான கருத்து எம்மிடம் இல்லை. சாதி

**எனக்குக் குற்றமிழைத்தவர் என்மீது குற்றமிழைத்துவிட்டார் என நான் சிந்தித்தவண்ணம் உள்ளேன். குற்றம் புரிந்தவர் எந்தவிதப் பிரச்சினையுமின்றி சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பாராயின் பாதிக்கப்பட்டவர் என்ற வகையில் நான் குணமடைய மாட்டேன். குணமடையச் செய்வதற்குரிய ஒரு செயன்முறை அவசியமாகும்.**

மற்றும் மதம் என்ற ரீதியில் சிந்திக்காத ஒரு நிலைமைக்குச் செல்ல வேண்டும். இதன்போது கல்விக்கு முக்கியமானதொரு கடமைப்பொறுப்பு உள்ளது. கல்வியியலாளர் பாரியதொரு தலையீட்டினை மேற்கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர். அவ்வாறுதான் இலக்கியம் கலை, திரைப்படம் போன்றனவும் அமைய வேண்டும். இவைகளுக்கு மிகவும் வலுவான முறையில் இவ்வாறாகவே மனிதர்களுக்கு அறிவினை வழங்க முடியும். தமிழ்மொழி மூலம் காணப்படும் ஏதேனுமொரு கலை நூலின்மூலம் சிங்கள சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறமுடியும். இரு தரப்பினரும் அவரவர்களது பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதே தற்போது முக்கியமானதாகவுள்ளது. கலை நூல்கள் மூலம் இதனை வெளிக்கொணரக்கூடியதாயிருக்கும். ஆகவே கலைக்கு பாரியதொரு பொறுப்பு உள்ளதென நான் கருதுகின்றேன்.

பௌத்த மத ரீதியாகக் கதைக்கும்போது தேரர்கள் என்ற வகையில் எம் மத்தியில் பாரதூரமான வகையில் ஓர் அதிர்ச்சி ஏற்படல் வேண்டும். இலங்கையில் பாரிய மனிதப் பேரழிவு இடம்பெற்றது. 71ல் மாத்திரமல்ல அதன் பின்னர் 87 – 89 காலப்பகுதிகளில் மரணித்தவர்கள் எண்ணிக்கை ஏராளம். 71 கிளர்ச்சியில் 20000 என்று சொல்கின்றனர். 87 – 89 காலப்பகுதியில் 60000 என்று கூறுகின்றனர். புள்ளிவிபர ரீதியில் இது எவ்வளவு தூரம் சரியானதென எனக்குத் தெரியாது. ஆயினும் பாரியளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. அரந்தலாவைப் படுகொலையில் 31 பேர் கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டபோதும், அரந்தலைவைப் படுகொலை இடம்பெற்று சில மாதங்களின் பின்னர் 87 ஆரம்பிக்கப்பட்டது. 90 ஆம் ஆண்டளவில் சுமார் 1000 பிக்குகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என நான் நினைக்கின்றேன் . இது எமது நினைவுகளை விட்டுப் பிரிந்துள்ளது. 700 அல்லது 600 அல்லது 500 பேர் என்று நினைப்போம். டயர்களில் எத்தனை பேர் எரிக்கப்பட்டார்கள்? அதன் பின் இக்கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இதில் எமக்குரிய ஒரு வகிபாகம் இல்லையா? இதில் பாதிக்கப்பட்டவர்களாகவா அல்லது இதன் மத்தியில் சென்று இதனை மாற்றுவதற்கா, இன்றேல் நடப்பது நடக்கட்டும் என்று அதன் பயன்களை அனுபவிப்பதற்காக நாம் இருக்கிறோம் ? இதன் மத்திக்குச் சென்று நாம் சிந்திக்கும் விதத்தை மாற்ற வேண்டுமென்று நான் நினைக்கின்றேன். இதனை மாற்றுவதற்கான எமது தலையீடு காணப்படுகிறது. முற்காலத்தில் பௌத்த மதத்தை பாதுகாப்பது தொடர்பில் பிரச்சினை காணப்பட்டது என நான் நினைக்கின்றேன். தேரவாத பௌத்தத்திற்கு போட்டியாக மஹாயான பௌத்தம் மேல் எழுகிறது. மதரீதியான நிவாரணம் இல்லாத ஒரு நிலைமையின்கீழ் மதத்தைப் பாதுகாத்தல். அவ்வாறே நூல்களைப் பாதுகாத்தல் இடம்பெற்றது. ஆயினும் தற்போது இப்பிரச்சினைகள் எதுவும் இல்லை. திரிபீடகத்தை எவராலும் அழித்துவிட முடியாது. அது இணையதளத்தில் காணப்படுகிறது. இறுவெட்டுகளிலும் உள்ளது. உலகில் கற்றறிந்த மனிதர்கள் மத்தியில் இவ் அறிவு காணப்படுகிறது. தொடர்ந்தும் இதில் பாதிப்பை ஏற்படுத்த எவராலும் முடியாது. உண்மையில் அதைப் பாதுகாக்கும் கடமை எம்மிடத்தில் இல்லை. இவ் அறிவை அடிப்படையாகக் கொண்டு அதனை வழங்குவதே எமது பணியாகும். தேரர்களான எம்மீது பாரியதொரு பொறுப்பு உள்ளது. இனம் என்பதை விடுத்து மனித இனம் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதில்தான் உண்மையிலேயே சிங்கள இனம் பாதுகாக்கப்படுகிறது. மனித வர்க்கத்தின் நன்மைக்காகவே என தேரர்கள் சிந்திக்கும் பொழுது சிங்கள இனம் நிர்க்கதியாகமாட்டாது. உண்மையிலேயே சிங்கள இனத்தைப் பாதுகாக்க முயலும் போதே சிங்கள இனம் நிர்க்கதிக்குள்ளாகிறது.


ஆகவே மதரீதியாக இதில் தலையிடுவதற்கு பொதுவாக அனைத்து மதங்களுக்கும் பாரியதொரு கடமைப்பொறுப்பு உள்ளது. உதாரணமாக பௌத்தர்கள் என்ற ரீதியில் ஏதேனுமொரு உன்னத கருமத்திற்காக பௌத்த நிறுவனங்களுக்கு நாம் உதவிகளைச் செய்கின்றோம். மைத்திரி தியானத்தில் எதிரிகளுக்கும் கருணை காட்டவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. கடந்த காலம் பூராக மரணித்த அனைத்து மனிதர்களுக்காக எம்மால் பிரார்த்தனை செய்ய முடியுமாயின்

அது சிறந்த ஒரு செயல் ஆகும். அவர்கள் தமிழர்களாக இருக்கலாம், சிங்களவர்களாக இருக்கலாம், புலிகளாக இருக்கலாம், இராணுவ வீரர்களாக இருக்கலாம். இவை அனைத்தும் அவர்களை அழைக்கும் பெயர்கள் மாத்திரமே. இங்கு மனிதர்களே மரணித்துள்ளார்கள். இவ் அனைத்து மனிதர்களுக்குமாக பிரார்த்திப்போமாயின் அங்கு அமர்ந்திருக்கும் மனிதனின் மனதில் பாரியதொரு மாற்றம் ஏற்படும். இதனை எமக்குச் செய்ய முடியும். இதற்கு ஐந்து சதமேனும் செலவாகாது. இதன்மூலம் மனிதன் இருக்கும் இடத்திலிருந்து அவனை மேலே உயர்த்த முடியும். ஆயினும் நாம் எமது வரலாற்றுக் கதைகளைப் பேசி எமது இராணுவ வீரர்கள் பற்றிக் கதைத்து மனிதர்களைப் பிரிக்கும் செயல்களைச் செய்கின்றோம். இதன்மூலம் நாம் மனிதர்களைக் கொண்டு செல்வது, கருணை காட்டும் செயற்பாட்டுக்கு அல்ல. இதனுள் நாம் எம்மை வரையறுக்கின்றோம். மனோபாவ மாற்றம் அவசியம் என நான் எண்ணுகின்றேன். மனிதர்கள் சிந்திக்கும் விதம் மாற்றமடைய வேண்டும். இது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது மேற்கொள்ளும் ஒரு பணி அல்ல. இது நாட்டு மக்களின் மனங்களில் உருவாக வேண்டிய ஒன்றாகும்.

**அதிகாரத்திற்கான தந்திரோபாயம்**

இறுதியாக இவை அனைத்திற்கும் மேலாக அரசியல்வாதிகளிடமும் பாரியதொரு கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள போதும், நான் அதுபற்றிக் கதைக்க விரும்பவில்லை. ஏனெனில் பொறுப்புள்ள அரசியல்வாதிகளைக் காணமுடியவில்லை. இது ஒரு மோசமான நிலைமை ஆகும். அவ்வாறான அரசியல்வாதிகள் எமது நாட்டில் அரிதாகவே உள்ளனர். நான் ஏதாவதொரு கட்சியைப் பற்றிக் கதைக்கவில்லை. எம் மத்தியில் இருக்கும் அரசியல்வாதிகள் சுயநலவாதிகளாக, தூரசிந்தனையற்ற, வியாபார சிந்தனையுள்ள, அதாவது பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டவர்களாக உள்ளனர். போதியளவு மதுபானசாலைகள், பணம் சம்பாதிக்கும் வழிகள் காணப்படலாம். அவைகள் இன்றி எவ்வாறு ஒரு நாட்டை முன்னேற்றுவது போன்ற பாரியளவு சிந்தனைகள் அவர்களிடத்தில் இல்லை. எமக்கு இருப்பது கிராமிய மட்டத்திலான குண்டர்கள் (சண்டியர்கள்) ஆவார்கள். இவ்வாறான பாரியதொரு பணியைச் செய்யக் கூடிய ஒரு தொலைநோக்கு அவர்களிடம் உள்ளதா ? என்பது சந்தேகம்தான். இங்கு சொல்லப்படும் விடயங்கள் அவர்களுக்குப் புரிகிறதா ? அவ்வாறு செயற்படுவார்களா ? ஆயினும் இது மிகவும் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஆகும். தற்போது இந்த அரசாங்கம் ஒருசில நடவடிக்கைகளை மேற்கொள்வதை அவதானிக்க முடிந்தாலும் வரலாறு பூராகவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தொடர்ந்தும் இப்பிரச்சினையை அவர்கள் பயன்படுத்தக் கூடியதாயிருந்தது. இதன் விளைவாக இவ்வளவு தூரம் பாரியதொரு இழப்பினை நாம் சிந்திக்க நேர்ந்தது. நாடு என்ற வகையில் ஏனைய உலக நாடுகள் முன்னேறிச் செல்லும் வேளை நாம் எவ்வளவு தூரம் பின்னோக்கிச் சென்றுள்ளோம். இதற்குக் காரணம் நாம் தூரநோக்கோடு செயற்படாமை ஆகும். ஏனெனில் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் இதைக் குழப்புகிறார்கள். ஒருசாரார் பயணம் மேற்கொள்ள முயலும்போது மற்றைய சாரார் அதைக் குழப்புகின்றனர். இதுவே தொடர்ந்தும் இடம்பெற்றது. அதிகாரத்தில் உள்ள கட்சி ஏதாவதொன்றைச் செய்ய முயலும்போது அதிகாரத்தில் இல்லாதவர்கள் அதைக் குழப்புகின்றனர். தற்போதும் இது அவ்வாறே நிகழ்கிறது. இதன்மூலம் எந்தவொரு பயனும் கிடைக்குமென நான் நினைக்கவில்லை. ஏனெனில் எப்போது மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமென அதிகாரத்தில் இல்லாதவர்கள் பேராசை பிடித்தவர்களாக எதிர்பார்த்தவண்ணமுள்ளார்கள். ஆகவே உண்மையில் இந்த சந்தர்ப்பமானது ஏனைய சந்தர்ப்பங்களைவிட புத்திசாதுர்யமாகப் பணியாற்ற வேண்டிய ஒரு சந்தர்ப்பம் என நான் நினைக்கின்றேன். காரணம் இதற்காகச் செலவு செய்யப்பட்டவை மிகப் பாரதூரமானதாகும். ஆகவே இனவாதத்தைத் தூண்ட மாட்டோம் என இச் சந்தர்ப்பத்தில் இதனைவிட புத்திசாதுர்யமாக இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமாயின் சிறந்தது. மற்றையது அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் மீண்டுமொருமுறை குழப்பாமல் இருக்க முடியுமாயின் அது பாரியதொரு காரியம் ஆகும். இப்பொறுப்பு நம்மிடம் உள்ளது. வடக்கின் அரசியல் கட்சிகள் ஓரளவு நெகிழ்ந்து கொடுப்பதாகத் தென்படுகிறது. இது பாரியதொரு

**இதன்போது ஊடகங்களுக்கு மேலதிகமாக கல்வி, கலை, இலக்கியம் ஆகிய துறைகளிடமும் பாரியதொரு கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. இறுதியாக மனிதர்கள் சிந்திப்பதற்கு அமையவே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். சிந்திக்கின்ற விதத்தினை மாற்றுவதில் கல்வி முக்கிய இடத்தை வகிக்கிறது. அதன் பின்னர் கலை, இலக்கியம், கல்வி இதில் பிரதான பங்கு வகிக்கின்றது.**



யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் மீதான விசாரணைகள் பட்டப் பகலில் Torchlight அடித்து ஏதோ ஒரு பொருளைத் தேடுவது போன்றுள்ளது. இந்த யுத்தம் ஆரம்பிக்கும் முன்னரும் யுத்தத்தின் முடிவிலும் தற்போதும் கூட சர்வதேச சக்திகளே முக்கிய பங்குவகிக்கின்றன. இதன் காரணத்தால் எனது படைப்புக்கு அந்நியன் The Stranger எனத் தலைப்பிடுகிறேன்.

**ஓவியம் : நல்லையா சவேசன்**

# மக்கள் ஞானத்தை மேம்படுத்த இயலாது போயின் வெற்றியளிக்காது



பேராசிரியர்
**குமார் டேவிட்**

ஒரு நீண்டகாலத் தீர்வாக யுத்தம் உருவாவதற்கு ஏதுவாயமைந்த காரணங்களை நோக்கி விழிப்பதனை மனதில் நிறுத்தி யுத்த மோதல்களின்போது ஏற்பட்ட பாரதூ ரமான நிகழ்வுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. எல்.எல்.ஆர்.சீ. யோசனைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமை ஆணைக்குழுவின் பிரேரணை ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். எவ்வாறாயினும் இவற்றுள் எந்தவொரு பிரேரணையும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தென்படவில்லை.

மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டேனும் இரு தரப்பினரும் இணங்கியவாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவினால் பிரேரிக்கப்பட்ட எந்தவொரு யோசனையும் நடைமுறைப்படுத்தப்படுவதாக இல்லை. ஆகவே இப்பிரேரணைகளிலிருந்து தற்போதைய அரசாங்கம் தப்பித்துக்கொள்ளும். மிஞ்சிப் போனால் நல்லிணக்கத்திற்காக நாம் இதைச் செய்தோம் எனக்கூறி ஏதேனும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை முன்வைத்து நல்லிணக்கத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதற்கமைய யுத்தக் குற்றம் அல்லது பாரதூரமான மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதெனக் கூறி இராணுவத்தில் உள்ள எவருக்கும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. நாட்டில் தற்போது நிலவும் அரசியல் அதிகார சமநிலைக்கு ஏற்ப ஒருபோதும் அவ்வாறு செய்ய முடியாது. ஒன்றுகூடி கதைக்காதுவிடினும் ஜனாதிபதி சிறிசேனவும் மஹிந்த ராஜபக்ஷ

**தமிழ் தலைமைகளுடனான ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் வழிவில் இது இடம்பெறக்கூடும். இக்கொடுக்கல் வாங்கலுக்கு அமைய யுத்தக் குற்றங்களை மேற்கொண்ட நபர்களை சிறையிடக் கோராமலிருக்குமாறு தெற்கில் உள்ள தலைமைகள் கேட்டுக்கொள்ளக் கூடும். அதற்குப் பதிலாக உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏதேனும் கூடுதலாக வழங்குவதற்கு தெற்கில் உள்ள ஆட்சியாளர்கள் வாக்குறுதியளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பெரும்பாலும் உள்ளது.**

ஆகிய இருவரும் மறைமுகமாக இது தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டிலேயே உள்ளனர். இதனைத் தமிழர் தரப்பும் விளங்கி வைத்துள்ளது.

**சிங்கள மக்களைத் தூண்டிவிடுதல்**

தமிழ் தலைமைகளுடனான ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் வடிவில் இது இடம்பெறக்கூடும். இக்கொடுக்கல் வாங்கலுக்கு அமைய யுத்தக் குற்றங்களை மேற்கொண்ட நபர்களை சிறையிடக் கோராமலிருக்குமாறு தெற்கில் உள்ள தலைமைகள் கேட்டுக்கொள்ளக் கூடும். அதற்குப் பதிலாக உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏதேனும் கூடுதலாக வழங்குவதற்கு தெற்கில் உள்ள ஆட்சியாளர்கள் வாக்குறுதியளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பெரும்பாலும் உள்ளது. வழங்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மேற்கொள்ள முடியுமான ஆகக்கூடியது இதுவென நான் கருதுகின்றேன். தற்போதைய நிலைமையின்கீழ் இதற்கு மேலதிகமான எதனையும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறாயின் இவ் அரசியலமைப்புத் திருத்தத்தை இயலுமான வரை சிறப்பாக மேற்கொள்வதே தமிழ் மக்களின் போராட்டமாக அமைதல் வேண்டும். ஆகக்கூடிய எதிர்பார்ப்பாக இதுவே இருக்க முடியும். ஆயினும் ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்கட்சியின் இனவாத தலையீடு காரணமாக அதுவும் வெற்றியளிக்குமென தெளிவாகக் கூறமுடியாது. உதாரணமாக நான் கூறுவதென்னவென்றால் ஒற்றையாட்சி எனும் பதம் கட்டாயமாக அரசியலமைப்பில் காணப்படும். அதற்கமைய அதனைப் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்க வேண்டி ஏற்படும். இச் சந்தர்ப்பத்தில் அதனை எவ்வகையிலும் நீக்கிவிட முடியாது. அது நீக்கப்படுமிடத்து தெற்கிலுள்ள சிங்கள மக்களை திசைதிருப்பி குழப்பம் விளைவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை மஹிந்த ராஜபக்ஷ தரப்பிற்கு வழங்கும். மற்றைய விடயமான அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பௌத்த மதத்தைப் பாதுகாத்து போஷித்தல் எனும் பிரிவு அதாவது அரசியலமைப்பில் உள்ள மதரீதியான தன்மை அவ்வாறே மாற்றமின்றிக் காணப்படும். இவை நீக்கப்படுமிடத்து: நாட்டில் குழப்பம் ஏற்பட இடமுண்டு. இவை சொற்பதமாக அரசியலமைப்பில் இருப்பதனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள இடமுண்டு என நான் கருதுகிறேன். அத்துடன் அதிகாரப்பகிர்வு எனும் சொல் உள்ளடக்கப்படலாம். அது உண்மையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கக் கூடுமானாலும் அவ்வந்த மாகாணங்களின் சிறுபான்மையினருக்கு வழங்கும் உரிமைகளை வழங்குவோம் எனும் நிலைக்கு சிங்கள மக்களைக் கொண்டுவர முடியுமாயின் அதுவே ஓரளவு முற்போக்கான ஒரு படிமுறையாக அமையக்கூடும். இவை நான் விரும்பும் அல்லது விரும்பாதவைகள் அன்றி உண்மையிலேயே இடம்பெறக் கூடியவைகள் ஆகும்.

**இனவாதிகளைக் கட்டுப்படுத்தல்**

கோட்பாட்டு ரீதியான விளக்கத்திற்கு மேலதிகமாக நடைமுறையில் வடக்கு உள்ளடங்களாக அதிகாரப் பகிர்வு தோல்வியடைந்துள்ளது. இது வெறுமனே அதிகாரப் பகிர்வு தொடர்பான எண்ணக்கருவின் தவறால் ஏற்பட்டதொன்றல்ல. தெற்கின் ஆட்சியாளர்கள் அதனை வெள்ளை யானையாக மாற்றியது மட்டுமன்றி சிறுபான்மையினர், விசேடமாக வடக்கின் தலைவர்கள் இதிலிருந்து பயன்பெறாததால் ஏற்பட்ட ஒரு நிலைமையே இதுவாகும். அனைத்தும் அளவுக்கு அதிகமாக பாரதூரமான விதத்தில் அரசியல்மயப்படுத்தப்பட்டமையே இதற்கான காரணமாகும். வடமாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 80% செலவு செய்யப்படாது மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இம் மாகாண சபையில் இரண்டு அல்லது மூன்று நியதிச்சட்டங்கள் மட்டுமே





ibctamil.com

யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியச் சபையின் உறுப்பினர்கள் சிலர்


அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிகாரப் பகிர்வு வெற்றியளிக்கவில்லை எனக் கூறுவதற்கு தெற்கில் மாத்திரமன்றி வடக்கிலுள்ள இனவாதிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என விரும்பியோ விரும்பாமலோ கூறவேண்டியுள்ளது. ஆயினும் இந்தியாவில் பிரதேச அரசாங்கங்கள் வெற்றியளித்துள்ளது. இலங்கையிலும் அவ்வாறு தெளிவானதொரு அதிகாரப் பகிர்வு காணப்படின் இந்தியாவைப் போன்று வெற்றியளிப்பதற்கான சாத்தியம் உள்ளது. ஆயினும் தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிலிருந்து உச்ச பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வகையில் நோக்கும்போது அதிகாரப் பகிர்வு மூலம் வடக்கைவிட கிழக்கு மாகாணசபை இதனைப் பயன்படுத்தியுள்ளது. தெற்கைப் போன்று வடக்கிலுள்ள ஒட்டுமொத்த மக்கள் இனவாதிகள் அல்லாதபோதும் தெற்கில் இனவாதப் போக்கு உள்ளதைப் போன்றே வடக்கிலும் இனவாதப் போக்கு காணப்படுகின்றது. இவ்விரண்டு போக்குகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தடையாக இருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியலமைப்பு உருவாக்கம், அதிகாரப் பகிர்வு, நிதிவசதிகளை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொண்டபோதும் மக்களின் அறிவு சம்பந்தமான ஒரு பிரச்சினை காணப்படுகின்றபோது அது வெற்றியளிக்கும் எனக் கூறமுடியாது. ஆகவே, கூடுதலான ஒரு சுமையை மக்களின் அறிவுமட்டத்தை மேம்படுத்துவதற்காக ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இதற்காக அமைச்சர் மனோ கணேசனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரசகரும மொழிகள் மற்றும் தேசிய கலந்துரையாடல் அமைச்சுக்கு பாரிய ஒரு பணியினை மேற்கொள்ள முடியும். இதுபற்றி நான் பல விடயங்களை எழுதியுள்ளேன். அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார அவர்களது பதவிக்காலம் போன்று வெற்றியளிக்காத ஓர் அமைச்சாக மாற்ற வேண்டாம் என வலியுறுத்தியுள்ளேன். வாசுதேவ நாணாயக்காரவுக்கு அமைச்சராக வர முடிந்ததேயொழிய அதிலிருந்து எதிர்பார்த்த எதுவும் இடம்பெறவில்லை. மக்களின் அறிவுமட்டத்தை மேம்படுத்துவதற்காக பாரிய ஒரு பணியினை அமைச்சர் மனோ கணேசனால் ஆற்றமுடியும்.

**இம் மாகாண சபையில் இரண்டு அல்லது மூன்று நியதிச்சட்டங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிகாரப் பகிர்வு வெற்றியளிக்கவில்லை எனக் கூறுவதற்கு தெற்கில் மாத்திரமன்றி வடக்கிலுள்ள இனவாதிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என விரும்பியோ விரும்பாமலோ கூறவேண்டியுள்ளது.**



www.adaderana.lk



www.youtube.com

**கோட்பாட்டு ரீதியான விளக்கத்திற்கு மேலதிகமாக நடைமுறையில் வடக்கு உள்ளடங்களாக அதிகாரப் பகிர்வு தோல்வியடைந்துள்ளது. இது வெறுமனே அதிகாரப் பகிர்வு தொடர்பான எண்ணக்கருவின் தவறால் ஏற்பட்டதொன்றல்ல. தெற்கின் ஆட்சியாளர்கள் அதனை வெள்ளை யானையாக மாற்றியது மட்டுமன்றி சிறுபான்மையினர், விசேடமாக வடக்கின் தலைவர்கள் இதிலிருந்து பயன்பெறாததால் ஏற்பட்ட ஒரு நிலைமையே இதுவாகும்.**

பாடசாலைகளில் உயர் வகுப்புக்களில் உள்ள மாணவர்களையும், ஆசிரியர்களையும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்க முடியும். இங்கு தேசிய பிரச்சினை, அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவம், மனித உரிமைகள் என்பனபற்றி கலந்துரையாட முடியும். இதற்கு மேலதிகமாக ஜனாதிபதியின் அனுமதியுடன் இராணுவத்திலும், பொலிஸிலும் இவ் விழிப்புணர்வுக்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடியும். இதற்காக ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறமுடியும் என நான் கருதுகிறேன்.

**அரசாங்கத் தலையீடு**

இராணுவம் அரசியலமைப்பை மதிக்க வேண்டுமென ஜனாதிபதிக்கு கூறமுடியும். ஏனைய நாடுகளில் இராணுவத்தினருக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கப்படுவது பற்றி இங்கு குறிப்பிடல் வேண்டும். இராணுவம் என்பது மக்களின் சேவகனே ஒழிய எஜமான் அல்ல என்பது இராணுவத்திற்கு உணர்த்த வேண்டியுள்ளது. இராணுவம் சிவில் அரசாங்கத்தின்கீழ் பணியாற்றுதல் வேண்டும். இது தொடர்பாக இராணுவத்திற்கு விளக்கமளிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு அரசியல் ரீதியான தத்துவங்கள் பற்றி இராணுவத்திற்கு விளக்க வேண்டியுள்ளது. மறுபுறத்தில் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட சிவில் அமைப்புக்கள் கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு அறிவூட்டுவதற்கு தேசிய கலந்துரையாடல் அமைச்சு மட்டுமன்றி அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் முடியும். மதத் தலைவர்களுக்கும் பாரியதொரு பணியினை மேற்கொள்ள முடியும். மக்கள் மத்தியில் அறிவினை விருத்தி செய்வதற்காக இவ்வாறான ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து தலைமை வகிக்கும் பட்சத்தில் இதனை ஒருங்கிணைப்பது இலகுவானதாக அமையும். அரசாங்கம் இதில் தலையிடாத பட்சத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களும் சிவில் அமைப்புக்களும் இவ்வாறு செயற்படும்போது அரசாங்கத்திற்கும், அரச பொறிமுறையினுள் அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தூண்டுதலாக அமையும். அரசியலமைப்பு திருத்தம் பற்றிய கலந்துரையாடல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வரையறைகள் காரணமாக கீழ் மட்டத்தில் பாரியதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

மறுபுறத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளவர்களது காணிகளை மீள ஒப்படைத்தல் மாத்திரமன்றி

**மறுபுறத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளவர்களது காணிகளை மீள ஒப்படைத்தல் மாத்திரமன்றி வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் அவர்களது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு உதவுதல் போன்றன தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்போது பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவது தெரிய வந்துள்ளது.**

வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் அவர்களது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு உதவுதல் போன்றன தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்போது பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவது தெரிய வந்துள்ளது. இது எவ்வளவு தூரம் உண்மையானது என எனக்குத் தெரியாது. எவ்வாறாயினும் தற்போதைய அரசாங்கம் ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஓர் ஆட்சி என்பதனால் அவற்றைத் தடுப்பது ஆட்சியாளர்களது கடமையாகும்.

இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகள் உண்மையிலேயே சிங்கள இனவாதிகளின் தேவைகளுக்கு அல்லது தமிழர்கள் பற்றிய உறுதியான சந்தேகத்தினால் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதுடன் பொருளாதார ரீதியான பயன்பாட்டுக்கே அது உதவுகிறது. என நான் எண்ணுகிறேன். அவர்கள் நிர்மாணித்துள்ள சுற்றுலா விடுதிகள் போன்றவை ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் போன்றவையா. திருகோணமலைக்கு சொந்தமான மாபல் பீச் போன்று காங்கேசன்துறைக்குச் சென்றால் அனைவரும் இதனைக் கண்டு கொள்ளலாம். இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் உல்லாசமாக இருக்கக் கூடியவாறு அவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வுத்தியோகத்தர்கள் தமது விடுமுறைகளைக் கழிப்பதற்கும், ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்கும் இவை பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இதற்கு மேலதிகமாக மத்திம மட்ட வருமானம் உழைக்கும் வழிவகைளும் இவ்வுத்தியோகத்தர்களுக்குக் கிடைத்துள்ளது. கீழ் மட்டத்திலுள்ள படைவீரர்களும் இதன்மூலம் நன்மை அடைகின்றனர். ஆகவே தமிழ் மக்கள் மீதுள்ள சந்தேகத்தை ராஜபக்ஷமார்கள் நிதமும் கிளப்புவதுடன் பாதுகாப்பு பிரிவுகளிலுள்ள உயர் அதிகாரிகள் திறம்பட வருமானம் ஈட்டுவதற்கும் சுகபோக வாழ்வினை அனுபவிப்பதற்குமான வாய்ப்பு என்பன ஒன்றோடொன்று பொருந்தி பயணிக்கின்றது.

இக் காணிகளைப் பெற்று அதன் உரிமையாளர்களுக்கு வழங்குதல் பண்பாட்டு ரீதியாக அத்தியாவசியமானதாகும். மேலே சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் காரணமாக இதனை மேற்கொள்வது சற்று சிரமமாக உள்ளது. ஜனவரி 8ம் திகதி மக்கள் ஏதோ ஒரு வகையான வெற்றியை அடைந்தபோதும் இராணுவத்தைத் தனது அரசியல் நோக்கத்திற்கு பொருத்தமானவாறு முகாமை செய்வதற்கு அரசாங்கத்தால் இதுவரையில் முடியவில்லை எனத் தெரிகிறது. அது எதிர்ப்புரட்சி வரை மறுபுறமீ திரும்பி பயணம் செய்வதற்கான வாய்ப்புக்கள் இன்னமும் நீங்கவில்லை. இனக் கலவரங்களின்போதே அது மேலும் மோசமான நிலைமை வரை விருத்தியடைகிறது. அவ்வாறான ஒரு நிலைமையினை ராஜபக்ஷ தரப்பினர் உருவாக்குவார்களாயின் இராணுவத்தினரை வீதியில் இறக்க முடியாது. ஏனெனில் அவர்கள் இதை எத்திசையில் கொண்டு செல்வார்கள் என்பது சந்தேகமாகவுள்ளது. இன்னமும் கோதாபயவின் ஆதிக்கம் இராணுவத்தில் உள்ளமை மிகத் தெளிவாகும். அவ்வாறு இடம்பெறுமாயின் துப்பாக்கிப் பலம் ராஜபக்ஷக்களின் கைகளுக்கு செல்வதற்கான வாய்ப்பு உண்டு. இதன் காரணமாகவே

**நான் அவரை விரும்பாத போதும் சரத் பொன்சேகாவை அரசாங்கத்திற்குள் வரவழைத்ததை நான் அங்கீகரிக்கிறேன். கோதாபயவின் பயமுறுத்தலுக்கு சவால் விடுக்க அவரால் மாத்திரமே முடியும். இராணுவத்திற்குள் இதைச் செய்வதற்கு வேறு ஒருவரும் இல்லையென நான் நினைக்கிறேன். பொன்சேகாவிற்கு பாதுகாப்புப் பிரதியமைச்சர் பதவியை ஒப்படைப்பதற்கு இதுவரை முடியாமல் போயுள்ளபோதும் எதிர்புரட்சியை முன்னெடுக்கும் நிலைமை உருவாகும்பட்சத்தில் கட்டாயம் அவருக்கு ஒரு பாத்திரத்தை வகிக்க முடியும்.**

இராணுவத்தை அரசியலமைப்புக்கு மதிப்பளிக்கும் நிலைமைக்கு கொண்டுவர வேண்டும் எனக் கூறினேன்.

நான் அவரை விரும்பாத போதும் சரத் பொன்சேகாவை அரசாங்கத்திற்குள் வரவழைத்ததை நான் அங்கீகரிக்கிறேன். கோதாபயவின் பயமுறுத்தலுக்கு சவால் விடுக்க அவரால் மாத்திரமே முடியும். இராணுவத்திற்குள் இதைச் செய்வதற்கு வேறு ஒருவரும் இல்லையென நான் நினைக்கிறேன். பொன்சேகாவிற்கு பாதுகாப்புப் பிரதியமைச்சர் பதவியை ஒப்படைப்பதற்கு இதுவரை முடியாமல் போயுள்ளபோதும் எதிர்ப்புரட்சியை முன்னெடுக்கும் நிலைமை உருவாகும்பட்சத்தில் கட்டாயம் அவருக்கும் ஒரு பாத்திரத்தை வகிக்க முடியும். இந்நிலைமையை எதிர்கொள்வதற்கான தேவை உணரப்பட்டதனாலேயே ரணில் அவரைக்கொண்டு வந்திருக்கக் கூடும். இவ்வாறான தந்திரோபாயங்கள் மூலம் இராணுவத்தை அரசாங்கத்திற்குத் தேவையானவாறு வழிநடாத்த வேண்டியது மட்டுமன்றி அவ்வாறு வழிநடாத்துமாறு பலவந்தப்படுத்துதல் வேண்டும். அரசியல் வேலைகளில் தடை உண்டுபண்ணாதவாறு இராணுவத்தை மாற்றியமைத்தல் போதுமானதாகும். அவ்வாறு இடம்பெறுமாயின் இனவாதிகள் வீதியில் இறங்கும் பட்சத்தில் ஜனநாயக சக்திகளினால் இனவாத சக்திகளைத் தோற்கடிக்க முடியும். ஆயினும் அதற்காக மக்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். இவ்வாறு செய்யக்கூடிய அரசியல்வாதிகள் எவ்வளவு எண்ணிக்கையானோர் அரசாங்கத்தில் உள்ளார்கள் என எனக்குத் தெரியாது. பிரேமதாச ஜனாதிபதியைப் போன்றே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க செய்ததைப் போன்று இவ் அரசாங்கம் மக்களை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

மறுபுறத்தில் சிவில் அமைப்புக்களின் தலைகளில் இவ்வாறான ஒன்று உள்ளதாகத் தெரியவில்லை. இவ்வாறு மக்களை ஒழுங்கமைத்து வீதியில் இறக்குவதால் மாத்திரமே எதிர்ப்புரட்சியை தோற்கடிக்க முடியும். துரதிர்ஷடவசமாக பொறுப்பு வாய்ந்த ஜனநாயக ரீதியான தலைவர்களது அறிவுக்கு இவ்வாறான ஒன்று இதுவரை அகப்படவில்லை. தற்போது இடம்பெற்றுவரும் சம்பவங்களைப் பார்க்கும்போது இவ்வாறான ஒன்று தேவைப்பட்டுள்ளது. அண்மையில் குடிவரவு குடியகழ்வு அலுவலகத்திற்குச் சென்று தாக்குதல் நடாத்துவதை விடுத்து முன்னர் கூறியது போன்று இனவாதத்திற்கு எதிராக மக்களை ஒழுங்கமைத்தல் வேண்டும்

கலவர நிலைமைகள் இன்றி சூழ்ச்சி செய்ய முடியாது. அரசியலமைப்புத் திருத்தத்தின்போது அல்லது போர்க் குற்றங்களை விசாரித்தல் போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது ராஜபக்ஷவை சிறையில் இடும்பட்சத்தில் இவ்வாறான ஒரு நிலைமையின்கீழ் ஏதேனும் கலவரம் விளைவிக்கலாம். இவ்வாறு இடம்பெறுமாயின் நேரடியாகவே அது இனவாதம் நோக்கி திசை திருப்பப்படும். இது தொடர்பாகவும் சிந்தித்து மக்களிடையே முன் ஆயத்தத்தை ஏற்படுத்துதல் மிக முக்கியமானதாகும்.



தமிழ் நண்பர் ஒருவரின் அனுபவங்களை இந்த ஓவியத்தில் எடுத்துக்காட்ட முனைந்தேன். யுத்தம் நடைபெற்ற காலத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கிய இளம் தாய் ஒருவர் தொடர்பானது. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான தாயிடமிருந்து பால் குடித்துக்கொண்டிருக்கும் குழந்தையினுடையது.

இரண்டும் ஒற்றுமை கொண்டவை. தாய் அன்புக்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல். தாய் பாசத்திற்கு தாக்குதல் மேற்கொள்ளப்படுமாயின் அது மனித நேயத்திற்கு மேற்கொள்ளப்படும் தாக்குதல் ஆகும். வன்முறையின் உச்சகட்ட அடையாளமாகும்.

**ஓவியம் : மாலிக்கா சஞ்சீவனி**

# தீர்க்கமான சில நகர்வுகளை முன்னெடுத்தாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மந்தகதியிலேயே உள்ளன.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுடனான நேர்காணல்:**

**நல்லிணக்கத்திற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னுரிமைகள் யாவை?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் தேசியப் பிரச்சினை தொடர்பில் அரசியலமைப்பு ரீதியான ஒரு தீர்வினைக் காணுதல் நல்லிணக்கத்திற்கு இன்றியமையாத ஒன்றாகக் கருதுகிறது. சீரிய நிலைக்கான நகர்வு ஒன்றுக்கு அவசியமான தொடரறுநிலை உள்ளதை சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளதைப் போலவே, காலம் தாழ்த்தாது இந்த அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் செயற்பட வேண்டுமென்ற விடயமும் உணர்த்தப்படுகிறது. தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றுள்ள மீறல்களுக்காக உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பன முக்கியத்துவமற்றன என நான் கருதவில்லை. அவையும் முக்கியம்தான். எது எவ்வாறிருப்பினும், குறித்த ஒரு கால வரம்பினுள் 'ஒருவரின் எதிர்காலத்தை'ப் பாதுகாத்தல் நடந்தவற்றை திரும்பிப் பார்ப்பதற்கு முன்னதாக நடைபெற வேண்டும். இது மட்டுமே ஒருவரின் எதிர்காலம் தொடர்பில் பயனுள்ள நடவடிக்கையாக அமைய முடியும்.

**இந்த அரசாங்கம் நிலைமாற்று நீதி தொடர்பான பிரச்சினைகளை அணுகும்பொருட்டு**

daily mirror.lk



**மகிழ்ச்சி தரக்கூடிய நகர்வுகளை முன்னெடுத்துள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா? அரசாங்கத்தின் நடவடிக்கைகள் முன்னேற்றகரமானவையாக உள்ளனவா? தயவுசெய்து உதாரணத்துடன் விளக்குங்கள்.**

தற்போதைய அரசாங்கம் வடக்கு, கிழக்கில் காணிகளை விடுவித்தல் உட்பட முக்கியமான துறைகள் சம்பந்தமான சில தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், இவ்வாறான சில விடயங்களில் கண்டுள்ள முன்னேற்றம் கவலை தருமளவுக்கு ஆமை வேகத்திலேயே உள்ளன. உண்மையைக் கண்டறிவதில் ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. பரணகம ஆணைக்குழு தொடர்ந்தும் இயங்கியதன் மூலம் நிலைமையை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

**ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதான வகிபாகத்தை ஏற்றிருந்தது. அதன் முடிவு குறித்து மகிழ்ச்சியாக உள்ளீர்களா? தீர்மானத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என நம்புகிறீர்களா? நடைமுறைப்படுத்தல் தொடர்பான உறுதிமொழிகள் எவை?**

இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டுள்ள இணைந்த தீர்மானம் தொடர்பாக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இங்கு இந்தத் தீர்மானத்தைத் தனதாக்கிக்கொண்ட இலங்கை அதிலுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் முழுமையாக நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தது. இது நிறைவேறாவிட்டால் இத்தீர்மானம் வலுவான ஒன்றாக அமைந்தாலும் அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பும் கடப்பாடும் இல்லாதவொன்றாக மாறியிருக்கலாம். பல்வேறு காரணங்களினால் நடைமுறைப்படுத்துவது கடினமென அரசாங்கம் கூறிக்கொள்ளும் சில விடயங்கள் இருந்தாலும்கூட, தீர்மானத்திலுள்ள வாக்குறுதிகளில் அநேகமானவை நிறைவேற்றப்படுமென எண்ணியுள்ளோம். அதேநேரம் சட்டத் தொழிற்பாட்டு பொறிமுறையில் வெளிநாட்டவர்களின் பங்கேற்புப் பற்றிய விடயம் பாரதூரமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

**பாதுகாப்புத்துறையில் மறுசீரமைப்பு என்பது கடினமான ஒரு பணியாகவே அறியப்படுகிறது. எவ்வாறாயினும், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மட்டுமல்ல, கடந்துபோன கசப்பான வரலாறு எதிர்காலத்தில் மீளுருவாக்கம் செய்யப்படமாட்டாதென்பதை தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்கும் இது மிகவும் முக்கியமானது.**

நிலைமாறு காலத்தில் பாதுகாப்புத்துறையில் மறுசீரமைப்பு என்பது கடினமான ஒரு பணியாகவே அறியப்படுகிறது. எவ்வாறாயினும், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மட்டுமல்ல, கடந்துபோன கசப்பான வரலாறு எதிர்காலத்தில் மீளுருவாக்கம் செய்யப்படமாட்டாதென்பதை தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்கும் இது மிகவும் முக்கியமானது.

**இத்தீர்மானம் 'பொதுநலவாய மற்றும் பிற வெளிநாட்டு நீதிபதிகள், எதிர்த்தரப்புச் சட்டத்தரணிகள், அதிகாரம்பெற்ற குற்றப்பகர்வாளர்கள் மற்றும் ஆய்வாளர்'கள் பங்கேற்கும் சிறப்பு சட்ட ஆலோசகரைக் கொண்ட விசேட நீதிமன்றம் ஒன்றுக்குக் களம் அமைத்துள்ளது. இலங்கையில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்களா? இலங்கையில் அவ்வாறான ஒரு பொறிமுறையில் வெளிநாட்டவர்களுக்கு பணியாற்ற முடியுமா? நீதித்துறையும் அதில் சகோதரத்துவமும் உள்ள ஒரு சூழ்நிலைமையில் அது அவசியமா?**

இலங்கையில் கலப்பு நீதிமன்றத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமல்ல, அது அவசிய தேவையும்கூட. எமது சட்டப் பொறிமுறையில் வெளிநாட்டவர்கள் பணியாற்றியுள்ளார்கள். வெளிநாட்டு நடுத்தீர்ப்பாளர்கள் மிகவும் பயனுள்ள வகிபாகத்தை ஏற்பது மட்டுமன்றி அவர்களால் அதைச் செய்யவும் முடியும். இதுவரை இருந்த முற்றிலுமான தேசிய பொறிமுறை மிக நீண்ட காலமாக நீதியை இழக்கச் செய்துள்ள பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் படிப்படியாக வெல்வதற்கு இது அவசியமாகிறது.

**மேலும், உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் காணாமல் போனவர்கள் தொடர்பாக கருமமாற்றுவதற்கான அலுவலகம் ஒன்றுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு விடயங்களும் நிலைமாற்று நீதியில் தகவல்களைத் தெரிந்துகொள்ளும் உரிமை பற்றிய அம்சத்தில் அடங்குவனவாகும். ஏற்கெனவே, எமது நாட்டில் பல ஆணைக்குழுக்கள் இயங்கி வந்துள்ளன. இருப்பினும், அவை பாதிக்கப்பட்டவர்கள் உண்மையைக் கண்டறிவதற்கு வழிவகுக்கவில்லை. இவற்றில் வேறுபாடுகள் இருப்பதற்கு காரணம் என்ன? எமது நாட்டுக்கு இவை தேவையெனக் கருதுகிறீர்களா? இவை சுயாதீனமாக இயங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதில் வெற்றி பெறுமா?**

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு அதன் கருமங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் மெய்யாகவே உண்மையைக் கண்டறிவதற்கும் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினதும் (முஉஊஉசு) பிற அமைப்புகளினதும் வலுவான தொழில்நுட்ப ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும். இருசாராரும் ஆழ அகலம் பாராது குற்றத்தின் தவறு வெளிப்படுமிடத்து சுயாதீனமாக செயற்படுவதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிக்க முடியுமென்பதையும் கூறமுடியும்.

**இலங்கையில் காணாமல்போனவர்களும் இல்லாமல் போனவர்களும் குறிப்பிடத்தக்களவில் உள்ளனர். இலங்கை பலவந்த அல்லது காணாமல்போதல் தொடர்பான விடயத்தில் இரண்டாவதாக அதிகூடிய காணாமல்போனவர்களைக்கொண்ட நாடாக இருப்பதுடன், அரசாங்கம் 2016 பெப்ரவரி தொடக்கம் கால நீடிப்புச் செய்த பரணகம ஆணைக்குழுவில் செய்யப்பபட்ட 24,000 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் உள்ளன. இல்லாமல் போனவர்கள்.:. காணாமல் போனவர்கள் பற்றிய சம்பவங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு எவ்வாறானது?**

இந்த விடயத்தில் ஆக்கபூர்வமாகவும் துரிதமாகவும் செயற்படுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் மீண்டும் வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து நாங்கள் கடந்த மாதம் இவ்விடயம் தொடர்பாகவும் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு நேர பிரேரணை ஒன்றை வலியுறுத்தியிருந்தோம். அதேநேரம் அரசாங்கம் எதிர்காலத்தில் கொண்டுவரவுள்ள பல்வேறு பொறிமுறைகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம்.

**இழப்பீட்டுக்கான அலுவலகமொன்றை அமைத்தல் அடங்கலாக இழப்பீடு வழங்குதல் பற்றிய பிரச்சினையை**



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் விழாவொன்றின் போது

**அணுகுதல் ஏற்றுக்கொள்ளும் ஒரு போக்காக மாறியுள்ளது. இழப்பீடு தொடர்பில் என்ன செய்ய வேண்டுமென நினைக்கிறீர்கள்? அரசாங்கம் இப்பிரச்சினையை பயனுள்ள விதத்தில் அணுகும் எனக் கருதுகிறீர்களா?**

இந்த விடயத்தில் பல்வேறு விடயங்களுடன் தொடர்புடையதாக உண்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும்போது பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக அரசாங்கம் நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர்களின் இழப்புகளுக்கு அரசாங்கத்தின் மீது நேரடியாக குற்றம் சுமத்த முடியாது என்பதுமான இருவேறு வகையில் அவதானிக்க முடியும். அரசாங்கம்தம் தவறை ஏற்றுக்கொள்ளும் வகையில் இழப்பீடு செலுத்துதல் முதலாவது வகையாகும். இரண்டாவது வகை, எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாக அரசாங்கம் பொறுப்பேற்கும் அடிப்படையில் இழப்பீடு வழங்குதல்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்டரீதியான உரிமையாளர்களுக்கு காணிகளை வழங்குமாறு கோரியுள்ளது. வடக்கு, கிழக்கில் சில காணிகள் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், ஆயிரக் கணக்கானோர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர். காணிக் கையளிப்பில் ஏன் தாமதம் ஏற்பட்டுள்ளது? சகல காணிகளையும் சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டுமென நினைக்கிறீர்களா?**

2015 – 2016 காலப் பகுதியில் சம்பூர் மற்றும் யாழ்ப்பாணத்தின் சில பிரதேசங்களில் சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு காணிகள் மீளக் கையளிக்கப்பட்டமை மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முக்கியமான ஒரு நகர்வு என்பதை நாங்கள் வரவேற்கின்றோம். இருப்பினும், சட்டரீதியான உரிமையாளர்களுக்கு ஏனைய தனிப்பட்ட காணிகளை வழங்குவதற்கு பல விடயங்களை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. காணிகளை மீளக் கையளிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு அரசியல் ரீதியான காரணங்களை விடவும் இராணுவம் வெளியேறத் தயக்கம் காட்டுவதும் காரணமாக அமையலாம். இப்பிரச்சினை குறித்து உடனடியாக கவனம் செலுத்த வேண்டியதுடன், சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் "சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு காணிகள் மீளக் கையளிக்கப்படும்" என்ற தேர்தல் வாக்குறுதியின்படி அரசாங்கம் அதை நிறைவேற்ற வேண்டும்.

**அரசாங்கம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தையும் பிற பாதுகாப்புச் சட்டங்களையும் ஆய்வு செய்யவும் நீக்கவும் வாக்குறுதியளித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுசீரமைப்புகளில் பங்கெடுக்குமா? இந்த நடவடிக்கை எந்தளவுக்கு முக்கியமானது?**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது மிகவும் முக்கியமானது. இச்சட்டம் 30 வருடங்களுக்கும் மேலாக பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, இதனை வேறு ஒரு சட்டத்தின் வடிவில் கொண்டுவர முற்படும்போது அச்சட்டத்திலுள்ள பாரதூரமான ஏற்பாடுகள் எதுவும் உள்ளடக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நாங்கள் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றாக இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைத்துக்கொண்டுள்ள இந்த அரசியல் சூழமைவில் நிறுவன ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அந்த வாய்ப்பினைத்

**இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றாக இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைத்துக்கொண்டுள்ள இந்த அரசியல் சூழமைவில் நிறுவன ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அந்த வாய்ப்பினைத் தவறவிடக்கூடாது. நிறைவேற்று மற்றும் சட்டவாக்க மறுசீரமைப்புத் தவிர்ந்த நீதித்துறையில் காத்திரமான மறுசீரமைப்பு அவசியமாகிறது.**

தவறவிடக்கூடாது. நிறைவேற்று மற்றும் சட்டவாக்க மறுசீரமைப்புத் தவிர்ந்த நீதித்துறையில் காத்திரமான மறுசீரமைப்பு அவசியமாகிறது.

**ஜெனிவா தீர்மானத்தில் பாதுகாப்புத்துறை மறுசீரமைக்கப்பட வேண்டுமெனவும் முன்மொழியப்பட்டுள்ளது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன? இது அவசியமான ஒன்றா? இதன் மூலம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை பிறக்குமா?**

நிலைமாறு காலத்தில் பாதுகாப்புத்துறையில் மறுசீரமைப்பு என்பது கடினமான ஒரு பணியாகவே அறியப்படுகிறது. எவ்வாறாயினும், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மட்டுமல்ல, கடந்துபோன கசப்பான வரலாறு எதிர்காலத்தில் மீளுருவாக்கம் செய்யப்படமாட்டாதென்பதை தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்கும் இது மிகவும் முக்கியமானது.

**உண்மையைக் கண்டறிவதும் குற்றவாளிகளை பொறுப்புகூற வைப்பதும் நல்லிணக்கத்திற்குப் பலமாக அமைகிறது. இன்றேல், தடையாக அமைகிறது எனக் கருதுகிறீர்களா? இது மக்களை மேலும் நிலைகுலையச் செய்து துருவமயப்படுத்துவதாக அமைவதில்லையா?**

இந்த விடயம் உண்மையாகவே அனைத்து சமூகங்களுக்கும் வேதனை தருவதாக அமைந்தாலும் உண்மையைக் கண்டறிவதும் தவறாளிகளை பொறுப்புக்கூற வைத்தலும் நல்லிணக்கத்திற்குத் தடையாக அமையப்போவதில்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் தட்டிக்கழித்தோமானால், நல்லிணக்கத்திற்கான வாய்ப்பு உருவாகாது. குற்றங்களுக்கான தவறாளிகள் மட்டுமின்றி, நாம் அனைவரும் உண்மையாகவே பொறுப்பேற்க வேண்டும். எனவே, அளிக்கப்படும் தண்டனைகள் இவற்றை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

**விசாரணைகளுக்கு உதவ முன்வரும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியாளர்களுக்குமான பாதுகாப்பு போதுமானதெனக் கருதுகிறீர்களா? கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் அச்சுறுத்தல்களும் கெடுபிடிகளும் இருந்துள்ளன. இதனை திருப்தியான ஒரு நிலைக்கு இட்டுச்செல்ல முடியுமா? பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத ஒரு தேசிய பொறிமுறைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்குமா?**

இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் தீவிரமான பக்கச்சார்பின்மை, செயலூக்கம் மற்றும் அர்ப்பணிப்புணர்வு இருந்தால் மட்டுமே பாதுகாப்புச் சட்டகம் செயற்படும். தற்போதைய சூழ்நிலையில் பல விடயங்கள் பற்றிப் பேசவேண்டியுள்ளது. அதேபோல் முக்கியமான பிரச்சினைகள் வெளிப்படும்போது அவை பற்றியும் பேசுவோம்.

**நல்லிணக்கத்திற்குத் தேவையான நிறுவன ரீதியான மறுசீரமைப்புகள் எவை? தற்போதைய அரசியல் சூழமைவில் அவற்றைச் சாதிக்க முடியுமென நினைக்கின்றீர்களா?**


இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றாக இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைத்துக்கொண்டுள்ள இந்த அரசியல் சூழமைவில் நிறுவன ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அந்த வாய்ப்பினைத் தவறவிடக்கூடாது. நிறைவேற்று மற்றும் சட்டவாக்க மறுசீரமைப்புத் தவிர்ந்த நீதித்துறையில் காத்திரமான மறுசீரமைப்பு அவசியமாகிறது.

**அரசியலமைப்பு மீதான மறுசீரமைப்புகளில் தமிழ் மக்களை கிரமமாக பாரபட்சமாக நடாத்துதல் தொடர்பாக திட்டவட்டமான ஒரு தீர்வுக்கு வர முடியுமென நம்புகிறீர்களா? எதை நம்புகிறீர்கள்? எவ்வாறு?**

நாட்டில் பிரசைகளுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளும் சமூக ரீதியான உடன்படிக்கை அரசியலமைப்பு என அறியப்படுகிறது. நாம் ஓர் அலகாக வாழ்வதற்கு உடன்படுவதன் மூலமே அதன் காத்திரத்தன்மை வெளிப்படும். எமது நாட்டின் இரண்டு 'குடியரசு' அரசியலமைப்புகளும் தமிழர்களை முற்றிலும் கைவிட்டுள்ளன. இந்த நிலைமையை சீர்செய்ய வேண்டுமானால், அந்தச் சட்டங்களுக்கு மீண்டும் அர்த்தம் கற்பித்து அன்னியோன்னியமாக உடன்படக்கூடிய சமூக ரீதியான உடன்படிக்கை ஒன்றுக்குச் செல்ல வேண்டுமானால் பாரபட்சமாக நடத்தப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான எல்லா வழிகளிலும் வாய்ப்பு உள்ளதென்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**ஆர்ஜன்தீனா, காம்போடியா, ருவாண்டா, சியராலியோன் போன்ற யுத்தத்தையும் வன்முறைகளையும் சந்தித்த பல நாடுகள் நிலைமாற்ற நீதி தொடர்பான பிரச்சினைகளை அணுகுவதற்கு பல தசாப்தங்களாகக் காத்திருந்தன. ஒருசில நாடுகள் இதுவரையும் அச்செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இலங்கையில் குறுகிய எதிர்காலத்தில் உண்மையான மற்றும் நம்பிக்கையானதும் சுயாதீனமானதுமான பொறிமுறையொன்றையும் காண முடியுமென நீங்கள் நம்புகிறீர்களா? எமது நாடும் நாட்டவர்களும் உண்மை, நீதி ஆகியவற்றை அடையும் செயற்பாட்டில் நின்றுபிடிப்பதற்கு தேவையாக அமைவது என்ன?**

என்னால் இதுதான் நடக்குமென்று கட்டியம் கூறமுடியாது! உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்பதை என்னால் கூறமுடியும். இறுதி வெற்றிக்குத் தேவையான பல காரணிகள் உள்ளன என்பதைக் கூறமுடியும்.



குற்றமிழைத்தலுக்கான நீதி என்றில்லாமல் கடமையின் நிமித்தம் வழங்கப்படுகின்ற நீதியாகவே எமது நாட்டின் நீதித் தன்மை காணப்படுகின்றது. குற்றமிழைத்தவர் குற்றவாளி என அடையாளப்படுத்தப்பட்டாலும் அவர் சந்தேகநபராகவே கருதப்பட்டு காலம் கடத்தப்படும் நிலை, இதன் காரணமாக நீதியின் நம்பகத் தன்மை சீர்குலைக்கப்படுகின்றது. குற்றவாளி நீதியின் முன் நிறுத்தப்பட்டாலும் சாட்சியங்களே நீதியினைத் தீர்மானிக்கின்றது. ஆக நீதி என்பது வெளி உலகத்தின் கண் துடைப்பாகவே அன்றி, குற்றவாளிகளுக்கான தண்டனையாக அது அமையப் பெறுவதில்லை.

ஓவியம்: **கிருஷ்ணப்பிரிய தர்மகிருஷ்ணர்**

# நிலைமாற்று நீதியும் அரசியலமைப்பைத் தயாரித்தலும்



**அருட்தந்தை யோகேஸ்வரன்**

இலங்கை இன்று உண்மை மற்றும் நீதிபற்றிய எதிர்பார்ப்புடன் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த ஓர் மாற்றத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னர் முன்னைநாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க தெரிவு செய்யப்பட்டமைக்குப் பிந்திய காலத்தில் ஓர் சர்வாதிகார ஆட்சியில் இருந்து ஜனநாயக விழுமியங்கள் மீது கடப்பாடு கொண்ட, அரசாங்கத்திற்கு விருப்பம் தெரிவித்த ஓர் அரசாங்கத்தை நோக்கி மாற்றமடையும் இத்தகைய முயற்சியை அனுபவ வாயிலாக அறிந்துகொண்டோம். ஜனாதிபதி சந்திரிக்காவும் பல்வேறு ஆணைக்குழுக்களை நியமித்ததோடு இலங்கைக்கு புதியதோர் அரசியலமைப்பையும் உருவாக்க முற்பட்டார். நாட்டிற்குப் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தி அதனூடாக அநீதிகளை கண்டறிவதற்கான முயற்சியை மேற்கொண்டார். அன்று ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது சர்வதேச சமூகமோ, இன்றுபோல் முன்னணிப் பாத்திரம் வகிக்கவில்லை. தற்போது அவர்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றனர். அன்று ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசாங்கத்தோடு ஏனைய அரசியல்கட்சிகள் ஒத்துழையாமை காரணமாக அன்றைய நிலைமைகள் நெருக்கடிக்கு உள்ளாகியது. இன்றைய சூழமைவு அனேகமாக வித்தியாசமானது. இன்று இலங்கை சிவில் யுத்தத்தை நிறைவு செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச சமூகமும் யுத்தத்தின் மூலமும் சிறுபான்மை சமூகத்தின் யுத்தத்தோடு




www.onlanka.com

**நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பதாகவும் நல்லாட்சியை நிலைநாட்டுவதாகவும் உறுதிமொழி கூறி ஒரு நபரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தனர். இத்தகைய ஒரு சூழமைவின் கீழேயே தேர்தல்கள் இடம்பெற்றன. இலங்கை அரசாங்கம் வகைப்பொறுப்பு நல்லிணக்கம்பற்றி அர்த்தபுஷ்டியுடன் செயற்பட முயற்சிசெய்வதாகவும், உறுதிமொழியளித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் பேரவையின் உடன்பாட்டு பிரேரணையும் இதில் உள்ளடங்கும்.**

ஒன்றிய நீண்டகால ஒடுக்குமுறை காரணமாக ஏனைய சிறுபான்மை மக்கள் மீதான அரசாங்கத்தின் நடவடிக்கைபற்றிக் கவனத்தை ஈர்த்துள்ளது. இச்சூழமைவின்கீழ் இலங்கை அரசாங்கம் மனிதஉரிமைகள்மீது வைத்திருக்கும் கூடிய நம்பிக்கை காரணமாக மேற்படி பிரச்சினைகளைப்பற்றி அதன் அறிக்கைகள்பற்றி ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் விசாரணைகளுக்கும் உட்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையில் பல பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கற்றபாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் உத்தேச யோசனைகளும் அமுலாக்கப்படவில்லை. இவற்றை அவதானித்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றி வைத்த எதிர்பார்ப்பு சீர்குலைந்துள்ளது.

2015 ஜனவரியில் இலங்கை மக்கள் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பதாகவும் நல்லாட்சியை நிலைநாட்டுவதாகவும் உறுதிமொழி கூறி ஒரு நபரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தனர். இத்தகைய ஒரு சூழமைவின் கீழேயே தேர்தல்கள் இடம்பெற்றன. இலங்கை அரசாங்கம் வகைப்பொறுப்பு நல்லிணக்கம்பற்றி அர்த்தபுஷ்டியுடன் செயற்பட முயற்சிசெய்வதாகவும், உறுதிமொழியளித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் பேரவையின் உடன்பாட்டு பிரேரணையும் இதில் உள்ளடங்கும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்ற உறுதிமொழி இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. இன்று முழுப் பாராளுமன்றமும் அரசியலமைப்புச் சபையாக உருமாறியுள்ளது. புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேசமயம், இலங்கையின் அரசியலமைப்பை மறுசீரமைப்பது பற்றி மக்களின் கருத்தறிவதற்கான ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. அது புதிய அரசியலமைப்புப் பற்றி மக்களின் கருத்தறிவதற்காக நாட்டின் பல பாகங்களிலும் வாழும் மக்களை நேரடியாகச் சென்று சந்தித்தது. அதன்மூலம் இந்நாட்டுப் பிரஜைகள் அரசியலமைப்பு பற்றி தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஓர் அரங்கும் உருவாக்கப்பட்டது. இம்முயற்சி முன்னைய இரண்டு குடியரசு அமைப்புக்களைத் தயாரிக்கும்போது காணப்படாத ஓர் அனுபவமாகும். அரசியலமைப்பு தொடர்பான பல்வேறு கருத்துக்களும் கண்டறியப்பட்டன. இவ்வறிக்கை மே மாதத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இதுபற்றிய பாராளுமன்ற விவாதம் ஆரம்பிக்கும்வரை காத்திருக்க வேபண்டும்.

**மையத்தின் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதிலும் அவற்றை முன் நகர்த்துவதிலும் அரசியலமைப்பைத் தயாரிக்கும் சபை புதிதாக அமைக்கப்படும் நிருவாக அலகிற்கு வழங்குவதற்கு அவசியமான அதிகாரங்கள் யாவை என்பது எவ்வளவு தூரம் அடையாளம் காணப்பட்டுள்ளது?**

புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும்போது கவனத்தில் எடுக்கவேண்டிய சில விடயங்கள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

### முகவாசகம்

அரசியலமைப்பின் முகவாசகம் என்பது எமக்குத் தேவையான விடயங்களைப்பற்றிக் கூறும் சாராம்சமாகவே அது அமைகிறது. நிலைமாற்றுக் கலாநிதி பற்றிய நடவடிக்கைகளும் இம்முகவாசகத்தின் அனைத்துப் பிரஜைகளின் எதிர்பார்ப்பும் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். சிவில் யுத்தத்திற்கு வழிவகுத்த காரணிகள், பிரிவினைவாதத்திற்கு காரணமான விடயங்கள், ஊழல், மோசடி, உறவினர்களுக்கான சலுகை, சர்வாதிகாரப்போக்கு என்பவற்றிற்கு காரணமாகத் திகழ்ந்த தற்போது அமுலில் உள்ள அரசியலமைப்பு நல்லாட்சி தோல்வி காண்பதற்கான காரணிகள் என்பவற்றை அடையாளம் காண்பது மிகமிக அவசியமாகும். புதிய அரசியலமைப்பின் ஊடாக முன்கூறியவை மீண்டும் ஏற்படாத வகையில் அதன் அத்திவாரம் சக்திவாய்ந்ததாக அமைய வேண்டும்.

### அமுலில் உள்ள வெளிப்படைத் தன்மை

அரசியலமைப்பை உருவாக்குவதற்கான சபை தனது கடமைகளை துரிதமாக மேற்கொள்ளும். மக்களின் கருத்துக்களைக் கண்டறியும் சபைமுன் தோன்றிய பலரின் கருத்துக்கள் வரவேற்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம் அவர்கள் இதன் வெளிப்படைத்தன்மையை அரசியலமைப்பை உருவாக்கும்போதும் கடைப்பிடிப்பார்களென நம்புகிறோம். தொடர்ந்தும் மோதல்களுக்கான துறைகளில் உடன்பாடு காணக்கூடியவை குறித்து அவ்வாறே தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதன்மூலம் தொடர்ந்து ஈடுபடக்கூடிய துறைகளையும் மக்களுக்கு அறிவித்தல் நல்லது.

### ஒற்றையாட்சிக்கு எதிராக சமஷ்டி ஆட்சி

ஏற்கனவே இந்த இரண்டு சொற்கள் தொடர்பான விவாதம் எழுந்துள்ளது. அச்சொற்களின் பொருள் வித்தியாசமான முறையில் விவாதிக்கப்படுகின்றன. அவற்றின் பொருள் பிழையான முறையில் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் தீவு பூராவும் நிருவாக அலகுகளைத் தயாரிப்பது இவ்விடயத்தின் முக்கிய அம்சமாகும்.

நாட்டின் நிருவாகத்திற்காக ஏற்கனவே அமுலில் உள்ள மாகாண சபைகளின் எல்லைகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதா? அல்லது வேறு வகையில் அவற்றை மாற்றியமைப்பதா? என்ற விவாதம் ஒருபுறம் எழுந்துள்ளது.

தற்போதைய அரசியலமைப்பிற்கு அமைய அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான மூன்று பட்டியல்கள் அமுலில் உள்ளன. ஒன்று மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மாகாண சபை நிரலாகும். இரண்டாவது நிரல் மத்திய அரசாங்கத்திற்கு உரித்தான ஒதுக்கிய நிரலாகும். மூன்றாவது ஒருங்கியை நிரலாகும். இங்கு மத்திய அரசாங்கம் சட்டங்களை இயற்றும்போது மாகாண சபைகளையும் கலந்தாலோசிப்பதற்கான நிரலாகும்.

மேலும் தற்போதைய மாகாண நிருவாக நிறைவேற்று அதிகாரங்களில் அனேகமானவை ஆளுநருக்கே உரித்தாக்கப்பட்டுள்ளது. இது மாகாண ஆட்சியின்போது பல முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

மையத்தின் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதிலும் அவற்றை முன் நகர்த்துவதிலும் அரசியலமைப்பைத் தயாரிக்கும் சபை புதிதாக அமைக்கப்படும் நிருவாக அலகிற்கு வழங்குவதற்கு அவசியமான அதிகாரங்கள் யாவை என்பது எவ்வளவு தூரம் அடையாளம் காணப்பட்டுள்ளது?

**அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பிரேரணைகளை முன்வைக்கும் நபர்கள் கூறியுள்ள கூற்றுக்கள்மீது கவனம் செலுத்தும்போது நிறைவேற்று ஜனாதிபதி முறை ஓர் முக்கிய அங்கமாகும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நாட்டைப் பிளவுபடுத்தி உள்ளதோடு உறவினர்களுக்கான சலுகைகள், ஊழல்மோசடிகள், சர்வாதிகாரம் என்பவற்றிற்கு வழிசமைத்துள்ளது.**

அரசியலமைப்பின் முகவாசகத்திலேயே இதற்கான வழிகாட்டிகளையும், அளவுகோல்களையும் அடையாளம் காணமுடிகிறது. இலங்கையின் சிறுபான்மை இனங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதும் கடந்தகால துர்ப்பாக்கிய சம்பவங்கள் மீண்டும் நிகழாத வகையிலும் இக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

### நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராக பாராளுமன்ற மாதிரி

அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பிரேரணைகளை முன்வைக்கும் நபர்கள் கூறியுள்ள கூற்றுக்கள்மீது கவனம் செலுத்தும்போது நிறைவேற்று ஜனாதிபதி முறை ஓர் முக்கிய அங்கமாகும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நாட்டைப் பிளவுபடுத்தி உள்ளதோடு உறவினர்களுக்கான சலுகைகள், ஊழல்மோசடிகள், சர்வாதிகாரம் என்பவற்றிற்கு வழிசமைத்துள்ளது.

பொதுமக்களின் கருத்தறியும் குழுவின் முன்னே ஒரு பிரஜை முன்வைத்த யோசனையையிட்டு நன்கு சிந்திக்க வேண்டியுள்ளது. மீண்டும் வெஸ்ட்மினிஸ்ரர் பாராளுமன்ற முறையை நாடிச் செல்வதுபற்றி ஆழமாகக் கலந்துரையாட வேண்டியுள்ளது.

சகல இனக்குழுமங்கள் மத்தியில் இருந்தும் முறையே தெரிவு செய்யப்படும் சம்பிரதாயபூர்வமான தேசிய இனங்களை ஒருங்கிணைக்கக் கூடிய ஜனாதிபதி பற்றிய யோசனையையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

பாராளுமன்றம் உட்பட அரசின் அனைத்து அங்கங்களுக்கும் மேலாக அரசியலமைப்பு மீயுர்வானது என்ற பிரேரணை அரசியலமைப்பைத் தயாரிக்கும் சபையின் விவாதத்திற்கு உட்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் மற்றுமோர் துறையாகும்.

அரசியலமைப்புச் சட்டகத்தையும் அதிகாரப் பகிர்வு மாதிரியையும் உள்ளடக்கிய இந்நாட்டின் சிறுபான்மை சமூகங்களுக்கு பாதுகாபபு வழங்குவதை கவனத்திற்கொள்வது அவசியமாகும்.

அதேசமயம் பாராளுமன்றத்தின் விழுமியங்களையும், கௌரவத்தையும் பேணக்கூடிய வகையில், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் நடந்துகொள்வதற்குத் தேவையான பண்புகளும் தகைமைகளும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

### முக்கிய அரச அமைப்புக்களின் சுயாதீனம்

அதேசமயம் அரச அமைப்புக்கள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்ற கருத்தை மக்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளனர். அரசியலமைப்புப் பேரவை, மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு போன்ற ஆணைக்குழுக்களை வலுவூட்ட வேண்டியது அத்தியாவசியமாகும். அதேசமயம் நீதித்துறையின் சுயாதீனத்தன்மைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

### நிலைமாற்றுக்கால நீதி

நிலைமாற்றுக்கால நீதி ஒரு செயல்முறையாக அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். இதுவே ஜனநாயகத்தையும் அதன் விழுமியங்களையும் ஸ்தாபிக்கக்கூடிய முறைமையாகும். கடந்தகாலத்தைப் புரிந்துகொள்வதும், திறந்த மனதுடன் கடந்த காலத்தின் யதார்த்த நிலைமையை நோக்குவதும் முக்கிய காரணியாகும். இறுதியில் இந்த மையத்தை நோக்கி நாம் அனைவரும் நகர வேண்டியது மிக அவசியம். இனத்துவ சமூகமாக, இலங்கையின் பிரஜைகள் என்ற வகையில் கடந்த காலத்தை சுய ஆய்வுடன் அணுக வேண்டும். சவால்களை எதிர்கொண்டு நாம் அனைவரும் பெருமைப்படும், எல்லோரையும் உள்ளடக்கியதாக உணரும் எம் எல்லோருக்கும் உரித்தான அரசியலமைப்பை இந்நாட்டின் பிரஜைகளுக்கு வழங்குவதற்கு அரசியலமைப்பு பேரவைக்கு வாய்ப்பளிப்போம்.




போர்க்காலத்தில் இடம்பெயர்வு தற்காலிக நடவடிக்கையாகும். மரங்களும் செடிகளும், கட்டடங்களும் இக்கால கட்டத்தில் எமது உயிர்களைப் பாதுகாத்தன. இடம்பெயர்ந்த சகல தருணங்களிலும் நாம் பதுங்கு குழிகளை அமைத்துக்கொண்டோம். அனேகமான சந்தர்ப்பங்களில் எமது குடும்ப உறவுகளின் சேலை ஒரு பதுங்கு குழியாக அமைந்தது. எமது உறவுகள் மாத்திரம் இப்பதுங்கு குழிகளில் மரணிக்கவில்லை. எமது எதிர்பார்ப்புக்களும் மரணித்தன. காலமும் கடந்துவிட்டது. போரும் ஓய்ந்து விட்டது. தற்போது எமது நாடு முன்னோக்கிப் பயணிக்கிறது. இனி ஒருபோதும் யுத்தம் வேண்டாம்.

ஓவியம்: மரிய தேவதாஸ் விஜிதரன்

நிலைமாற்றுக்கால நீதிபற்றி அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அரசகரும மொழிகள், தேசிய கலந்துரையாடல் மற்றும் சகலவாழ்வு அமைச்சர் திரு.மனோ கணேசனோடு நடத்திய நேர்காணல்.

# நீதி வழங்குவதன் மூலம் சகவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும்



அரசகரும மொழிகள் மற்றும் தேசிய சகவாழ்வு தொடர்பான அமைச்சர் மனோ கணேசன்

**தேசிய இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வு உட்பட அரசை ஜனநாயகமயப்படுத்துவதற்காக அரசியலமைப்பை மறுசீரமைக்கும் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இச்செயல்முறையை இலகுபடுத்துவதற்காக, போரினால் பாதிக்கப்பட்டோர் சார்பில் நிலைமாற்றுக்கால நீதியை வழங்குவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள நடவடிக்கைகள் யாவை?**

அரசாங்கம் நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பது முதல் நடவடிக்கையாகும். பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்குவது இரண்டாவது அம்சமாகும். நீதிமன்றச் செயற்பாடு மூன்றாவது அம்சமாகும். நடந்துமுடிந்த அவலங்களும் அனர்த்தங்களும் மீள்நிகழாமை நான்காவது அம்சமாகும். இந்த நான்கு அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. குறித்த ஒரு தரப்பினர் எமக்கு எதிராக ஜெனீவா தீர்மானத்தின்போது செயற்பட்டதாக கடந்த

முறை கூறப்பட்டது. ஆனால், இம்முறை அது எமது தீர்மானமாக மேற்கொள்ளப்பட்டதென குறிப்பிட விரும்புகிறேன். மேற்படி இணக்கப்பாட்டின் பங்காளர்கள் என்ற வகையில் நாம் இதிலிருந்து விலக முடியாது. ஜெனீவாவில் நாம் வழங்கிய உறுதிமொழியை கட்டாயம் நிறைவேற்றியே தீரவேண்டும்.

**இது தொடர்பாக கலப்பு நீதிமன்றம் பற்றிய ஒரு கருத்து சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்ததாக நாம் அறிந்தோம். இதுபற்றி அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது?**


இதுபற்றி அரசாங்கத் தரப்பினர் மத்தியிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதனை நாம் மூடிமறைக்கத் தேவையில்லை. ஒரு தரப்பினர் சர்வதேச உறவுகள் இது தொடர்பில் இருக்கவேண்டுமெனக் கோருகின்றனர். இன்னுமொரு தரப்பினர் சர்வதேச தரப்பினர் அவசியமில்லையெனக் கூறுகின்றனர். சர்வதேச தொடர்புகளின்றி உள்நாட்டுப் பொறிமுறைமூலம் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கமுடியுமென அவர்கள் கூறுகின்றனர். சர்வதேசத் தொடர்புகள் அவசியமென நான் கருதுகிறேன். ஏனெனில், எமது நாட்டின் தேசிய நீதித்துறை மேம்படுத்தப்பட்டாலும் நம்பகத் தன்மைபற்றி உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியான உறவுகளை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டியுள்ளது. மறுபுறம் பாதிக்கப்பட்ட மக்கள், குறிப்பாக தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பேண வேண்டுமாயின் நாம் சர்வதேச உறவுகளையும் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

**தற்போது இலங்கையின் நீதித்துறையில் சாதகமான வளர்ச்சியைக் காட்டினாலும் சில சம்பவங்கள் குறிப்பாக ஊழல், மோசடி மற்றும் சில படுகொலைகள் தொடர்பாக செயற்படும் முறைபற்றிய சந்தேகங்கள் எழுந்துள்ளன. இத்தகைய நீதிமன்றங்கள்மூலம் தமிழ் மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றா கூறுகிறீர்கள்?**

ஊழல், மோசடி மற்றும் நீங்கள் கூறிய நிலைப்பாடுகள் குறித்து சான்றாதாரங்கள் தேடப்படுகின்றன. நான் அறிந்த மட்டில் சுமார் 20 வழக்குகள் தற்போது முடிவடைந்துள்ளன. இக்கோப்புகள் அனைத்தும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. அங்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன. எனவே யூன் மாதம் முடிவடையும்போது ஊழல், மோசடிகள் தொடர்பான வழக்குகள் தீர்மானகரமான நிலைப்பாட்டை எடுக்கும். தற்போது கடந்த அரசாங்கத்தில் பதவி வகித்தவாறு ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை நான் அறிவேன். இதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். இதை அறிந்த காரணத்தினாலேயே நாட்டில் இனவாதத்தைத் தூண்டி, தீவிரவாதத்தைத் தூண்டி, போலி யுத்தப் பிசாசைக் காட்டி மோசடிக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு எதிரணியில் சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் இந்த மோசடிகளுக்கு எதிரான விசாரணைகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

**தற்போது வடக்கு கிழக்குவாழ் மக்களின் காணிப் பிரச்சினை இன்னும் முழுமையாகத் தீர்ந்தபாடில்லை. இப்போதைக்கு தீர்க்கப்படுவதாகவும் தோன்றவில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இராணுவம் தொடர்ந்து மேற்படி காணிகளை கைவிட்டுச் செல்ல விரும்பவில்லை என்றே தோன்றுகிறது அல்லவா?**

உண்மையில் யுத்தம் முடிவடைந்து விட்டது. தற்போது யுத்தம் ஓய்ந்து சுமார் ஏழு ஆண்டுகள் ஆகின்றன. விடுதலைப்புலிகள் அமைப்பு நசுக்கப்பட்டு விட்டது. விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் ஓய்ந்துவிட்டன. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தற்போது தேவையில்லை. புலிகளின் துப்பாக்கிகளை எதிர்நோக்குவதற்கே பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன. அன்று விடுதலைப்புலிகள் செயற்பட்ட காரணத்தினால் இந்தக் காணிகள் கைப்பற்றப்பட்டன. தற்போது போர் ஓய்ந்த நிலையில் அவற்றைத் தொடர்ந்து கைப்பற்றிக்கொண்டு இருப்பது தவறு. மறுபுறம் கைப்பற்றிக்கொண்டுள்ள காணிகள் இராணுவ தேவைகளுக்காகப் பயன்படுத்துவதாக இருந்தால் ஓரளவு பரவாயில்லை. அவ்வாறு செய்வதாயின் தர்க்கரீதியாக அதனைக் கூறலாம். ஆனால், அத்தகைய நிலைமை இப்போதில்லை. இக்காணிகளில் இராணுவத்தினரின் உணவு விடுதிகளும் இருக்கின்றன. சொகுசான நடவடிக்கைகளுக்காக அவை ஒதுக்கப்பட்டுள்ளன. கொல்ஃப் (Golf) விளையாடுவதற்கு சில காணிகள் பயன்படுத்தப்படுகின்றன. சில காணிகளில் நீச்சல் தடாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவத்தோடு உறவு கொண்டாடுபவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிலர் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே, பாதுகாப்பு நடவடிக்கைகளோடு தொடர்பில்லாத விடயங்களுக்கு பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் பயன்படுத்தப்படுகின்றன. இவை நிறுத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் பல்வேறு கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் உருவாகிய அரசாங்கமாகும். எனவே ஒரு தரப்பினர் கூறுவதை மற்றைய தரப்பினர் கேட்பதில்லை. எனவே எமக்குள் பல பிரச்சினைகள் உண்டு. மறுபுறம் இலங்கைப் படையினர் தொடர்ந்தும் போர் மனோ நிலையிலேயே வாழ்கின்றனர். இந்த மனோநிலையை உடனடியாக மாற்ற முடியாது. அரசாங்கம் மாறினாலும் படையினரின் மனோ நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. போரின் நிமித்தம் கூடுதலாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட படையினரை உடனடியாகக் குறைத்து வீட்டுக்கு அனுப்ப முடியாது. இதற்கு மாற்று நடவடிக்கைகளை




நாம் உருவாக்க வேண்டும். அதற்கு இன்னும் சிறிதுகாலம் தேவை. அதேசமயம் நாம் குறிப்பிடத்தக்க காணிகளை மக்களுக்கு மீள வழங்கி இருக்கிறோம்.

**படையினர் தொடர்ந்தும் அரசியலமைப்பிற்கு எதிராக செயற்படுகின்றனர் என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

ஆம் சில விடயங்களில் படையினர் அவ்வாறாகத்தான் செயற்படுகின்றனர்.

**தற்போது அரசியலமைப்பை மறுசீரமைப்பு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் சார்பில் நீங்கள் முன்வைக்கும் யோசனைகளைக் கூறுவீர்களா?**

அரசியலமைப்பை மறுசீரமைப்பதற்கு ஒட்டுமொத்தப் பாராளுமன்றமும் ஓர் அரசியலமைப்பு பேரவையாகக் கூடும். அண்மையில் பிரதமரின் தலைமைத்துவத்தின்கீழ் ஒரு தலைமைத்துவச் சபையும், 21 பேர் அடங்கிய நெறிப்படுத்தல் குழுவும் நியமிக்கப்பட்டது. நானும் அதில் அங்கம் வகிக்கின்றேன். அன்று மாலையில்தான் முதல் முறையாக ஒட்டுமொத்தப் பாராளுமன்றமும் அரசியலமைப்புப் பேரவையாக ஒன்றுகூடியது. மீண்டும் நாம் 28 ஆந் திகதி கூடுவோம். எதிர்காலத்தில் உபகுழுக்கள் நியமிக்கப்படும். எத்தனை உபகுழுக்கள் அமைக்கப்படுமென இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. அதேசமயம் அந்தந்த உபகுழுக்களுக்கு என்னென்ன விடயங்கள் ஒப்படைக்கப்படுமென இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. பொதுமக்களின் கருத்துக்களைக் கண்டறிவதற்காக சட்டத்தரணி லால் விஜேநாயக்க அவர்களின் தலைமைத்துவத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கும்வரை நாம் காத்திருக்கிறோம். இம்மாத முடிவிற்குள் மேற்படி அறிக்கை எமக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நெறிப்படுத்தும் குழுவில் கலந்துரையாட நாம் தயாராக உள்ளோம். எதிர்வரும் 3 ஆந் திகதி பாராளுமன்றம் கூடும்போது எதிர்கால நடவடிக்கைகள்பற்றி கலந்துரையாடப்படும். எவ்வாறாயினும் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கு மூன்று அடிப்படை விடயங்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். ஒன்று அரசியலமைப்பை மாற்றியமைத்தல், இரண்டு புதிய தேர்தல் முறையை அறிமுகம் செய்தல், மூன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அதிகாரத்தைப் பகிர்தல்.

**அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பாக ஏற்கனவே ஒரு பொறிமுறையுண்டு. பரவலாக்கப்பட்ட அதிகாரத்தையும்**

**போரின் நிமித்தம் கூடுதலாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட படையினரை உடனடியாகக் குறைத்து வீட்டுக்கு அனுப்ப முடியாது. இதற்கு மாற்று நடவடிக்கைகளை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு இன்னும் சிறிதுகாலம் தேவை. அதேசமயம் நாம் குறிப்பிடத்தக்க காணிகளை மக்களுக்கு மீள வழங்கி இருக்கிறோம்.**

**வடமாகாண சபை உரியமுறையில் பயன்படுத்துவதில்லையென ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. வடமாகாண சபைக்கென்று ஒதுக்கிய நிதியை உரிய காலத்தில் பயன்படுத்தாத காரணத்தினால் மேற்படி நிதி மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டதாக ஊடகம் ஒன்றில் அண்மையில் நான் வாசித்தேன். அது மாத்திரமல்லாமல் வடமாகாண சபை இரண்டு, மூன்று நியதிச்சட்டங்களையே இதுவரை அங்கீகரித்துள்ளது. இக்குற்றச்சாட்டுக்கள் பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் கூறுவதுபோல வடமாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி மீள அனுப்பி வைக்கப்படவில்லை. இப்பணத்தில் 90% நாம் பாவித்துள்ளோம் என வடமாகாண முதலமைச்சரின் அறிக்கைகள் கூறுகின்றன. சிலவேளை மாகாண சபை என்ற வகையில் செலவுசெய்து அவற்றிற்கான கணக்குகள் குறைக்கப்பட வேண்டி இருக்கலாம்.

எவ்வாறாயினும் இது வேறொரு பிரச்சினை. அதிகாரப் பரவலாக்கல் என்று சொல்லும்போது இந்த வாய்ப்பு ஏழு மாகாணங்களுக்கும் கிட்டியுள்ளது. வடமாகாணத்தில் நிதி பயன்படுத்தப்படவில்லையாயின் இரண்டு விடயங்கள் உண்டு. அதில் ஒன்று மேற்படி வடமாகாண நிருவாகிகளின் பலவீனமாக இருக்கலாம் அல்லது மத்திய அரசாங்கம் அந்த அதிகாரங்களை சரிவர வழங்காமல் இருக்கலாம். இதனைக் கண்டறிய வேண்டும். எவ்வாறாயினும் வடமாகாணத்தின் நிருவாகிகள் சரியான முறையில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லையாயின் அது வடமாகாண மக்களின் பிரச்சினை. அந்த மக்கள் பலவீனமான நிருவாகிகளையே தெரிவு செய்துள்ளனர். நிருவாகத்தை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின் மேற்படி நிருவாகிகள் பொய்ப்பிரச்சாரங்களுக்கு விடையளிக்க வேண்டும். மறுபுறம் மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு வழங்கவேண்டிய அதிகாரத்தையும், ஒத்துழைப்பையும் வழங்காதுவிடின், குறிப்பாக வடமாகாண சபையை மாத்திரம் இலக்கு வைத்து அவ்வாறு செய்வது பாராதூரமான பிரச்சினையாகும். இதற்கெதிராக நாம் செயற்பட வேண்டும்.

**அப்படி இல்லை, கிழக்கு மாகாணத்திற்கு அக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படவில்லை. கிழக்கு மாகாணம் வடமாகாணத்தைவிட புதிய நியதிச்சட்டங்களை அங்கீகரித்தது மாத்திரமல்ல, வடமாகாண சபையோடு ஒப்பிடும்போது மிக வெற்றிகரமாக செயற்படுவதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.**

வடமாகாணசபை ஏனைய மாகாண சபைகளோடு ஒப்புநோக்கும்போது சிறு குழந்தையென்றே கூறவேண்டும். ஏனைய மாகாணங்களின் மாகாணசபைகள் 1988 முதல் செயற்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணம் வடமாகாணத்தைவிட முன்கூட்டியே அமைக்கப்பட்ட மாகாண சபைகளாகும். எனவே பிரச்சினைகள் இருக்கலாம். மத்திய அரசாங்கத்திற்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. நிபுணர்களை வடமாகாண சபைக்கு வழங்கிய நியதிச்சட்டங்களைத் தயாரித்து செயற்பட வேண்டிய முறைகளையிட்டு அறிவூட்ட வேண்டும். வடமாகாண சபைக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. ஏனைய மாகாண சபைகளின் அமைச்சர்களுடன் கலந்துரையாடி குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும். அதுபற்றி தற்போதுள்ள மாகாணசபையின் முறைமையின்கீழ் செயற்பட வேண்டும்.

**புதிய அரசியலமைப்பு தொடர்பாக தென் இலங்கையின் நிருவாகிகள் ஏற்கனவே இரண்டு விடயங்கள் தொடர்பாக முன் தீர்மானத்துடன் செயற்படுகின்றனர். அதாவது புதிய அரசியலமைப்பு ஒற்றை ஆட்சியாக இருக்கவேண்டிய அதேநேரத்தில் பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம்**



புதிய அரசியலமைப்புப் பற்றிய பொது மக்களின் கருத்தறியும் குழுவின் தவிசாளர் உட்பட குழு உறுப்பினர்கள் ஊடாகக் கலந்துரையாடலில் ஈடுபட்ட போது www.news.lk

**வழங்குவது அவ்வாறே இருக்கவேண்டுமென அவர்கள் கூறுகின்றார்கள் அல்லவா?**

இந்த நாட்டின் அரசியலமைப்பு ஒற்றை ஆட்சி கொண்டதா அல்லது சமஷ்டி ஆட்சி கொண்டதா என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு சொற்களும் எனக்குத் தேவையில்லை. இந்திய அரசியலமைப்பை எடுத்தால் அந்த இரண்டு சொற்களும் அங்கு குறிப்பிடப்படவில்லை. ஒற்றை ஆட்சி என்ற நோக்கில் இந்திய அரசியலமைப்பை நோக்குகின்றவர்கள் அவ்வாறு அதனை நோக்கலாம். சமஷ்டி என்ற நோக்கில் அதனை நோக்குபவர்களுக்கு அது சமஷ்டியாகத் தோன்றும். ஆனாலும் அந்த அரசியலமைப்பு முறைமை சிறப்பாகச் செயற்படுகிறது. எனவே சொற்பதங்களில் நாம் தேங்கி நிற்கவேண்டியதில்லை. அரசு மதச்சார்பற்ற நிறுவனமாக செயற்பட வேண்டியது அடுத்த பிரச்சினையாகும். நானும் அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கின்றேன். எந்தவொரு மதத்திற்கும் விசேட சலுகை வழங்கவேண்டிய அவசியம் இல்லை. மதங்கள் என்பன தனிப்பட்ட விடயமாகும். இந்த நாட்டில் மதங்களை வழிபடாதவர்களும் இருக்கிறார்கள். நானும் ஒரு மதத்தை வழிபடவில்லை. நான் மதச்சார்பற்றவன். இதைக் கூறுவதற்கு நான் பின்நிற்க மாட்டேன். ஆனால் ஏனையோர் மதங்களில் நம்பிக்கை வைப்பதை நான் மதிக்கின்றேன். எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் நான் கோயில்களுக்குச் செல்வேன். பன்சலைகளுக்கும், பள்ளிவாசல்களுக்கும், தேவாலங்களுக்கும் செல்வேன். மத நம்பிக்கையுள்ளவர்களைக் கௌரவிப்பதற்காகவே நான் அவ்வாறு செல்கின்றேன். அவ்வாறு சென்றாலும் எனக்கென மதம் ஒன்று கிடையாது. எனவே எல்லா மதங்களையும் சமமாக மதிக்க வேண்டுமானால் அரசில் இருந்து மதம் விடுவிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் இந்தியா எமக்குச் சிறந்த உதாரணமாகும். இந்தியாவின் பெரும்பான்மையினர் இந்துமதத்தைச் சார்ந்தவர்கள். ஆனால், அந்த நாட்டின் அரசு மதச் சார்பற்றது. அதிகாரப் பகிர்வு விடயத்திலும் நாம் இந்தியாவை நோக்கவேண்டும். இதற்கு உதாரணங்களைப் பெறுவதற்கு உலகம் சுற்றவேண்டிய அவசியம் கிடையாது. எமது அயல்நாடான இந்தியாவுக்குச் சென்று பார்த்தால் போதும். ஏனைய விடயங்களுக்கு நாம் அயல்நாட்டை நோக்குவோம். எமது இசை, மொழி, பண்பாடு, உணவு வகைகள் ஆகிய அனைத்துமே இந்தியாவில் இருந்து பெறப்படுகிறது. எமக்கு மிகவும் அத்தியாவசியமான விடயத்தைப்பற்றி நாம் இந்தியாவை அணுகுவதில்லை. இது ஒரு கபடத்தனமாகும்.

**நாம் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் ஆட்சியை அகற்றுவதற்குப் பாரிய சிவில் சமூக நடவடிக்கைகளை ஆரம்பித்தோம். இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் அவர்களுக்கு வழங்கும் செய்தி என்ன?**

ஆட்சிசெய்யும் கூட்டணி என்ற வகையில், இந்த அரசாங்கத்தின் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டோம். எமக்கிருந்த நிகழ்ச்சித்திட்டத்தை நாம் இரண்டு வகையாக சுட்டிக்காட்ட முடியும். ஒன்று ஆலோசனை வழங்கும் நடவடிக்கைகள். உதாரணமாக ஜனநாயகம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, ஊடகச் சுதந்திரம், மனித உரிமைகள், தகவல்களை அறிவதற்கு பொதுமக்களுக்குள்ள உரிமைகள்,

**திரு.லால் விஜேநாயக்க அவர்களின் தலைமைத்துவத்தில் செயற்படும் மக்களின் கருத்துக்களைக் கண்டறியும் ஆணைக்குழு நாடுமுழுவதும் சென்றுள்ளது. இங்கு நாட்டின் பிரஜைகளுக்கும் அமைப்புக்களுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமது யோசனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.**

புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் போன்ற விடயங்கள் என்பனவாகும். இதற்குத் தேசிய மட்டத்தில் இடையீடுகள் இருக்கின்றன. ஒட்டுமொத்த பாராளுமன்றமும் அரசியலமைப்புச் சபையாக மாற்றப்படுவதனால் முழு நாட்டு மக்களும் பங்குபற்றும் ஒரு பொதுவான நிலைமை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. திரு.லால் விஜேநாயக்க அவர்களின் தலைமைத்துவத்தில் செயற்படும் மக்களின் கருத்துக்களைக் கண்டறியும் ஆணைக்குழு நாடுமுழுவதும் சென்றுள்ளது. இங்கு நாட்டின் பிரஜைகளுக்கும் அமைப்புக்களுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமது யோசனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வெளிநாடுகளில் தற்காலிகமாக வாழும் எமது பிரஜைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஒட்டுமொத்த இலங்கை சமூகம் அதில் ஈடுபாடு காட்டியது. நீதித்துறையின் சுயாதீன கடமைகள் பொலிசாரை அரசியல்மயமாக்கலில் இருந்து விடுவித்தல். ஊடக சுதந்திரம் போன்ற விடயங்களை ராஜபக்ஷவின் நிருவாகத்தோடு ஒப்பிடும்போது பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். குறைபாடுகள் இல்லையென்று கூறவில்லை. சில அமைச்சர்கள் பைத்தியக்காரத் தனமான வேலைகளில் ஈடுபடுவதால் நாமும் தலைகுனிய நேர்ந்துள்ளது. ஆனால் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சியடையும் நிலையில் நாடு இல்லை. எனவே நாம் எல்லோரும் அவ்வாறு சிந்திக்க முடியும். எமது அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவோரும் நேர்மையாகச் சிந்திப்பார்களேயாகில் இது அவர்களுக்கும் புரியும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் முட்டாள்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேண்டுமென்றே அரசியல் தேவைகாரணமாக அதனை ஏற்காமல் இருக்கமுடியும்.


**புதிய அரசியலமைப்பை இயற்றுவது தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒருமைப்பாடு இருந்தாலும், புதிய அரசியலமைப்பின் உள்ளடக்கம் தொடர்பாக கலந்துரையாடும்போது, நாம் சொன்ன அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்தை உதாரணமாக எடுக்கலாம். இங்கு ஒன்றிணைந்த எதிர்கட்சியென கூறிக்கொள்வோரின் நடத்தையை அவதானிக்கும்போது இதனை சீர்குலைப்பதற்கு இடமுண்டு அல்லவா?**

அரசியல்மைப்புபற்றியும், தேர்தல் முறைபற்றியும், பாரிய சவால்களை எதிர்நோக்க நேரிடும் என்று நான் கருதவில்லை. இதற்கு ஓர் தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதிகாரப் பகிர்வு சம்பந்தமாகவே பிரச்சினையுண்டு. அதிகாரப் பகிர்விற்கு தற்போது எம்மிடம் ஏதோவொரு




www.rightsnow.net

காணாமற் போனோர் பற்றிய ஆர்ப்பாட்டம்






பிரச்சினையுண்டு. அதிகாரத்தைப் பகிர்வதற்கு, தற்போது எமக்கு ஓர் அடிப்படை இருக்கிறது. 13ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தம் அவற்றுள் ஒன்று. மகிந்த ராஜபக்ஷ 13 இற்கு அப்பால் செல்ல உத்தேசித்திருந்தார். ஆனால் அதற்குப் பிறகு அவரால் அதனை எதிர்க்கமுடியாது. அவர் ஐ.நா.பொதுச் செயலாளர் நாயகம் திரு.பங்கிங்மூனுடன் இணைந்து ஓர் ஒன்றிணைந்த பிரகடனத்தை வெளியிட்டார். ஒரு தீவிரவாதக் கும்பலே இதனை சீரழிக்க முயல்கிறது. வடக்கிலும் அதி தீவிரவாதிகள் இருக்கிறார்கள். இவர்கள் இந்த இரண்டு பிரிவினரையும் ஒன்று சேர்த்தாலும் சிறு எண்ணிக்கையினராவார். ஆனால், அவர்கள் உரத்த குரலில் கத்திக்கொண்டு இருக்கின்றனர். இந்த உரத்த குரல்களுக்கு ஊடகங்களும் அளவுமீறி இடமளித்து வருகின்றன. ஊடகங்களுக்கிடையே ஒரு போட்டி நிலவுகிறது. எனவே, ஊடகங்களின் நடத்தையை பத்திரிகை ஆசிரியர்கள் தீர்மானிப்பதில்லை. பத்திரிகையின் விற்

பனையே தீர்மானிக்கிறது. இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள விபரீதமான நிலை இதுவே. எனவே இதனைப் புரிந்துகொண்டு ஊடகங்கள் பொறுப்பாகச் செயற்பட வேண்டும். அரசியல்வாதிகள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகிய நான்கு பிரிவினரும் தாம் செய்யும் தொழில்களில் இருந்து சம்பளத்தைப் பெறுகின்றனர். அவர்கள் வாழ்வதற்கு சம்பளம் பெறுவதில் தவறில்லை. வாழ்க்கையை ஓட்டுவதற்கு சம்பளம் தேவை. ஆனால் தமது தொழிலைப் போலவே சமூகத்திற்கும் அவர்கள் சேவை செய்யவேண்டும். அவர்களுக்கு ஓர் சமூகப் பொறுப்பு உண்டென்பதை அவர்கள் மறுக்கக் கூடாது. பிரதம ஆசிரியர் முதல் சாதாரண அறிக்கையாளர் வரை அவர்களுக்கு பாரிய பொறுப்புண்டு. எனவே ஊடகவியலாளர்களும் அரசியல்வாதிகள்மீது தமது விரலை நீட்டும்போது சமூகத்தை நற்பாதைக்கு எடுக்கும் பொறுப்பு அவர்களுக்குண்டு என்பதைச் சிந்திப்பார்களேயாயின் இத்தகைய விபத்து இந்த நாட்டிற்கு ஏற்பட மாட்டாது.

இலங்கையில் ஒருசில சிங்கள தீவிரவாதிகள் இருப்பதுபோலவே தமிழ் தீவிரவாதிகளும் இருக்கின்றனர். அதேசமயம் முஸ்லிம் தீவிரவாதிகளும் இருக்கின்றனர். இனத்தையும், மதத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிரிவினையை ஏற்படுத்துவார்களேயாகில் அவர்களே உண்மையான பிரிவினைவாதிகள் ஆவர். ஒரே நாட்டில் அதிகாரப் பகிர்வை அவர்களே எதிர்க்கின்றனர். சாதாரணமாக அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்களேயாகில், இப்பிரிவினைவாதிகளுக்குச் சார்பாக சாதாரண மக்கள் தள்ளப்பட்டுப் போவார்கள். இப்படியாக தள்ளுபவர்களும் அதற்கு உதவுபவர்களும் பிரிவினைவாதிகளாவர். எனவே புலிகள் மாத்திரம் பிரிவினைவாதிகள் அல்ல. தென்னிலங்கையிலும் பிரிவினைவாதிகள் இருக்கின்றனர். அவர்களைத் தோல்வியுறச் செய்யவேண்டும். இது தொடர்பான

**எவ்வாறாயினும் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கு மூன்று அடிப்படை விடயங்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். ஒன்று அரசியலமைப்பை மாற்றியமைத்தல், இரண்டு புதிய தேர்தல் முறையை அறிமுகம் செய்தல், மூன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அதிகாரத்தைப் பகிர்தல்.**

புத்திகூர்மை எமது நாட்டு மக்களுக்கு உண்டு என நான் நினைக்கின்றேன். இப்புத்திகூர்மை மேலும் விருத்தியடைய வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

**அதிகாரத்தைப் பகிர்ந்து நல்லிணக்கப் பாதையில் நாட்டை வழிநடத்துவதற்கு உங்கள் அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?**

எனது அமைச்சிற்கு இரண்டு பொறுப்புக்கள் உண்டு. ஒன்று தேசிய சகவாழ்வு பற்றிய பொறுப்பு. மற்றையது அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்பு. இதற்கு முன்னர் பதவி வகித்த அமைச்சர்களிடம் இவற்றை அமுல்படுத்துவதற்கு அரசியல் திடசங்கற்பம் இருக்கவில்லை. அதனை நான் குறைகூறவில்லை. அன்று அதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால் தற்போது அதற்கான வாய்ப்பு உண்டு. அரசியல் அபிலாஷை இருக்கிறது. எனவே அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதற்கும், சகவாழ்வை முன்னெடுப்பதற்கும், தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இந்த அமைச்சின் நிகழ்ச்சித்திட்டம் ஓர் முகவாசகம் என நான் எண்ணுகின்றேன். தேசிய பிரச்சினைக்கு தீர்வு அதிகாரப் பகிர்வென்று நாம் கூறுகையில் நாம் அதிகாரப் பகிர்வைப்பற்றி பேசுகின்றோம். அதிகாரப் பகிர்வுபற்றிய கலந்துரையாடலை நாம் இப்போது ஆரம்பித்துள்ளோம். அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தம் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் உள்ளோரும் இதுபற்றிய எதிர்ப்பை அவர்கள் இன்னும் காட்டவில்லை. இந்த அமைச்சில் எனக்கு முன்னர் திரு. வாசுதேவ நாணாயக்காரர் அமைச்சுப் பதவியை வகித்தார். அவரும் இதற்கு உடன்பட்டார். இங்கு கொள்கை பிரச்சினையைவிட அமுலாக்கம் சம்பந்தமான பிரச்சினையே இருக்கிறது. நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்று 10 மாதங்களே ஆகின்றன. நாடு பூராவும் சகவாழ்வு மத்திய நிலையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளேன். சிவில் சமூகம், அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் குழுக்கள், மதம்சார்ந்த குழுக்களும், இளைஞர்கள் பெண்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுக்களையும் இணைத்து நான் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றேன். கலாசாரம், விளையாட்டுக்கள் உட்பட ஏனைய வழிமுறைகளையும் கையாண்டு இக்கலந்துரையாடலை அடிமட்டத்திற்கு எடுத்துச் செல்ல நான் நடவடிக்கை எடுக்கின்றேன். கடந்த காலத்தில் அடிமட்டத்தில் உள்ள மக்கள் சரியான முறையில் அறிவூட்டாத காரணத்தினால் இனவாதிகள் அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தினார்கள். இதே முறையில் விடுதலைப்புலிகளும் வடக்கு மக்களின் அறியாமையைப் பயன்படுத்தினார்கள். இம்முறை அவ்வாறு நடப்பதற்கு இடமளிக்க முடியாது. எதிர்காலத்தில் இதுதொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். அதற்குத் தேவையான நிதி குறைவாகவே இருக்கிறது. இது மிகவும் முக்கியமான நடவடிக்கையாயினும் இவற்றிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால் நான் இதனால் எனது மன உறுதியை இழக்க மாட்டேன். சர்வதேச சமூகத்துடன் கலந்துரையாடி நிதியைத் திரட்டி முன்னோக்கிச் செல்வேன்.

## தமிழனா? சிங்களவனா? முஸ்லீமா?

நீ யோர் தமிழனா?
இல்லை, இல்லை
நீ யோர் சிங்களவனா?
இல்லை, இல்லை
நீ யோர் முஸ்லிமா?
இல்லை, இல்லை

அப்படியானால்–
நாம் யார்?
நாம் யார்?
உரத்த குரலில் மூவரும் கூவினர்

நீங்கள் மூவரும் இலங்கையின் மக்கள்
நீங்கள் மூவர் இவ்வன்னையின் புதல்வர்
நீங்கள் மூவரும் இந்நாட்டின் உழைப்போர்
நீங்கள் மூவரும் கஷ்டப்படுவோர்
நீங்கள் மூவரும் இந்நாட்டிற்
சுரண்டப்படுவோர், சுரண்டப்படுவோர்.

ஒரு தாய் மக்களே
உழைக்கும் மக்களே
உங்களுக்கென்றொரு காலம் உண்டு

எனவே–
இலங்கை மக்காள்! என் அரும் புதல்வீர்!
உங்கள் பேதம் அகற்றுவீர் முதலில்
ஒருவரை ஒருவர் இப்போ பாரீர்!
நீங்கள் யாவரும் ஒரே அணி, ஒரே வரி

நீங்கள் யாவரும் ஒரே நிறம், ஒரே குரல்
உங்கள் யாவர்க்கும்
நோக்கமும் ஒன்றே, வழியும் ஒன்றே.

இலங்கை மக்காள் என் அரும் புதல்வீர்
உங்கள் உழைப்பின் பெறுமதி மீண்டும்
உமக்குக் கிடைக்கும் புதுயுகம் ஒன்றே
அமைக்க மூவரும் ஒன்றாய் ஆகுக.

**– சி. மௌனகுரு (1982)**



இரண்டு இனங்கள் பல வருடங்களாக எதிர்கொண்ட யுத்தம் காரணமாக மக்களிடையே ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை பகிர்ந்துகொள்ள முடியாது. உயிரிழந்தவர்கள், காணாமல்போனவர்கள், ஊனமடைந்தவர்கள் மனிதர்களே ஆவர். அதற்காக கண்ணீர் சிந்தியதும் மனிதர்களே. அவர்களுக்காக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்? என்பதே எனது ஓவியம் கேட்கும் கேள்வியாகும். பின்னணியில் நிலத்திற்கு உக்கும் "மஸ்டாபா" மற்றும் சட்டம் அதற்காக செய்தது என்ன? என்ற கேள்வியை கேட்கின்றது. நிலத்திலிருந்து வெளிவரும் செடிகள் வாழ்பவர்களுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**ஓவியம் : நிரோஷா வனிகசூரிய**

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரம் எனக்கு தேர்தல் மூலமாகவே வழங்கப்பட்டது



**ஜனாதிபதி**
**மைத்திரிபால சிறிசேன**

இன்று நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சுதந்திரதின நினைவு வைபவத்தை மிகவும் பெருமையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடுகின்ற தருணமிது. 68 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து, காலனித்துவத்தில் இருந்து நாங்கள் சுதந்திரம் பெற்ற பின்னர், ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற நாட்டின் சுயாதீனத்தன்மையை வென்றெடுத்த தேசிய சுதந்திர நினைவு வைபவத்தின் 68 வது தருணமே இது.

1948 ஐயும் 2016 இன் இன்றைய தினத்தையும் எடுத்துக்கொண்டால் சுதந்திரம் பற்றிப் பேசுகையில் பொருளாதார, அரசியல், சமூக, கலாசார ரீதியாக எமது நாட்டில் போன்றே முழு உலகமும் விரிவான வேறுபாடுகள் மற்றும் பல்வேறு மாற்றங்களுக்கு இலக்காகியுள்ளது. 1948 இல் பெற்ற சுதந்திரத்திற்கு பொருள்விளக்கம் கொடுத்தால், அதனை வரைவிலக்கணப்படுத்தினால் 48 இல் எமது மக்கள் எதிர்பார்த்த சுதந்திரத்திற்கும், 68 வருடங்களுக்குப் பின்னர் இன்று நாங்கள் எதிர்பார்க்கின்ற சுதந்திரத்திற்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் நிலவுகின்றன.

1948 அதாவது 50 வது தசாப்தத்தில் பிறந்த குழந்தையை நான் கலாசாரக் குழந்தை என்றே அழைப்பேன். 2016 போன்ற இக்காலகட்டத்தை எடுத்துக்கொண்டால் இன்று பிறக்கும் பிள்ளைகளை நாங்கள் தொழில்நுட்பக் குழந்தைகளாகவே காண்கிறோம். அதாவது 50வது தசாப்தத்தில் பிறந்த கலாசாரக் குழந்தையும், 21வது நூற்றாண்டின் ஆரம்பகாலகட்டதத்தில் இன்றேல் இன்றைய தினத்தில் பிறக்கின்ற தொழில்நுட்பக் குழந்தையையும் ஒன்று சேர்த்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியை, நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை நாம்

கூட்டு முயற்சியால் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அன்புச் சிறார்களே, பெற்றோர்களே, நண்பர்களே, காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக அன்று போராடிய தேசிய வீரர்கள் பற்றிப் பேசும்போது அந்தத் தேசிய வீரர்கள் மத்தியில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் ஆகிய சுதந்திரப் போராட்டத்தின் தலைவர்கள் பலர் சகோதரத்துவத்துடன், ஒற்றுமையாக, நட்புணர்வுடன், ஒரே கருத்துடன் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதற்காகப் போராடி சுதந்திரத்தைப் பெற்றார்கள் என்பதை நாமனைவரும் மிகவும் தெளிவாக அறிவோம்.

நாங்கள் அதற்கு அப்பால் சென்றால் 1505 இல் இருந்து வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் எமது நாட்டை ஆக்கிரமித்த சந்தர்ப்பத்திலிருந்து இன்றேல், 1505 தொடக்கம் 1948 வரையான அந்த நானூறு வருடங்களாக நாம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு கட்டுப்பட்டிருந்த காலப்பகுதியில் எமது பெரும்பாலானவை அழிவடைந்தன. எமது என்கின்ற எம்மவர் எனும் நிலை சிதைந்து போயிற்று. எமது கலாசாரம் சீரழிந்தது. பாரிய பொருளாதாரப்பேரழிவு ஏற்பட்டது. முந்திய மன்னர் காலத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்த பாரிய குளங்கள், அணைக்கட்டுகளுடன் செழிப்பு மற்றும் சுபிட்சம் நிறைந்து காணப்பட்ட எமது உன்னதமான இலங்கை நானூறு வருடங்களாக குடியேற்ற நாடாக விளங்கிய வேளையில் நாம் கொண்டிருந்த பெரும்பாலானவை அழிவடைந்தன.

நானூறு வருடங்களாக இடம்பெற்ற அழிவுக்கெதிராக 1505 தொடக்கம் எமது வீரர்கள் தமது மூச்சு, வியர்வை, கண்ணீர், இரத்தத்தை தியாகம் செய்து பல வருடங்களாகப் போராடிய பின்னர் 1948 இல் சுதந்திரம் பெற்றனர். நாங்கள் குடியேற்றவாதத்தில் இருந்து சுதந்திரம் பெற்றாலும் நானூறு வருடகாலமாக எமது நாட்டை ஆக்கிரமித்த, நிர்வகித்த வெளிநாட்டவர்கள் இந்நாட்டில் ஏற்படுத்திய பிரச்சினைகள், உருவாக்கிய சிக்கல்கள் என்பவற்றை எம்மிடம் ஒப்படைத்துவிட்டுத்தான் திரும்பிச் சென்றார்கள்.

**சுதந்திரம் என்ற சொல் பரவலாக வியாபித்துச் செல்கின்ற சொல்லாக மாறியுள்ளது. சுதந்திரம் என்ற சொல்லுக்கு விரிவான பல வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. சுதந்திரம் என்ற சொல் புதிய மிகைத் தொழில்நுட்பத்துடன் மிகவும் வியாபித்துச் சென்றுவிட்டது.**

சுதந்திரம் என்ற சொல் பரவலாக வியாபித்துச் செல்கின்ற சொல்லாக மாறியுள்ளது. சுதந்திரம் என்ற சொல்லுக்கு விரிவான பல வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. சுதந்திரம் என்ற சொல் புதிய மிகைத் தொழில்நுட்பத்துடன் மிகவும் வியாபித்துச் சென்றுவிட்டது.

குறிப்பாக 30 – 40 ஆம் தசாப்தங்களில் அந்த வீரர்கள் முன்னெடுத்துச்சென்ற போராட்டத்தில் மதம், சாதி, இனபேதமின்றி அனைவரும் ஒன்றாக கூட்டுச்சேர்ந்து புரிந்த போராட்டம் மூலமாகப்பெற்ற வெற்றிக்குப் பின்னர் எமது நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் இன்றளவில் 68 வருடங்கள் கழிந்துள்ள தருணத்தில் எமது நாட்டை ஆக்கிரமித்தவர்கள் எம்மிடம் விட்டுச்சென்ற பிரச்சினைகளை நாங்கள் தீர்த்தோமா என்ற விடயத்தை நாம் அனைவரும் எமது மனச்சாட்சியைத் தட்டிக்கேட்க வேண்டும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் அனைத்தும் பௌதீக வளங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளித்துள்ளன. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்னுரிமை அளித்தன. எனினும் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரத்துவம், நட்புறவினை ஏற்படுத்துவதற்காகச் செய்யவேண்டிய பணிகளை நாங்கள் செய்திருப்பின் 80 ஆம் தசாப்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் தொடங்கி 26 வருடங்கள் கழிந்த மிலேச்சத்தனமான பயங்கரவாத யுத்தத்தை நாம் எதிர்நோக்க நேரிட்டிருக்காது என்பதை நான் நம்புகிறேன்.

எனவே, ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பொருளாதார அபிவிருத்தி, பௌதீக வளங்களின் அபிவிருத்தி மிகவும் முதன்மைப் பணியாக அமைவதைப்போன்றே நாட்டில் வசிக்கின்ற மக்களின் கலாசாரப் பண்புகள், மதம்சார் பண்புகள், மொழிசார் பண்புகள் அனைத்தையும் ஆட்சியாளர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும்.

இன்று எமது நாட்டில் மாத்திரமன்றி முழு உலகினையும் எடுத்துக்கொண்டால் உலகில் மிகவுயர்ந்த அபிவிருத்தி நிலவுகின்ற நாடுகளில் ஆட்சியாளர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு சவாலையும், பிரச்சினையையும் நான் காண்கிறேன். அதுதான் மிகைத் தொழில்நுட்ப யுகத்தில் இணையத்தளத்துடன் இணைந்துள்ள புதிய தலைமுறையினர், பொதுமக்கள் எல்லாவேளைகளிலும் தமது சிந்தனைகள், தமது மனோபாவங்கள், தமது திடசங்கற்பங்கள் மற்றும் தமது குறிக்கோள்களுக்காக ஆட்சியாளர்களைப் பார்க்கிலும் முன்னிலையில் இருக்கிறார்கள். அது தொழில்நுட்ப உலகில் நான் முன்னர் கூறியவாறு 30வது தசாப்தத்தில் 40, 50வது தசாப்தத்தின் கலாசாரப் பிள்ளையின் மற்றும் 21வது நூற்றாண்டில் இந்த 2016 இன்றைய இனத்தில் பிறக்கின்ற தொழல்நுட்பப் பிள்ளைக்கும் இடையில் நிலவுகின்ற பிரதான மாற்றங்களூடாக எம்மால் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டிய விடயமாகும்.

எனவே மிகைத் தொழில்நுட்ப உலகத்தில் வசிக்கின்ற மக்கள், புதிய தலைமுறையினர், புதிய மனோபாவங்கள், புதிய சிந்தனைகளுடன் பயணஞ்செய்கையில் பெரும்பாலும் சகல பிரிவுகளிலும் மாற்றங்களுக்கு இலக்காவர். அவ்வாறு மாற்றங்களுக்கு இலக்காகும்போது அனைத்து விடயத்துறைகளிலும் புரட்சிகரமான மாற்றங்களைக் காண்பர். புரட்சிகரமான எண்ணக்கருக்கள் தோன்றும், புதிய சிந்தனைகள் உருவாகும். அதனூடாக நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அந்த மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கத்தக்கவாறு நாமனைவரும் கூட்டாக எமது அரசாட்சியை



மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகின்றது. எமது நாடு என்றவகையில் எடுத்துக்கொண்டால், அங்குள்ள நிலைமைகள் அனைத்தையும் கவனத்திற்கொண்டு நான் முன்னர் கூறியவாறு சுதந்திரம் என்பதன் அர்த்தம் பற்றிப் புதிய கோணத்தில், புதிய அர்த்தத்துடன் நோக்கவேண்டியது மிகவும் அத்தியாவசியம் என நான் நம்புகிறேன். இன்றைய உலகில் வரைவிலக்கணங்கள் என்றவகையில் பகுப்பாயும்போது சுதந்திரமென்ற பதம்தான் பகுப்பாய்வு செய்யவுள்ள மிகச்சிரமமான, மிகவும் சிக்கலான சொல்லாகும்.


சுதந்திரம் என்ற சொல் பரவலாக வியாபித்துச் செல்கின்ற சொல்லாக மாறியுள்ளது. சுதந்திரம் என்ற சொல்லுக்கு விரிவான பல வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. சுதந்திரம் என்ற சொல் புதிய மிகைத் தொழில்நுட்பத்துடன் மிகவும் வியாபித்துச்சென்றுவிட்டது. எமது விழுமியங்கள், எமது நாகரிகத்தின் மரபுரிமைகளுடன் புதிய உலகம் மற்றும் புதிய எண்ணங்களை நோக்கும்போது சுதந்திரம் எனப்படுகின்ற மிகவும் விரிவான சிக்கலான சொல், ஆட்சியாளர்களும், அனைவரும் பாரதூரமான சவாலெனக் காண்கின்ற கருமமென்றவகையில் கூறமுடியும்.

இன்று நாங்கள் சனநாயகம் பலமடைந்த ஒரு காலகட்டத்திலேயே வசிக்கிறோம். இங்கு நாங்கள் தெளிவாகவே விளங்கிக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. இன்று நாங்கள் இருப்பது மன்னர்கள் மன்னராட்சி செய்கின்ற ஆட்சியொன்றில் அல்ல.

இந்தச் சுதந்திரம் மற்றும் சனநாயகம் பற்றிப் பேசும்போது சுதந்திரம் மற்றும் சனநாயகத்தைப் பாதுகாக்கும் பணியை எல்லாவேளைகளிலும் அரசாங்கமும், மக்களும் ஈடேற்றுவதைப்போலவே நாட்டின் முப்படையினர் சனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக எல்லாவேளைகளிலும் அரசியலமைப்புக்குள் அர்ப்பணிப்புடன் உள்ளார்கள்.

26 வருடங்களுக்கு மேலாக நிலவிய மிலேச்சத்தனமான எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத யுத்தத்தைத் தோற்கடித்து நாட்டில் சுதந்திரம், அமைதி, சனநாயகத்தைப் பலப்படுத்திய எமது பெருமதிப்புக்குரிய உன்னதமான படைவீரர்கள், உயிர்களைத் தியாகம்செய்த, ஊனமுற்ற, கை கால்களை இழந்த இன்று தமது பொறுப்புக்களை உரிய

**இன்று நாங்கள் சனநாயகம் பலமடைந்த ஒரு காலகட்டத்திலேயே வசிக்கிறோம். இங்கு நாங்கள் தெளிவாகவே விளங்கிக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. இன்று நாங்கள் இருப்பது மன்னர்கள் மன்னராட்சி செய்கின்ற ஆட்சியொன்றில் அல்ல.**



அண்மையில் ஜனாதிபதி வடபுலத்திற்கு விஜயம் செய்த போது சந்தித்தபோது...... கொலையுண்ட சிறுமி வித்தியாவின் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்த போது.... www.ft.lk

வகையில் ஈடேற்றுகின்ற அந்த ஒவ்வொருவருக்கும் முழுத்தேசத்தினதும் நன்மதிப்பு உரித்தாதல் வேண்டும்.

இன்று நாங்கள் சனநாயகம் பலமடைந்த ஒரு காலகட்டத்திலேயே வசிக்கிறோம். இங்கு நாங்கள் தெளிவாகவே விளங்கிக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. இன்று நாங்கள் இருப்பது மன்னர்கள் மன்னராட்சி செய்கின்ற ஆட்சியொன்றில் அல்ல.

உயிரைத் தியாகம்செய்து அந்த மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை, பிரிவினைவாதத்தை தோல்வியடையச்செய்து நாட்டுக்கு சுதந்திரத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொடுக்க எமது முப்படையினர், பொலீசார், சிவில் பாதுகாப்பு திணைக்களம் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புப்பிரிவுகளும், அரசசேவையும், ஒட்டுமொத்த பொதுமக்களும், அரசியல் தலைமைத்துவங்கள் போன்ற அனைவரினதும் அர்ப்பணிப்பு, தியாகசிந்தை மற்றும் வெற்றி தொடர்பிலிருந்த தனிப்பட்ட துணிச்சல், தன்னம்பிக்கை மற்றும் திடசங்கற்பத்தை கௌரவத்துடன் நினைவுகூர்வது மிகவும் அவசியமாகும்.

அதைப்போலவே இன்றளவில் நாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளின்போது அரசியல் மறுசீரமைப்பு, சமூக, பொருளாதார மறுசீரமைப்பு ஆகிய விடயங்களுக்கு நாங்கள் முதன்மையிடம் கொடுத்துள்ளோம். பெரும்பாலும் நான் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளவாறு 26 வருடங்களுக்கு மேலாக நீடித்த மிலேச்சத்தனமான பயங்கரவாத யுத்தம் நிறைவடைந்த பின்னர் யுத்தத்திற்கு பிற்பட்டகால இலங்கையை எடுத்துக்கொண்டால் இன்றேல், யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆரம்ப காலகட்டத்தை நாம் ஞாபகப்படுத்திப் பார்த்தால் 2009 மே மாதத்தின் 19, 20 ஆகிய திகதிகளிலும் அதன் பின்னரும் யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியொன்றில் புரியவேண்டிய பணிகள், அதைப்போலவே முரண்பாட்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியிலிருந்த பணிகளை நாம் ஈடேற்றாமையின் விளைவாக அவற்றை அமுலாக்குதல் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக எமக்குப் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

2009 மே 19, 20 ஆந் திகதிகளுக்குப் பின்னர் யுத்தத்திற்கு பிற்பட்ட காலமொன்றில் புரியவேண்டிய பணிகள் எம்மால் ஈடேற்றப்பட்டிருப்பின் குறிப்பாக கடந்த வருடத்தின் செத்தெம்பர் மாதத்தில் ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் ஆணைக்குழு ஊடாக எமக்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் அவ்விதமாக முன்வைக்கப்பட்டு இருக்கமாட்டாதென நான் நம்புகிறேன். எனவே இன்று நாங்கள் நிகழ்கால நிலைமையை எடுத்துக்கொண்டால் 2009 மே 19, 20 இற்கு பிற்பட்ட காலப்பகுதிக்குள் புரியவேண்டிய பணிகளான: இனங்களின் ஐக்கியம், நல்லிணக்கத்திற்கான சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கியர், மலாயர் அனைவரினதும் ஒற்றுமைக்காக எம்மால் ஆற்றக்கூடிய பணிகளை ஈடேற்றுவதற்காக இந்த நாட்டு மக்கள் 2015 சனவரி 08 ஆந் திகதி நடைபெற்ற தேர்தலின்போது எனக்கும், எமது அரசாங்கத்திற்கும் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அதிகாரத்தை வழங்கினார்கள்.

2015 சனவரி 08 ஆந் திகதி சனாதிபதி தேர்தலுக்காக சமர்ப்பித்த தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்த விடயங்களை அமுலாக்கவும், 1948 இல் குடியேற்றவாத ஆட்சியிலிருந்து சுதந்திரம் கிடைத்த பின்னர் எமக்கு அவர்கள் விட்டுச்சென்ற பிரச்சினைகளை 48 வருடங்களுக்குப் பின்னர் தீர்ப்பதற்கும் எமக்கு எஞ்சியுள்ளது என்பதை கவனத்திற் கொள்ளவேண்டியது அத்தியாவசியமாகும். அப்படியானால் 2009 மே 19, 20 இன் பின்னர் புரியவேண்டிய கருமங்களை இந்நாட்டு மக்கள் 2015 சனவரி 09 ஆந் திகதிக்குப் பின்னர் அப்பிரச்சினைகள் எம்மால் தீர்க்கப்பட வேண்டியது அத்தியாவசியமெனக் கூறுவதை நாமனைவரும் வாதப்பிரதிவாதமின்றி ஏற்றுக்கொள்கிறோம்.

எமக்குப் பின்னர் சுதந்திரம்பெற்ற உலகின் பெரும்பாலான நாடுகள் தமது நாட்டில் இனங்களின் ஒற்றுமை, நல்லிணக்கம், மதரீதியான ஒற்றுமை, மொழிரீதியான ஒற்றுமை அவையனைத்திலும் பரவலான நல்லிணக்க

நடைமுறையினைப் பயன்படுத்தி அரசியல் மற்றும் சமூக மறுசீரமைப்புக்களை மேற்கொண்டமையால் அவர்கள் இன்று பலம்பொருந்திய நாடுகளாக முன்னேறி வளர்ந்து வந்துள்ளார்கள்.

எனவே, எமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு மிகவும் தனித்துவமானதாகும். ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் ஆணைக்குழு ஊடாக எமக்கு வந்துள்ள பிரேரணைகள் சம்பந்தமாக தவறான பொருள்விளக்கம் தருகிறார்கள். அந்தப் பிரேரணைகள் தொடர்பில் நாங்கள் முகங்கொடுப்பது அரசின் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ளவே, எமது நாட்டு மக்களின் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ளவே, எமது பாதுகாப்புப் படையினரின் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ளவே, அத்துடன் முப்படையினரை உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட படையினராக மாற்றிக்கொள்ளவே என்பதை நான் மிகவும் தெளிவாகக்கூறுகிறேன். ஐக்கியநாடுகள் தாபனத்தை முதன்மையாகக்கொண்ட அனைத்து சர்வதேச அமைப்புகளும், அனைத்து நாடுகளும் எமது நாட்டை கௌரவமாக ஏற்றுக்கொள்வதற்காக அந்தப் பிரேரணைகளை நாங்கள் எதிர்கொண்டு மிகவும் பொறுமையுடன், ஒழுக்கமாக, வினயமாக அதற்காக செயற்படுவோம்.

இவ்வேளையில் ஒருசில அரசியல் எதிரிகள் அதிகாரம் பற்றிய துரிதமான எதிர்பார்ப்பு உள்ளவர்கள் இந்தப் பிரேரணைகளை அமுலாக்குகையில் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற நடைமுறைகள் சம்பந்தமாக மக்களைத் தவறாக வழிநடத்துகின்ற பல பொருள்விளக்கங்களைத் தருகிறார்கள்.

அந்தப் பிரேரணைகளை அமுலாக்குவதனால் இந்த நாட்டில் உறுதி செய்யப்படுவது சுதந்திரம், சனநாயகம் மற்றும் நல்லிணக்கமாகும்.

பாதுகாப்புப் படையினரின் மனங்களை அமைதியிழக்கச்செய்யும் வகையில் பல்வேறு விதமான தவறான கருத்துக்கள், அபிப்பிராயங்களை இது சம்பந்தமாக அரசியல் எதிரிகளும், பல்வேறு தீவிரவாதக் கருத்துக்களை கொண்டவர்களும் நடைமுறைப்படுத்தி வருவது புலனாகின்றது.

நாட்டின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்து, ஆள்புல ஒருமைப்பாட்டினைப் பாதுகாத்து நாட்டில் தேசிய நல்லிணக்க வேலைத்திட்டத்தை பலப்படுத்தக் காரணம் அரசாங்கத்தின் கௌரவம், முப்படையினரது கௌரவம், பாதுகாப்புப் பிரிவினரது கௌரவம் மற்றும் ஒட்டுமொத்த மக்களினதும் கௌரவத்தை பாதுகாத்துக்கொண்டு அப்பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் அரசாங்கம் என்றவகையில் கூட்டாக எதிர்நோக்குவதாக இன்றைய 68வது சுதந்திர தினத்தன்று உங்கள் அன்புக்குரிய பிரதான மக்கள் சேவகன் என்றவகையில், நாட்டின் சேனாதிபதி என்றவகையில், சனாதிபதி என்ற வகையில் நான் முழுத்தேசத்திற்கும் உறுதியுரை பகர்கிறேன்.


எனவே இன்றையதினம்போன்ற ஒருநாளில் எமது மனங்களில் நாங்கள் பெருமைமிக்க இனம் என, பெருமைமிக்க அரசு என உலகப்படத்தில் குறிக்க நாமனைவரும் செயலாற்றவேண்டிய அவசியம்பற்றி நாம் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த மக்களும் அதற்காக தம்மை அர்ப்பணித்து திடசங்கற்பத்துடன் செயாற்றுவார்களென நான் நம்புகிறேன்.

கடந்த ஆண்டில் எமது புதிய அரசாங்கம் என்ற வகையில் பெற்றுக்கொண்ட வெற்றிகளின்போது இந்நாட்டு மக்களின் சனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாத்து 19வது அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளலானது இந்நாட்டின் பொதுமக்கள் இந்த யுகத்தில் பெற்றுக்கொண்ட மகத்தான வெற்றியாகுமென்பதை நான் மிகவும் தெளிவாகக் கூறுகிறேன். சுயாதீன ஆணைக்குழுக்களைத் தாபிப்பதன் ஊடாக 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டு மக்கள் வேண்டுகோள்விடுத்த தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. 19வது அரசியலமைப்புத்திருத்தம் மூலமாக தேர்தல்கள், பகிரங்கசேவை, பொலிசு, மனித உரிமைகள், கணக்காய்வு அலுவல்கள் இத்தகைய பல நிறுவனங்களுக்காக சுயாதீன ஆணைக்குழுக்களைத் தாபித்து இந்நாட்டு மக்களின் பெருமைமிக்க உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதைப்போலவே கடந்துசென்ற ஒருவருடகால எல்லைக்குள் ஊழல், மோசடி, விரயம் என்பவற்றைக் குறைப்பதற்காக நாங்கள் அரசாங்கம் என்றவகையில் மேற்கொண்ட செயற்பாடுகளில் வெற்றிகரமான பெறுபேறுகள் உள்ளமையை நான் தெளிவாகக் கூறவேண்டும். 19வது அரசியலமைப்பினால் நாங்கள் பாராளுமன்றத்தைப் பலப்படுத்தினோம் என்பது நீங்கள் எவரும் ஏற்றுக்கொள்கின்ற விடயமாகும். அரசசேவையை அரசியல் மயமாக்கலிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக 19வது அரசியலமைப்புத் திருத்தம் மூலமாக உருவாக்கிய சுயாதீன ஆணைக்குழுக்கள் தெளிவாகவே வருங்காலத்தில் செயற்படும்.

இந்த அனைத்துவிதமான சுதந்திரத்தையும் வழங்குகையில் குறிப்பாக சுதந்திர ஊடகம் சம்பந்தமாக நாங்கள் கடைப்பிடிக்கின்ற கொள்கையில் இந்த நாட்டின் சுதந்திர ஊடகத்திற்கு விரிவான சுதந்திரத்தை நாங்கள் வழங்கியுள்ளோம். அந்தச் சுதந்திரம் இன்று உச்சகட்டத்தை

**உலகின் பண்பட்ட தேசமாக எனது உத்தமமான தேசத்தை மாற்றுவதற்காக எதிர்வரும் தசாப்தங்களுக்காக எமது நாளையதினத்தை தயார்படுத்த நீங்களும், நாம் ஒவ்வொருவரும் கூட்டாக இணைந்து நட்புடன் ஒன்றுசேர்ந்து சகோதரத்துவத்துடன் செயலாற்றுவோமாக.**



வடபுல விஜயத்தின் போது ஜனாதிபதி இந்துமதச் சடங்கொன்றில் ஈடுபடுகிறார்... www.omlanka.net

அடைந்துள்ளது. ஊடகத்துறையில் பணியாற்றிவருகின்ற கல்விமான்களுக்கு, அறிஞர்களுக்கு, அறிவாளிகளுக்கு, மனிதநேயம் கொண்டவர்களுக்கு ஒழுக்கம், பொறுமையுடன் தமது ஊடகத்தை நெறிப்படுத்துவதற்காகவே நாங்கள் இந்த சுதந்திரத்தைக் கொடுத்துள்ளோம்.

அவ்வாறு வழங்கப்பட்ட சுதந்திரத்தை அந்தக் குறிக்கோள்களிலன்றி பாவிப்பதாயின் வழங்கப்பட்டுள்ள அந்தச் சுதந்திரம் எதிர்காலத்தில் எமக்குப்பிறகு வருபவர்களால் ஏதேனுமொரு தினத்தில் இழக்கச்செய்விக்க இடமுண்டு. எனவே, அந்தச் சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான பொறுப்பு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் உண்டு.

பொருளாதார ரீதியாக சுபிட்சமடைந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப அதைப்போலவே கல்வி முன்னேற்றத்தை ஏற்படுத்த, இலவசக் கல்வியைப் பலப்படுத்த, இலவச சுகாதார சேவையைப் பலப்படுத்த, போசாக்கின்மையற்ற தேசமொன்றைக் கட்டியெழுப்ப புதிய மிகைத்தொழில்நுட்பத்துடன் புதிய தலைமுறையினரை பதியம்செய்து இந்த போட்டித்தன்மைமிக்க உலகில் சர்வதேசத்தில் முன்நோக்கிச்செல்ல, அதைப்போலவே சுதேச கைத்தொழில்கள், சுதேச உணவு உற்பத்தி இவையனைத்தையும் முன்னேற்றி வெளிநாட்டுச் சந்தைக்காக எமது உள்நாட்டு உற்பத்திகளை அனுப்பிவைக்கும் வேலைத்திட்டத்தை பலப்படுத்தும் கொள்கையை நாங்கள் தீவிரமாக அமுலாக்குவோம்.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட 68 வருட காலப்பகுதியில் எமது சமுத்திரவளம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக எந்தளவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது எனும் கேள்வி எம்மெதிரில் உண்டு. உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சமுத்திரவளத்தை பாவனைக்கு எடுக்கையில் நாம் எமது நாட்டை முன்னேற்றுவதற்காக நூற்றுக்கு ஒரு சதவீத அளவிலான சமுத்திரவளத்தையேனும் பாவனைக்கு எடுத்திராமை புலனாகின்றது.


இன்று நாங்கள் சனநாயகம் பலமடைந்த ஒரு காலகட்டத்திலேயே வசிக்கிறோம். இங்கு நாங்கள் தெளிவாகவே விளங்கிக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. இன்று நாங்கள் இருப்பது மன்னர்கள் மன்னராட்சி செய்கின்ற ஆட்சியொன்றில் அல்ல.

இன்றைய தினத்தைப்போன்ற பாக்கியம்பெற்ற ஒரு நாளில் 1948 இல் சுதந்திரம் பெற்றுக்கொள்வதற்காகப் போராடிய தேசப்பற்றுமிக்க உன்னதமான தலைவர்களை பெருமதிப்புடன் நினைவுகூர்ந்து 26 வருட மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவந்து உயிர்த்தியாகம்செய்து நாட்டுக்குச் சமாதானத்தை பெற்றுத்தந்த எமது தலைசிறந்த போர்வீரர்களுக்கு வீரவணக்கம் தெரிவித்து இன்றையதினத்தில் எமது பணியானது நாளைய தினத்திற்காக அர்ப்பணிப்புடன் கூட்டாக ஈடேற்றி அரசியல் பேதங்களின்றி, குறுகிய கருத்துக்களின்றி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உடனடி நடவடிக்கைகளில் இறங்குதல் போன்ற முட்டாள்த்தனமான நடவடிக்கைகளிலிருந்துவிடுபட்டு கூட்டாகச்செயலாற்றி சுதந்திரத்தையும், சனநாயகத்தையும் பாதுகாத்துக்கொள்வோம்.

சுதந்திரம் மற்றும் சனநாயகத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கையில் விவேகமாக, அறிவுபூர்வமாக, பொறுமையுடன், சுயஅறிவுடன் அப்பணிக்காக அர்ப்பணிக்குமாறு குறிப்பாக அரசியல் எதிராளிகளுக்குக் கூறவேண்டும்.

உலகின் பண்பட்ட தேசமாக எனது உத்தமமான தேசத்தை மாற்றுவதற்காக எதிர்வரும் தசாப்தங்களுக்காக எமது நாளையதினத்தை தயார்படுத்த நீங்களும், நாம் ஒவ்வொருவரும் கூட்டாக இணைந்து நட்புடன் ஒன்றுசேர்ந்து சகோதரத்துவத்துடன் செயலாற்றுவோமாக.

*(68வது சுதந்திரதின வைபவ உரை)*



இலங்கையில் மனித நேயம் தொடர்பாகச் சிந்திக்கும் அனைவரது மனங்களிலும் இன்று மறக்க முடியாத துன்பியல் நிகழ்வுகள் ஊடாடிக் கொண்டிருக்கிறது. காணமல் போகச் செய்யப்படல், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் என பலதைச் சொல்லலாம். குறிப்பிட்ட தாக்கத்திற்கு உட்படாதவர்களுக்கு இது வெறும் செய்தியாக மட்டுமே அமையும். மாறாக பாதிப்பிற்கு உட்பட்டவர்களுக்கு வாழ் நாள் முழுவதும் வேதனையும், துன்பமும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. நானும் இப்படியான அனுபவத்தினைப் விருப்பம் இன்றிப் பெற்றுக் கொண்டவன். இப் படைப்பும் இக் கருத்தினை வெளிப்படுத்துவதாகக் அமையப்பெற்றுள்ளது.

ஓர் உயிர் என்பது பல சந்ததிகளை உருவாக்கும் ஆரம்பம் ஆகும். அவ்வாறான உயிர் இல்லாமல் போகச் செய்யப்படுமாயின் அவ் உயிர் மூலம் உருவாக்கப்பட வேண்டிய சந்ததியே அழிக்கப்படுகின்றது. இதற்கு பொறுப்பானவர்கள் அதிகார வர்க்கத்தினர். இதனைச் சித்திரிக்கவே இங்கு உள்ள கருவின் மேல் பதிந்துள்ள பாதணி அடையாளம் வெளிப்படுத்தப்படுகிறது. இதனைச் சுற்றி காணமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான பத்திரிகைச் செய்தித் தாள்கள் ஒட்டப்பட்டள்ளன. இன்று வரை காணமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக உன்னிப்பாகப் பேசுவது ஊடகங்கள் மட்டுமே ஆகும்.

ஓவியம் : **மார்க்கண்டு மனோகர்**

# கட்டம் கட்டமாக நாங்கள் முன்நோக்கிச் செல்கிறோம்



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்
**மங்கள சமரவீர**

இயன்றளவில் ஜினீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30வது கூட்டத்தொடரில் நாங்கள் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளோம்.

கடந்த பல வருடங்களாக எமது நாட்டுக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகள் காரணமாக எமது நாடு சர்வதேசத்தில் பாரியளவில் அபகீர்த்தியடைந்தது. பிரிவினைவாதமானதும் கடினமானதுமான வாக்களிப்பின் மத்தியில் 2012 ஆம் ஆண்டில் இருந்து இடையறாமல் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகளால் சர்வதேசத்தின் முன்னிலையில் இலங்கை தொடர்ச்சியாகத் தோல்வியடைந்தது. தனிமைப்படுத்தப்பட்டது.

கடந்த அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையொன்றை வென்றெடுத்ததாக மார்தட்டிக்கொண்டாலும் அந்த முயற்சியானது பேரவையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதில் தோல்விகண்டமையால் அது இலங்கை பெற்ற உண்மையான வெற்றியெனக் கருதப்படவியலாது. வாக்கெடுப்புக்குப்பின்னர் அமுலாக்கப்பட்ட இந்தப் பிரேரணை ஊடாகப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் கோபமடைந்ததோடு, அதன் மூலமாக




இலங்கையைத் தொடர்ந்தும் அபகீர்த்திக்கு உள்ளாக்கி 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இடையறாமல் இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட வழிசமைத்தது.

அக்காலகட்டம் உண்மையிலேயே சமாதானத்தை நேசிக்கின்ற, சனநாயகத்தை நேசித்த அத்துடன் பலதசாப்தங்களாக ஐக்கியநாடுகளின் மத்தியில் நன்மதிப்புக்கு இலக்காகிய அத்துடன் நடுநிலைமை வாய்ந்த நட்புறவுக்கொள்கையைக் கடைப்பிடித்த இலங்கை சர்வதேசத்தின் முன்னிலையில் கடுமையான சிரமத்திற்கும், அபகீர்த்திக்கும் இலக்காகிய காலப்பகுதியாக அமைந்தது.

3 தசாப்தங்களாக நிலவிய யுத்தம் 2009 ஆம் ஆண்டில் நிறைவடைந்த பின்னர் சமாதானம் உரித்தாவதற்குப் பதிலாக எமக்கு சுதந்திரம் இழந்த, சனநாயக ஆட்சி மட்டுப்படுத்தப்பட்ட சட்டமே இல்லாத நாடே உரித்தானது. சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் வசிப்பதற்கான எமது நாட்டின் கனவு கலைந்தது. நல்லிணக்கம் மூலமாக இனங்களை ஐக்கியப்படுத்துவதற்காகவும், எமது நாட்டில் நிலவுகின்ற பன்வகைமையைக் கொண்டாடுகின்ற ஒரு தேசத்தை உருவாக்குவதற்காகவும் கிடைத்த வாய்ப்பு இனங்களுக்கிடையில் இடைவெளியை அதிகரிக்கின்ற மற்றும் சர்வதேச ரீதியாக எமது நாட்டைத் தனிமைப்படுத்துகின்ற செயலின் மத்தியில் அற்றுப்போனது.

மனிதஉரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இடம்பெறவில்லை என்பதோடு, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மனிதஉரிமை மீறல் தொடர்பான சம்பவங்களில் அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருந்தது. இலங்கை சர்வதேசத்தில் விமர்சிக்கப்பட்டதோடு, இலங்கை சம்பந்தமாக சர்வதேச விசாரணையொன்றை மேற்கொள்ளல் தொடர்பிலும் அவர்களின் கவனம் செலுத்தப்பட்டது.

**நல்லிணக்கம் மூலமாக இனங்களை ஐக்கியப்படுத்துவதற்காகவும், எமது நாட்டில் நிலவுகின்ற பன்வகைமையைக் கொண்டாடுகின்ற ஒரு தேசத்தை உருவாக்குவதற்காகவும் கிடைத்த வாய்ப்பு இனங்களுக்கிடையில் இடைவெளியை அதிகரிக்கின்ற மற்றும் சர்வதேச ரீதியாக எமது நாட்டைத் தனிமைப்படுத்துகின்ற செயலின் மத்தியில் அற்றுப்போனது.**

அதன் மூலமாக சர்வதேசச் சந்தையில் பிரவேசித்தலும், பொருளாதார முன்னேற்றத்தின் ஊடாக முதலீட்டினையும், நன்மைகளையும் கவர்ந்திழுப்பதற்காக இருந்த வாய்ப்பும் எமது நாட்டு மக்களுக்கு அற்றுப்போனது.

ஆனால் 2015 சனவரி மாத்திலிருந்து சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினதும் தலைமையில் நெறிப்படுத்தப்படுகின்ற புதிய நாட்டின் திடசங்கற்பம் மற்றும் முயற்சியின் மத்தியில் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி ஆகிய உலகளாவிய பெறுமானங்களை மதிக்கின்ற, பொறுப்புக்கூறவேண்டிய, நம்பிக்கைமிக்க, சமாதானம் நிறைந்த தேசமென்றவகையில் மீண்டும்மொரு தடவை சர்வதேசத்தின் கவனத்தை வென்றெடுக்க இலங்கைக்கு இயலுமாயிற்று.

அதற்கிணங்க உண்மை, நீதி, இழப்பீடு வழங்குதல் மற்றும் மீள் நிகழாமையை உறுதிசெய்து அனைத்து மக்களுக்காகவும் சமாதானத்தையும், சௌபாக்கியத்தையும் பெற்றுக்கொடுப்பதற்காக அர்த்தபுஷ்டிமிக்க நல்லிணக்கத்தை நோக்கிச்செல்கின்ற பயணத்தில் ஒரு காலகட்டத்தில் பிளவுபட்டிருந்த ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் ஒத்துழைப்பினை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள, இணங்கச் செய்விக்க இயலுமாயிற்று.

நல்லிணக்கம் மூலமாக இனங்களை ஐக்கியப்படுத்துவதற்காகவும், எமது நாட்டில் நிலவுகின்ற பன்வகைமையைக் கொண்டாடுகின்ற ஒரு தேசத்தை உருவாக்குவதற்காகவும் கிடைத்த வாய்ப்பு இனங்களுக்கிடையில் இடைவெளியை அதிகரிக்கின்ற மற்றும் சர்வதேச ரீதியாக எமது நாட்டைத் தனிமைப்படுத்துகின்ற செயலின் மத்தியில் அற்றுப்போனது.

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கொள்கைப் பிரகடனம் மற்றும் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் வழிச்சென்று எம்மால் இவ்வருடத்தில் இரண்டு தடவைகள் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை மக்களிடமுள்ள விருப்பம் பிரதிபலிக்கப்படுகின்றது. மனிதஉரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நம்பகத்தன்மைமிக்க விசாரணைகளை மேற்கொள்ளலும் இந்தப் பொறிமுறையில் அடங்குவதோடு, அதன் மூலமாக மீண்டும் ஏற்படாமை உறுதிசெய்யப்படுவதுடன் சர்வதேச சமூகத்தினதும், இலங்கையிலும், அதற்கு வெளியிலும் வசிக்கின்ற அனைத்து தரப்பினர்களினதும் ஒத்துழைப்பினைப்பெற்று நல்லிணக்கம், சமாதானம் மற்றும் உறுதிநிலையினை அடைவதற்காக இலங்கை முன்நோக்கி அடியெடுத்துவைக்க இயலுமானதாக அமையும்.

என்னால் ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டதன் பிரகாரம் பயங்கரவாதத்தை தோற்கடிப்பது அத்தியாவசியமானதாக அமைந்தது. எனவே இன்றளவில் பயங்கரவாதத்திற்கான காரணங்களைக் கண்டறிவதிலும், தேசத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவதிலும் செயலாற்றுவதற்கான சுதந்திரம் இலங்கைக்கு உரித்தாகியுள்ளது. இலங்கையின் ஆயுதப்படையினர் தமது ஒழுக்கம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பில் சர்வதேச பாராட்டுக்கு இலக்காகிய ஒரு காலகட்டம் இருந்தது. எனினும் அண்மைக்கால வரலாற்றில் அதிகாரத்தில் குறித்த ஒருசிலரால் நிர்மாணிக்கப்பட்ட முறைமை மற்றும் கலாசாரம் காரணமாக ஆயுதப்படையினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டது. இந்த நிலைமையை சர்வதேசம் விளங்கிக்கொண்டுள்ளது.

இப்பிரேரணை ஒரு புறத்தில் சர்வதேச சமூகத்தினருக்கிடையிலுள்ள இந்த நோக்கினை உறுதிப்படுத்துவதாக அமைவதோடு, நம்பகத்தன்மைமிக்க பொறுப்புக்கூறல் செயற்பாடு மூலமாக தொழில்சார் நிபுணத்துவம் கொண்டதாக முறைப்படி செயலாற்றியவர்களின் நற்பெயரையும், கௌரவத்தையும் பாதுகாக்கும். ஐக்கியநாடுகள் அமைதிகாக்கும் திணைக்களத்தால் உலகளாவிய அமைதிகாக்கும் செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுமாறு விடுக்கப்படுகின்ற அழைப்பு மற்றும் செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நியூயோர்க்கில் நடத்தப்படவுள்ள ஐக்கிய அமெரிக்க சனாதிபதியால் இணைத் தலைமைத்துவம் வகிக்கப்படுகின்ற அமைதிகாக்கும் நடவடிக்கை பற்றிய சர்வதேசத் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்கும் பொருட்டு மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு கிடைத்த அழைப்பு இந்த நிலைமையை நன்கு பிரதிபலிக்கின்றது.

நீண்டகாலமாக கட்டம்கட்டமாக எமது நாட்டு மக்கள் மத்தியில் சமாதானத்தை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, சர்வதேசத்தில் எமது நாட்டுக்கு உரித்தான இடத்தை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான கொள்திறன், நிபுணத்துவ அறிவு மற்றும் அர்ப்பணிப்பு இலங்கையிடம் இருக்கின்றதென்பது எமது நம்பிக்கையாகும். அதன்படி முறையாக அனைவருக்கும் நன்மைகள் கிடைக்கின்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடைவது எமது எதிர்பார்ப்பாகும்.

# கருத்தாவும் கருவியும்





*நன்றி வீரகேசரி (22-04-1979)*

சிங்களம் பேசும்
மனிதனும்
தமிழ்ப் பேசும்
மனிதனும்
இச்சிறு பூமித்தீவில்
மனிதனும் மனிதனுமாக
வாழவேனும்
சிங்களம் ஒரு மொழி
அது
தனித்து வாழ்ந்த
ஒரு மனிதக் கூட்டம்
தமக்குள்ளே
மனிதனும் மனிதனும்
கலந்துறவாடி
வாழ்வதற்காகக்
கண்டுகொண்ட கருவி
தமிழ் ஒருமொழி
அதுவும் அவ்வாறே
மதமும்
மனிதன் கண்ட
ஒரு கருவியே
மனிதன்
பௌத்தனாயிருப்பினும்
மனிதன்
இந்துவாயிருப்பினும்
மனிதன்
முஸ்லீமாயிருப்பினும்
வாழ்வில்
மனிதனாயிருப்பதற்கே
தமிழ்ப் பேசும்
மனிதனுக்கும்
சிங்களம் பேசும்
மனிதனுக்கும்
மூலத்தேவைகள்
உணவு உடை வீடே
மனிதப் பிரச்சினைகளின்
மூலமும் இவையே
மொழி மூலம்
மனிதன் கேட்பது
மனிதத் தேவைகளே
மனிதன் சொல்வது
மனித ஆசைகளே
மனிதன் வெளியிடுவன
மனித உணர்வுகளே
மொழிகளின் ஒலிகள்
வேறு வேறு ஆயினும்
உள்ளூறை ஒன்றே!
மனித உயிர்ப்புகளே!
மனிதப் பிரச்சினைகள்
என்றும் எங்கும்
மனிதப் பிரச்சினைகளே
அவற்றிற்கு
சுயநல நோக்கில்
குறுகிய விளக்கமளித்து
மனிதனைக்
குறுக்கு மறுக்காய்
இழுக்காதீர்
மனிதனுக்கு மனிதனை
விரோதி யாக்காதீர்
மனித வீதியில்
மொழி வட்டங்கள் போட்டு
மதச் சுவர்கள் எழுப்பி
கூறுகூறாய் நின்று
அரசியல் நடத்தாதீர்
இனவெறியூட்டி
எரிகிற நெருப்பில்
எஞ்சியதைப் பிடுங்காதீர்
கருவிகளைப் கருத்தாவாக்கி
கருத்தாவை இம்சிக்காதீர்
கருவிகளால் முகத்தை மூடி
மகத்தான மனிதனை
மறைவாகக் கொல்லாதீர்
அரசியல் விபச்சாரிகளே
மனிதனாயிருந்து
மனிதனை நேசித்து
மனிதனாக வாழ
மனிதனை விட்டு விடுங்கள்

**– யோ. பெனடிக்ற்பாலன்**








ஒன்று நடந்து முடிந்துவிட்டது. அது முழு சமூகத்திற்கும் புதிய சக்தியை கொடுப்பது போன்று நாட்டின் அபிவிருத்திக்கு ஆரம்பம் என எழுத்து மூலம் அறிவிக்கலாம். பாரிய சத்தத்தை கேட்காதவருக்கு அதனை அனுபவிக்க முடியாது. அப்பகுதியை சேர்ந்தவருக்கோ, நாட்டை சேர்ந்தவருக்கோ அதன் சத்தத்தை கேட்க முடியாமல் போகலாம். சுதந்திரமாக பயணிக்கும் புகையிரதம் தமது பயணத்தை இரத்து செய்வது போன்று, பயணிக்கும் புகையிரதமும் தமது பயணத்தை சென்றடைவது சாத்தியமற்றதாகும். எனது கலையின் ஆரம்பமும் முடிவும் அவ்வாறானதே. புகையிரதத் தண்டவாளம் போன்று பிரிந்திருக்கும் இரண்டு இனங்களை ஒன்றாக்கும் புகையிரத பெட்டி போன்று அவர்களிடையே உறவினை ஏற்படுத்த வேண்டும். இரத்து செய்யப்பட்ட மற்றும் இலக்கை நோக்கி பயணிக்காத புகையிரதங்கள் கூட புகையிரத வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. எனினும் அதன் துர்ப்பாக்கியங்கள் வலாற்றில் இடம்பெறவில்லை. அதனை அனுபவிப்பவர்கள் இன்றும் அமைதியாகவே உள்ளனர். நீங்களும் நானும் அதில் அடங்குகின்றோம்.

ஓவியம் : **கமகே பெத்தும் நிமேஷ்**

# இனத்துவ அடிப்படையைப் பார்க்கிலும் முக்கியத்துவம் வகிப்பது இலங்கையர் என்ற அடிப்படையாகும்



**ஹில்மி அஹமட்**
உப தலைவர்
இலங்கை முஸ்லீம் பேரவை

முன்பு இந்நாட்டில் நிலவிய நிலைமையைப் பார்க்கிலும் நிகழ்கால அரசாங்கம் நல்லிணக்கம் தொடர்பில் செயலாற்றுகின்ற விதம்பற்றி மகிழ்ச்சியடைய இயலும். எனினும் நாங்கள் எதிர்பார்த்த அளவில் எதுவும் இடம்பெறுவது கிடையாது. நல்லாட்சி அரசாங்கம் நல்லாட்சி மற்றும் நல்லிணக்கம்போன்ற விடயங்களில் இந்நாட்டின் பிரஜைகள் அனைவரையும் பங்கேற்கச்செய்வித்து முற்போக்குவாதப் பயணத்தை நோக்கிச்செல்வதில் இன்னமும் தோல்விகண்டுள்ளது. மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில்போன்றே முஸ்லிம் மக்கள் ஒதுக்கப்பட்ட மக்கள் குழுவொன்றாக கவனிக்கப்படுவதோடு, இன்னமும் அவர்களின் பிரச்சினைகளை பிரதான மேடைக்கு கொண்டுவர எவருமே முன்வரவில்லை. 1999 தொடக்கம் இற்றைவரை தமிழ் அரசியல்வாதிகள், முஸ்லீம் அரசியல்வாதிகள், சிவில் சமூகம், அரசாங்கம் அல்லது சர்வதேசம் முஸ்லீம் மக்களை ஒதுக்கப்பட்ட பிரஜைகளாகவே கருதுகிறார்கள்.

கடந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இந்நாட்டு அரசியல் வரலாற்றில் முன்னொருபோதிலும் இருந்திராதவகையில் முஸ்லீம் பிரஜைகள் பாதிப்புகளை எதிர்நோக்க நேரிட்டது. அதனாலேயே அந்த ஆட்சிக்கு எதிராகச்சென்று புதிய அரசாங்கத்தை நியமித்துக் கொள்வதற்காக முஸ்லீம் மக்கள் செயலாற்றினர். ராஜபக்ஷ ஆட்சி மாறியமை ஊடாக தற்காலிக தீர்வொன்று (முன்னர் நிலவிய ஆட்சியின் அழுத்தத்திற்கு) கிடைத்தபோதிலும், முஸ்லீம் பிரஜையின் பிரச்சினைகளுக்கு எவ்விதமான தீர்வும் கிடைக்கவில்லை. ஆட்சியாளர்களுடன் கட்டியெழுப்பப்படுகின்ற நம்பிக்கை ஊடாகவே நல்லிணக்கமும், ஏனையவையும் உருவாகும். எனினும் ஒருங்கிணைந்த ஆட்சிமுறை மற்றும் இடம்பெறுகின்ற பல்வேறு விடயங்கள் மத்தியில் அத்தகைய நம்பிக்கை இல்லை என்பதோடு, ஏற்படுவதோ சந்தேகம் மாத்திரமே.

நிலைமாற்று நீதி மிகவும் காத்திரமானதாக ஈடேறவேண்டிய ஒன்றாகும். இவ்வேளையில் பாதிப்புக்குள்ளான அனைத்துப் பிரஜைகளுக்கும் செவிசாய்த்து அவர்களின் தேவைப்பாடுகள் ஈடேற்றப்படல் வேண்டும். சிங்களவர் மற்றும் தமிழ் மக்கள் அவர்கள் மாத்திரமே யுத்தத்திற்கு



முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அமைச்சர் திரு. ரவூ..ப் ஹக்கீமும் அவரது ஆதரவாளர்களும் கண்டி தலதாமாளிகைக்கு அருகில்... www.colombotelegraph.com


நேரடியாக இரையாகியதாக நினைக்கிறார்கள். முஸ்லிம் மக்கள் யுத்தத்திற்கு புறம்பாக இருந்த பிரிவினர் ஆவர். எனினும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர் மத்தியில் கிழக்கிலங்கை முஸ்லீம் சமுதாயம் இருக்கின்றதென்பதை மறந்துவிடலாகாது. நிலைமாற்று நீதி ஈடேறுகையில் அதனோடு முஸ்லீம் சமுதாயமும் இணைக்கப்படல் வேண்டுமென்பதோடு, இதனை சிங்கள மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினையாக மாத்திரம் காண்பது தவறானதாகும். நிலைமாற்று நீதியை ஈடேற்றுகையில் இடம்பெறுகின்ற மீள்குடியேற்றம் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனையவற்றில் முஸ்லீம் மக்களைக் கைவிடுதல் ஒருவிதமான நீண்டகால முரண்பாட்டு நிலைமை உருவாகக் காரணமாக அமையக்கூடும். அது சிங்கள – முஸ்லீம் மற்றும் முஸ்லீம் – தமிழர்களுக்கிடையிலான பிரச்சினையாக மாறக்கூடும். நிலவிய யுத்தகாலத்தில் சிங்களவர் மற்றும் தமிழர் ஆகிய இருபிரிவினரும் ஆயுதங்களை கையில் ஏந்தியதோடு, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லீம் மக்களே ஆவர். நிலவிய பாதிப்புக்களுக்கு மூவினத்தவர்களும் சமமாக இரையாகியுள்ளமையால் ஏதேனும் நியாயத்தை ஈடேற்றுகையில் இலங்கையரென்ற தன்மையுடன் செயலாற்றவேண்டும். இனங்களை வெவ்வேறாக பிரித்தலாகாது.

உண்மையிலேயே பிரஜைகளின் அவசியப்பாடு எனக்கருதாமல், சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காகவே நிலவுகின்ற அரசாங்கம் நிலைமாற்று நீதியை ஈடேற்றுகிறது. அத்துடன் முஸ்லீம் மக்களின் பிரச்சினையின்போது ஐரோப்பிய நாடுகள் எவ்விதமான அக்கறையும் காட்டுவதில்லை. இங்கு முஸ்லீம் சமுதாயத்திற்குள்ள ஒரேயொரு தீர்வாக அமைவது மத்தியகிழக்கு நாடுகளின் ஒத்துழைப்பினை நாடுவதாகும். அது எவ்விதமான பாதிப்பினை ஏற்படுத்துமென்பது ஒரு சிக்கலாகும். அங்கு அந்நாடுகள் எண்ணெய், வீட்டுப்பணியாள் போன்றவற்றை நிறுத்தினால் அது அநாவசியமான பிரச்சினைக்கு காரணமாக அமையலாம். இலங்கை வரலாறு பூராவிலும் முஸ்லீம் சமுதாயம் ரெடிக்கல் அரசியலில் ஈடுபடவில்லை. கைகளில் ஆயுதமேந்தி பிரச்சினைகளுக்கு தீர்வுதேடவில்லை. அந்நிலைமையைத் தொடர்ந்து பேணிவருவது முஸ்லீம் சமுதாயத்தின் எதிர்பார்ப்பாகும்.

இந்நாட்டின் தேசிய பிரச்சினையின்போது முஸ்லீம் மக்கள் தனியான ஆட்சியையோ, தனியான பிரதேசமொன்றையோ கோரியதில்லை. அவ்வாறு இடம்பெற்றால் அது முரண்பாட்டு நிலைமையொன்று உருவாகத் காரணமாக அமையும். எனவே நாங்கள் எதிர்பார்ப்பது அனைவரையும் இலங்கையரெனக்கருதி சமமான உரிமைகள் கிடைக்க வேண்டுமென்பது மாத்திரமே. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கில் உதாரணமாக அதிகாரப் பகிர்வினைக்கோரி செயலாற்றியபோதிலும், அங்கே அவர்கள் முஸ்லீம் சமூகத்தை சிறுபான்மையினராகவே கருதுகிறார்கள். இங்கு அவர்கள் முஸ்லீம் சமூகத்தை மறந்துவிட்டார்கள். அது கவலைக்குரிய விடயமாகும். முஸ்லீம் சமுதாயமும் பெரும்பான்மையினராக உள்ள பிரதேசங்களுக்கு புறம்பான அதிகாரப்பகிர்வினைக் கோரினால் அது சிக்கலானதாகும். எனவே நாங்கள் பொதுவான புரிந்துணர்வுடன் இப்பிரச்சினைகளின்போது செயலாற்றவேண்டும். இங்கு வடக்கு முஸ்லீம், தெற்கு முஸ்லீம், கிழக்கு முஸ்லீம், யாழ்ப்பாணத்துத்தமிழ், மலைநாட்டுத்தமிழ், இந்தியத்தமிழ், பறங்கியர், மலாயர் போன்றவகையில் பிரிந்துநின்று செயற்படாமல் ஒட்டுமொத்த இலங்கையர் என்ற அடிப்படையில் செயலாற்றவேண்டும். அது அரசியலமைப்பிலிருந்து அனைத்து அடிப்படை உரிமைகளும் சமமாக பிரிந்து செல்லல்வேண்டும்.

இறுதியாக கூறக்கூடியது அரசாங்கம் இன்னமும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் வெற்றிபெறவில்லை என்பதாகும். அரசாங்கக்கட்சியை உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் இங்கு தத்தமது அரசியல் தேவைகளுக்கு அமைவாகவே செயலாற்றி வருகின்றன. கடந்த காலத்தில் நிலவிய ஆட்சி மாறியபோதிலும் முற்போக்கான எதுவுமே இடம்பெறவில்லை. அது தொடர்பில் அக்கறையுடன் செயலாற்றவேண்டும். தோல்வியடைந்த குழுக்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வரத் தயாராகிக்கொண்டு வருவதால் எப்படியாவது பதவியிலுள்ள அரசாங்கத்துடன் இங்கு ஒத்துழைப்புடன் செயலாற்ற வேண்டியுள்ளது.

மீளிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பின்னணியைத் தயாரிப்பதற்காக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை ஈடேற்றுவதற்காக செய்யவேண்டியவை பற்றி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் **திரு. டியூ குணசேகர** கூறும் கதை.



www.thesundayleader.lk

# நீதியை ஈடேற்ற அவசியமான பரிந்துரைகள் எல்.எல்.ஆர்.சி அறிக்கையில் உள்ளன

**டியு குணசேக்கர**
இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியின் பொதுச்செயலாளர்

**யுத்தம் முடிவடைந்து ஏறக்குறைய ஐந்து வருடங்கள் கழிந்துள்ளபோதிலும் தேசியப் பிரச்சினைக்கு ஏதுவாக அமைந்த விடயங்களுக்கான தீர்வினைக்கான முன்னராக மீளிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான பின்னணியை உருவாக்கும்பொருட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக நீங்கள் முன்வைக்கின்ற பிரேரணைகள் யாவை?**

முதலில் கூறவிரும்புகிறேன், நாங்கள் அமைச்சரவையில் இருக்கும்போதும் எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை அமுலாக்க வேண்டுமென்ற கடுமையான நிலைப்பாட்டிலேயே இருந்தோம். மிகவும் புத்திசாதுரியமான புலமைசாலிகள் குழுவொன்றுதான் அவ்வறிக்கையைத் தயாரித்தது. எல்லாத் தோற்றப்பாடுகளும் அதில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. அதனைச் சரிவர அமுலாக்கி இருந்தால் இன்றளவில் நீதி ஈடேறிமுடிந்திருக்கும் என நான் நினைக்கின்றேன். எனினும் அச்சந்தர்ப்பத்தில் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்படுவதும்கூட தாமதமாகியது. அது வெளியிடப்பட்ட பின்னர் துண்டுதுண்டாகத்தான் அமுலாக்கப்படுதல் தொடங்கப்பட்டது. எனவே அதனால்தான் ஜெனிவா பிரச்சினை தோன்றியது. அந்தப் பரிந்துரைகளை அமுலாக்கியிருந்தால் ஜெனிவா பிரச்சினையும் தோன்றியிருக்காது. பரிந்துரைகளை அமுலாக்குவதற்கான கருத்தியலொன்றை நாட்டில் ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகக் காணப்பட்டது. அவ்வாறு செய்திருந்தால்

அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்த பரிந்துரைகளை அமுலாக்கக்கூடியதாக இருந்தது. மற்றையது தான் மேற்கொண்ட அந்த புகுமுகம் சரியானது. ஆணைக்குழு றிப்போர்ட் ஒன்று மூலமாகத்தான் அத்தகைய ஒன்றினைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அது அரசியல் மயமாக்கப்பட்டுவிடும். அரசியல் கட்சியொன்றின் வேலையொன்று என்றவகையில் அதனை அமுலாக்குவது பொருத்தமற்றது. இதனை பக்கச்சார்பற்ற புலமைசாலிகள் குழுவொன்று ஒன்றுசேர்ந்து இப்படிப்பட்ட காரணமொன்று உள்ளதெனக்கூறி அமுலாக்குவதுதான் சரியானதாகும். எனவே அவ்வாறு செய்யாதிருந்தமைதான் பாரதூரமான பிரச்சினையாக அமைந்தது.

**அக்காலகட்டத்தின் புனர்வாழ்வு அமைச்சர் என்றவகையில் அதற்காக நீங்கள் ஏதேனும் செய்தீர்களா?**

ஆம், யுத்தம் தீர்ந்தபின்னர் நான் தான் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தேன். நான் 12,000 பேருக்கு புனர்வாழ்வளித்து வெளியேபோட்டேன். அண்மையில் தூக்கிக்கொண்டுபோய் கொலைசெய்ய முயற்சித்ததாக கூறுகின்ற மனிதனையும் புனர்வாழ்வளித்து நான் தான் வெளியே போட்டேன். உலகில் எந்தவொரு நாட்டிலும் இவ்விதமாக புனர்வாழ்வு அளிக்கவில்லையென என்னால் கூறமுடியும். என்றாலும் அதனைச் சந்தைப்படுத்தும் அளவுக்கு அந்த அரசாங்கத்திற்கு அறிவு இருக்கவில்லை. இனவாத அடிப்படையில் நோக்கும்போது அவற்றை சந்தைப்படுத்தும் நட்டமாகும். அதனால்தான் அவ்வாறு செய்யவில்லை. அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் இன்று ஒருசில டாக்டர்கள் இருக்கிறார்கள், ஒருசில பொறியியலாளர்களும் இருக்கிறார்கள், ஏறக்குறைய 300 பேர் பல்கலைக்கழகம் சென்றார்கள். மீளிணக்கத்தின்போது அத்தகைய புகுமுகம் தேவை. அவ்வாறின்றி அரசாங்கம் நடத்துவதால் மாத்திரம் பிரயோசனம் கிடையாது.

**அடுத்ததாக வடக்கு மக்களின் காணிகள் தொடர்பாக இன்று பிரச்சினையொன்று இருக்கிறது. அவர்களின் காணிகளை இராணுவம் கைப்பற்றியுள்ளதாக அவர்கள் கூறுகிறார்கள். இது சம்பந்தமான உங்களின் அபிப்பிராயம் என்ன?**

அதுவும் அந்த எல்.எல்.ஆர்.சி. அறிக்கையில் உள்ளது. அவர்களின் காணிகள் அனைத்தையும் அவர்களுக்கு கொடுக்கவேண்டும். அரசாங்கத்தின் காணிகள் இருப்பின் அதனை தாமதித்தால் பிரச்சினை இல்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கமுடியாத பிரச்சினை அல்ல. நான் அமைச்சரவையில் இருக்கும்போதும் தோற்றுவித்த ஒன்றுதான் இது. இதற்கான கொள்கையொன்றை அமைத்துக்கொள்வது அவசியம். இது தெற்கிலும் நிலவிய பிரச்சினை யொன்றாகும். மாத்தறை மக்களுக்கு அம்பாந்தோட்டையில் காணி வழங்குவதை அம்பாந்தோட்டை மக்கள் விரும்புவதில்லை. டட்லி சேனாநாயக்க இதற்கு நல்ல கொள்கையொன்றை அமைத்தார். முதலாவது முன்னுரிமை கிடைப்பது அப்பிரதேசத்தில் காணியற்ற மக்களுக்கே. இரண்டாவது அடுத்த மாவட்டத்தின் மக்களுக்கு. மூன்றாவது அதற்கு அடுத்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே. இதனை நான் சனாதிபதியவர்களுக்கும் கூறினேன். சந்திரிக்காவுக்கும் இது தெரியும். கிளிநொச்சியிலுள்ள காணிகளை கிளிநொச்சி மக்களுக்குக் கொடுக்கவேண்டும். அது நியாயமானது. இது தீர்க்கமுடியாத ஒன்றல்ல. ஜே.ஆர்.ஜயவர்தன சர்வகட்சி மாநாடொன்றை நடத்தினார் தானே. அதில் காணிக்கமிட்டி ஒன்றையும் அமைத்தார். நான் அதில் இருந்தேன். காமினி திஸாநாயக்க தவிசாளரானார். அந்த கமிட்டியில்தான் அந்தக் கொள்கையை நாங்கள் உருவாக்கினோம்.

**அப்படியானால் இந்தப் பொலிசு அதிகாரங்களைக் கொடுத்தல் தொடர்பில் ஒரு சிலர் எதிர்க்கிறார்கள் தானே?**

அதனை உடனடியாக தீர்க்கவியலாது. ஆனால் அவர்களுக்கு முதலில் போக்குவரத்து பொலிசு அதிகாரங்களைக் கொடுக்கலாம் அல்லவா. அப்போது எல்லோரும் விளங்கிக்கொள்வார்கள் இந்த அதிகாரங்களைக் கொடுத்தால் பிரச்சினை ஏற்படாது என்று. அவ்வாறு படிப்படியாக மக்களோடு இருந்து கொண்டுதான் அமுலாக்கக்கூடியதாக இருக்கும்.

நாங்கள் அமைச்சரவையில் இருக்கும்போதும் எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை அமுலாக்க வேண்டுமென்ற கடுமையான நிலைப்பாட்டிலேயே இருந்தோம். மிகவும் புத்திசாதுரியமான புலமைசாலிகள் குழுவொன்றுதான் அவ்வறிக்கையைத் தயாரித்தது. எல்லாத் தோற்றப்பாடுகளும் அதில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. நான் நினைக்கிறேன் அதனை சரிவர அமுலாக்கி இருந்தால் இன்றளவில் நீதி

**நாங்கள் அமைச்சரவையில் இருக்கும்போதும் எல்.எல்.ஆர். சி. பரிந்துரைகளை அமுலாக்க வேண்டுமென்ற கடுமையான நிலைப்பாட்டிலேயே இருந்தோம். மிகவும் புத்திசாதுரியமான புலமைசாலிகள் குழுவொன்றுதான் அவ்வறிக்கையைத் தயாரித்தது. எல்லாத் தோற்றப்பாடுகளும் அதில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. நான் நினைக்கிறேன் அதனை சரிவர அமுலாக்கி இருந்தால் இன்றளவில் நீதி ஈடேறிமுடிந்திருக்கும்.**

**மற்றுமொரு விடயம்தான் எவ்விதமான குற்றச்சாட்டுமின்றி தமிழ் இளைஞர்கள் கைதுசெய்து வைக்கப்பட்டிருத்தல். அது பற்றிய உங்களுடைய கருத்து என்ன?**

அவர்கள் அத்தனைபேரும் விடுதலை செய்யப்படல் வேண்டும். அதனை நான் பாராளுமன்றத்திலும் கூறியிருக்கிறேன். குற்றச்சாட்டுகள் இல்லாவிட்டால் வைத்திருப்பது எதற்காக? அப்போது அது தானாவே மனிதாபிமானப் பிரச்சினையாக மாறுமல்லவா. சிலவேளைகளில் பயங்கரவாத வேலையுடன் தொடர்புபட்டிருக்கலாம் என நினைக்கக்கூடும். ஆயினும் குற்றச்சாட்டு இல்லாவிட்டால் விடுதலை செய்வதைத்தவிர, செய்வதற்கு வேறு எதுவும் கிடையாது. அவ்வாறான முடிவுகளை எடுக்காமையால்தான் இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுகின்றன. முடிவு எடுப்பதென்று கூறுவதற்கே பயம்.

**ஆணைக்குழுக்களின் அறிக்கைகளையும் அவற்றின் பரிந்துரைகளையும் ஆட்சியாளர்கள் ஏன் நடைமுறைப்படுத்துவதில்லை?**


அரசியல் கட்சிகளின் கொள்கைகளே இதற்கும் தடையாக அமைகின்றன. பிரச்சினைகளைப் பற்றிப் பார்க்கின்றவிதம் காரணமாகத்தான் அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை. அதுவல்ல இப்போது பாருங்கள் வரி ஆணைக்குழு அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் வெளியே போடுவதில்லை. அதில் இப்போதுள்ள இந்த நெருக்கடிகள் எல்லாவற்றுக்கும் தீர்வு இருக்கின்றது. சிறிய மனிதர்களுக்கு சுமை ஏற்றாமல் அதில் உள்ளவற்றை சமநிலைபேணத்தக்க வகையில் அதனை எவ்வாறு செய்வது என்று. ஆனால் அதை முன்வைப்பதில்லை.

அதனை நடைமுறைப்படுத்தினால் முதலாளித்துவ வகுப்பினருக்கு அதிக சுமை செல்லுமெனத்தெரியும். அதனால் அந்தந்த அரசியல் கட்சிகளின் கொள்கைகளுடன் முட்டிமோதுகின்றமையால் அந்த ஆணைக்குழுக்களின் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவது ஒருபுறமிருக்க பகிரங்கப்படுத்துவதுகூடக் கிடையாது.

அது தான் எங்கள் நாட்டிலுள்ள அரசியல் கலாசாரம். எவ்வாறாயினும் புலமைசாலிகள் குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்படுகின்றதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதனால்தானே அவர்கள் ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். எனவே அது சரிவர நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இந்தப் பெரும்பாலான பிரச்சினைகள் வந்திருக்கமாட்டாது. ஆகவே நாங்கள் தொடக்கத்தில் இருந்தே தொடர்ச்சியாக எல்.எல்.ஆர்.சி. அறிக்கையின் பரிந்துரைகளை அமுலாக்குங்கள் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தோம்.

**ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தாம் நியமிக்கின்ற ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை பகிரங்கப்படுத்தாதவிடத்தும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாதவிடத்தும் மக்களால் என்ன செய்யமுடியும்?**

செய்யக்கூடியது ஆர்ப்பாட்டம் செய்துதான். வேறு என்ன செய்வது. இப்போது புதிய அரசாங்கமொன்று வந்தருக்கிறது தானே. புதிய அரசாங்கம் வந்து நல்லிணக்கம்போன்ற பிரச்சினைகளை கிளப்பியிருக்கிறது தானே. அடுத்ததாக தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகொண்டுவரப்போவதும் தென்படுகின்றது. அது சாதகமான ஒரு நிலைமை. இங்கு நாங்கள் முழுமையாகவே ஒத்துழைப்பு வழங்குவோம். எதிர்க்கட்சியில் இருந்தாலும் எம்மால் அதை எதிர்க்கவியலாது. ஆனால் எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால், நான் காண்கின்ற விதத்தில் பாராளுமன்றத்தால் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கவியலாது. அப்படிச் செய்யப்போனால் வேலை மேலும் சிக்கலாகிப்போய்விடும். செய்யவேண்டியது ஏதோ ஒருவிதத்தில் அரசாங்கத்தின் பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றாக இருக்கிறார்கள் அல்லவா? எனவே இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதியவர்களும், ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதம அமைச்சரவர்களும் அந்த இரண்டு கட்சிகளுடனும் கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு பொதுவான பிரவேசமொன்றை எடுக்க முயற்சி செய்தல்வேண்டும். ஆரம்பத்திலிருந்தே எம்மால் வரலாற்றுக்காலத்தில் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க இயலாமல்போனது




பிரதான கட்சிகள் இரண்டும் தேசியப் பிரச்சினையைப் பிடித்துக்கொண்டே ஆட்சிக்குவர முயற்சி செய்தமையாலாகும். அதிகாரத்திற்கு வரவும், அதிகாரத்தில் இருக்கவும், அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும் இவ்விதமாக இரண்டு பக்கங்களை எடுக்கிறார்கள்.

இப்போது மைத்திரிபால சனாதிபதியவர்கள் கூறுகிறார். தானே, இதனால்தான் இப்படிப்பட்ட அரசாங்கமொன்றுக்குச் சென்றதாக. எனவே அதனை இப்போது செய்ய வேண்டும். 13வது திருத்தத்தை கொண்டுவந்த நேரத்தில் நான் தனி உறுப்பினர் என்றவகையில் 225 பேரில் நான் தனியாக எதிர்க்கட்சியில் வாக்களித்தேன். அரசாங்கம் யூஎன்பீ யா? என்று நான் பார்க்கவில்லை. எனக்குப் பரவாயில்லை யூஎன்பீ அல்ல, எவர் கொண்டு வந்தலும் எனக்கு இணங்க முடியுமானால் நான் ஒத்துழைப்பு வழங்குவேன். எனவே, எதிர்க்கட்சியைச்சேர்ந்த தனி உறுப்பினர் என்றவகையில் அன்று நான் அதனைச் செய்தேன். அதன் விளைவாக எனது கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் தலைவர்கள் 50 பேர்களை மக்கள் விடுதலை முன்னணி அன்று கொலை செய்தது. என்னைக் கொலை செய்யமுடியவில்லை. எனவே நடந்தது அதுதான். இந்த வாய்ப்பு நழுவிச்செல்ல முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இது பற்றிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும். அதன் பின்னர் இருசாராரும் ஒன்று சேரந்து தமிழ் மற்றும் முஸ்லீம் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல் வேண்டும். அடுத்ததாக இடதுசாரிகளான எமக்கு வெளியில் இருக்கின்றவர்களின் ஒத்துழைப்பும் கிடைத்தவுடன் அரசாங்கத்திற்கு பக்கபலமாக அமையும். எனவே தீவிரவாதப் பக்கம் நோக்கிச்செல்ல இடமளிக்காமல் அதற்கு அவர்கள் தலைமைத்துவம் வழங்கவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் வேறு சக்திகள் இவற்றைப் பாவிப்பதே இடம்பெறும். வடக்கிலிருந்து பந்து அடித்தால் தெற்கில் இருந்தும் அடிப்பார்கள். வரலாற்றுக்காலம் பூராவிலும் அப்படித்தான் நடந்தது.

இதற்கு மேலதிகமாக தமிழ்நாட்டில் தேர்தலில் வெற்றிபெறவும் எமது பிரச்சினையைப் பயன்படுத்துவார்கள். தமிழ் மக்களின் பெரும்பான்மையைப்பெற கருணாநிதியைத் தாக்கவேண்டுமென்பதால் தமிழ் மக்களுக்கு ஈழம் வழங்குமாறு ஜெயலலிதா அண்மையில்கூட கூறினார். அப்படிக் கூறியதும் அது ஒரு பிரச்சினை தானே. எனவே அடுத்ததாக தீவிரவாதிகளுக்கு இங்கிருந்து பதிற்செயல் காட்டவேண்டி ஏற்படும். எனவே இந்த விடயங்களை விளங்கிக்கொண்டுதான் வேலை செய்யவேண்டும். இந்தியா எவ்வளவுதான் கத்தினாலும் எமக்குப் பிரச்சினை இல்லை. இங்கே நாங்கள் ஒன்றாக இருந்தால் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இயலும்.

நான் கூறுகிறேன், தேசிய பிரச்சினையின்போது எம்மால் ஒன்றுசேர முடியாதது ஏன்? இது எமது ஆரம்பமட்டப் பிரச்சினை. இங்கு நூற்றுக்கு 60% ஆவது இணங்கமுடியுமானால் அங்கு இருந்து தமிழ் மற்றும் முஸ்லீம் கட்சிகளுடன் பேசி முன்நோக்கிச்செல்வோம். எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள இயலாமல் போகலாம். தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் கறுப்பு வெள்ளை என்ற விதத்தில் பார்த்தால் வேலை சரிவரமாட்டாது.

**நீங்கள் அப்படிக் கூறினாலும் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள ஒருசில**

**இப்போது மைத்திரிபால சனாதிபதியவர்கள் கூறுகிறார்தானே இதனால்தான் இப்படிப்பட்ட அரசாங்கமொன்றுக்குச் சென்றதாக. எனவே அதனை இப்போது செய்ய வேண்டும். 13வது திருத்தத்தை கொண்டுவந்த நேரத்தில் நான் தனி உறுப்பினர் என்றவகையில் 225 உறுப்பினர்களால் நான் தனியாக எதிர்க்கட்சியில் வாக்களித்தேன். அரசாங்கம் யூஎன்பீ யா? என்று நான் பார்க்கவில்லை. எனக்குப் பரவாயில்லை யூஎன்பீ அல்ல எவர் கொண்டு வந்தலும் எனக்கு இணங்க முடியுமானால் நான் ஒத்துழைப்பு வழங்குவேன். எனவே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த தனி உறுப்பினர் என்றவகையில் அன்று நான் அதனைச் செய்தேன். அதன் விளைவாக எனது கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் தலைவர்கள் 50 பேர்களை மக்கள் விடுதலை முன்னணி அன்று கொலை செய்தது.**

**பிரிவுகள் இந்தப் பிரச்சினையை இனவாதக் கண்ணோட்டத்தில்தானே பார்க்கிறார்கள்?**

எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் கட்டாயமாக தேசியப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அதற்காக மஹிந்த ராஜபக்ஷவையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென நான் கூறுகிறேன். பிரிந்து இருந்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்னமும் ஒரு கட்சிதானே. அதற்குப் புறம்பாகச் சென்றால் அதில் இருக்கின்ற பிரிவுகள் ஏனைய தீவிரவாதப் பிரிவுகளுக்கு பலியாகக்கூடும். எவ்வாறாயினும் இப்படிப்பட்ட பிரச்சினை வரும்போது அரசியலமைப்புப் பற்றிய பிரச்சினையாயின் தேசிய பிரச்சினைக்கான தீர்வாக அமையுமானால், நல்லிணக்கம் பற்றிய பிரச்சினையாயின் நாங்கள் நேரடியாகவே ஒத்துழைப்பு வழங்கும் பக்கத்திலேயே இருப்போம்.

பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் ஒரே நிலைப்பாட்டுக்கு வரும்போதே பலம்பொருந்திய அபிப்பிராயமொன்று தானாகவே உருவாகுமென நான் கூறுகிறேன். சாதாரண பொதுமக்கள், தமிழ்மக்கள், சிங்கள மக்கள் அல்லது தொழிலாளர் வர்க்கம் இனவாதிகள் அல்லர். இனவாதம் என்பது நடுத்தர வர்க்கத்தினரின் தோற்றப்பாடு ஆகும். அது தொழில்வாண்மையாளர் மத்தியிலேயே உள்ளது. அது சற்று சுயநலமானது. மறுபக்கத்திலுள்ள தமது மக்களை விஞ்சிச்செல்ல அவர்கள் பார்க்கிறார்கள். அடுத்ததாக பிஸ்னஸ்காரர்கள், இனவாதம் என்பது உலகம் பூராவுமுள்ள நடுத்தர வர்க்கத்தினரின் தோற்றப்பாடு ஆகும். மொழிப்பிரச்சினை வந்தபோது பாருங்கள் புலமைசாலிகள் நடந்துகொண்ட விதத்தை. அடுத்ததாக இந்த பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை வரும்போது, டட்லி சேனாநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை வரும்போது அவர்கள் நடந்துகொண்ட விதத்தைப்பாருங்களே. அடுத்ததாக ஜே.ஆர்.ஜயவர்தனவின் இந்திய – இலங்கை உடன்படிக்கை வரும்போதும் அவர்கள் அப்படித்தான் நடந்து கொண்டார்கள்.

என்னுடைய கருத்து இந்தச் சிறிய தீவிரவாதப் பிரிவுகளுக்கு நாங்கள் பயப்படத் தேவையில்லை. அவர்கள் எப்போதும் பெரிய கட்சிகளுடனேயே இருக்கிறார்கள். வரலாற்றைத் திரும்பிப்பாருங்கள் 56 இல் இருந்து அப்படித்தான் நடந்தது. மெத்தானந்த, ராஜரத்ன போன்றவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனேயே இருந்தார்கள். அப்படி இல்லாவிட்டால் யூஎன்பி உடன், இல்லாவிட்டால் அவர்களால் தனித்து ஒன்றுமே செய்ய இயலாது. இந்த பொதுபலசேனாவின் ஞானசார தேரரைப் பாருங்கள். அவர் எவரையாவது பிடித்துக் கொள்ளத்தான் பார்த்துக்கொண்டு இருக்கிறார். ஒன்றில் கோத்தாபயவின் பின்னால் போவார், மஹிந்த ராஜபக்ஷவின் பின்னாலும் போவார். தனியாக ஆட்டம்போடும் எவருமில்லை. அரசியல் களத்தை எடுத்துக்கொண்டாலும் அப்படித்தான். பெரிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளத்தெரிந்து கொள்ளவேண்டும். இப்போது திருவாளர் பண்டாரநாயக்கவுக்கு நேர்ந்த கதியைப் பாருங்கள். இறுதியாக யுத்தமல்லவா ஏற்பட்டது. யுத்தத்தால் இறந்தவர்கள் தமிழ்மக்கள் மாத்திரமல்ல. சிங்கள மக்களும் இறக்கவில்லையா? நடக்கவேண்டிய எல்லாமே நடந்து விட்டதல்லவா? எனவே இப்போதாவது அதனை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொண்டால் நல்லது. அதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். ஆனாலும் ஏனையோரும் அவர்களுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லல்வேண்டும். ஆனால் அங்கு இருக்கின்ற பெரும்பாலானோர் இனவாதிகள் அல்ல. வெறுமனே மஹிந்த ராஜபக்ஷ என லேபல் ஒட்டி அந்தப்பக்கம் தள்ளிவிடக்கூடாது. அன்று அரசியல் கலாசாரமொன்று இருந்தது. இன்று அரசியல் கலாசாரமொன்று கிடையாது. இன்று இருப்பவர்களுக்கு அரசியல் தெரியாது. ஆகவே அன்றைய தினத்தைவிட இன்று கவனமாக இருத்தல் வேண்டும்.



# விக்னேஸ்ரன் போன்றவர்களும் மஹிந்த கும்பலும் இனவாதத்தை அடையாளமாகக் கொண்டுள்ளார்கள்

**வங்குரோத்து அரசியல் தலைவர்கள் தோல்வியை மூடிமறைக்க இனவாதத்தையே அடையாளமாகக் கொள்கிறார்கள். வடபகுதி மக்களின் வெறுப்புக்கு இலக்காகி வருகின்ற விக்னேஸ்வரன் போன்றவர்கள் அதிலிருந்து மீட்புபெறவும், தென்பகுதி மக்களால் நிராகரிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கும்பல் மீண்டும் அதிகாரத்திற்கு வருகின்ற குறுக்குவழியாகவும் பிரயோகிக்கின்ற இனவாதத்தை நிராகரிக்க வேண்டுமெனவும், மீண்டும் இந்நாட்டில் இனவாதம் தோன்றி வருகின்றதெனவும் மக்கள் விடுதலை முன்னனியின் பொதுச்செயலாளர் திரு. ரில்வின் சில்வா கூறினார். ஏப்ரல் 28 ஆந் திகதி வியாழக்கிழமை மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகக் கலந்துரையாடலின் போதே அவர் இது பற்றிக் குறிப்பிட்டார்.**

**மேற்படி ஊடக கலந்துரையாடலின்போது திரு. ரில்வின' சில்வா கூறிய கருத்துக்களை பின்வருமாறு காட்டலாம்.**

**ரில்வின் சில்வா**
ஜே.வி.பி. பொதுச்செயலாளர்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சமஷ்டி ஆட்சிக்கான பிரேரணையொன்றை நிறைவேற்றிக் கொண்டார். அதைப்போலவே தெற்கில் அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலையுற்ற மஹிந்த ராஜபக்ஷவும் இனவாதத்தை கிளரிக்கொண்டு இருக்கிறார். இந்த இருபக்கத்தினதும் இனவாதம் காரணமாக வடக்கின் அல்லது தெற்கின் பொதுமக்களுக்கு எவ்விதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இதனால் நேரிடுவது தமிழ்மக்களின்

www.srilankaguardian.org



கூட்டு எதிர்க்கட்சி மேடையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவங்ச

**வடக்கு மாகாணசபை கடந்தகாலத்தில் வடபகுதி மக்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை. வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுப்பதில் அவர்கள் தோல்வி கண்டனர். குறிப்பாக குடிநீர் பிரச்சினைக்கு அவர்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை.**

பிரச்சினைகளுக்குக்கூட தீர்வு கிடைக்காத நிலைமை உருவாவது மாத்திரமே. அதைப்போலவே இந்த நிலைமை காரணமாக சர்வதேச சக்திகள் எமது நாட்டில் தலையிட இடமுண்டு. இனவாதத்தை கிளருவதால் தோன்றிய நிலைமைகள் காரணமாக இந்நாட்டு மக்களுக்கு முப்பது வருடகால யுத்தத்தை எதிர்நோக்க நேரிட்டது. இந்த யுத்தத்தினால் வடபகுதி மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக அவர்களின் வாழ்க்கை பின்நோக்கி நகர்ந்தது மாத்திரமே இடம்பெற்றது. அதைப்போலவே வடக்கிலும், தெற்கிலும் பல்லாயிரக்கணக்கானோர் உயிர்களை இழந்தனர். உடைமைகள் அழிந்தன. வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடவசதி ஏற்பட்டது.

வடக்கு மாகாணசபை கடந்தகாலத்தில் வடபகுதி மக்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை. வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுப்பதில் அவர்கள் தோல்வி கண்டனர். குறிப்பாக குடிநீர் பிரச்சினைக்கு அவர்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை. அதைப்போலவே இந்திய மீனவர்கள் வந்து வடகடலில் மீன்பிடிப்பதால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் அவர்கள் தோல்வி கண்டுள்ளார்கள். இவ்விதமாக வடபகுதி மக்கள் எதிர்பார்த்தவற்றை ஈடேற்றத் தவறியமையால் விக்னேஸ்வரன் போன்றவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டு வந்து கொண்டிருந்தார். வெறுப்புக்கு இலக்காகிக் கொண்டிருந்தார். அதனால் வடக்கு மீனவர்கள் தமது பிரச்சினைகளைப் பற்றிக்கூற தெற்கு நோக்கிவந்து எம்மைச் சந்திக்கின்ற நிலை உருவாகியது. அதைப்போலவே மத்திய அரசாங்கத்தினால் வடக்கின் பணிகளுக்காக வழங்கிய நிதிகள் அனைத்தையும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பிரயோகிக்க விக்னேஸ்வரனுக்கு இயலாமல் போயிற்று. அதைப்போலவே வடக்கு மாகாணசபையின் ஒருசில அமைச்சர்களின் நிதிமோசடிகள் பற்றியும் அந்த மக்கள் மத்தியில் பல்வேறு கதைகள் பரவி வருகின்றன. இவ்விதமாக இவர்கள் வங்குரோத்து நிலையுறும்போது உண்மையான பிரச்சினைகளைத் தவிர்த்து மக்களின் கவனத்தை திசைதிருப்பத்தான் அதிகாரப்பகிர்வு பற்றிய பிரேரணையைக் கொண்டு வருகிறார்கள்.

வடக்கு மாகாணசபை கடந்தகாலத்தில் வடபகுதி மக்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை. வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுப்பதில் அவர்கள் தோல்வி கண்டனர். குறிப்பாக குடிநீர் பிரச்சினைக்கு அவர்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை.

அனைத்து இனங்களுக்கும் இடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டுமாயின், ஆட்சியாளர்கள் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க நேரிடும். அதற்காக அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகொடுக்க வேண்டிவரும். வடபகுதி மக்களுக்குள்ள வீடுகள், காணிகள் பற்றிய பிரச்சினைகளைப் போன்றே பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகொடுக்க வேண்டிவரும். அதைப்போலவே யுத்தம் நிலவிய காலகட்டத்தில் வங்கிகளில் வைப்புச்செய்த தங்கநகைகளை அரசாங்கம் கையேற்றது. மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அவற்றைத் திருப்பிக்கொடுத்தாலும் எஞ்சிய பகுதியை இன்னமும் கொடுக்கவில்லை.

யுத்தத்தை வெற்றிகொண்டதும் உடனடியாக இந்த நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடியவகையில் செயலாற்றியிருக்கவேண்டும். ஆனால் அப்போது நிலவிய அரசாங்கம் அதனைச் செய்யவில்லை

**நாங்கள் தேசிய ஒற்றுமைக்காகவே தோற்றுகிறோம். மக்களை பிளவுபடுத்துகின்ற மக்களை ஒற்றுமையிழக்கச் செய்விக்கின்ற எந்தவொரு பிரேரணைக்கும் நாங்கள் எதிரானவர்கள், அதைப்போலவே வடக்கில் முதலாளித்துவ அரசியல் தலைவர்கள் கொண்டுவருகின்ற இனவாதப் பிரேரணைகளை அடிப்படையாகக்கொண்டு வடக்கின் தமிழ் மக்களுக்கு எதிராக தெற்கிலுள்ள மக்களை தூண்டிவிடுவதையும் நாங்கள் எதிர்கிறோம்.**



வட மாகாண முதலமைச்சர் விக்னேஷ்வரன் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள்

என்பது மாத்திரமன்றி யுத்தத்தில் வெற்றிபெற்றதும் உடனடியாக வடபகுதி மக்கள்மீது பிரம்மாண்டமான அழுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. அதன்பின்னர் முந்திய அரசாங்கத்தைப்போலவே தற்போதைய அரசாங்கமும் வடபகுதி தமிழ்மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய எதையுமே செய்யவில்லை.

அதைப்போலவே நிகழ்கால அரசாங்கம் பொதுவாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில்லை. அதற்காக மக்கள்மீது புதுப்புது வரிகளை திணித்து வருகின்றது. அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை கத்தரித்து வருகின்றது. அரச ஆதனங்களை விற்பனைசெய்து வருகின்றது. ஒரு புறத்தில் மக்களின் சம்பளத்தை அதிகரித்து மறுபுறத்தில் அவற்றை மீண்டும் அறவிட்டுக்கொள்வதற்காக வரி விதித்துள்ளார்கள். அரச ஊழியர்களுக்கு மாத்திரமே சம்பளம் அதிகரிக்கப்பட்டது. எனினும் வரி அதிகரிப்பினை தனியார்துறை ஊழியர்களும் சுமக்கவேண்டி நேர்ந்துள்ளது. எனவே நிகழ்கால அரசாங்கமும் மக்களின் விருப்பத்தை இழந்த ஆட்சியாக மாறியுள்ளது. எனவே அவர்களுக்கும் இனவாதத்தைக் கிளருவது சாதகமாக அமைந்துள்ளது. எனவே, அவற்றைத்தடுக்க நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டு இரண்டு மேலதிகக் கூட்டங்களை நடத்தும் நிலைக்கு மாறிவிட்டது. அதைப்போலவே மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மீண்டும் அரசியல் ரீதியாக முன்னேறிவர சிங்கள இனவாதத்தை கிளரவேண்டிய அவசியம் உள்ளது. மஹிந்த ராஜபக்ஷவை சுற்றியுள்ள சக்திகள் கடந்த காலத்தில் மக்களைப் பாதிக்கின்ற எந்தவொரு பிரச்சினை பற்றியும் போராட்டம் நடத்தவில்லை. வரிச்சுமை அதிகரித்தமை, எண்ணெய் விலை வீழ்ச்சி போன்ற பிரச்சினைகள் பற்றிப் போராட்டம் நடத்தவில்லை. அவர்கள் தமக்கு எதிராகவுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணைசெய்ய வேண்டாமெனவே குரலெழுப்பினார்கள். இன்றேல் நிதிசார் குற்றப்பிரிவினை ஒழிக்குமாறு குரலெழுப்பினார்கள். அதனால் அவர்கள் பொதுமக்கள் மத்தியில் செல்லவில்லை. பொதுமக்களின் பிரச்சினைகளுக்காக போராட ஆற்றல் கிடையாதென்று அவர்கள் நிரூபித்துள்ளார்கள் எனவே அவர்களுக்கு அதிகாரத்திற்கு வருவதற்கான குறுக்குவழியாக இந்த இனவாதத்தைக் கிளருவதைத்தவிர செய்யக்கூடிய ஒன்றுமே கிடையாது.

எனவே வடக்கில் விக்னேஸ்வரனின் இனவாதத்தையும், தெற்கில் மஹிந்தவின் இனவாதத்தையும் கட்டிவளர்க்கிறார்கள். இதனால் பொதுமக்களுக்கு எவ்விதமான நன்மையும் கிடைக்கமாட்டாது. இதன் மூலமாக சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப்பதிலாக புதிய பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. எனவே இவ்விதமாக இனவாதத்தை கிளருகின்ற, இனவாதத்தை மேலோங்கச் செய்விக்கின்ற தெற்கின் அல்லது வடக்கின் எந்தவோர் அரசியல்வாதிக்கோ, அரசாங்கத்திற்கோ எதிராகப் போராட்டம் நடத்த நாங்கள் தயார். நாங்கள் தேசிய ஒற்றுமைக்காகவே தோற்றுகிறோம். மக்களை பிளவுபடுத்துகின்ற மக்களை ஒற்றுமையிழக்கச் செய்விக்கின்ற எந்தவொரு பிரேரணைக்கும் நாங்கள் எதிரானவர்கள், அதைப்போலவே வடக்கில் முதலாளித்துவ அரசியல் தலைவர்கள் கொண்டுவருகின்ற இனவாதப் பிரேரணைகளை அடிப்படையாகக்கொண்டு



www.tamilnewsnetwork.com

வடக்கின் தமிழ் மக்களுக்கு எதிராக தெற்கிலுள்ள மக்களை தூண்டிவிடுவதையும் நாங்கள் எதிர்கிறோம்.

உங்கள் உயிர்களையும், உடைமைகளையும் சேதப்படுத்தி உருப்பெறுகின்ற எந்தவிதமான இனவாதத்திற்கும் இரையாகாமல் அதற்கு எதிராக அணிதிரளுமாறு நாங்கள் மக்களிடம் கேட்கிறோம்.

முப்பது வருடகால யுத்தத்தில் அகப்பட்டுத் தவித்த மக்கள் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பி இந்த நாட்டை முன்னெடுத்துச்செல்வது எப்படி என்பதைப்பற்றியே சிந்திக்க வேண்டும். முழு உலகினதும் பாட்டாளி மக்கள் இன, மத பேதமின்றி ஒன்றுசேர்ந்து இருக்கவேண்டிய தருணத்தில் அவர்களை மீண்டும் இன, மதம் என்ற வகையில் பிளவுபடுத்த இடமளித்தலாகாது.

இந்த நாட்டில் அறுபத்தெட்டு ஆண்டுகளாக ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தனித்தனியாக நாட்டை ஆட்சிசெய்து நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க தமக்கு இயலாமல் போயுள்ளதை வெளிக்காட்டியுள்ளன. தற்போது இந்த இருசாராரும் ஒன்றுசேர்ந்து ஆட்சிசெய்தும் தாம் தோல்வி கண்டுள்ளதை வெளிக்காட்டி இருக்கிறார்கள். எனவே இந்தத் தவறான சமூக, பொருளாதாரக் கொள்கைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு புதிய பொருளாதாரக் கொள்கையொன்றுடனான புதிய ஆட்சியை ஏற்படுத்த மக்கள் பலத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. அதற்காக சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களை ஒன்றாக சேர்க்கவேண்டி உள்ளது. அதற்காக மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில்தான் இந்த ஒற்றுமையைச் சிதைக்க இனவாதத்தை கிளறிக்கொண்டு இருக்கிறார்கள். இனவாதம் என்பது முதலாளித்துவ ஆட்சியாளர்களின் தோல்வியைக் காட்டுகின்ற ஒரு விடயமாகும்.

# அவனியில் அல்லல்பட வாய்ப்பில்லை

வெட்டவெளிகளில் அரங்கேறும்
வெட்டிவீழ்த்தப்படும் நிகழ்வுகள்
தட்டிக்கேட்காத மனப்பாங்கால்
கட்டவிழ்த்த வன்முறைகளால்
கட்டிக்காத்த நம்கலாச்சாரமும்
கட்டுப்பாடான நம்சமுதாயமும்
வெட்டுப்பட்ட காயங்களுடன்
மூட்டியத்தீயில் மூழ்கிட்ட
முழுஉடலாய் தவிக்கிறது !

சுரண்டி பிழைக்கும் மனிதர்களை
சுட்டிக் காட்டிடும் இதயங்களை
வெட்டி சாய்ப்பதும் தொழிலானது !


சீனப் பெருஞ்சுவராய் நீளுகிறது
சீரழியும் சமூகத்தில் சீர்கேடுகள் !
நயாகரா நீர்வீழ்ச்சியாய் கொட்டுது
நயவஞ்சக செயல்கள் நாளுமிங்கு !
தலைமுறைகள் மட்டும் பெருகாது
தலைகள் சாய்வதும் கூடுகிறது !

முடிவில்லா பயணமாய் மாறுது
விடிவில்லா இரவாய் தெரிகிறது !
வானிலை அறிக்கையாகுது இங்கு
கொலைகள் குற்றங்கள்
நாளுமிங்கு !
சமுதாய சந்தையில் விலைபோகுது
சமத்துவ சமதர்மக் கொள்கைகள் !
சாதிக்காரர் வலையில் சிக்கிவிடுது
சாதிசமயமெனும் வெறிக் கூட்டம் !
அவிழ்க்கப்படா முடிச்சுகள் கூடுது
அவிழ்த்து விடும் வன்முறையால் !

பின்னணி என்பதை ஆய்ந்திடாமல்
முன்னணிக்கு முந்திட
வழிகண்டால்
அணிகளாய் பிரிந்திட வழியில்லை
அவனியில் அல்லல்பட
வாய்ப்பில்லை !

– பழனி குமார்






Who is your father? Where is your father? போன்ற கேள்விகளுக்கு சிறு வயது முதல் இன்று வரை நான் முகம் கொடுக்க விரும்புவதில்லை. இத்தகைய கேள்விகள் என்னை நோக்கி யாரும் கேட்டு விடக்கூடாது என்றும் எதிர்பார்ப்பதுண்டு. என்னுடைய தந்தை 1993 களில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் நள்ளிரவில் உறக்கத்தின் போது படு கொலை செய்யப்பட்டவர் என்ற துயரக் கதையை வாய் வழி பகிர்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. எனினும் படைப்புக்களின் ஊடாக வெளிப்படுத்துதலில் இருந்த ஆர்வம் Scream Series, Lamp Series போன்ற தொடர்கள் 2013களில் உருவாக ஏதுவானது. சமத்துவம் என்னும் பதம் கருத்தளவில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இங்கு முக்கோணச் சட்டகத்தின் ஊடாக அந்த சம்பவத்தை கூற விரும்புகிறேன். இத்தகை வன் செயல்கள் புரிந்தோர் யாவர்? அவர்கள் இன்று எங்கே? பாதிக்கப்பட்ட எங்கள் குடும்பம் மற்றும் ஏனைய குடும்பங்களுக்கான நிலைமாற்று தீர்வுகள் யாது ? போன்ற கேள்விகளை தொடுப்பதாக எனது படைப்பு அமையப் பெற்றிருக்கிறது.

**ஓவியம் : பாக்கியராஜா புஷ்பகாந்தன்**

# நிலைமாற்று நீதிச் செயற்பாட்டுக்கு சமூகத்திலிருந்து கிடைக்கின்ற அழுத்தம் போதாது



**பேராசிரியர்**
**வேலுப்பிள்ளை குகேந்திரன்**
அவர்களுடன் நிலைமாற்று நீதி பற்றி மேற்கொண்ட உரையாடல்



**பேராசிரியர்**
**எஸ். பத்மநாதன்**
அவர்களும் உரையாடலில் இணைந்துகொண்டார்

**நிலைமாற்று நீதி என்பதை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?**

**பேராசிரியர் திரு.வேலுப்பிள்ளை குகேந்திரன்:**

நிலைமாற்று நீதி என்பது அடிக்கடி மாறிவருகின்ற எண்ணக்கருவாகும். நாங்கள் அண்மைக்கால உலக வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்களை சற்று நோக்கினால் முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்ற காலத்திலிருந்தே ஐக்கிய அமெரிக்கா தனது ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள அவசியமான பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காக மனித உரிமைகளை தவறவிட்ட விதத்தைக் காணமுடியும். உலக யுத்தங்களில், குறிப்பாக இரண்டாவது உலகமகா யுத்தத்தின் முடிவுடன் மனிதஉரிமைகள் என்ற எண்ணக்கருவும் யுத்தத்திற்கு பிற்பட்ட காலங்களில் மனித உரிமைகளின் விஷேட முக்கியத்துவம் பற்றிய அறிவு மெதுவாக பிரபல்யமடைந்ததைக் காணமுடியும். இதற்கு சமாந்தரமாக சர்வதேச சட்டங்களின் விரிவாக்கத்தையும் காணமுடியும்.

மனித உரிமைகள் பற்றிய கவனத்தில் தோன்றிய வளர்ச்சி காரணமாக சர்வதேச சட்டத்திலும் பலவிதமான மாற்றங்கள் தோன்றின. நான் காண்கின்றவகையில் நிலைமாற்று நீதி என்பதை எப்போதுமே பாதிக்கப்பட்ட ஆட்களின் கண்ணோட்டத்திலேயே பார்க்கவேண்டும். உலகில் பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்ற விதத்தை எம்மால் காணமுடியும். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவற்றின் பாதக விளைவுகளை சாதாரண குடிமக்களே அனுபவிக்கிறார்கள். உதாரணமாக எடுத்துக்கொண்டால், தென்னாபிரிக்காவின் நிறவேறுபாட்டுக் கொள்கை நிலவிய காலகட்டத்தையும், பினோச்சே சிலீ

தேசத்தை ஆட்சி செய்தகாலத்தையும் காட்டலாம்.

இலங்கையின் ஆட்சித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களுடன் நிலைமாற்று நீதி செயற்பாட்டுக்காக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க இருந்த ஆர்வத்தில் குறைபாட்டினை நான் காண்கிறேன். நிலைமாற்று நீதி பற்றிய உரையாடலொன்றை மீண்டும் ஏற்படுத்தப் போராடுகின்ற சமூக இயக்கமொன்றை இன்று காணக்கூடியதாக இல்லை. ஓரளவுக்கேனும் இந்த உரையாடல் புலமைசாலிகள் மத்தியிலேயே இடம் பெறுகின்றது.

எமக்கு (Closure) முடிவு என்பது அவசியமாகும். யுத்தத்தில் இருதரப்பினராலும் குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை இரகசியமன்று. பல வருடங்களாக நிலவிய இலங்கை அரசாங்கங்களால் பல்வேறு குற்றங்கள் புரியப்பட்டுள்ளன. 1950 ஆம் ஆண்டுகளிலிருந்து இலங்கையில் வசிக்கின்ற தமிழ் குடிமக்கள் பெரும்பாலும் அவசரகாலச்சட்டத்தின் கீழேயே வசித்தனர்.

**பேராசிரியர் திரு. எஸ்.பத்மநாதன்:**

நல்லிணக்கத்திற்காக மேலும் பலவற்றைச் செய்யவேண்டியுள்ளது. மன்னராட்சிக் காலத்திலிருந்து இந்துமதத்திற்கும், புத்தமதத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு நிலவிவந்துள்ளது. எனினும் எங்கள் கல்வி முறையினால் நேர்வதோ எமக்கிடையிலான ஒத்ததன்மைகளுக்குப் பதிலாக எமக்கிடையிலான வேறுபாடுகளை முனைப்பாக காட்டுவதாகும். சிங்கள /தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்ததை சொல்லிக்கொடுப்பது கிடையாது. எனவே கல்வி மறுசீரமைப்பானது நல்லிணக்கச் செயற்பாட்டில் முக்கியமான பகுதியாக அமைதல் வேண்டும்.

**இலங்கையில் நிலைமாற்று நீதியை உருவாக்கும் செயற்பாட்டுக்காக பிறநாடுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள் யாவை?**

**பேராசிரியர் திரு. வேலுப்பிள்ளை குகேந்திரன்:**

நிலைமாற்று நீதி என்கின்ற எண்ணக்கரு பெரும்பாலும் அது இடம்பெறுகின்ற சமூக கலாசார சூழமைவுக்கிணங்க மாறும். மேற்குலக அனுபவங்களை கவனத்திற்கொண்டால் நான் உணர்கின்றவகையில் மேலைத்தேய நாடுகள் இத்தகைய விடயம்பற்றி எம்மைப்போல் மனவெழுச்சி சார்ந்ததாக நோக்காமல் தர்க்கரீதியாக பார்க்கப் பழகியுள்ளன. இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் மேலைத்தேய நாடுகளில் ஒற்றுமை என்பது ஒரு மனவமைவாகும் என நான் நினைக்கின்றேன். அது சனநாயகம் மற்றும் மக்களின் விருப்பம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலே விதிக்கப்படுகின்றது. இலங்கையை நோக்கினால் சிங்கள மக்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர் என்பதற்கு எவருமே ஆட்சேபனை தெரிவிப்பதில்லை. எனினும் சனநாயக ஆட்சி ஊடாக நாட்டில் வசிக்கின்ற ஏனைய மக்கட்குழுக்களினதும் உரிமைகளும் பாதுகாக்கப்படல் வேண்டும். முறையான சனநாயகத்தில் நீதியும், நியாயமும் அனைத்துப் பிரசைகளுக்கும் கிடைக்கவேண்டும்.

> **இலங்கையை நோக்கினால் சிங்கள மக்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர் என்பதற்கு எவருமே ஆட்சேபனை தெரிவிப்பதில்லை. எனினும் சனநாயக ஆட்சி ஊடாக நாட்டில் வசிக்கின்ற ஏனைய மக்கட்குழுக்களினதும் உரிமைகளும் பாதுகாக்கப்படல் வேண்டும். முறையான சனநாயகத்தில் நீதியும், நியாயமும் அனைத்துப் பிரஜைகளுக்கும் கிடைக்கவேண்டும்.**

**நிலைமாற்று நீதிச் செயற்பாட்டுக்காக உள்ள தடைகள் மற்றும் வாய்ப்புக்கள் என நீங்கள் எதனைக் காண்கிறீர்கள்?**

**பேராசிரியர் திரு. வேலுப்பிள்ளை குகேந்திரன்:**

முரண்பாட்டு நிலைமையின் இறுதிக்கட்டம் அதிகாரத்தில் இருந்த ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டமையால் யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். இது சர்வதேச சட்டத்தின் நியமங்களுக்கு அமைவாக இடம்பெறல் வேண்டும். காணாமல் போனவர்களின் சிக்கலும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டியதொன்றாகும். ஏனெனில் அது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சிக்கலாகும். இச்செயற்பாட்டில் நாங்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய விடயமாக அமைவது நாங்கள் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுவது மனிதாபிமான சிக்கல்களுடன் என்பதாகும். நிலைமாற்று நீதியுடன் சம்பந்தப்பட்ட பெரும்பாலான அல்லது அனைத்துச் செயற்பாடுகளும் நடந்து முடிந்தவையுடன் தொடர்புடையனவாகும். அவர்களுக்கு முடிவுதேவை காணாமல் போனவர்களின் குடும்பங்கள் அடிக்கடி அவர்களின் சிக்கல்களை முன்வைக்கின்றனர் என்பதாலேயே.

முரண்பாடொன்று முற்றுப்பெற்ற பின்னர் அப்போது நிலவுகின்ற அரசாங்கம் நடந்துமுடிந்தவை பற்றி தொடர் நடவடிக்கையில் ஈடுபட்டு நேர்ந்த தவறுகள் மற்றும் அவை மக்களை பாதித்தவிதம் பற்றி ஆய்வில் ஈடுபடவேண்டும். இதற்கு அவசியமான அதிகாரத்தைக்கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும். எனினும் தற்போது நிலைமாற்று நீதி தொடர்பில் மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக சிவில் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் வரையறுக்கப்பட்டவையாகும்.

இலங்கையை நோக்கினால் சிங்கள மக்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர் என்பதற்கு எவருமே ஆட்சேபனை தெரிவிப்பதில்லை. எனினும் சனநாயக ஆட்சி ஊடாக

நாட்டில் வசிக்கின்ற ஏனைய மக்கட்குழுக்களினது உரிமைகளும் பாதுகாக்கப்படல் வேண்டும். முறையான சனநாயகத்தில் நீதியும், நியாயமும் அனைத்துப் பிரஜைகளுக்கும் கிடைக்கவேண்டும்.

தடைகளைப் பற்றிப் பேசுவதாயின் நிலைமாற்று நீதி எண்ணக்கருவுக்கு எதிராகவுள்ள உரையாடல் மற்றும் அரச நிறுவனங்களிலுள்ள அதிகாரவாதம் அதில் சிலவாகும். உதாரணமாக கடந்த ஆட்சிக்காலத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் நிலைமாற்று நீதிக்காக மேற்கொண்ட பல்வேறு செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தமையைக் காட்ட இயலும். பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவற்றின் எந்தவோர் அறிக்கையும், பரிந்துரையும் முன்வைக்கப்படவில்லை. மேலும் நாங்கள் ஒருபோதும் பழிவாங்கலை அடிப்படையகக்கொண்ட பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் இறங்கவேண்டியதில்லை. மீண்டும் முரண்பாட்டு நிலைமையொன்று உருவாகாமலிருக்க ஆவனசெய்தலானது நிலைமாற்று நீதியின் விசேட படிமுறையாகும். நாங்கள் இதற்கு அவசியமான நிறுவனங்களைக் கட்டியெழுப்பவேண்டும். கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும். மேலும் சமூகத்தில் நன்னெறிகளுடன் தொடர்புடைய விழுமியங்களை பிரபல்யப்படுத்த வேண்டும். இதன் மூலமாக எமது சமூகத்தில் முரண்பாடுகள் மீண்டும் ஏற்படாதிருக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடிய சனநாயக சமூகமொன்றில் அரசு சமயத்தைப் பார்க்கிலும் கீழே அமையவேண்டும். மேலும் அரசாங்கம் அச்சத்தை சமூகமயப்படுத்திக் கொண்டுசெல்கின்ற ஆட்சிமுறையினை நிறுத்தவேண்டும்.

**தெற்கில் வசிக்கின்ற மக்களுடன் நிலைமாற்று நீதி சம்பந்தமாக எவ்வாறு உரையாடலொன்றை மேற்கொள்வது?**

**பேராசிரியர் திரு. வேலுப்பிள்ளை குகேந்திரன்:**

நான் உணர்ந்த வகையில் சிறிசேன சனாதிபதியவர்களின் முதலாவது உரையில் அவர் யுத்தத்தினால் வடக்கிலும் தெற்கிலும் வசிக்கின்ற இலங்கையரின் உயிர்கள் இழக்கப்பட்டதாக கூறியவிதத்தில் குறியீட்டுரீதியான பெறுமதியொன்று இருந்தது. அது இந்த உரையாடலை ஆரம்பிக்கச் சிறந்தவிதமாகும். மேலும் தேசிய சுதந்திரதின வைபவத்தில் தேசியகீதம் தமிழில் இசைக்கப்பட்டமையும் இந்த உரையாடலுடன் பல விடயங்களை சேர்க்கின்றது. உரையாடல் இங்கிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும். சிங்கள சமூகமும், தமிழ்ச் சமூகமும் யுத்தத்திற்கு பலவற்றை அர்ப்பணித்துள்ளன. அத்தகைய ஒன்று மீண்டும் ஏற்படாதிருக்க நாங்கள் ஆவன செய்யவேண்டும். தெற்கில் ஒரு சில குடும்பங்கள் 1970களில் இடம்பெற்ற கிளர்ச்சிகளில் காணாமல் போனவர்களை இன்னமும் தேடிவருகின்றன. இது இந்த உரையாடலுக்கு நல்லதோர் ஆரம்பம். இந்த உரையாடல் பல்வேறு மட்டங்களில் இடம்பெறவேண்டும். உதாரணமாக மாணவர்களுக்கிடையிலும், தொழிற்சங்கங்களுக்கிடையிலும் இது பற்றி சமூகத்தில் உள்ள விழிப்புணர்வினை அதிகரிப்பது அவசியமாகும். இது குறிப்பாக பக்கச் சார்பற்றதும் அரசியல் இன்றியும் இடம்பெறவேண்டிய செயற்பாடாகும்.

**தமிழ் மக்களின் பாதுகாப்பையும், மனிதஉரிமைகளையும் பாதுகாக்கவும் முரண்பாடு மீண்டும் உருவாகாதிருக்கவும் அரசியலமைப்பு ஊடாகவும் நீதிமன்றச்செயற்பாடு ஊடாகவும் ஆவன செய்யமுடிவது எவ்வாறு?**

**பேராசிரியர் திரு.வேலுப்பிள்ளை குகேந்திரன்:**

இதற்காக சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பது மிகமுக்கியமானதாகும். குறிப்பாக மனிதஉரிமைகள் பிரகடனமொன்று இருத்தல் மிகமுக்கியமானதாகும். புதிய அரசியலமைப்பினூடாக இலங்கைப் பிரஜைகள் அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாக்கின்ற மனிதஉரிமைகள் பிரகடனமொன்றை விதித்தல் மிகமுக்கியமானதாகும்.

இதற்காக ஊடகத்திற்கும் பாரிய செயற்பொறுப்புள்ளது. குறிப்பாக பக்கச்சார்பற்ற வகையில் தகவல்களை வெளியிடும் பொறுப்புள்ளது. எனவே அரசியல் மற்றும் அரசாங்கத் தலையீடுகள் அற்ற ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்தவேண்டியது மிகமுக்கியமானதாகும்.

**பேராசிரியர் திரு. எஸ்.பத்மநாதன்:**

கல்வி முறைமைபற்றி கருத்திற்கொள்ளும்போது பல்கலைக்கழக முறைமை அரசியல் மயமற்றதாக மாற்றப்படல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பெயர் நியமனங்களை சமர்ப்பித்தலானது அரசியல் தலையீடுகளின்றி இடம்பெறல் வேண்டும். துரதிஷ்டவசமாக தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் இது இடம்பெறுவதில்லை.

**பேராசிரியர் திரு. வேலுப்பிள்ளை குகேந்திரன்:**

உலகத் தமிழர் ஒன்றியத்தால் மக்கள் பிரதிநிதிகள் குழுவுக்கு புதிய அரசியலமைப்புக்கான சில பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அப்பரிந்துரைகள் இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்தன.


மனித உரிமைகள் பிரகடனமொன்றும் சட்டத்தின் ஆட்சியும்.

- சுதந்திரமான நீதித்துறை அரச நிறுவனங்களுக்கிடையில் தத்துவங்கள் முறைப்படி பகிர்ந்து செல்வதற்காக அரசியலமைப்பு நீதிமன்றமொன்று உருவாக்கப்படுதல்.
- அதிகாரப் பகிர்வு மற்றும் சுயாட்சிக்கு இடையிலான சமநிலை.
- அனைத்து மக்கட்பிரிவுகளுக்கும் சமமான நன்மைகளையும், வாய்ப்புகளையும் வழங்குதல்.
- பிளவுபடாத இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு (பொலிசு தத்துவங்களை உள்ளிட்டதாக)
- இரண்டு சபைகளைக் கொண்ட சட்டவாக்கத்துறை
- வெளிப்படைத் தன்மையுடைய நிர்வாகப் பொறியமைப்பு
- மதச்சார்பற்ற அரசியலமைப்பு

புதிய அரசியலமைப்பு மூலமாக இந்த கோட்பாடு மேம்படுத்தப்பட்டால் இலங்கையின் தமிழ்க் குடிமக்களுக்கு தமது பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் பற்றிய நம்பிக்கை பிறக்குமென நான் நம்புகிறேன்.

பேட்டி காணல் :
**றுவெந்தி வக்வெல்வ**

சிங்கள மொழிபெயர்ப்பு :
**செனெல் வன்னி ஆரச்சி**



www.colombotelegraph.com

# மக்கள் பங்கேற்பு போதுமானதாக இல்லை

## கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதி ஆலோசகர் ஒஸ்ரின் பர்னாந்து

**இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாட்டுக்காக நிலைமாற்று நீதி முக்கியத்துவம் வகிப்பது ஏன்?**

இலங்கையில் நிலவிய நீண்டகால இரத்தம் சிந்திய முரண்பாட்டுக்குப் பின்னர் பல்வேறு மக்கள் – அரச மற்றும் அரசு அல்லாத செயற்பாட்டாளர்கள் சம்பந்தமாக பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான மற்றும் மனிதஉரிமைச் சட்டமீறல்கள் சம்பந்தமான முறைப்பாடுகளை காணக் கிடைக்கின்றமை இயல்பானதே. அத்தகைய மீறல்கள் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் பேசவேண்டும். இலங்கையின் நிலைமாற்று நீதி விசேடமாக நீதி கிடைப்பதைக்காணல் மற்றும் தவறு புரிந்தவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதை உறுதிப்படுத்துவதற்காக குற்றச்செயல்கள் மற்றும் பிரதிவிளைவுகளைப் பற்றிப்பேசுதல் அவசியமாகும். அதைப்போலவே குறிப்பாக காணாமல்போதல், கடத்திச்செல்லல் போன்றவை சம்பந்தமான இறந்தகால சம்பவங்கள் பற்றிய நிலைமைக்குள் உண்மையைத் தேடுவதற்காகவும் கோரிக்கை நிலவுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் உயிருடன் இருந்தார்களா, இல்லையா, அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி அறிந்துகொள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர்களின் உறவினர்களுக்கு அவசியமாகும். மீளிணக்கத்தின் நன்மைக்காக நிலைமாற்று நீதிச்செயற்பாடுகள் அவசியமாகின்றன. அத்தகைய செயல்களை கடைப்பிடிக்கும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டியதன் அவசியம் உருவாக்கப்பட்டுவதோடு,

அவற்றுக்காக பகிரங்க மன்னிப்புக்கோருதல் அல்லது ஞாபகார்த்த தினங்களை பிரகடனஞ்செய்தல் போன்ற சமிக்ஞைகள்கூட அடங்கக்கூடும். பாரதூரமானவகையில் கருத்திற்கொள்ளும்போது மீண்டும் இடம்பெறாத நிலைமைகளை ஏற்படுத்துதலும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பும் நல்லிணக்கத்திற்கு முக்கியமானதாகும்.

நிலைமாற்று நீதிச் செயற்பாடுகள் ஊடாக துஷ்பிரயோகங்களுக்கு எதிராக செயலாற்றுவதும் பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் மீண்டும் தோன்றுதல் மற்றும் தண்டனை விடுபாடு தவிர்க்கப்படுவதும் உறுதிப்படுத்தப்படவியலும். எவ்வாறாயினும் மூடப்பட்ட செயல்களின் பட்டியலொன்று கிடையாது. உதாரணமாக ஒரு சில நாடுகள் நினைவுகூறுதல்போன்ற படிமுறைகளைச் சேர்த்துள்ளன. அதிகாரிகளால் நிலவுகின்ற பல்வேறு துணைவிளைவுகள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், குறிப்பாக ஒவ்வோர் அனுபவத்திலும் அரசியல் சூழ்நிலைகள் வித்தியாசமானவை. அத்துடன் வித்தியாசமானவகையில் பிரவேசிக்க வேண்டுமென்பதாலும் இந்தப் பொறியமைப்பினை நிறுவுதல் அல்லது நெறிப்படுத்துதல் ஒவ்வொரு நாட்டினதும் நிலைமையிலேயே தங்கியுள்ளது. எல்லாச் சூழமைவுகளுக்கும் ஒத்துவரக்கூடிய ஒரு சூத்திரம் கிடையாது.

**மனித உரிமைகள் பேரவையின் முன்னிலையில் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்பாட்டுப் பிரேரணையின் பிரதான அம்சங்கள் யாவை?**

இலங்கை அரசாங்கம் பிரதானமாக ஐந்து வாக்குறுதிகளைக் கொடுத்தது. அதாவது உண்மையறிதல் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவொன்றை தாபித்தல், காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகமொன்றை நிறுவுதல், உள்நாட்டு பொறுப்புக்கூறல் பொறியமைப்பொன்றினை நிறுவுதல், ஈடுசெய்தலுக்கான அலுவலகமொன்றைத் தாபித்தல் மற்றும் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் என்பவையாகும். குறிப்பிடப்பட்ட முக்கியமான நடவடிக்கைப் படிமுறையாக அமைந்தது யாதெனில், இந்தப் பொறியமைப்பினை உருவாக்கும் செயற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்களை உள்ளிட்ட பங்காளித் தரப்பினர்களுடன் கருத்துக்களை விசாரித்தறிதலை மேற்கொண்டு வருவதாகும்.

மீளிணக்கத்தின் நன்மைக்காக நிலைமாற்று நீதிச்செயற்பாடுகள் அவசியமாகின்றன. அத்தகைய செயல்களை கடைப்பிடிக்கும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டியதன் அவசியம் உருவாக்கப்படுவதோடு, அவற்றுக்காக பகிரங்க மன்னிப்புக்கோருதல் அல்லது ஞாபகார்த்த தினங்களை பிரகடனஞ்செய்தல் போன்ற சமிக்ஞைகள்கூட அடங்கக்கூடும். பாரதூரமானவகையில் கருத்திற்கொள்ளும்போது மீண்டும் இடம்பெறாத நிலைமைகளை ஏற்படுத்துதலும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பும் நல்லிணக்கத்திற்கு முக்கியமானதாகும்.

**உண்மையறிதல் மற்றும் மீளிணக்க ஆணைக்குழு, காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் மற்றும் விசேட நீதிமன்றமொன்றை நிறுவுதலை உள்ளிட்ட பொறியமைப்புகள் மற்றும் செயற்பாடுகள் பலவற்றுக்கு அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது. அரசாங்கம் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் வெற்றியடையுமா? ஏனையவற்றுக்கு மேலாக ஒரு சிலவற்றுக்கு முன்னுரிமை கிடைக்குமா?**

வாக்குறுதியளித்த இந்த அனைத்துப் படிமுறைகளும் முக்கியமானவை. எவ்வாறாயினும் முன்னுரிமை பற்றிய இறுதி முடிவினை எடுக்கமுன்னர் கருத்திற்கொள்ளவேண்டிய பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. என்னால் அரசாங்கத்திற்காக பேசமுடியாது. என்றாலும் எனது முன்னுரிமை என்னவென்று நீங்கள் தெரிந்துகொள்ள எதிர்பார்ப்பீர்களாயின் என்னால் கூறமுடியும் காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் பற்றிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அல்லது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய இரண்டில் உங்களால் கூறக்கூடிய எதுவாகவிருப்பினும் முன்னுரிமைக்கு வரும் என்று.

**அரசாங்கம் இலங்கையின் அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நிலைமாற்று நீதி ஆகிய இரண்டையும் வாக்குறுதியளித்து உள்ளது. மிகவும் அண்மையில் அரசியலமைப்பு சபையொன்றையும் நல்லிணக்கச் செயலகம் ஒன்றையும் நிறுவ பாராளுமன்றத்தில் இணக்கப்பாட்டுப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதை நாங்கள் கண்டோம். இந்த இரண்டு செயற்பாடுகளுக்கிடையிலும் தொடர்பு ஏற்படுமா? இல்லாவிட்டால் அவை**

**நல்லிணக்கத்தின் நன்மைக்காக நிலைமாற்று நீதிச்செயற்பாடுகள் அவசியமாகின்றன. அத்தகைய செயல்களை கடைப்பிடிக்கும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்க வேண்டியதன் அவசியம் உருவாக்கப்பட்டுவதோடு, அவற்றுக்காக பகிரங்க மன்னிப்புக்கோருதல் அல்லது ஞாபகார்த்த தினங்களை பிரகடனஞ்செய்தல் போன்ற சமிக்ஞைகள்கூட அடங்கக்கூடும். பாரதூரமான வகையில் கருத்திற்கொள்ளும்போது மீண்டும் இடம்பெறாத நிலைமைகளை ஏற்படுத்துதலும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பும் நல்லிணக்கத்திற்கு முக்கியமானதாகும்.**



tamildiplomat.com

ஆளுநர் அபிவிருத்தி நடவடிக்கையொன்றை கண்காணிக்கின்றார்

**தனித்தனியாக பயணஞ்செய்யுமா? இந்த இரண்டு செயற்பாடுகளுக்கும் தலைமைத்துவம் வகிக்கின்ற வெவ்வேறு நடிகர்கள் உள்ளார்களா?**

அரசியலமைப்பு வகுத்தல் செயற்பாட்டில் நான் தொடர்பு கொள்ளவில்லை என்பதால் என்னால் சம்பவம்சாரந்த விருத்திகளுக்குச் செல்லவியலாது. என்றாலும் அரசியலமைப்பினை வகுத்தல் என்பதற்கு மீளிணக்கம் மற்றும் நிலைமாற்று நீதி செயற்பாடுகளின் பங்களிப்பு கிடைக்க வேண்டுமென நான் கூறவேண்டும். அவை மீண்டும் ஏற்படாமைக்கான தீர்வுகள் அடிப்படை உரிமைகளுக்கு, மனித உரிமைகளுக்கு, மனிதாபிமான சட்டநடவடிக்கைகளுக்கு தேசமென்ற வகையில் இணங்கியுள்ள மற்றும் எதிர்காலத்தில் இணங்கக்கூடிய பல்வேறு சர்வதேச உடன்பாடுகளுக்கும், உடன்படிக்கைகளுக்கும் அர்ப்பணித்தலுடன் தொடர்புடையதாக இருப்பதாலேயே அது விசேடமாகவும் கட்டாயமாகவும் அவசியமாகின்றது. அரசியலமைப்பினை வகுத்தல், நீதிமன்ற முறைமைகள், நீதித்துறை, நிர்வாகம், விசேடமாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளல், அரசகட்டமைப்பு என்பவற்றுக்கு ஏற்புடையதாகின்றது. இவை மீளிணக்கத்துடனும் தேசிய பிரச்சினை பற்றிப் பேசுவதுடனும் தொடர்புடையது. இவற்றைப் பொருந்தக்கூடியவகையில் எவ்வாறு பிரயோகிப்பது, எவ்வாறு என்பது அரசியலமைப்புச் சபைக்கும் அதில் பங்கேற்பவர்களுக்கும் சொந்தமான விடயமாகும். மேலும் கூறுவதானால் புதிய அரசியலமைப்பு தயாரித்தலானது முறையான செயற்பாட்டின் ஊடாக செல்லவேண்டியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் செயற்பாடுகள் இரண்டினதும் நடிகர்கள் வித்தியாசமானவர்கள் என நான் நினைக்கிறேன். ஆனால் இறுதியில் அதனை தீர்மானிக்க வேண்டியது பாராளுமன்றத்திற்குரிய விடயமொன்றாகும். (முன்னர் குறிப்பிட்ட நிலைமாற்று நீதிக் கருவிகள் பாராளுமன்ற சட்டவாக்கம் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டி உள்ளதென்பதைக் குறிப்பிடல் வேண்டும்.)

**பொதுவாக எடுத்துக்கொண்டால் கிழக்கின் மக்கள் அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் நிலைமாற்று நீதி சம்பந்தமாக அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு எவ்வாறு பிரதிபலிப்புச் செய்தார்கள்? அதற்கு ஒத்துழைப்பு உள்ளதா?**

நான் முன்னர் கூறியவாறு அரசியலமைப்பு வகுக்கும் செயற்பாட்டுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. அரசியலமைப்பினை வகுத்தல் சம்பந்தமாக இடம்பெறுவது என்ன என்பது பற்றி எனக்குச் சராசரி புரிந்துணர்வே இருக்கின்றது. பிரதேச அரசியல்வாதிகளுடன் இடைக்கிடையே நான் மேற்கொண்ட உரையாடல்கள் ஊடாகவே கிழக்கில் வைத்து நான் அவற்றை சேகரித்துக் கொண்டேன். நீங்கள் அறிந்தவாறு அரசியல்வாதிகள் கட்சிகளுக்கே சொந்தமானவர்கள். இவர்கள் பல்வேறு அரசியல் அர்ப்பணிப்புகள் மூலமாகவே நெறிப்படுத்தப்படுகின்றனர். பொதுவாக கட்சித்தலைமைகள் மற்றும் கட்சிக்கொள்கைகள் ஊடாகவே இவர்கள் நெறிப்படுத்தப்படுகிறார்கள். உண்மையிலேயே என்னுடைய தொடர்பு மக்களுடனேயே நிலவுகின்றது. பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் காணாமல்போனமை தொடர்பாக என்னிடம் வருகின்ற சங்கங்கள் மற்றும் அமைப்புக்களுடனேயே. அத்தகைய தரப்பினர்கள் அரசாங்கங்களால் நிலைமாற்று நீதி நெறிப்படுத்தப்படுகின்ற விதம்பற்றி மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள் என நான் உணர்கிறேன். உண்மையிலேயே எவரையும் முழுமையாக மகிழ்ச்சியடையச் செய்விக்கவோ எதனையும் முழுமையாக ஈடேற்றவோ இயலாது. எனது கூற்றுக்கான அடிப்படையாக அமைவது இதே பிரச்சினைபற்றி கடந்த அரசாங்கத்தின் செயலாற்றுகை பற்றி ஒப்பீட்டுரீதியான மதிப்பீடொன்றின் அடிப்படையே என்பதை மறந்துவிடவேண்டாம்.

**தமது மாகாணங்களில் மீளிணக்கப் பொறியமைப்புகளின் வேலைகளை மேம்படுத்துகையில் மற்றும் அவற்றுக்கு உதவுகையில் மாகாண ஆளுநர்கள் ஏற்று செய்ய வேண்டிய வகிபாகம் யாது?**

மாகாண ஆளுனர் ஒரு புறத்தில் மீளிணக்கச் செய்தியைக்கொண்டு செல்கையில் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும், இயலுமானவரை தலைமைத்துவம்

வகிக்கவேண்டுமெனவும் அவரது மாகாணத்தின் அரச தலைவரின் மீளிணக்க செயலாற்றுகையுடன் பங்கேற்று செயலாற்ற வேண்டுமெனவும் நான் நினைக்கிறேன். எதிர்பார்த்த வகையில் மீளிணக்க பொறியமைப்புகள் ஏற்கெனவே சமூகரீதியான தேவைப்பாட்டினை உருவாக்கியுள்ளது. இதனால் பொதுமக்களுடன் இடைச்செயற்பாடு கணிசமான முக்கியத்துவம் வகிக்கின்றது. எனவே ஆளுனருக்கு இரட்டை வழிப்பயணப் பாதையொன்று இருக்கவேண்டும். அதற்கு மேலதிகமாக நான் ஏற்கெனவே குறிப்பிட்ட நான்கு மீளிணக்கத் தூண்களை அடைவதில் விரிவான வகிபாகமொன்று அவருக்கு இருக்கின்றது. நீங்கள் சாம்பூர் மீள்குடியமர்த்தலை கையாண்ட விதம்பற்றி பார்ப்பீர்களாயின் ஆளுனரும் அர்ப்பணிப்புச் செய்தால் இந்த அனைத்து அம்சங்களையும் அடைய இயலுமென்பது நிரூபிக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும்.

**இற்றைவரை மீளிணக்க வேலைகளை அதிகளவில் அமுலாக்குவது மத்திய அரசாங்கமாகும். மீளிணக்க செயற்பாட்டில் பிரதேச செயற்பாட்டாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமான வகிபாகமொன்று உள்ளதா? அவர்களால் செயற்படக்கூடிய வகிபாகம் யாது?**

கிழக்கில் அமுலாக்கப்பட்ட வேளையில் மையத்தால் நெறிப்படுத்தப்பட்ட மீளிணக்கம் பற்றிய உங்களின் கூற்றுடன் நான் இணங்கமாட்டேன். மையம் – பரிதி தொடர்பு தடுக்க இயலாத கலவையாகும். உண்மையிலேயே பெரும்பாலான மீளிணக்க நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்ற மையத்தில் அரசாங்க பொறியமைப்பு மாவட்ட மற்றும் பிரதேச செயலகம் என்பவை அதே பொறியமைப்பாகும். ஆனாலும் கிழக்கு குறைந்தபட்சம் மையம் மற்றும் மாகாண பதவிப்படிவரிசைக்கிடையில் இராணுவத்துடன் கூடநெருங்கிய தொடர்புகளை நாங்கள் காண்கிறோம். ஆளுனர் ஒரு அமுலாக்குபவராக இருக்கவேண்டியது அவசியமில்லை. எனினும் மீளிணக்கத்தின் தலைவராக, உதவி வழங்குனராக மற்றும் இணைப்பாளராக இருக்கலாம். நான் இவை பற்றி ஒப்பிட்டுப்பார்க்க எதிர்பார்ப்பதில்லை. எனினும் நீங்கள் விரும்பினால் ஒப்பிட்டுப்பார்க்க உங்களுக்கு இடமளிக்க விரும்புகிறேன்.

மாகாண ஆளுனர் ஒரு புறத்தில் மீளிணக்கச் செய்தியைக்கொண்டு செல்கையில் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும், இயலுமானவரை தலைமைத்துவம் வகிக்கவேண்டுமெனவும் அவரது மாகாணத்தின் அரச தலைவரின் மீளிணக்க செயலாற்றுகையுடன் பங்கேற்று செயலாற்ற வேண்டுமெனவும் நான் நினைக்கிறேன்.

**சர்வதேச மற்றும் உள்நாட்டு பங்குபற்றுனர்களின் கலப்பினை உள்ளடக்கிய பொறுப்புக் கூறுவதற்கான பொறியமைப்புகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது இலங்கைக்கு அவசியமானதென்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

நான் ஒரு சட்டத்தரணியல்ல என்பதால் கலப்பு பங்கேற்பு நீதிமன்றங்கள் நல்லவையா கெட்டவையா என்பது பற்றிய விளக்கமொன்றை என்னால் தரவியலாது. எவ்வாறாயினும் கடந்த ஆண்டு செத்தெம்பர்களில் ஜெனீவா பிரேரணையின் பின்னர் உள்நாட்டு பொறுப்புக்கூறும் பொறியமைப்பில் பெயர் குறிக்கப்பட்ட ஒருசில தரப்புக்களின் பங்கேற்பு இருக்கவேண்டுமென்ற கடப்பாடு உள்ளது. ஒருசில வேளைகளில் இந்த கடப்பாடு “அவசியப்பாடுகளை” கட்டாயமானதாக்க இயலும். இந்த பங்கேற்பு அமுலாக்கப்படவேண்டியது எவ்வாறு என்பதற்கு ஒருசில மாற்றீடுகள் இருக்கக்கூடும். தொழில்வாண்மைக் குழுவொன்று இந்தப் பிரச்சினை தொடர்பில் செயலாற்றி வருகின்றதென்பதை நான் அறிவேன். என்னால் காணக்கூடிய அளவுக்கு பங்கேற்புக் கலவையொன்றை விசேட நீதிமன்றமொன்றை அமைப்பதன் ஊடாக செய்யவியலும். எனினும் அந்த நீதிமன்றம் சார்ந்த பாவனை பற்றி முன்னர் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகள் மூலமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றவாறு அரசியலமைப்பு, நீதித்துறை சட்டங்கள் என்பவை உள்ளடங்கும். இரண்டாவது அது மாறுபட்ட தயாரிப்பு மூலமாக நேரிடக்கூடும். உதாரணமாக ஒருவர் விசேட நீதிமன்றம் பற்றிச் சிந்திக்கும் போது நீதிமன்றமொன்று நீதிபதிகள், புலனாய்வாளர்கள், குற்றப்பகர்வாளர்கள் போன்ற வியாபிக்கக்கூடிய அம்சங்கள் அதில் இருக்கக்கூடும். பயிலுனர் என்றவகையில் என்னால் காணக்கூடிய துறைகள் அவையாக அமையக்கூடும். சட்டவல்லுனர்கள் இந்தப் பிரச்சினை பற்றிப் பார்க்கும்போது மேலும் பல செயற்பாட்டுத்துறைகள் இருக்கக்கூடும். எமது நிலைமைக்குப் பொருத்தமான வடிவமைப்பினைத் தயாரிக்க நாங்கள் நிபுணர்களுக்கு இடமளிப்போம்.

மீளிணக்கத்திற்காக பங்களிக்க எதிர்பார்ப்பார்களாயின் அது தனியார் ஊடக உரிமையாளர்களினதும் மற்றுமொரு முரண்பாடாக இடம்பெறாமல் இருக்கவேண்டும் என்பதைக்காண ஆர்வம் கொண்டுள்ள ஆட்கள் என்றவகையிலும், எமது பிள்ளைகள் பேரன், பேத்திமார்களுக்கு மிகச்சிறந்த

**மாகாண ஆளுனர் ஒரு புறத்தில் மீளிணக்கச் செய்தியைக்கொண்டு செல்கையில் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும், இயலுமானவரை தலைமைத்துவம் வகிக்கவேண்டுமெனவும் அவரது மாகாணத்தின் அரச தலைவரின் மீளிணக்க செயலாற்றுகையுடன் பங்கேற்று செயலாற்ற வேண்டுமெனவும் நான் நினைக்கிறேன்.**

**மீளிணக்கத்திற்காக பங்களிக்க எதிர்பார்ப்பார்களாயின் அது தனியார் ஊடக உரிமையாளர்களினதும் மற்றுமொரு முரண்பாடாக இடம்பெறாமல் இருக்கவேண்டும் என்பதைக்கான ஆர்வம் கொண்டுள்ள ஆட்கள் என்றவகையிலும், எமது பிள்ளைகள் பேரன், பேத்திமார்களுக்கு மிகச்சிறந்த உலகமொன்றையும், நாட்டையும் உருவாக்கிக்கொடுக்க பங்களிப்பவர்கள் என்றவகையிலும் கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பதிப்பாசிரியர்கள் என்போரது பொறுப்பாக அமையும். எனினும் ஊடகப் பிரிவுக்குள்ளே எமக்கு அத்தகைய உன்னதமாக முன்னுதாரணங்களும், முன்னுதாரணமாக ஆட்களும் இருக்கிறார்களா? எனக்கென்றால் சந்தேகம் தான்.**

உலகமொன்றையும், நாட்டையும் உருவாக்கிக்கொடுக்க பங்களிப்பவர்கள் என்றவகையிலும் கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பதிப்பாசிரியர்கள் என்போரது பொறுப்பாக அமையும். எனினும் ஊடகப் பிரிவுக்குள்ளே எமக்கு அத்தகைய உன்னதமாக முன்னுதாரணங்களும், முன்னுதாரணமாக ஆட்களும் இருக்கிறார்களா? எனக்கென்றால் சந்தேகம் தான்.

**ஈடுசெய்தலுக்கான அலுவலகமொன்றைத் தாபித்தல் அரசாங்கம் வழங்கிய ஒரு வாக்குறுதியாகும். இது நிலைமாற்று நீதிச் சட்டகத்தில் பிரதான தூண்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இந்த அலுவலகம் இவ்வாண்டில் தாபிக்கப்படுமா? அது கவனஞ் செலுத்துகின்ற துறைகள் எவையாக அமையக்கூடும்?**

ஈடுசெய்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள ஈடுசெய்தல் முறைமைகள், நிறுவனங்கள், பணியாளர் குழாம் உள்ளன என நான் நினைக்கிறேன். இவை 1983 பிரச்சினைகளின் பின்னர் உருவாக்கப்பட்ட 2004 சுனாமிக்குப் பின்னரும் தயாரிக்கப்பட்டவையாகும். எவ்வாறாயினும் அவ்வாறு நிலவுகின்ற ஈடுசெய்தல் பிரச்சினைகள், முறைமைகள், ஏற்றுக்கொள்ளல்கள் நிகழ்கால கோரிக்கைகளுக்கு ஒத்துவரக்கூடியதாக போதுமானவையாக இல்லாதிருக்கக்கூடும். உதாரணமாக உளச்சமூக புனர்வாழ்வு நிகழ்கால முறைமைகளில் கிடையாது. எனினும் அது பாதிக்கப்பட்ட சமுதாயங்களால் கோரப்படவியலும். எவ்வாறாயினும் இழப்பீடு செய்தல் பாதிக்கப்பட்டவர்களுக்கே அவசியமாவதால் அவர்களின் அவசியப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியுள்ளது. எனவே இவை நிச்சயமாக நடப்புத்தேவைகளுடன் ஒத்துவரத்தக்கதாக அபிவிருத்தி செய்யப்படல்வேண்டும். அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களால் பல தசாப்தங்களாக கவனிக்கப்படாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஐக்கிய இராச்சியத்தின் ஆலோசகரொருவரான பிரெடீ கனியிடமிருந்து எனக்குக்கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் புனர்வாழ்வு செயலாளர் என்றவகையில் எனது சேவைக் காலத்தில் உருவாக்கப்பட்ட (நான் நம்புகிறேன் 1987 இல் என்று.) ஒருங்கிணைந்த உதவி நிகழ்ச்சித்திட்டம் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. புதிய முறையியலை கவனத்திற் கொள்ளவும் முறைமைகள் மற்றும் நிறுவனங்களைப் பலப்படுத்தவும் அரசாங்கத்திற்கு இடமளிப்போம். புதிய ஈடுசெய்தல் பொறியமைப்பொன்றினை அமுலாக்குதல் தொடர்பான காலச்சட்டகம் பற்றி என்னால் மைபோட்டு பார்த்துக் கூறமுடியாது.

**நிலைமாற்று நீதி சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படும்வரை பிரதான ஓட்டத்தின் ஊடகத்திற்குள் முன்னேற்றத்திற்காக ஏதேனும் இடவசதி இருக்கின்றதா? எந்தத் துறையில் முக்கியமான பிரச்சினைகள் குறைவாகவே நிகழ்காலத்தில் அறிக்கையிடப்படுகின்றதென நீங்கள் நினைக்கிறீர்களா? இலங்கையில் மீளிணக்கம் பற்றி அதிக கவனத்தை ஏற்படுத்திக் கொள்வது எப்படி?**

முன்னேற்றகரமாக்கவேண்டிய அவசியம் நிலவுகின்றதென நான் நம்புகிறேன். நிலைமாற்று நீதி மற்றும் மீளிணக்கம் பற்றிய உத்தியோகபூர்வ பேச்சாளர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை என்னால் குறிப்பிடவியலும். அதுபற்றி பேசுபவர்களை என்னால் ஒரு கையிலுள்ள விரல்களை விட்டு கணக்கிடமுடியும். எனினும் அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்ட நிலைமாற்று செயற்பாடுகளுக்கு எதிராக பல சப்தம் நிறைந்த குரலோசைகளைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது. நிலைமாற்று நீதிக்குச் சார்பானவற்றைப் பார்க்கிலும் எதிரான பலவிடயங்கள் தொடர்பாக அதிக பிரச்சாரம் கிடைக்கும். பிரச்சினையை அரசாங்க ஊடகங்களின் முன் கொண்டுவருகின்ற வேளையில் அதிக கவனத்தை உருவாக்குவது அரசியல் பதவிப்படிமுறை வரிசைகளின் பொறுப்பாக அமையும். அதைப்போலவே பிரச்சினை தனியார் ஊடகங்களுக்கு வரும்போது அவர்கள் மீளிணக்கத்திற்காக பங்களிக்க எதிர்பார்ப்பார்களாயின் அது தனியார் ஊடக உரிமையாளர்களினதும் மற்றுமொரு முரண்பாடாக இடம்பெறாமல் இருக்கவேண்டும் என்பதைக்காண ஆர்வம் கொண்டுள்ள ஆட்கள் என்றவகையிலும், எமது பிள்ளைகள் பேரன், பேத்திமார்களுக்கு மிகச்சிறந்த உலகமொன்றையும், நாட்டையும் உருவாக்கிக்கொடுக்க பங்களிப்பவர்கள் என்றவகையிலும் கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பதிப்பாசிரியர்கள் என்போரது பொறுப்பாக அமையும். எனினும் ஊடகப் பிரிவுக்குள்ளே எமக்கு அத்தகைய உன்னதமான முன்னுதாரணங்களும், முன்னுதாரணமான ஆட்களும் இருக்கிறார்களா? எனக்கென்றால் சந்தேகம் தான்.

newyearsrilanka.blogspot.com



# நிலைமாற்று நீதியை ஈடேற்ற இன்னமும் தாமதம் இல்லை !

சிங்கள – தமிழ் புத்தாண்டு காலம் நிறைவடைந்துவிட்டது. புதுவருடச் சடங்குகள் மத்தியில் நிலைமாற்றுக் காலம் என விசேடமான காலப்பகுதியொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது மிகவும் முக்கியமான தருணமாகும். அனைத்து வேலைகளையும் கைவிட்டு சமய நடவடிக்கைகளில் ஈடுபடுவது அதன் இயல்பாக அமைகின்றது. அதாவது அது தனிப்பட்ட நோக்கங்களுக்கு அன்றி ஆன்மீக நோக்கத்திற்காக அர்ப்பணிப்புச் செய்கின்ற தருணமாகும்.

இந்து சமய கிரியைகள் மத்தியிலும் இத்தகைய விசேட தருணங்கள் நிலவுகின்றன. இஸ்லாமியர்கள் தமது உண்ணாவிரத நோன்புக் காலத்தை வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டமாகக் கருதுகிறார்கள். கிறிஸ்தவர்கள் பெரிய வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஏறக்குறைய ஒரு மாதகாலம் தாம் மிகவும் விரும்புகின்ற முக்கியமானவை எனக்கருதுகின்ற உணவுகளை தவிர்த்துக்கொள்வர். இவ்விதமாக இலங்கையில் வசிக்கின்ற பல்வேறு சமயங்களைச்சேர்ந்த மக்களுக்கு நிலைமாறுகாலம் பற்றிய நெருக்கமான அனுபவம் நிலவுகின்றது. அதாவது அது வாழ்க்கையில் மிகமுக்கியமான பகுதியாக மாறியுள்ளது.

**லயனல் குருகே**

அண்மைய காலகட்டத்தில் நிலைமாற்று நீதி எனும் பதம் பரவலாக பேச்சுவழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. முப்பது வருடகாலமாக நிலவிய பயங்கரமான யுத்தம்



**யுத்தத்தால் இறந்த பல்லாயிரக்கணக்கான மக்களையும், கோடிக்கணக்கான பெறுமதிகொண்ட சொத்துக்களையும் பார்க்கும்போது தோல்வியின் அளவு புலப்படுகின்றது. ஆயுத பலத்திற்கிணங்க ஒரு தரப்பினர் வெற்றியடையும்போது மனிதத்துவம் தோல்வி அடைகின்றது. மனிதத்துவத்திற்கு வெற்றியைப்பெற்றுக் கொடுக்காவிட்டால் யுத்தம் தோன்றுவதை தடுக்கவியலாது. எனவே அது மனிதத்துவம் சார்ந்த விடயமாகும். நிலைமாற்று நீதியை ஈடேற்றுவதன் மூலமாக மேற்கொள்ளப்படுவது இழந்த மனிதத்துவத்தை மீளவும் அழைப்பிப்பதன் மூலமாக தீப்பிடித்த இதயங்களை நல்லிணக்கம் மூலமாக மிருதுவானதாக மாற்றுவதாகும்.**

முற்றுப்பெற்ற பின்னர் மீண்டும் அத்தகைய நிலைமை ஏற்படாமலிருக்க அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளல் இதன் எளிமையான பொருளாகும். தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அங்கத்தவரொருவரான சட்டத்தரணி ஹோவார்ட் வானி கடந்த தினமொன்றில் இலங்கைக்குவந்து ஆற்றிய உரைகள் மற்றும் கலந்துரையாடல்களிலும் நிலைமாற்று நீதி தொடர்பில் அவர் கொண்டுள்ள பெறுமதிமிக்க அனுபவங்களை விபரித்தார்.

முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் நிலைமாற்று நீதியுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களைப் பரிந்துரைக்கின்றது.

நிலைமாற்று நீதி பற்றிய செயற்பாட்டினை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற போக்கும் புலப்படுகின்றது. யுத்தத்திற்குப்பின்னர் அதனை வீரத்தன்மைக்கு உயர்த்திய தரப்பினர்களுக்கு யுத்த மனோநிலையிலிருந்து விடுபடுதல் மிகவும் கஷ்டமான ஒரு பணியாகும். எந்தவொரு யுத்தத்திலும் வெற்றிபெற்றவர்கள் இல்லை. வெற்றிபெற்ற தரப்பினரும் தோல்வியைத்தான் அடைந்துள்ளார்கள். யுத்தத்தால் இறந்த பல்லாயிரக்கணக்கான மக்களையும், கோடிக்கணக்கான பெறுமதிகொண்ட சொத்துக்களையும் பார்க்கும்போது தோல்வியின் அளவு புலப்படுகின்றது. ஆயுத பலத்திற்கிணங்க ஒரு தரப்பினர் வெற்றியடையும்போது மனிதத்துவம் தோல்வி அடைகின்றது. மனிதத்துவத்திற்கு வெற்றியைப்பெற்றுக் கொடுக்காவிட்டால் யுத்தம் தோன்றுவதை தடுக்கவியலாது. எனவே அது மனிதத்துவம் சார்ந்த விடயமாகும். நிலைமாற்று நீதியை ஈடேற்றுவதன் மூலமாக மேற்கொள்ளப்படுவது இழந்த மனிதத்துவத்தை மீளவும் அழைப்பிப்பதன் மூலமாக தீப்பிடித்த இதயங்களை நல்லிணக்கம் மூலமாக மிருதுவானதாக மாற்றுவதாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட உடல் மற்றும் உளரீதியான சேதங்கள், உறவினர்கள் இறந்தமை போன்றவகையிலான அனைத்து விடயங்களையும் விசாரித்தறிந்து இயலுமானவரை தீர்வுகளைக் கொடுக்கவேண்டும். அவசியமானவிடத்து இழப்பீடு வழங்குதல், வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக வசதிகளை வழங்குதல் யுத்தத்தின்போது எதிர்தரப்பினரால் புரியப்பட்ட தவறுகளை விசாரித்தறிந்து மன்னிப்பு வழங்க பாதிக்கப்பட்டவர்கள் தயாராக இல்லாவிட்டால் அவசியமான சட்ட உதவிகளை வழங்குதல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பற்றிய உண்மையான யதார்த்தத்தை கண்டறிதல் மற்றும் அதுபற்றி மீளச்சிந்திக்க இருதரப்பினருக்கும் வாய்ப்பு வழங்குதல், இழந்த உறவினர்களை நினைவுகூர்தல்



**இராணுவம் கைப்பற்றி வைத்துக்கொண்டிருந்த காணிகளின் ஒரு பகுதியை மீண்டும் தமிழ் மக்களுக்கு வழங்கியமை பாராட்டத்தக்கதாகும். எனினும் இன்னமும் பெருந்தொகையான காணிகள் இராணுவத்தின் பொறுப்பிலேயே இருக்கின்றன. இராணுவத்தை புதிய நிலைமைக்கு இயைபடையச்செய்விப்பது கடினமான பணியாக புலப்படுகின்றது. இத்தகைய சுற்றுச்சூழலியே தோல்வியடைந்த தரப்பினர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்ற மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள்.**

மற்றும் அவசியமெனில் நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கான சுதந்திரத்தை மனிதர்கள் என்றவகையில் அவர்களுக்கு வழங்குதல் போன்றவகையிலான நிலைமாற்று நீதி தொடர்பான நீண்ட செயற்பாடொன்று நிலவுகின்றது.

யுத்தத்தால் இறந்த பல்லாயிரக்கணக்கான மக்களையும், கோடிக்கணக்கான பெறுமதிகொண்ட சொத்துக்களையும் பார்க்கும்போது தோல்வியின் அளவு புலப்படுகின்றது. ஆயுத பலத்திற்கிணங்க ஒரு தரப்பினர் வெற்றியடையும்போது மனிதத்துவம் தோல்வி அடைகின்றது. மனிதத்துவத்திற்கு வெற்றியைப்பெற்றுக் கொடுக்காவிட்டால் யுத்தம் தோன்றுவதை தடுக்கவியலாது. எனவே அது மனிதத்துவம் சார்ந்த விடயமாகும். நிலைமாற்று நீதியை ஈடேற்றுவதன் மூலமாக மேற்கொள்ளப்படுவது இழந்த மனிதத்துவத்தை மீளவும் அழைப்பிப்பதன் மூலமாக வெந்துபோன இதயங்களை நல்லிணக்கம் மூலமாக குணப்படுத்துவதாகும்.

யுத்தத்தின் பின்னர் அதன் வெற்றி தொடர்பிலான பெருமிதத்தில் மக்களை மகிழ்விப்பதேயன்றி அதனைவிட மனிதநேய செயற்பாட்டு முறையினைக் கடைப்பிடிப்பதில் கடந்த அரசாங்கம் தோல்விகண்டது. அத்துடன் வடக்கு கிழக்கு மக்களுக்கு பகுதியளவிலான இராணுவ அரசொன்றின் கீழேயே வாழநேர்ந்தது. இராணுவத்தினர் சிவில் நடவடிக்கைகளில் இடையீடு செய்வதில் வரையறை இருக்கவில்லை. யுத்தத்தின்போது இராணுவத்தின் பொறுப்பிலிருந்த தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணிகளில் ஹோட்டல், விவசாயப் பண்ணைகள் மற்றும் ஏனைய கட்டுமாணங்கள் இராணுவத்தின் இடையீட்டின் பேரிலேயே இடம்பெற்றது. வடக்கினைப்போன்றே தெற்கிலும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றன.

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் கவனம் அவ்விதமாகவே இலங்கையின்பால் திரும்பியது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அழுத்தத்தின் பேரிலேயே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றைத் தாபிக்க வேண்டியநிலை சனாதிபதிக்கு ஏற்பட்டது.

எனினும் அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் மந்தகதியிலேயே இடம்பெற்றது. இதனால் சர்வதேச விசாரனையொன்றை நடத்துதல் மற்றும் தடைகளை விதிக்கும் அபாயநிலை தோன்றியது. GSP+ சலுகையை இழக்க நேரிட்டமை, ஐரோப்பிய ஒன்றியம் இந்நாட்டின் மீன் ஏற்றுமதியை தடை செய்தமை போன்ற பாதகமான நிலைமைகளே காணப்பட்டன. பகுதியளவிலான இராணுவ அரசொன்றின் செயற்பாடு எல்லாவிதத்திலும் தென்பட்டது. உள்நாட்டு ரீதியில் அதற்கு எதிராகத் தோன்றிய மக்கள் அலையின் விளைவாக சனாதிபதித் தேர்தல் மற்றும்

பொதுத் தேர்தலின் பின்னர் புதிய தலைமைத்துவமும் புதிய அரசாங்கமும் உருவாகியது.

யுத்தத்தின் பின்னர் நிறைவேறாத உண்மையான மீளிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இணக்க அரசாங்கத்தின் ஒரு வாக்குறுதியாகும். அதுவரை புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் மந்த கதியில் நிலவுகின்றமையை காணக்கூடியதாக இருந்தது.

இராணுவம் கைப்பற்றி வைத்துக்கொண்டிருந்த காணிகளின் ஒரு பகுதியை மீண்டும் தமிழ் மக்களுக்கு வழங்கியமை பாராட்டத்தக்கதாகும். எனினும் இன்னமும் பெருந்தொகையான காணிகள் இராணுவத்தின் பொறுப்பிலேயே இருக்கின்றன. இராணுவத்தை புதிய நிலைமைக்கு இயைபடையச்செய்விப்பது கடினமான பணியாக புலப்படுகின்றது. இத்தகைய சுற்றுச்சூழலியே தோல்வியடைந்த தரப்பினர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்ற மந்திரத்தை முனுமுனுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அத்துடன் இணக்க அரசாங்கத்தின் பொறுப்பினை ஈடேற்ற தீவிரமான கவனத்தை தமது கட்சியில் கட்டியெழுப்ப, அர்ப்பணிக்க சனாதிபதிக்கு நேர்ந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இங்கு அரசாங்கத்தின் மந்தகதியான நடைமுறை மற்றும் இரண்டு கட்சிகளின் கெடுபிடி யுத்தத்திற்கிணங்க நிலைமாற்று நீதியை ஈடேற்றும் பாரதூரமான பொறுப்பு பலவீனமடைந்து வருவது புலனாகின்றது. சனாதிபதி தன்னைப் படுகொலை செய்யவந்த எல்ரீரீஈ அங்கத்தவருக்கு மன்னிப்பு வழங்கியது நல்லதொரு முன்னுதாரணமாகும். அத்துடன் தேசியகீதம் தமிழில் இசைக்க ஆரம்பித்தமையும் சாதகமான அரசாட்சியாகும். எனினும் இத்தகைய மேல்மட்ட சம்பவங்களிலிருந்து நல்லிணக்கத்தை கட்டிவிடவியலாது. அது அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கியும் மேலிருந்து கீழ்நோக்கியும் நேர்மையாக ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றமாகும். எனினும் இந்த மாற்றம் ஆமை வேகத்திலேயே இடம் பெறுகின்றது.

இங்கு ஊடகங்களில் பெரும்பாலானவை இன்னமும் முன்பு நிலவிய அரசாங்கத்தின் சிங்களோத்தமவாத கருத்துக்கிணங்க செயலாற்றிவருவது புலனாகின்றது. அரசாங்கம் ஊடகத்திற்கு அழுத்தம் கொடுக்காமையால் ஊடகச்சுதந்திரம் தவறாகப் பாவிக்கப்படுகின்றது. இங்கு அரசாங்கத்திற்குப் பலம் பொருந்திய ஊடக வலையமைப்பொன்று கிடையாது. அரசாங்கத்திற்கு சொந்தமான ஊடக நிறுவனப் பிரதானிகளுக்கு நிலைமாற்று நீதி பற்றிய சரியான நோக்கம் கிடையாது.


இது இந்நாட்டில் வசிக்கின்ற அனைத்து இனப்பிரிவுகளுக்கும் புதிதானதொன்றல்ல என்பதை விளங்கவைப்பதற்கான தொடர்பாடல் அரசாங்கத்திடம் இருக்கவேண்டும். அனைத்துக் கலைஞர்களும் நிலைமாற்று நீதி தொடர்பான படைப்புகளை முன்வைத்தலைப் போன்றே பாவனையும் உரையாடலும்கூட தூரவிலகியுள்ளது. அதற்காக தமது கலையைப் பாவிப்பது இத்தருணத்தில் அவர்களின் பொறுப்பாகும்.

மன்னிப்பு வழங்குதல் பற்றிய நற்கிரியை இந்நாட்டில் வசிக்கின்ற அனைத்து மதத்தவர்களினதும் சித்தாந்தங்களுடனும் இணங்குகின்றது.

சிங்கள – இந்து புத்தாண்டுக்காலத்தில் அர்த்தமிக்கதாக அமைக்கின்ற ஒரு வழமை இதுவரை கோபதாபங்களுடன் இருந்த தரப்பினர் அவற்றை மறந்து புதுவருடத்தில் உண்டு மகிழ்வதாகும்.

"உயிர்ப்பிச்சை" எண்ணக்கரு மன்னராட்சிக் காலத்திலும் நிலவியது துட்டுகெமுனு, எல்லாளன் யுத்தமானது இரண்டு இனங்களுக்கிடையிலான யுத்தமன்று. அது அதிகாரப் போராட்டத்தின் ஒரு கட்டமாகும். எல்லாளனின் மனிதத்தன்மையை துட்டுகெமுனு விளங்கிக் கொண்டான். யுத்தத்தினால் நேர்ந்த உயிரிழப்புகளின் வேதனை அவனிடமிருந்து வெளிப்பட்டது. அத்தகைய மரபுகொண்ட ஒரு நாட்டில் நிலைமாற்று நீதி பற்றிய கருத்தினை மக்கள் மனங்களில் கொண்டுவந்து குறுங்கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டமொன்றை அமுலாக்குதல் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

சனாதிபதியவர்களின் பக்குவமான தொனிக்கும், பிரதமரின் விவேகத்திற்கு இணங்கவும் இணக்கப்பாட்டுடன் செயலாற்றுகின்ற பண்புக்கமைய நேர்ந்துள்ள குறைபாடுகளை சரிசெய்து கொள்ளல் சிரமமானதாக அமையமாட்டாது.



எந்தத் தாயும் யுத்தம் செய்ய பிள்ளைகளைப் பெற்றெடுப்பதில்லை. ஒவ்வொரு இறப்பும், காணாமல் ஆக்கப்படுதலும் அத் தாய்மார்களை துயரப்படுத்தியுள்ளன. கடந்த கால யுத்தம் ஏராளமான உயிர்களை இல்லாமல் ஆக்கியும், காணாமல் போகச் செய்தும் இருக்கின்றது.

1. எமது பண்பாட்டில் கணவனை இழந்த பெண்களுக்கான இரண்டாவது திருமண வாய்ப்பு எப்பேற்பட்டது?
2. யுத்தம் எத்தனை கணவனை இழந்த பெண்களை உருவாக்கியிருக்கின்றது?
3. பெண் தலைமைத்துவ குடும்பமுறைமை இலகுவானதா?
4. ஓரளவு ஆறுதலைத் தரும் இறந்த உடலுக்கான இறுதிக் கிரியைகளைச் செய்யும் வாய்ப்பு எத்தனைப் பேருக்குக் கிடைக்கின்றது?
5. இறந்தவர்களையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் நினைவு கூர, அஞ்சலி செலுத்தக் கூடிய இடங்கள் எம்மத்தியில் உண்டா?

இவ்வாறு பதில் கூறப்படாத வினாக்களை எத்தனை நாட்களுக்குத்தான்
கேட்க முடியும்?

**ஓவியம் : சுசிமன் நிர்மலவாசன்**

# மௌனமான பாதிக்கப்பட்டவர்கள்: பெண்களும் நிலைமாற்று நீதியும்



**றுவெந்தி வக்வெல்ல**

இலங்கை அதன் நவீன வரலாற்றுக்காலம் முழுவதிலும் தாங்கவியலாத எண்ணிக்கை கொண்ட குடிமக்களை இடம்பெயரச்செய்வித்து, உயிர்களை இழக்கச்செய்வித்து, துர்ப்பாக்கியமான பேரழிவினை எதிர்நோக்கியுள்ளது. நிலைமாற்று நீதிச் செயற்பாட்டு வேளையிலும், அதனையொத்த செயற்பாடுகளின் போதும் அரசியல் துன்புறுத்தலின் அண்மித்த பாதிக்கப்பட்டோரை இலக்காகக்கொள்வது மரபுரீதியான இயற்கைப் பண்பாகும். எவ்வாறாயினும் இது அவ்விதமாகவே கவனஞ்செலுத்தப்படாத முரண்பாட்டின் இரண்டாம் நிலை பாதிக்கப்பட்டோர், பிரதானமாக குடும்பத்தின் பெண் அங்கத்தவர்கள் மற்றும்



www.tsiuk.org

பாதிக்கப்பட்டோரின் அன்புக்குரியவர்களை கைவிட்டுச்செல்கின்ற உலகக் கண்ணோட்டத்திற்கு பங்களித்துள்ளது. நிலைமாற்று நீதிப் பொறியமைப்புகள் பற்றிப் பெரும்பாலான ஆய்வுகள் பெண்கள் தமது கவனத்தை அர்ப்பணிக்கவேண்டிய மற்றும் மிகவும் இலக்காகக் கொள்ளப்பட்ட பரிகாரங்களை பிரயோகிக்கவேண்டிய தனிவேறான ஆய்வு என்பதை ஏற்றுக் கொள்ளத் தவறிவிட்டன. குறிப்பாக இலங்கை தொடர்பாக எடுத்துக்கொண்டால் பெண்கள் அதன் தனித்துவம் காரணமாக உலகம் பூராவிலும் வேறு எந்தவொரு சம்பவக் கற்கையிலிருந்தும் முனைப்பாகத்தெரிகின்ற வரையறையற்ற சிரமங்கள் பலவற்றை எதிர்நோக்குகிறார்கள். இனப்பிரச்சினை பலதசாப்தகால துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வந்ததாக அமையக்கூடும். எனினும் யுத்தத்தின் கொடூரத்தன்மைக்கு இலக்காகியிருந்த பெண்கள் சம்பந்தமாக ஆண் – பெண் சமூகநிலை பிரம்மாண்டமான, தனித்துவமான பிரச்சினைகளை இயல்பாகவே உருவாக்கியுள்ளது.

**காணாமல்போதல்**

காணாமல்போனவர்கள் பற்றிய ஆணைக்குழுவில் மக்களின் கருத்துக்களை விசாரிப்பதற்கான கூட்டத்தொடர்களுக்கு அதிகமாக வருகின்ற மற்றும் வெளியில் எதிர்ப்புக் காட்டுவதற்காக ஒன்றுகூடுகின்ற சிவில் மக்கள் இப்பிரச்சினைபற்றி துரிதமாகப் பேசுகின்ற மற்றும் காணாமல்போனவர்களின் சம்பவங்களை புலனாய்வு செய்வதற்கான முறையான கட்டமைப்பினை நிறுவுதல் ஆகிய இரண்டினதும் அவசியப்பாட்டினை வெளிக்காட்டுகின்றது. இலங்கையில் 1971 தொடக்கம் சுமார் 68,000 பேர் காணாமல்போயுள்ளதாகவும் அது உரிய முறையில் கணக்கிடப்படவில்லையெனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆணைக்குழுக்கள் பற்றி விசாரித்தவிடத்து புலனாய்வுகள் விரிவானதாக அல்லது மற்றும் புலனாய்வு செய்கின்ற உத்தியோகத்தர்கள் செயற்பாட்டில் அவ்வளவு தூரம் ஆர்வம் காட்டுவதில்லை எனப் பலர் நினைக்கின்றனர். அவர்களின் அன்புக்குரியவர்கள் இனிமேலும் உயிருடன் இல்லையென்பதை நம்புவதற்கேதுவாக அவர்களைத் தூண்ட பெரும்பாலான உத்தியோகத்தர்கள் முயற்சி செய்வதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அவர்கள் “சிலவேளைகளில் இறந்து” இருக்கலாமென சந்தேகித்து காணாமல்போன ஆட்கள் சம்பந்தமாகக் கருத்து வெளியிட்ட பிரதம அமைச்சரின் கூற்றும் உறுதி செய்துள்ளது. ஒருவர் தனது அன்புக்குரியவர்களை தேடுகின்ற எதிர்பார்ப்பு மற்றும் ஆர்வத்தை இல்லாமல் போகச் செய்துவிடுவார்கள் என நினைக்க முடிந்த போதிலும் அந்தக் கோட்பாட்டுக்கு முழுமையாகவே முரணாக சிந்திக்கின்ற பெண்ணொருத்தியை இந்த கட்டுரையாளர் சந்தித்தார். தனது கைகளில் ஒருகட்டுக் கடிதங்களை வைத்திருந்த அவள் இந்தச் செயற்பாடு சம்பந்தமாக எல்லா அதிகாரிகளுக்கும் அவர் எழுதியதாகவும் பல்வேறு பங்காளித் தரப்பினர்களால் அவர் வழிப்படுத்தப்பட்டதற்கிணங்க அவசியமான அனைத்து நடைமுறைகளையும் கடைப்பிடித்ததாகவும் ஆனால் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லையெனவும் எதிர்பார்ப்பு எதுவுமேயின்றிக் கூறினாள். அவளது கணவனைத் தேடுகையில் அவளது வாழ்க்கை எவ்வாறு முற்றாகவே மாறியதென்பதை விபரிக்கையில் இறுதியாக அவள் அழுது புலம்பினாள். அதிகாரிகள் உண்மையான சான்றுகளுடன் அவளது கணவனின் மரணம் பற்றி அவளுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற செய்தியைத்

தரும்வரை தைரியமிழக்காமல் காத்திருக்கக்கூட அவள் தயாராக இருப்பதாக கூறினாள். தனது அன்புக்குரியவர்கள் இன்னமும் உயிருடன் இருப்பதாக தீவிரமாக நம்புகின்ற மற்றும் அவர்கள் இருக்கின்ற இடம்பற்றி ஏதேனும் உறுதிப்படுத்தல் கிடைக்கும்வரை எந்தத் தூரத்திற்கும் பயணஞ்செய்யத் தயாராக உள்ள பெண்கள் மத்தியில் அவள் ஒரு துணிவுமிக்க பெண்ணாவள். இறந்துவிட்டதாக ஊகிக்கப்பட்டிருந்த நபரொருவர் மிக அண்மையில் மீண்டும் வந்ததுடனேயே இது இடம்பெற்றது. மேலே குறிப்பிட்ட பெண் மிகுந்த தேவையுடன் பின்னிப்பிணைந்த எதிர்பார்ப்பின் சாயலாக அமைந்தது இதுவாகும். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் பல வருடகாலமாக தனது இளவயது மகள் காணாமல்போனமை பற்றித் தேடிக்கொண்டிருந்த வேளையில் தனது மகள் சனாதிபதி சிறிசேனவின் அருகில் நிற்கும் புகைப்படமொன்று சனாதிபதி தேர்தல் சம்பந்தமான சுவரொட்டியொன்றில் பிரசுரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணை வியத்தகு விதத்திற்கு மாறிய சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு பெண்ணின் கதையைக் காட்டலாம். எனினும் விடயம் மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருந்த வேளையிலும் அவள் இன்னமும் அவளது மகள் சம்பந்தமாக ஏதாவது பிரதிபலிப்பு கிடைக்கும்வரை பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

காணாமல்போனவர்கள் பற்றிய பிரச்சினை பெண்கள் தொடர்பில் வேறு பல சிரமங்களை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது. பெரும்பாலும் வீட்டிலுள்ள ஆண்தான் (கணவன், மகன்மார்) காணாமல்போயுள்ளார். அது தன்னிச்சையாகவே பெண்ணுக்கு வீட்டில் பிரதான வாழ்வாதாரத்தை வழங்குபவரின் நிலைக்குமாற நிர்ப்பந்திப்பதாக மாறியுள்ளது. இப்பெண்களில் பலருக்கு வளங்கள் அல்லது இலாபமீட்டுகின்ற தொழில்களில் ஈடுபட அவசியமான கல்வித்தகைமை இன்மையால் பெண்களை முதன்மையாகக்கொண்ட மனைகளில் பொருளாதார வசதியீனங்கள் மலிந்து கிடக்கின்றன. இந்தப் பெண்களுக்கு அவர்களின் அன்புக்குரியவர்கள் இருக்கின்ற இடங்களை உறுதிப்படுத்துவது அவர்களின் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரும். இது அரச நிறுவனங்களால் அர்த்தமற்றதெனக் கருதப்படுகின்ற எண்ணக்கருவாகும். எனவே, இது சம்பந்தமான பிரதிபலிப்பு அவர்களின் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கணிசமான அளவில் உதவியாக அமையும்.

1970 களிலும் 1980 களிலும் தாய்மார்களும் பாட்டிமார்களும் முனைந்து செயலாற்றிய மற்றும் இறுதியில் காணாமல்போனவர்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவைத் (CONADEP) தாபிக்க வழிசமைத்த ஆர்ஜென்ரீனாவின் சம்பவம் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டவாறு விசாரணைகளை முன்நோக்கி நகர்த்துவதிலும் தவறிழைத்தவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதிலும் முனைப்பான வகிபாகமொன்றை மேற்கொள்ள பெண்களால் இயலும். ஆர்ஜென்ரீனாவின் காணாமல்போனவர்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு அதன் இராணுவ ஆட்சிக்கு பிற்பட்ட காலத்தில் நீண்ட உண்மை மற்றும் நீதிச்செயற்பாட்டினை ஆரம்பித்தது. 1980 இல் பலவந்தமான அல்லது அறியாமை காரணமாக காணாமல்போகச் செய்தமை தொடர்பான ஐக்கியநாடுகள் பணிக்குழுவினை நிறுவுகையிலும் மேற்படி தாய்மார்களும் பாட்டிமார்களும் உதவிபுரிந்தனர். அதைப்போலவே அவர்கள் நிலைமாற்று நீதிப் பாவனைகளில் பெண்களால் ஈடேற்றக்கூடிய மற்றும் பெண்கள் ஈடேற்றவேண்டிய தீர்வுக்கட்டமான வகிபாகத்தை வலியுறுத்தினர்.

இலங்கையில் முரண்பாட்டுக் காலகட்டத்தில் பெண்களுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் தட்டுப்பாடு நிலவியதில்லை. மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டியதும், தெளிவானதாகவும் அமைவது அதன் இறுதி தொடக்கம் மோதல்கள் பரவலாக நிலவிய பிரதேசங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்பதாகும்.

நிலைமாற்று நீதிக்காக இந்த அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதி மற்றும் காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகமொன்றை நிறுவுதல் தொடர்பில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதி உள்ளமையால் பெண்கள் அவர்களின் அன்புக்குரியவர்கள் உள்ள இடங்கள் பற்றிய உறுதிப்படுத்தல் கிடைக்கும்வரை அவர்கள் எடுத்துள்ள விடாமுயற்சியை கைவிடுதலாகாது. காணாமல்போனவர்கள் பற்றிய பிரச்சினை 2009 இல் முரண்பாடு முற்றுப்பெற்ற பின்னர் வடக்கு மற்றும் கிழக்குப் பெண்களால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினையொன்று மாத்திரமல்ல. 1970 களில் முடிவடைந்த கிளர்ச்சிகளில் இருந்து தெற்கில் உள்ள பெண்கள் இன்னமும் தமது அன்புக்குரியவர்களை தேடிவருகிறார்கள். இது வடக்கிலும் தெற்கிலும் உள்ள பெண்களை ஒன்றாகப் பிணைக்கின்ற முக்கியமான கொளுக்கியாகவும் பெண்கள் பலம்பொருந்திய சக்தியாக ஒன்றுசேர்ந்து அறிந்துகொள்வதற்குள்ள தமது உரிமையை ஏற்றுக்கொள்ளுமாறு அரசாங்கச் செயற்பாட்டாளர்களுக்கு நிரூபிக்க பயன்படுத்தக்கூடிய கொளுக்கியாகவும் அமையும்.

**இலங்கையில் முரண்பாட்டுக் காலகட்டத்தில் பெண்களுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் தட்டுப்பாடு நிலவியதில்லை. மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டியதும், தெளிவானதாகவும் அமைவது அதன் இறுதி தொடக்கம் மோதல்கள் பரவலாக நிலவிய பிரதேசங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்பதாகும்.**

**பாலியல் துன்புறுத்தல்கள்**

ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டிய விடயங்கள் பலவுள்ளதால் மோதல் மற்றும் மோதலுக்குப் பிற்பட்ட காலத்தில்

**இலங்கையின் முன்னாள் போராளிகள் குறிப்பாக முன்னாள் பெண் எல்ரீரீஈ போராளிகள் முரண்பாட்டுக்கு பிற்பட்ட சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பதற்காக மேற்கொண்ட தனித்துவமான சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எல்ரீரீஈ செயற்பட்ட வேளையில் இந்தப் பெண்கள் அதிகாரத்துடன் மற்றும் கௌரவத்துடனேயே நடத்தப்பட்டனர். அவர்கள் தாம் எதிர்காலத் தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகவும், அவர்களுக்காக போராடுவதாகவும் நம்பினார்கள்.**

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சம்பவக்கற்கைகளின் தாராளமாக கிடைக்கும் தன்மையைக் குறிப்பிட எழுத்தாளர் எதிர்பார்ப்பதில்லை. பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் பற்றிய உரையாடல் தெளிவானதாகும். அது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான அச்சத்தை ஊடுருவச் செய்ததற்கான மற்றும் அதிகாரிகளுக்கு சவால் விடுக்க எதிர்பார்க்கின்ற எந்த ஒருவரையும் அடக்கியாள்வதற்கான ஆயுதமாகப் பொதுவாக பிரயோகிக்கப்படுகின்ற ஒன்றாகும். இலங்கையில் முரண்பாட்டுக் காலகட்டத்தில் பெண்களுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் தட்டுப்பாடு நிலவியதில்லை. மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டியதும், தெளிவானதாகவும் அமைவது அதன் இறுதி தொடக்கம் மோதல்கள் பரவலாக நிலவிய பிரதேசங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்பதாகும். பாதிக்கப்பட்ட பெண் தனது நீதியை தேடிச்செல்லும் பயணத்தில் தவறு செய்தவர்களால் அச்சுறுத்தப்பட்ட மற்றும் உடல் ரீதியாகக்கூட அவளை துன்புறுத்திய 2010 விசுவமடு சம்பவமானது இந்த துன்புறுத்தப்பட்ட பெண்கள் நீதியை தேடிச்செல்லும் பயணத்தில் அவர்கள் எதிர்நோக்குகின்ற பாரதூரமான தடைகள் மற்றும் தடங்கல்களைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இறுதியில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் இவ்வாண்டில் அவளுக்கெதிராக குற்றம் புரிந்தவர்களுக்கு அவர்களின் குற்றச்செயல் சம்பந்தமாக ஆயுள்தண்டனை விதித்து வழங்கிய சாதகமான தீர்ப்பு நம்பிக்கையளிப்பதாக அமைகின்றது. இது 2001 இல் மன்னாரில் குழும பாலியல் வல்லுறவுக்கு இலக்காக்கப்பட்ட இரண்டு பெண்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மன்னார் வழக்கில் பாதிக்கப்பட்ட இருவரும் பாரிய கொடூரத்திற்கு இலக்கானதோடு வழக்கு கைவிடப்பட்டது. இது துரதிஷ்டவசமான முறையில் முரண்பாட்டுக் காலகட்டத்தில் பாலியல் துன்புறுத்தலுடன் தொடர்புடைய பெரும்பாலான வழக்குகளுக்கு மிகவும் மோசமான பாதிப்பினை ஏற்பத்தியதோடு, அதன் விளைவாக அத்தகைய வழக்குகள் தொடர்பில் செயலாற்றுகையில் நாட்டின் சட்டமுறைமையில் நிலவுகின்ற போதாக்குறைவான தன்மையைக் கண்டபின்னர் ஏனைய பாதிக்கப்பட்டோர் அவற்றுக்கெதிராக முன்வராதவிடத்து அது அநீதியின் வட்டத்திற்கு வழிசமைத்தது.

இலங்கையின் முன்னாள் போராளிகள் குறிப்பாக முன்னாள் பெண் எல்ரீரீஈ போராளிகள் மோதலுக்குப் பிற்பட்ட சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பதற்காக மேற்கொண்ட தனித்துவமான சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எல்ரீரீஈ செயற்பட்ட வேளையில் இந்தப் பெண்கள் அதிகாரத்துடன் மற்றும் கௌரவத்துடனேயே நடத்தப்பட்டனர். அவர்கள் தாம் எதிர்காலத் தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகவும், அவர்களுக்காக போராடுவதாகவும் நம்பினார்கள்.

இந்தப் பிரச்சினையின் சுமையானது தோல்விகண்ட நீதிமன்றத்தில் தங்கியிருக்கின்ற அளவுக்கு சமூகத்தில் தந்தை வழி நன்னெறிகளில் அதிகளவில் தங்கிநிற்கும். பங்காளித் தரப்பினர் சமூக அழிவினை மிகவும் விசாலமான பரப்பெல்லைக்கு பெண்களுக்கெதிரான துன்புறுத்தல் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைக் காண்பதில் மீண்டும் தோல்வி கண்டுள்ளது. ஆண்களுக்கெதிரான துன்புறுத்தல் மற்றும் பெண்களுக்கெதிரான துன்புறுத்தல் ஒன்றை மற்றும் தனித்துவமான கவனம் செலுத்தப்படவேண்டியதன் கவனத்தைக் கட்டாயப்படுத்துகின்ற இரண்டு கற்கைகளாகும். குடும்பமொன்றின் பெருமையானது பிரதானமாக பெண் அங்கத்தவர்களின் தூய்மையிலேயே தங்கியுள்ளது. பெண் அங்கத்தவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு இலக்காகின்றவிடத்து குடும்ப அலகு நிச்சயமாக சிதைவடையத் தொடங்கும். சமூகம் அவர்களை ஒதுக்கி வைக்கத்தொடங்கியதோடு, இளம் விவாகமாகாத பெண்கள் சம்பந்தமான விடயத்தில் அவர்களுக்கு விவாகம் செய்வதற்குப் பொருத்தமானவர்களைத் தேடிக்கொள்ளும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் உயர்மட்டங்களில்கூட பாலியல் துன்புறுத்தல்கள், இடம்பெறுவதைக் கண்டதாகவும், பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான சம்பவங்களுக்கு குறிப்பாக பாதுகாப்புப் படையினரால் புரியப்பட்டவை பற்றிப் பேசுகையில் சந்தேகத்திற்கிடமான செயல்களைப் புரிந்ததாக நம்பக்கூடிய பலம்பொருந்திய சான்றுகள் உள்ளன. அரசாங்கம் வெற்றிகரமான நிலைமாற்று நீதிப் பொறியமைப்புச் செயற்பாட்டுக்காக தன்னை அர்ப்பணிக்க எதிர்பார்ப்பதாயின் பாலியல் துன்புறுத்தலென்பது அவசரமாகவும் துரிதமாகவும் கவனம் செலுத்தப்படுவதற்கு அவசியமான பிரதானமான ஆக்கக்கூறு என்பதை தெளிவாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த எல்லைவரை





பாலியல் துன்புறுத்தல் வழக்குகள் துரிதப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத்தாக்கல் செய்வதிலிருந்தும் நீதியை எதிர்பார்ப்பதிலிருந்தும் ஒருபோதுமே தைரியமிழக்கச் செய்விக்கப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அதிக அழுத்தங்களை சேர்ப்பதற்காக புதிய அரசியலமைப்பில் பெண்களுக்கான சுயாதீனமான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**யுத்த விதவைகள்/முன்னாள் போராளிகள்.**

முரண்பாடு காரணமாக யுத்த விதவைகள் பாரியளவில் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். அவர்களின் கணவன்மார்களை இழந்தமையால் இந்தப் பெண்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை ஈட்டுபவர்களாக மாறியுள்ளதோடு, தமது நிதிசார் துன்பங்களை அதிகரிக்கச் செய்வித்து தமது கூட்டுக் குடும்பங்களை பாதுகாக்கவேண்டிய நிலைமையும் பலருக்கு ஏற்பட்டுள்ளது. இந்தப் பெண்களில் குறிப்பாக வடமாகாணப் பெண்களில் பெரும்பாலானோருக்கு எவ்விதமான நிலையான வருமான வழிவகையும் இன்மையால் (நிரந்தர தொழிலுக்காக போட்டியிட எவ்விதமான கல்வி அல்லது பிற தகைமைகள் அவர்களில் பெரும்பாலானோருக்கு இல்லையென்பதால்) வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காக பாலியல் தொழிலைத் தவிர்ந்த பிறமாற்றுவழி அவர்களுக்கு எஞ்சியில்லை. இவர்களுக்கு உதவி புரிவதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் அவை அவர்களின் எதிர்பார்ப்பு மட்டத்திற்கு குறைந்தவையாகும். ஒரு சம்பத்தின் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் யுத்த விதவைகளுக்கு வருமானம் ஈட்டுகின்ற வழிவகையாக கறவைப்பசுக்கள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றில் பெரும்பாலானவை மலட்டுத்தன்மை வாய்ந்த அல்லது நோயுற்றவையாக உள்ளன.

இவ்விதமாக இந்தப் பெண்கள் கறவைப்பசுக்கள் அவர்களுக்கு அநாவசியமாகின்றவரையிலும் ஒருசில வேளைகளில் அவர்களின் செலவுகளுக்கு ஏதேனுமொன்றை வழங்குகின்றவரையிலும் முதல் இரண்டு மாதங்களுக்காக மாத்திரமே ஏதேனும் உற்பத்தியை பெற்றுக்கொள்வதில் வெற்றியடைந்துள்ளார்கள். யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட பெண்கள் இச்செயற்பாட்டில் முக்கியமான பங்காளித்தரப்பினர்களாக ஏற்றுக்கொள்ளும் மற்றும் இந்த பெண்களுடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கான தொடக்க நிலையை உருவாக்கும் அவசியப்பாட்டினையே இது வலியுறுத்துகின்றது. அத்துடன் மேலதிக வினைத்திறனுக்காக இந்தத் தொடக்கநிலையை மேற்பார்வை செய்வதும் முக்கியமானதாகும்.

இலங்கையின் முன்னாள் போராளிகள் குறிப்பாக முன்னாள் பெண் எல்ரீரீஈ போராளிகள் முரண்பாட்டுக்கு பிற்பட்ட சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பதற்காக மேற்கொண்ட தனித்துவமான சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எல்ரீரீஈ நிலவிய வேளையில் இந்தப் பெண்கள் அதிகாரத்துடன் மற்றும் கௌரவத்துடனேயே நடத்தப்பட்டனர். அவர்கள் தாம் எதிர்காலத் தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகவும், அவர்களுக்காக போராடுவதாகவும் நம்பினார்கள்.

எவ்வாறாயினும் யுத்தத்திற்குப் பிற்பட்ட சம்பவங்களில் இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்ததோடு, புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் மக்களுக்காக போராடிய தாங்கள் அந்த மக்களாலேயே தவிர்த்துக் கொள்ளப்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களுடன் நேர்காணலில் ஈடுபட்டவிடத்து இவ்விதமாக வாழ நிர்ப்பந்திப்பதற்குப்பதிலாக யுத்தம் அவர்களின் உயிர்களைப் பலிகொண்டிருப்பின் நல்லதென அவர்கள் சிந்திப்பதாக இந்தப் பெண்கள் மிகுந்த கவலையுடன்

**நிலைமாற்று நீதி முன்னெடுப்புகளை எதிர்நோக்குகின்ற பெண்களுக்கு கூட்டாக வேலை செய்வதை உறுதிப்படுத்துவதற்காக போதுமான அளவில் ஈடுசெய்தல் வழங்கப்படல் வேண்டும். உண்மைக்காக உழைக்க வேண்டும். அவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் எதிராக புரியப்பட்ட குற்றங்களுக்கு நீதி ஈடேற்றப்படல் வேண்டும். பாதுகாப்பு மற்றும் மீள் நிகழாமை தொடர்பில் உறுதிப்பாடு வழங்கப்படல் வேண்டும். பிரஜைகள் மற்றும் சிவில் சமூகம் என்றவகையில் குடும்பம் மற்றும் அவளது கணவன்மார்கள் என்றவகையில் இந்த நிலைமாற்று நீதிச் செயற்பாட்டுக்காலத்தில் ஒருபோதுமே எதிர்பார்ப்பு சிதைப்பதற்கான, தைரியமிழக்கச் செய்வதற்காக தனிமைப்படுத்துவதற்கான உணர்வு ஏற்படமாட்டாதென்பதை பெண்களுக்கு உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும்.**

குறிப்பிட்டனர். சமூகம் அவர்களை சந்தேகிப்பதால் பாதுகாப்பு நடவடிக்கை என்றவகையில் இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் விவாகம் செய்துள்ளதாக குறிப்பிட்டார்கள். எனினும் அவரது கணவன் அவள்மீது சந்தேகப்படத் தொடங்கியுள்ளதாக ஒரு பெண் குறிப்பிட்டதால் அவனது மனோபாவத்தில் வழமைக்கு மாறான மாற்றமேற்பட்டு இறுதியில் அவர்களின் பிரிவுக்கு வழிசமைக்கும்வரை வரவர அவன் அவளை சந்தேகிக்கத் தொடங்கியுள்ளார். ஆட்சியின் மாற்றம் பாதுகாப்புப் படையினரின் பலவந்தமாக பிரவேசிப்பதில் வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளதா என வினவியவேளையில் இரண்டு ஆட்சிகள் பற்றியும் அவளது உதாசீனப்போக்கினை வெளிப்படுத்தி மூன்று மாதங்களுக்கு முன்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் வந்து அவளிடம் கேள்வி கேட்டதாக அவள் கூறினாள். சாதியை அடிப்படையாகக்கொண்டு பாரபட்சம் காட்டாத கோட்பாடு நிலவிய எல்ரீரீஈ கட்டமைப்பின்கீழ் ஆண் போராளிகளுடன் விவாகம் செய்த பெண் போராளிகள் பற்றிய அறிக்கைகள் பதியப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் சரணடைந்து மாற்றுச் சமூகத்தில் கலந்த பின்னர் சாதி வேற்றுமை தொடர்பான அழுத்தம் தோன்றியுள்ளதோடு, கணவன்மார்கள் தமது மனைவியரைக் கைவிட அது தெளிவான காரணமாகியுள்ளது. அத்தகைய பிரச்சினைகள் மீது கவனஞ் செலுத்துவதற்கான முன்னெடுப்புகள் பல கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். அவையாவன (அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக அமைதலாகாது) பெண்களுக்கு உயர்மட்ட வருமானத்தை ஈட்டித்தருகின்ற தனித்துவமான பயிற்சியை அளிக்கின்ற எளிமையான நடைமுறைகளுக்கு அப்பால் செல்கின்ற வாழ்க்கைத்தொழில் பயிற்சியை அளித்தல், அவர்கள் பற்றிய முன்னெடுப்புகளைத் திட்டமிட முயற்சி செய்கையில் பெண்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல், இந்த பெண்களின் அவசியப்பாடுகள் பற்றிப் பேசுகின்ற விழிப்புணர்வூட்டலுக்கான கூட்டத்தொடர்களை நடத்துதல் மற்றும் அவர்கள் மிகச்சிறந்த வகையில் சமூகத்துடன் இணையக்கூடிய அதனைச் சுற்றிய கலந்துரையாடலை விரிவாக்குதலும், ஏனையவற்றுக்கிடையில் இராணுவமயமாக்கலில் அதிகரிப்பினை ஏற்படுத்துதல் என்பவையாகும்.

நிலைமாற்று நீதி முன்னெடுப்புகளை எதிர்நோக்குகின்ற பெண்களுக்கு கூட்டாக வேலை செய்வதை உறுதிப்படுத்துவதற்காக போதுமான அளவில் ஈடுசெய்தல் வழங்கப்படல் வேண்டும். உண்மைக்காக உழைக்க வேண்டும். அவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் எதிராக புரியப்பட்ட குற்றங்களுக்கு நீதி ஈடேற்றப்படல் வேண்டும். பாதுகாப்பு மற்றும் மீள் நிகழாமை தொடர்பில் உறுதிப்பாடு வழங்கப்படல் வேண்டும். பிரஜைகள் மற்றும் சிவில் சமூகம் என்றவகையில் குடும்பம் மற்றும் அவளது கணவன்மார்கள் என்றவகையில் இந்த நிலைமாற்று நீதிச் செயற்பாட்டுக்காலத்தில் ஒருபோதுமே எதிர்பார்ப்பு சிதைப்பதற்கான, தைரியமிழக்கச் செய்வதற்காக தனிமைப்படுத்துவதற்கான உணர்வு ஏற்படமாட்டாதென்பதை பெண்களுக்கு உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும்.

**முடிவுரை**

நீண்டகாலமாக தொடர்ந்துவந்த முரண்பாட்டு நிலை முற்றுப்பெற்றதும் பெண்கள் முன்னரைவிட தொடர்ந்தும் பேரம்பேசுகின்ற நிலைமையாகக் காணக்கூடியதாக உள்ளது. இரண்டாம் நிலை பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள் முரண்பாட்டுக் காலகட்டத்தில் மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தாலும் உதவிகோரி அவர்கள் எழுப்பிய குரல் ஒருபோதுமே மறையவில்லை. உள்ளூராட்சியில் பெண்களுக்கான கோட்டா முறையொன்றை அறிமுகஞ்செய்வதற்கான அண்மைக்கால முன்னெடுப்புகள் மற்றும் இலங்கைக்கு புதிய அரசியலமைப்பு பற்றிய தேவையினை வெளிப்படுத்தியதும் பெண்களில் நிலைமைகளில் முனைப்பாகத்தெரியும் விருத்தியைக் காணக்கூடியதாக அமையுமென்ற எதிர்பார்ப்பு உண்டு. முரண்பாட்டுக் காலகட்டத்தில் திணிக்கப்பட்ட தடைகள், இனத்துவம், கடந்த பகைமைகள், பாதகமான உளப்பாங்குகள் மற்றும் காலங்கடந்த தந்தைவழியை ஒரு புறம் ஒதுக்கி வைப்பதற்கான காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. நிலைமாற்று நீதி முன்னெடுப்புகளை எதிர்நோக்குகின்ற பெண்களுக்கு கூட்டாக வேலை செய்வதை உறுதிப்படுத்துவதற்காக போதுமான அளவில் ஈடுசெய்தல் வழங்கப்படல் வேண்டும். உண்மைக்காக உழைக்க வேண்டும். அவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் எதிராக புரியப்பட்ட குற்றங்களுக்கு நீதி ஈடேற்றப்படல் வேண்டும். பாதுகாப்பு மற்றும் மீண்டும் ஏற்படாமை தொடர்பில் உறுதிப்பாடு வழங்கப்படல் வேண்டும். பிரஜைகள் மற்றும் சிவில் சமூகம் என்றவகையில் குடும்பம் மற்றும் அவளது கணவன்மார்கள் என்றவகையில் இந்த நிலைமாற்று நீதிச் செயற்பாட்டுக்காலத்தில் ஒருபோதுமே எதிர்பார்ப்பு சிதைப்பதற்கான, தைரியமிழக்கச் செய்வதற்காக தனிமைப்படுத்துவதற்கான உணர்வு ஏற்படமாட்டாதென்பதை பெண்களுக்கு உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும்.

# இலங்கையில் நிலைமாறுகால நீதி

## நிலைமாறுகால நீதி என்றால் என்ன?

வகைபொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தி இணக்கப்பாட்டை அடைவதற்காக கடந்தகால அத்துமீறல்களை எதிர்நோக்குவதற்கான சமூகத்தின் முயற்சியுடன் பிணைந்துள்ள முழுமையான செய்முறைகளும் பொறிமுறைகளும்




**அறிந்துகொள்வதற்கான உரிமை**

- பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமூகத்துக்கும் உண்மையை அறியும் உரிமை
- ஞாபகத்தைப் பேணுவதற்கான அரசின் கடமை

**நீதியைப் பெறுவதற்கான உரிமை**

- நியாயமான நிவாரணம் பெறுவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள உரிமை
- விசாரணை செய்வதற்கும் வழக்கு தொடர்வதற்குமான அரசின் கடமை

**இழப்பீடுகளுக்கான உரிமை**

- இழப்பீட்டை பெற்றுக்கொள்ள பாதிக்கப்பட்டவர்களுக்குள்ள உரிமை
- முழுமையான இழப்பீட்டுக் கொள்கை மற்றும் பெக்கேஜ் ஒன்றை வழங்குவதற்கு அரசுக்குள்ள பொறுப்பு

**மீளவும் இடம்பெறாமைக்கான உத்தரவாதங்கள்**

- இனிமேலும் வன்முறைகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமூகத்துக்கும் உள்ள உரிமை
- மீளவும் நிகழாமலிருப்பதைத் தவிர்ப்பதற்கான அரசின் கடமை

**2015ஆம் ஆண்டு அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள்**

## 2015ஆம் ஆண்டு அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள்

| அறிந்துகொள்வதற்கான உரிமை | நீதியைப் பெறுவதற்கான உரிமை | இழப்பீடுகளுக்கான உரிமை | மீளவும் இடம்பெறாமைக்கான உத்தரவாதங்கள் |
|---|---|---|---|
| உண்மை, நியாயம், இணக்கப்பாடு மற்றும் மீளவும் இடம்பெறாமைக்கான ஆணைக்குழு | பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதியரசர்கள் பங்கேற்கின்ற, பிரதித்தரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வழக்குத் தொடுநர்கள் மற்றும் புலனாய்வாளர்களைக் கொண்ட விசேட வழக்குரைஞருடனான நீதித்துறைப் பொறிமுறை | இழப்பீடுகள் தொடர்பான காரியாலயம் | இலங்கை அரசின் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்நாட்டுச் சட்டங்களை சீர்திருத்தல் |
| காணாமற்போனவர்கள் தொடர்பான காரியாலயம் | செய்தியாளர்கள், மனித உரிமை மீறல்களுக்கெதிராகக் குரல் கொடுப்போர், சிறுபான்மைச் சமயக் குழுக்கள், சிவில் சமூக மற்றும் வணக்கத்தலங்களுக்கு எதிரான தாக்குதல்களை இழைத்தவர்களுக்கு வழக்குத் தொடர்தல் | மக்களது காணிகளை மீள ஒப்படைத்தல் | பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்கள் |
| முந்தைய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பகிரங்கமாக வெளியிடுதல் | சித்திரவதை, கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களை வகைபொறுப்புக் கூறச் செய்தல் | இராணுவமயமாக்கலை நீக்குதல் | சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் சட்டத்தை மீளாய்வு செய்தல் |
| மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனித உரிமை மீறல் பதிவுகளைப் பேணுதலும்/ ஆவணக்காப்பகம் செய்தலும் | எல்.ரீ.ரீ.ஈ.யின் வன்முறைகள் துஷ்பிரயோகங்கள் மீதான வகைபொறுப்பு மற்றும் நல்லிணக்கத்தை ஆரம்பித்தல் | காணாமல்போனோரின் குடும்பத்தவர்களுக்கு 'காணாமல்போனோர் சான்றிதழ்' வழங்குதல் | செய்தியாளர்கள், மனித உரிமை மீறல்களுக்கெதிராகக் குரல் கொடுப்போர், சிறுபான்மைச் சமயக் குழுக்கள், சிவில் சமூக மற்றும் வணக்கத்தலங்களுக்கெதிரான தாக்குதல்களைத் தவிர்த்தல் |
| | | | பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் அதனோடு தொடர்பான சட்டங்களையும் மீளாய்வு செய்து தள்ளுபடி செய்தல் |
| | | | பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தலுக்கு எதிரான சர்வதேச சாசனங்களில் கைச்சாத்திட்டு உறுதிப்படுத்தல் மற்றும் காணாமல்போகச் செய்தலை குற்றமாக்குதல் |
| | | | அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்தல் |
| | | | அரசியல் யாப்பு சீர்திருத்தங்களின் மூலமாக அரசியல் தீர்வு காணல் |

மனித உரிமைகள் மற்றும் பணியாணையாளர்களுக்கான விசேட செயல்முறைகளுக்கான உயர் ஸ்தானிகர் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நிலைமாறும் நியாயத்துக்கான பணி மதிப்பீட்டுக்குப் பரந்தளவான சட்டக அமைப்பை கருத்தொருமையான தீர்வை A/HRC/RES/30/1 வழங்குகிறது

20 CPA 1996-2016

மேலதிக தகவல்களுக்காக:
WWW.TJSRILANKA.ORG

ISSN 955-1800-0061